# வைரவிழா மலர்

# DIAMOND JUBILEE

## 1955 - 2015



கிளி / இராமநாதபுரம் மேற்கு
அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை - வட்டக்கச்சி.

KN/RAMANATHAPURAM WEST
GOVERNMENT TAMIL MIXED SCHOOL - VADDAKKACHCHI.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரவிழா 2015

## கிளி / இராமநாதபுரம் மேற்கு
## அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை வட்டக்கச்சி.

### நோக்கு (VISION)

தமிழுர்தம் கலாச்சார, விழுமியங்கள், நியமங்கள் தாழ்வுறா வகையில்
கற்றல் - கற்பித்தல் செயன்முறையை முன்னெடுத்தலூடாக, எதிர்காலச் சவால்களுக்கு
முகங்கொடுக்கும் சமூகத்தைத் தோற்றுவித்தல்.

### போக்கு (MISSION)

பாடசாலையின் அகத்தேயும் புறத்தேயும் உள்ள மனித, பௌதீக வளங்களை உரிய
முறையில் முகாமைத்துவப்படுத்தி, மாணவர்களின் கற்றல் - கற்பித்தல் செயன்முறையை
ஒழுங்குப்படுத்துவதன் ஊடாக அறிவைக் கட்டுருவாக்கம் செய்யும் மாணவ சமூகத்தை உருவாக்குதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த
நிலமடந்தை கெழிலொழுகுஞ்
சீராரும் வதனமெனத்
திகழ் பரத கண்டமதில்
தக்க சிறு பிறைநுதலும்
தரித்த நற் திலகமுமே
தெக்கணமு மதிற் சிறந்த
திராவிட நற் திருநாடும்
அத்திலக வாசனை போ
லனைத்துலகு மின்பமுற
எத்திசையும் புகழ் மணக்க
இருந்த பெருந் தமிழணங்கே.
பல்லுயிரும் பலவுலகும்
படைத்தளித்துத் துடைக்கினுமோ
எல்லையறு பரம்பொருள் முன்
இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களி தெலுங்குங்
கவின் மலையாளமுந் துளவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே
ஒன்று பல ஆயிடினும்
ஆரியம் போ லுலகவழக்
கழிதொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம் வியந்து
செயல் மறந்து வாழ்த்துதுமே.

-மனோன் மணியம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழிவாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழியவாழியவே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன் மணம் வீசி
இசைகொண்டு வாழியவே

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

–மகாகவி சுப்பிரமணியபாரதியார்–

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டைப்படக்கவிதை

– ஆ.இராஜேந்திரகுமார் –
ஆசிரியர்
கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை

அழகு தமிழை கலையுடன் தந்து
அறிவின் தெளிவை உளம் பெறச் செய்து
சுழலும் காற்றாய் சுழரவைத்த
சுடர்மணி கண்டாள் அறுபது ஆண்டு

இடர்பல கண்டு வீழ்ந்தும் பெருக
இமயம் போல் வளர்ந்த பொழுதே எழுக
படர்கின்ற கொடியது வாகி
சுடர்கின்ற சூரியப் புதல்வியே வாழி

மிளிர்கின்ற புதல்வர்கள் பலநூறு – மண்ணில்
துயில்கின்ற மாந்தர்கள் சில பேரு
எழில் கொஞ்சும் புலம் கொண்ட திருவுளமே – நீ
வழி தந்து வாழவைத்தார் புகழ் பாரு

வானுயர வாழ்வுதந்த வைரவிழா நாயகியே
வாழ்வில் என்றும் மிளிரவைத்தாய் வானத்து ஒளிவிளக்கே
உய்யும் வழி தந்த பெரு உத்தமியே நீ வாழி
உன்புகழை உயரச்செய்வோம் நித்தமும் நீ வாழியவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அட்டைப் படக் கலை வண்ணம்

திரு. தே. ஜசிந்தன்
(கிளி / இராமநாதபுரம் மேற்கு அ. த. க. பாடசாலை)

திரு. ந. பிரசாந்தன்
(கிளி / கல்லாறு தமிழ் வித்தியாலயம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரவிழா மலர்க்குழு

| | | |
|---|---|---|
| காப்பாளர் | – | திரு. சு. சுதாஸ்கரன் (அதிபர்) |
| மலராசிரியர் | – | திருமதி. நி. விஜயகுமார் |

**மலர்க்குழு :–**

| | | |
|---|---|---|
| தலைவர் | – | திரு. ஆ. இராஜேந்திரகுமார் |
| உபதலைவர் | – | திருமதி. சி. சுதாகரன் (உப அதிபர்) |
| செயலாளர் | – | திருமதி. க. சுதாகரன் |
| பொருளாளர் | – | திருமதி. வி. நந்தகுமார் |

**உறுப்பினர்கள் :–**

திரு. அ. அப்துல் அலீம்

திரு. தே. ஜசிந்தன்

திருமதி. தே. சத்தியபாலன்

திருமதி. த. விஜிதரன்

திருமதி. சி. சிவபாலசுந்தரம்

திருமதி. கீ. தேசன்

திருமதி. யூ. அன்ரனிராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் ஆலய பூசகர் சிவ ஸ்ரீ மங்களநாயகன் சுவாமிகள் வழங்கிய அருளாசிச் செய்தி

*(குருர்ப்ரஹ்மா குருர் விஷ்ணுர்*
*குருர் தேவோ மஹேச்வர*
*குருஸ்ஸாஷாத் பரம் ப்ரஹ்மா*
*தஸ்மை ஸ்ரீகுரவே நம)*

கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலையின் அறுபதாவது நிறைவை முன்னிட்டு வைரவிழாக் காணும் இத்தருணத்தில் நூல் ஒன்றை வெளியிட இருப்பது மகிழ்வுக்குரியதே இவ்வெளியீடு ஒரு சஞ்சிகை போன்று இச்சமூகத்திற்கு பல தகவல்களை வழங்கும் என்பது திண்ணம்.

இப்பாடசாலை வளர்ந்து மென்மேலும் மிளிர வேண்டும். பல கல்வியாளர்கள் உருவாக வேண்டும். இச்சமூகம் உயர்வு பெற வேண்டும். என்பதை இந்நாளில் வேண்டிக்கொள்வதோடு இப்பள்ளியின் வளர்ச்சிக்காக உழைக்கும். அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் என அனைவரையும் வாழ்த்தி நிற்கின்றேன்.

அத்துடன் இவ்வெளியீடு சிறந்த முறையில் அமைய வேண்டி இறைவனை பிரார்த்திப்பதோடு இப்பாடசாலைச்சமூகத்திற்கு ஸ்ரீரங்கநாதப்பெருமாளின் அருள் கிடைக்கவேண்டி வாழ்த்தி நல்லாசியினை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**-சிவஸ்ரீ ம.மங்களநாயகன்-**
**பூசகர்**
**ஸ்ரீரங்கநாதப்பெருமாள் ஆலயம்**
**வட்டக்கச்சி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வட்டக்கச்சி பங்குத்தந்தை அருட்திரு பாலதாஸ் பிறையன் வழங்கிய ஆசிச் செய்தி

இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலையின் வைரவிழா சிறப்புறுவதை நினைத்து மகிழ்வடைகின்றேன். கல்விப்பணியின் மேன்மையிலே நூறு ஆண்டுகளை நோக்கி நகரும் இப்பாடசாலையின் வைரவிழா ஒரு சிறப்பான மைல்கல்லாகும்.

பல கஷ்டங்கள் நெருக்கடிகள் வசதியீனங்கள் கடந்த காலங்களில் அலைமோதிய போதிலும் தளரா மனத்துடன் வீறு நடை போட்டு பரினமிக்கும் இந்தப் பாடசாலையை வாழ்த்தாமல் இருக்கமுடியவில்லை.

இந்தப் பாடசாலையின் வளர்ச்சிக்காக உழைத்த அனைத்து அதிபர்கள். ஆசிரியர்கள் அனைவரையும் நன்றியோடு நினைத்து பழையமாணவர்களின் ஒத்துழைப்பு என்றும் கிடைக்க விரும்புகின்றேன்.

**இறைவன் அருள் தொடர்ந்து இப்பாடசாலை மீது**
**ஆசீர்வாதமாக இருக்க ஆசித்து நிற்கின்றேன்.**

**-அருட்திரு பாலதாஸ் பிறையன்-**
**பங்குத்தந்தை**
**வட்டக்கச்சி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்மாவட்ட மௌலவி M.A.C.M ஜாபிர் (நத்வி) அவர்களின் ஆசிச்செய்தி

கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலையின் 60ஆவது ஆண்டை முன்னிட்டு வெளிவர இருக்கின்ற வைரவிழா மலருக்கு எனது இதயம் கனிந்த வாழ்த்துக்கள். இப்பாடசாலையில் கற்ற, கற்கின்ற, இன்னும் கற்கப் போகின்ற மாணவ மாணவிப் பெருந்தகைகளுக்கு எனது சிறிய அறிவுரை பின்னாடி உள்ளதை முன்னாடியே சொல்கின்ற கண்ணாடி போன்றது தான் அறிவு.

நீங்கள் படிக்கின்றீரகளா? படியுங்கள். உங்கள் வாழ்வு சோலைவனமாகும். படிக்கவில்லையா? உங்கள் வாழ்வு பாலைவனமாகும். அறிவு என்பதைப்பற்றி அண்ணல் முகம்மது (ஸல்) கூறினாரகள்.

**"த.அல்லுமில் இல்ம மினல் ம.்.மி இலல்லஸ்தி"** அதாவது தாயினுடைய வயிற்றிலிருந்து சவக்குழியை சென்று அடையும் வரை அறிவைத்தேடிப் படியுங்கள். என சொன்னார்கள்.

ஒரு மனிதனின் உயர்வும் தாழ்வும் கல்வியிலேயே உள்ளது. ஒரு மனிதனைப் போற்றுவதும், புகழ்வதும், உயர்த்துவதும் கல்வியே. மேலும் முகம்மது (ஸல்) அவர்கள் கூறியதாவது **"கைருகும்மன் த அல்லம வ அல்லம ஶ்ரீ"** யார் கல்வியைக் கற்று அதன்படி நடந்து மற்றவர்களுக்கும் கற்பிப்பவரோ அவரே உங்களில் சிறந்த அறிவாளி. என்றார்கள் படித்தவனிடம் அன்பு, பாசம், பண்பு, பகுத்தறிவு, பெரியாரை மதித்தல் அனைத்தும் குடியிருக்கும் ஒரு இல்லம் கல்வியே!

மேலும் சீன தேசம் சென்றாகிலும் கல்வியைத் தேடுங்கள் நான் அறிந்த வகையில் கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை சகல துறையிலும் உயர்வாகப் பேசப்படுகின்ற ஒரு உயர்வான கண்ணியமான ஒரு புகழ்பெற்ற பாடசாலை ஆகும். அறுபது ஆண்டுகளைக் கொண்டாடும் இப்பாடசாலை உயர்வடைய அதிபருக்கும் ஏனைய ஆசிரிய ஆசிரியைகளுக்கும் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் இறைவனிடம் நல்லாசி பெற்று உயர்வடைய வாழ்த்துகின்றேன். **"இறைவனிடம் கையேந்துங்கள் அவன் இல்லை என்று சொல்வதில்லை"**

**–மௌலவி M.A.C.M ஜாபிர் (நத்வி)–**

**பேஷ் இமாம்**

**முகைதீன் ஜும்மாப்பள்ளிவாசல் – யாழ்ப்பாணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாராளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு சிவஞானம் சிறீதரன் அவர்களின் வாழ்த்துச்செய்தி

## அகரம் தொடக்கி வைத்த அன்னைக்கு வாழ்த்துக்கள்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பண்பாட்டோடு ஆதிகாலம் தொட்டே பரிணமித்திருந்த முக்கிய இடங்களுள் வட்டக்கச்சி எனும் பேரூர் உயரிய இடத்தைப் பெற்று நிற்கின்றது. அத்ததையதொரு பழம்பொருள் பேரூரின் பெயர் சொல்லும் வகையில் அமைந்து, மாவட்டத்தின் கல்வித்துறை சார் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் வலுச்சேர்க்கும் பாடசாலைகளுள் ஒன்றாய் கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை அன்றும், இன்றும் ஆற்றிவரும் கல்விப்பணி அளப்பரியதே!

1955களில் ஆரம்பிக்கப்பட்ட ஒரு கிராமப்புறப் பாடசாலை படிப்படியாக வளர்ச்சிப்பாதை நோக்கி பரிணமித்து இன்று ஆறு தசாப்பங்களைக் கடந்தும் தன் நிலைநின்று தாளாது, தனக்கே உரித்தான தனித் தன்மைகளோடும், பண்பாட்டு மரபியல்களோடும் தனது மாவட்ட மாணவர்களின் பல்பரிமாண வளர்ச்சியில் பெரும்பங்காற்றி வருவது பெருமைக்குரிய விடயமாகும்.

இற்றைக்கு அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் வெறுமனே பத்தொன்பது(19) மாணவர்களோடு கிளி/வட்டக்கச்சி கிழக்கு இந்து தமிழ்க்கலவன் பாடசாலை என்ற பெயரோடு அக்கால அதிபர் திருவாளர் பா.கனகசபை அவர்களின் முயற்சியால் இயங்கத்தொடங்கிய இப்பாடசாலை மெல்ல மெல்ல மாற்றம் பெற்று இன்று தன் கனதியான கல்விப்பணிக்கு கிடைத்த கௌரவமாய் **"கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை"**என்னும் மாபெரும் அடையாளத்துடன் மிளிர்கின்றமை மனநிறைவளிக்கிறது.

இப் பாடசாலை பலதரப்பட்டோரையும், பல்வேறு துறைகளிலும் பயிற்றுவித்து வெளிக்கொணர்ந்தது என்பதற்கப்பால் எனக்கு அகரம் தொடங்கியதும், அரிவரி புகட்டியதும், உலகைக் காட்டி உருவாக்கியதும், மற்றவர்களால் அறியப்படும் மனிதனாக மாற்றம்பெற அடித்தளமிட்டதும் இத்தாய்ப்பாடசாலையே என்பதில் எப்போதுமே எனக்கோர் பெருமையுண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் மடி தவழும் மாணவர்களை கல்விப்புலத்தில் கரையேற்றி விடுவதை மட்டுமே இலக்காகக் கொண்டியங்காது, பண்பாடு, பாரம்பரியங்களோடு ஒன்றித்தவர்களாகவும், ஊரின் பெயர் சொல்லும் அளவுக்கு உயரிய குணம் கொண்டவர்களாகவும், கலை, இலக்கிய ஆர்வலர்களாகவும், சிறந்த சிந்தனையாளர்களாகவும், மனிதநேயப் பண்பாளர்களாகவும், இந்த மண்ணில் நல்ல வண்ணம் வாழ்கின்ற, மற்றவர்களை வாழ்விக்கின்ற மனிதம் நிறைந்த மனிதர்களாகவும் செதுக்கி வெளிப்படுத்துவது இப்பள்ளியின் பெருமைக்கு அணிசேர்க்கும் இன்னொரு விடயமாகும்.

வருடாவருடம் நடைபெறும் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் கணிசமான மாணவர்கள் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுவருவதோடு, இலங்கை வரலாற்றிலேயே முதன்முதலாக வடக்கு மாகாணத்தின் பெயர் சொல்லும் வகையில் கிளிநொச்சி மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்திய இப்பாடசாலை அகில இலங்கை ரீதியான உடற்பயிற்சிப் போட்டியில் 2002ம் ஆண்டில் முதலாமிடத்தையும், 2004ம் ஆண்டு 3ம் இடத்தையும் பெற்று வரலாற்றுச் சாதனை படைத்ததோடு தொடர்ந்து ஏழு வருடங்கள் தேசிய ரீதியான போட்டிகளில் பங்குபற்றி வந்தமையும், இதற்கு முழுமுதற் காரணமாய் திகழ்ந்த உடற்பயிற்சி ஆசிரியை திருமதி.நளாயினி ஜெயபாலசிங்கம் அவர்களது அயராத உழைப்பும், இப்பாடசாலை வரலாற்றில் பொற்காலம் என்று சொல்லப்படக்கூடிய அக்காலப்பகுதியில் இப்பள்ளியின் முதல்வராய் பணியாற்றிய திருவாளர்.கனகமகேந்திரா, திருவாளர் ஆ.கருணாநிதி, திருவாளர் சி.பாலகிருஷ்ணன் ஆகியோரது பணியும் நினைவுகூரத்தக்கது.

பலதரப்பட்டோரின் இரத்தத்தாலும், வியர்வையாலும் உருவாக்கப்பட்ட ஒரு பாடசாலை பல்வேறு இடங்களையும் இன்னல்களையும் தாண்டி, காலத்திற்கு காலம் எமது மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட அடக்குமுறைகளுக்குள் தானும் அகப்பட்ட போதும் அவற்றிலிருந்தெல்லாம் மீண்டெழுந்து அறுபது ஆண்டுகளைக் கடப்பது என்பது ஒரு சாதாரண விடயமல்ல. அது ஒரு வரலாற்றுப்பதிவு. கிளிநொச்சி மாவட்டத்தின் வளர்ச்சிக்கு தன்னால் இயன்ற கல்விப்பணியாற்றும் அதேவேளை இந்த மண்ணையும், மக்களையும், இனத்தையும், மொழியையும் தம் உயிரினும் மேலாய் நேசித்து இந்த மண்ணுக்காகவும், மக்களுக்காகவுமே தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் ஆகுதியாக்கிய பல நூற்றுக்கணக்கான தமிழ்த் தேசிய வீரர்களை பெற்றெடுத்த பெருமையும் இப்பள்ளியின் பெரும் சிறப்புக்களுள் ஒன்று.

இத்தகைய சிறப்புக்களை தன்னகத்தே கொண்டு பரந்து விரிந்த அளவில் கல்விப்பணிக்கும், சமூகப்பணிக்கும் அணிசெய்யும் என் பள்ளித்தாய் மென்மேலும் வளரவும், உயரவும் அவளால் உருப்பெற்ற மாணவன் என்ற பெருமையோடு மனதார வாழ்த்தும் அதேவேளை, அறுபதாவது ஆண்டு நிறைவையொட்டி வெளியிடப்படும் வைரவிழா மலர் வெளியீடு சிறப்படையவும் இறை ஆசிகளை வேண்டி நிற்கின்றேன்.

**-சிவஞானம் சிறீதரன்-**
**பாராளுமன்ற உறுப்பினர்.**
**யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,**
**இணைத்தலைவர்-கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு,**
**கிளிநொச்சி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடக்கு மாகாண சபை உறுப்பினர் கௌரவ த.குருகுலராசா அவர்களின் வாழ்த்துச்செய்தி

## இராம வைரம்

வைரம் பூமியிலே பல்லாண்டு கால பயிராகிய பின்னரே மிளிர்கின்றது. இவ்வாறே கலைக்கூடங்களிலும் அறிவு வளரும் பள்ளிகளும் காலத்தால் செதுக்கப்பட்டு சுடரோவியங்களாக பரிணமிக்கின்றன. இவ்வாறு ஒளி பட்டு தெறித்து தன்னகத்தே வளரும் மாணவர்களை பட்டை தீட்டி நிறை வாழ்வுக்குள் செல்ல தனது பணியை, ஆற்றலை, ஆளுமையை, அறிவை, தத்துவத்தை, வலிமையை, சிந்தனையைத் தூண்டும் தூணாக 60 ஆண்டுகள் தன்னகத்தே கொண்ட இராமநாதபுரம் மேற்கு கல்வியை கரம் கூப்பி வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றேன். எளிய தோற்றம் கிராமிய சூழல் நன்மதிப்பைப் பெற்ற பெற்றோரின் அரவணைப்பு இவை அனைத்தையும் உள்ளடக்கிய புதிய பூமி நோக்கி வந்தவர்களைக் கூட்டி அழைத்து அவர்களது புத்திர பாக்கியங்களுக்கு எழுத்தாணி தொடுத்து பல்கலையும் பெற்று பலநூறு சிறுவர்களுக்கு மாபெரும் வழிகோலியாக நின்றுள்ள பள்ளியை போற்றுகின்றேன். 60 ஆண்டுகளாக கல்விப்பயிர் மேய்ந்த மாணாக்கரையும் அவர்களது மேய்ச்சல் திடலாக தம்மை அர்ப்பணித்த அதிபர் பெருமக்களையும் அறிவை அள்ளி வழங்கி தம்மை உருக்கிய ஆசான்களையும் ஒரு கணம் மனதில் ஏற்றி அவர்களை வணங்கி இனி வரும் காலங்கள் இனிதான காலங்களாக அமைய வேண்டும் என்றும் தன்னகத்தே வரும் எமது வாரிசுகள் பள்ளியை மென்மேலும் நேசித்து நிறைவான வரம் பெற்று பள்ளிக்கும் தனக்கும் பெருமை நிறைந்த வாழ்வியற் பூங்காவாக திகழ வாழ்த்தி நிறைவடைகின்றேன்.

**-திருவாளர் தம்பிராசா. குருகுலராசா-**

**முன்னாள் கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்**

**முன்னாள் கிளிநொச்சி, முல்லைத்தீவு வலயக்கல்விப்பணிப்பாளர்,**

**கௌரவ வடமாகாண சபை உறுப்பினர்.**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# மாகாணக்கல்விப்பணிப்பாளர்
# திருமிகு. செ. உதயகுமார் அவர்களின்
# வாழ்த்துச்செய்தி

கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலையினது வைரவிழாவினையொட்டி வெளியிடப்படும் மலரிற்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதையிட்டு மகிழ்வடைகின்றேன்.

1955ம் ஆண்டு வட்டக்கச்சி கிழக்கு அ.த.க பாடசாலை எனும் பெயருடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை தற்போது கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை எனும் பெயருடன் இயங்கி வருகின்றது. தரம் 1 தொடக்கம் 5 வரையான வகுப்புக்களைக் கொண்டதாக ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை தற்போது க.பொ.த (சாதாரணம்) தரம் வரை வகுப்புக்களைக் கொண்ட பாடசாலையாக வளர்ச்சி பெற்று சிறப்புடன் இயங்கி வருகின்றது.

இப்பாடசாலை மாணவர்கள் கல்வியிலும், இணைபாடவிதான செயற்பாடுகளிலும் தங்களது திறமைகளை சிறப்புடன் வெளிக்காட்டி வருகின்றனர். இப்பாடசாலை மாணவர்கள் மாகாண, தேசிய நிலைகளிலும் போட்டிகளில் பங்குபற்றி வெற்றிகளைப் பெற்று வருகின்றனர்.

கடந்த 60 ஆண்டுகளில் இப்பிரதேச மாணவர்களிற்கு இப்பாடசாலை ஆற்றி வரும் பணி அளப்பரியது. இப்பிரதேச மாணவர்களுக்கு சிறந்த கல்வியை வழங்கி சமூகத்தில் நற்பிரஜைகளாகவும், வாழ்க்கையில் வெற்றி பெற்று சமூக நன்மதிப்புடன் வாழ்வதற்கு இப்பாடசாலை வழிசமைத்து வருகின்றது.

அறுபது ஆண்டுகளை நிறைவு செய்யும் இவ்வேளையில் இப்பாடசாலை மேலும் வளர்ச்சி பெறவும் இப்பிரதேச மாணவர்களிற்கு தனது பணியைச் சிறப்புடன் தொடரவும் வாழ்த்துகின்றேன்.

**–செ. உதயகுமார்–**
**மாகாணக்கல்விப்பணிப்பாளர்**
**வடக்கு மாகாணம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வலயக்கல்வி பணிப்பாளர்
# திருமிகு.தி. ஜோன்குயின்ரஸ் அவர்களின்
# ஆசிச்செய்தி

கிளிநொச்சி மாவட்டத்தின் கிழக்குப்பகுதியில் அமைந்துள்ள வட்டக்கச்சி பிரதேசத்தில் கிளி/இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை அமைந்துள்ளது. இப்பாடசாலை கல்விப்பணியை ஆற்றி வரும் அதே வேளை இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வட்டக்கச்சி சமூகத்திற்கு அளப்பெரிய பங்கினை ஆற்றி... 60 வருடங்களை கடந்து நிமிர்ந்து நிற்பது போற்றுதற்குரியதே.

இப்பாடசாலையானது 1955.05.27 ஆம் திகதியில் வட்டக்கச்சி கிழக்கு தமிழ்க்கலவன் பாடசாலை என்னும் பெயருடன் திருமிகு.பா.கனகசபை அதிபர் அவர்களின் தலைமையில் கீழ் கிட்டத்தட்ட 19 மாணவர்களுடன் தனது கல்விப்பணியை ஆரம்பித்தது. ஆரம்பத்தில் இப்பாடசாலையில் இருந்த வகுப்புக்கள் ஒன்று தொடக்கம் ஐந்து வரையானதாகக் காணப்பட்டது. இதன் பின் 1961 ஆம் ஆண்டு வகுப்பு 10 வரை ஆரம்பிக்கப்பட்டதுடன் 1962 இல் முதன் முதல் இல்ல மெய்வவல்லுநர் திறனாய்விலும் ஈடுபட்டு தன் புகழை வட்டக்கச்சி பிரதேசமெங்கும் பரவச்செய்தது. வட்டக்கச்சி கிழக்கு தமிழ்க்கலவன் பாடசாலை என்னும் பெயரானது தபால் விநியோகத்தை இலகுபடுத்தும் நோக்கில் இராமநாதபுரம் எனும் கிராமமாகப் பிரிக்கப்பட்டதில் இருந்து கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை என்னும் பெயரில் இயங்கத்தொடங்கியது.

இப்பாடசாலையானது ஆறு தசாப்த காலம் என்பது ஒரு நீண்ட நெடும் பயணம். அப்பயணத்தில் தொலைந்து போன ஒவ்வொரு நாட்களும் வீணாகக் கரைந்திருக்க முடியாது. சிறந்த ஆளுமைமிக்க பல மனிதர்களை உருவாக்கியது. என்பது நிச்சயமானதொன்றாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டக்கச்சி பிரதேசத்திலேயே தனக்கென்ற ஒரு தனி முத்திரை பதித்து அறுபது ஆண்டுகளைக் கடந்தும் இன்னுமொரு தசாப்தத்தில் கால்பதித்து நடக்கத்தொடங்கி இருப்பது போற்றுதற்குரியதாகும்.

இந்த அகவையை நிறைவு செய்யும் இந்நாட்களில் இப் பாடசாலையை மேன்னையடையச்செய்து தேசியம் வரை நிகழ்வுகளில் புகழ் பெறச்செய்த அதிபர்கள், ஆசிரியர்கள் மறக்க முடியாத மனிதப்பிறவிகளாக பதியப்பட்டு பாடசாலையின் பாரம்பரியத்தில் தொடர்ச்சியாக பேணப்படுவது முக்கியமான தொன்றாகும்.

அகவை என்னும் தருணத்தில் அறுபதாவது ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடும் முயற்சியில் முழுமூச்சாக ஈடுபடத்தொடங்கியிருக்கும் அதிபரையும், ஆசிரியர் குழுவினரையும், மாணவர்களையும், பெற்றோர்களையும், நலன்விரும்பிகளையும் பாராட்டி வாழ்த்துவதோடு அவர்கள் தம் பணியினைச் செய்வனே செய்து இப் பாடசாலையினை மென்மேலும் உயர்ந்த எப்போதும் கைகோர்த்து நிற்க வேண்டும் என மனதார வாழ்த்தி நிற்கின்றேன்.

வைரவிழாக் காணும் இப் பள்ளியின் அனைத்து நிகழ்வுகளும் அதனை ஒட்டி வெளிவரும் வைரவிழா சிறப்பு மலரும் சிறப்படைய வாழ்த்துகின்றேன்.

**திருவாளர் திருஞானம் ஜோன்குயின்ரஸ்**

**வலயக்கல்வி பணிப்பாளர்**

**வலயக்கல்வி பணிமனை**

**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கரைச்சிக்கோட்டகல்வி அலுவலர் திரு அ.அமிர்தலிங்கம் அவர்களின் வாழ்த்துச்செய்தி

கல்விப்பணியில் 60 ஆண்டு காலப்பகுதியை வெற்றிகரமாக நிறைவு செய்து மகிழ்ந்திருக்கும் இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலையின் வைரவிழா நாள் நிறைவையிட்டு உவகை கொள்ளும் உள்ளங்களுடன் நானும் ஒருவனாக கலந்து பெருமை அடைகின்றேன்.

இப்பாடசாலையானது 1955.05.27 ஆம் திகதியில் வட்டக்கச்சி கிழக்கு தமிழ்க்கலவன் பாடசாலை என்னும் பெயருடன் திரு. பா.கனகசபை அதிபர் அவர்களின் தலைமையின் கீழ் கிட்டத்தட்ட பத்தொன்பது மாணவர்களுடன் தனது கல்விப்பணியை ஆரம்பித்தது. வட்டக்கச்சி கிழக்கு தமிழ்க்கலவன் பாடசாலை என்னும் பெயரானது தபால் விநியோகத்தை இலகுபடுத்தும் நோக்கில் இராமநாதபுரம் எனும் கிராமமாகப் பிரிக்கப்பட்டதில் இருந்து கிளி/இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை என்னும் பெயரில் இயங்கத் தொடங்கியது.

அந்தவகையில் மாணவர்களுக்குரிய அறிவு திறன் உளப்பாங்கு மாற்றங்களை நிலைநிறுத்துவதில் அர்ப்பணிப்போடு ஆளுமைமிக்க பல சிறந்த மனிதர்களை உருவாக்கி சிறந்த பாடசாலையாக இப் பாடசாலை மிளிர்கின்றது. அத்தோடு இப்பாடசாலையின் கல்வி அடைவுப் பெறுபேறுகள் சிறப்பாக அமைவதற்கு இவர்கள் இணைபாடவிதானச் செயற்பாடுகளில் அக்கறை காட்டுவதும் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் மிகுந்த விளைதிறனுடனும், வினைத்திறனுடனும் செயற்பட்டு வருவதும் சிறந்த பண்பாகும்.

தற்போதைய அதிபரின் தலைமையில் ஒன்றிணைந்து மேலும் பல சாதனைகள் புரிந்து இப்பள்ளியின் புகழ் சிறக்கவும், மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கவும் இவ் வைரவிழா நாளில் வாழ்த்துவதில் கோட்டக்கல்வி அலுவலர் என்ற முறையில் நானும் பெருமை அடைகின்றேன்.

**-திருவாளர் அருளம்பலம் அமிர்தலிங்கம்-**
**கோட்டக்கல்வி அலுவலர்**
**கோட்டக்கல்வி பணிமனை**
**கரைச்சி.**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# ஓய்வுபெற்ற முன்னாள் வலயக்கல்விப்பணிப்பாளர் திருமிகு. க.முருகவேல் அவர்களின் வாழ்த்துச்செய்தி

கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலையில் வைரவிழா மலரிற்கான வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெரிதும் மனம் மகிழ்வடைகின்றேன்.

கடந்த 30 ஆண்டு காலமாக வட்டக்கச்சி என்ற அழகிய பசுமை நிறைந்த இயற்கை வளம் கொழிக்கும் கிராமத்தில் வாழ்ந்து கொண்டிருப்பவன் என்ற வகையில் இப்பள்ளியும் இக்கிராமத்திற்கமைய அமைந்திருக்கின்ற வகையில் வாழ்த்துகின்றோம். இப் பள்ளியை மனதார இந்த மண்ணில் நாம் பிறப்பதற்கு முன்னர் இப்பள்ளி இக்கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பள்ளியில் முதலாவது அதிபராக திரு.பா.கனகசபை அவர்கள் செயற்பட்டு இன்று திரு.சு.சுதாஸ்கரன் அதிபர் வரை பல அதிபர்கள் இப்பள்ளியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக செயற்பட்டு வந்துள்ளனர். 60 ஆண்டுகள் கடந்த நிலையில் இப்பள்ளி மாவட்ட ரீதியிலும், மாகாண ரீதியிலும், தேசிய ரீதியிலும் பல அரிய சாதனைகள் படைத்துள்ளது.

இப்பள்ளியின் அதிபரான திரு.கனகமகேந்திரா, திரு.சி.பாலகிருஸ்ணன், திரு.சி.திரவியம், திரு.சு.சுதாஸ்கரன் அவர்களின் காலத்தில் நான் கல்வி அதிகாரியாக செயற்பட்ட காரணத்தால் இவர்களின் அளப்பரிய சேவைகளை நான் நன்கு அறிந்தேன்.

இப்பள்ளியின் வளர்ச்சியில் இவர்களுக்கு பெரும்பங்கு உண்டு. இவர்களின் காலத்தில் இப்பள்ளி மாணவர்களின் உடற்பயிற்சிப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாம் நிலை அடைந்ததை கிளிநொச்சி மாவட்டத்திற்கும், வட மாகாணத்திற்கும் தமிழ் பேசும் மக்களுக்கும் பெருமை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்த்ததை யாரும் மறந்து விட முடியாது அக்காலத்து ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான கடினஉழைப்பு இருந்துள்ளன. இப்பள்ளியின் மாணவச் செல்வங்கள் ஒழுக்க சீலர்களாக இப்பள்ளித்தாய்க்கு பெருமை சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். இப்பள்ளியில் கல்விகற்ற பல மாணவர்கள் இன்று மருத்துவர்களாகவும், பொறியியலாளர்களாகவும், அதிபராகவும், ஆசிரியராக, பட்டதாரிகளாக, பல உழைப்பாளியாக, விவசாயியாக இக்கிராமத்தில் பண்புள்ளவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இப்பள்ளியின் வைரவிழாவை 2015ஆம் ஆண்டில் உரிய காலத்தில் அதாவது நான் கல்விப்பணிப்பாளராக கடமை புரிந்த காலத்திலும் எனது மனைவி இப்பள்ளியில் கடமைபுரிந்த காலத்திலும் நடந்திருந்தால் இரட்டிப்பு மகிழ்வடைந்திருக்கலாம். **"எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது எது நடக்கவிருக்கிறதோ அது நன்றாகவே நடக்கும்"** என்ற கீதாசாரத்திற்கமைய வைரவிழா சிறப்புற அமையவும் இப்பள்ளியில் புகழ், வளர்ச்சி மென்மேலும் பன்மடங்கு உயரவும் எல்லாம் வல்ல இறை அருளை வேண்டி எனது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

**க.முருகவேல்**

**ஓய்வுபெற்ற முன்னாள் வலயக்கல்விப்பணிப்பாளர்**

**கிளிநொச்சி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிளி /இராமநாதபுரம் மேற்கின் ஓய்வு நிலை அதிபர் திரு.சி. திரவியம் அவர்களின் வாழ்த்துச்செய்தி

கிளி/இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் 60ஆவது வருட நிறைவையிட்டு வைரவிழாவுக்கு வாழ்த்துச்செய்தி வழங்கும் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மகிழ்வடைகின்றேன்.

கிளிநொச்சி வலயத்தின் கிழக்குக் பிரதேசத்தில் பழம் பெரும் கிராமங்களின் ஒன்றான வட்டக்கச்சியில் 1955ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு அக்கிராமம் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளிலும் ஏனைய இணைபாட விதமான செயற்பாடுகளிலும் ஆரம்பம் தொடக்கம் இன்று வரை பல சாதனைகளைப்படைத்த ஒரு கலைக்கூடமாக திகழ்கின்றது.

இவ்வித்தியாலயத்தின் 60 ஆண்டுகால வாழ்வில் கல்விப்பணியாற்றிய அதிபர்களின் செயலாற்றுப் பணிகள் மிகவும் உன்னதமானவை. 2008ஆம் ஆண்டில் ஏற்பட்ட போர்ச்சூழல் காரணமாக பாடசாலை இடம் பெயர்ந்து பல்வேறு கஷ்டங்களின் மத்தியில் முகாம்களில் இயங்கி மீண்டும் ஏற்பட்ட இயல்பு நிலை காரணமாக 2010ஆல் சொந்த இடத்தில் இயங்கத்தொடங்கி பெற்றோரதும் பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் வலயக்கல்வி அலுவலகத்தினர் போன்றவர்களின் ஒத்துழைப்படன் பாடசாலையானது கற்றல் சூழலுக்கு ஏற்ற பௌதீக வளங்களை கொண்டு வனப்பு மிக்கதாக விளங்ககின்றது.

இப்பாடசாலை சாதனைகளை மாவட்டரீதியிலும், தேசிய ரீதியிலும் புரிந்திருப்பது யாவரும் அறிந்த விடயமாகும். இப்பாடசாலையில் 2007ஆம் ஆண்டில் இருந்து 2014ஆம் வரை ஆண்டு நானும் கடமையாற்றியதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். இங்கு கல்வி கற்ற மாணவர்கள் பொறியியலாளர்களாக, மருத்துவராக, ஆசிரியர்களாக, அரச உத்தியோகத்தர்களாகவும் இன்னும் சமூகத்தை தாங்கும் நற்பிரஜைகளாகவும் சிறப்படைந்துள்ளார்கள். இவ்வாறு அளப்பெரிய கல்விச்சேவையை வழங்கிய பெருமை இப்பள்ளித் தாய்க்குரியதாகும்.

பாடசாலை பல்வேறு துறைகளிலும் மென்மேலும் வளர்ச்சி பெற வேண்டும் என வாழ்த்துக் கூறி நிறைவு செய்கின்றேன்.

**-திருவாளர் சின்னத்தம்பி திரவியம்-**

**ஓய்வு நிலை அதிபர்**

**கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிபர்
# திரு. சுந்தரரேஸ்வரன் சுதாஸ்கரன் அவர்களின்
# அறிமுகஉரை

ஈழமணித்திருநாட்டின் வடபால் நீர்வளம், நிலவளம் அமையப்பெற்ற வன்னி நிலத்தின் கிளிநொச்சி நகரத்தின் இதயமாகத்திகழும் இரணைமடுத்தாயின் மடியாகிய சகல செல்வயோகமிக்க இடமாக வட்டக்கச்சிக்கிராமம் திகழ்கின்றது. இக்கிராமத்தில் மாவடி கிராம அலுவலக பிரிவில் KN/42 எமது கலைக்கூடம் 1955.05.27 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு வட்டக்கச்சி கிழக்கு இந்து அரசினர் தமிழ் கலவன் பாடசாலை எனும் திருநாமம் கொண்டு அழைக்கப்பட்டது. இராமநாதபுரம் கிராம அலுவலர்பிரிவு தனியாக ஆரம்பிக்கப்பட்ட பின்னர் தபால் விநியோகத்தை இலகுபடுத்தும் நோக்காகக் கொண்டும் பாடசாலைகளைக் குறிப்பிடமாகக் கொண்டும் அறிவதற்கு கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை என்கின்ற பெயர் சூட்டப்பட்டது. இது தொடர்பான ஆவணங்கள் தற்போது காணப்படவில்லை. எனினும் அயலில் உள்ள மூத்தோர்கள் இது தொடர்பாக தெளிவான விளக்கத்தைக் கொண்டு காணப்படுகின்றார்கள்.

தரம் 1 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புக்களைக் கொண்டு காணப்படும் எனது பாடசாலையில் தற்போது 342 மாணவச் செல்வங்கள் கல்வி கற்று வருகின்றார்கள். இவர்களது கல்வியிலும், நற்பழக்கவழக்கத்திலும், பண்பிலும், ஏனைய இணைபாடவிதான செயற்பாடுகளிலும் அக்கறை கொண்ட அன்பும், அரவணைப்பும் மிக்க 23 செயலூக்கமிக்க ஆசிரியர்களும், 4 தொண்டர் ஆசிரியர்களும், பகுதி அளவிலான சிங்கள பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியரும், கிறிஸ்தவ பாடத்தைப் புகட்டும் ஒப்பந்த ஆசிரியரும், கல்விசாரா உத்தியோகத்தர்கள் மூவருமாக மொத்தம் 29 வள அணியினர் பாடசாலையை அலங்கரிக்கின்றனர்.

பாடசாலை மாணவர்கள் திறமை மிக்கவர்களாகவும், வினைத்திறன் மிக்கவர்களாகவும், பிள்ளைகளின் பெற்றோர் விருப்புடன் கடமையாற்றுபவர்களாகவும், பாடசாலை பற்றிய உயரிய நேர்சிந்தனை மிக்கவர்களாகவும் காணப்படுவது வேறு எந்த இடங்களிலும் காணமுடியாத குறிப்பிட்டு கூறக்கூடிய விடயமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை பௌதீக வளத்தைப் பொறுத்தவரை 4.5 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டு காணப்படுகின்றது. சுற்றி வரையுள்ள வேலியில் 250m தூர இடத்தை விட மிகுதி 850m தூர இடமானது நிரந்தர மதிலாகக் கட்டப்பட்டும் நிரந்தர நுழைவாயில்கள் இரண்டினைக் கொண்டும் காட்சி தருகின்றது. பாடசாலையின் கிழக்குப்பகுதியில் அழகிய தென்னந்தோட்டமும், நிரந்தர விளையாட்டுமுற்றமும், ஒன்றுகூடல் மண்டபம்(130'×25'), வகுப்பறைக் கட்டடம்(90'×20') ஒன்றும் இன்னொரு வகுப்பறைக் கட்டடம்(120'×20') கொண்ட ஒன்றும் ஆரம்பக்கல்விக்கான(150'×27') கொண்ட கட்டடமும், திறந்த வெளிக் கலையரங்கும்(20'×30'), சமையற்கூடம் (27'×10'), நடனஅறை (20'×25'), கலைக்கூடம்(20'×20'), விஞ்ஞானகூடமும்(40'×20'), அலுவலகம்(20'×20') கொண்டதாகவும் நவீன வசதிகளைக் கொண்ட போதுமான மலசலகூடமும், நிரந்திரக்கிணறு(37'×72') குழாய்க்கிணறு(85'×4') இரண்டிற்குமான நீர்த்தாங்கிகள், அதிபர்விடுதி, அழகிய கல்வித்தெய்வத்தின் ஆலயம், அழகிய திருவள்ளுவர் சிலை, 200m ஓட்டப்பாதை என்பன பாடசாலையை அலங்கரிக்கின்றன.

இதனைவிட நான்கு சீரொழுங்கான வகுப்பறைத்தொகுதி(Smart class room), 5 கணினிகள், போட்டோக்கொப்பி இயந்திரம், (multi media), தொலைக்காட்சி, ஒலிபெருக்கி, மின்பிறப்பாக்கி(2.5kv), தொலைபேசி, மின்சாரவசதி அனைத்தும் நிரம்பப் பெற்றுக் காணப்படுகின்றது.

கற்றல் கற்பித்தலைப் பொறுத்த வரையில் க.பொ.த சாதாரணதரம் 2017 பெறுபேற்று ஆய்வில் 87.2%மாகவும், புலைமைப்பரிசில் 2018 பெறுபேற்று ஆய்வில் 89.28% மாகவும் காணப்படுகின்றது. க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் 2017இல் செல்வன் ந.அரவிந்தன் 7A,B,C தரமும் 2018 புலமைப்பரிசில் பரீட்சையில் செல்வன் பா.யுகான் 191 புள்ளிகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் 9ம் இடத்தைப் பெற்றமையும், தரம் 9 மாகாண மட்ட பரீட்சையில் செல்வி தீ.சதுர்ஜா 10A,B பெற்றமையும் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஓர் எடுத்துக்காட்டாகும். இதனைவிட இணைபாடவிதான செயற்பாடுகளில் இயலிசை நாடகம், விளையாட்டுக்கள் என்பவற்றிலும் எமது பிள்ளைகள் மேல்நோக்கிக் காணப்படுகின்றார்கள். இவற்றிற்கு உதாரணமாக அரச நடன விழாவில் தேசிய ரீதியில் ஒயிலாட்டம் 1ம் இடம் பெற்றமையும், தமிழ்மொழித்திறன் போட்டியில் செல்வி ச.பாமகள் தேசிய ரீதியில் 1ம் இடம் பெற்றமை, சமூகவிஞ்ஞானப் போட்டியில் 1ம், 3ம், 4ம், 5ம், 9ம் இடங்களைப் பெற்றமை குறிப்பிடலாம். இதனைவிட சுகாதார மேம்பாடான பாடசாலை என்ற வகையில் வடமாகாணத்தில் தங்கப்பதக்கம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவற்றுக்கெல்லாம் அழகுசேர்ப்பதுபோல் எமது பாடசாலை அணியிசைக்குழுவினர் (band group) மிகவும் மிடுக்காகவும், திறமையாகவும் காணப்பட்டு வருகின்றனர்.

இவற்றிற்கான காரணம் சமூகம் எதிர்பார்ப்பதை பாடசாலை நிறைவேற்றுவதாகவும், ஆசிரியர்கள், மாணவர்கள் உறவு சிறப்பாகக் காணப்படுவதும், ஆசிரியர்களது அன்பான கனிவான அறிவூட்டலும், பணியாளர்களது அர்ப்பணிப்பான சேவையும், மிகவும் சிறப்பாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுவதாகும். இதற்கெல்லாம் ஆணிவேராக காணப்படும் காரணங்கள் பல உள்ளன. அதில் அதிபர் உயர்திரு கனகமகேந்திரா என்ற பெயர் இன்றும் எமது காதில் ஒலிப்பதை அவதானிக்க முடிகின்றது. நான் இப்பாடசாலையில் தற்போது அதிபராகக் கடமையேற்றுள்ளேன்.

உயர்திரு கனகமகேந்திரா அதிபருடைய காலம் பாடசாலையின் வரலாற்றில் பொற்காலமாகக் காணப்பட்டுள்ளது. இவற்றிற்கு கட்டியமாக பயன்தரு மரங்கள், கிணறு, மாணவர் அடைவு இணைபாடவிதானச் செயற்பாடுகள், தற்காலிக அரங்கு,பாடசாலைத்தோட்டம், பாடசாலை வேலி, சிறந்த சமூகம் காணப்பட்டமையை பழைய மாணவர்கள், பெற்றோர்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.

அடுத்து வந்த முதல்வர் உயர்திரு ஆ.கருணாநிதி அவர்களின் காலத்தில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள், இணைபாடவிதான செயற்பாடுகளில் மிகச் சிறப்பாக பாடசாலை துலங்கியுள்ளமையைக் காணமுடிகின்றது. 2002ம் ஆண்டு அகில இலங்கை ரீதியில் உடற்பயிற்சிப்போட்டியில் தேசிய ரீதியில் முதலாம் இடம் பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. அடுத்த முதல்வர் திரு சி.பாலகிருஷ்ணன் அவர்கள் அழகியமதில், அழகிய நுழைவாயில் அமைத்து பாடசாலையை எல்லைப்படுத்தியதுடன் எமது பாடசாலையின் கரப்பந்தின்தந்தையாகவும்(volley ball) தேசிய மட்டத்தில் கரப்பந்திலும் பங்குபற்றச் செய்தமையையும் 50வது ஆண்டில் பொன்விழா நிகழ்வையும் சிறப்பாக நடாத்தி இருந்தமையைக் குறிப்பிட்டுக் கூறமுடியும். இவற்றைவிட சிறந்த விளையாட்டுப்போட்டிகள், நீர்தாங்கி அமைத்தமை போன்ற பல்வேறு விடயங்களையும் இங்கு குறிப்பிட முடியும். பிற்பட்ட காலத்தில் உயர்திரு சி.திரவியம் அவர்கள் திரு சி.பாலகிருஷ்ணன் அவர்களிடம் இருந்து பாடசாலையைப் பொறுப்பேற்றுக் கொண்டார். இக்காலப்பகுதியில் பாடசாலையானது பாரிய இடப்பெயர்வினை சந்தித்து மீண்டும் புத்துயிர்வு பெற்ற காலமாகும். போதுமான கட்டடங்கள் (KOICA) கட்டடங்கள் (Sevalanka) கட்டடங்கள், மலசலகூடங்கள், சரஸ்வதி ஆலயம் போன்றவை இவருடைய காலத்திற்கு எடுத்துக்காட்டாகும். நடனஅறை, அலுவலகம், கணினிக்கூடம், மின்சாரவசதி, சமையற்கூடம், திறந்தவெளியரங்கு போன்ற பௌதீக வளங்களையும் ஏற்படுத்தியமை போற்றத்தகு விடயமாகும். அத்துடன் சமூகத்துடனான சிறந்த தொடர்பாடல் சிறந்த க.பொ.த சாதாரணதரம், தரம் 5 சித்தி வீதத்தையும் உயர்வாகப் பேணிவந்தார். அவருடைய ஓய்வுக் காலத்தைத் தொடர்ந்து அதிபராக திருமதி சி.சுதாகரன் கடமையேற்று பணிகளைத் திறம்பட நடாத்தி வந்தார். இவர் சிறந்த குழாய்க்கிணறு திறந்ததிலிருந்து பிரதான மண்டபத்தை அழகாக மூடி அடைத்தமையையும் இங்கு குறிப்பிட முடியும். அத்துடன் மாணவர் அடைவு மட்டத்தை சிறப்பாகப் பேணிவந்துள்ளார்.

தற்போது நான் இங்கு கடமையாற்றி வருகின்றேன். எனக்கு முன்னதாக கடமையாற்றிய 22 அதிபர்கள் அர்ப்பணிப்பான ஆசிரியர்கள் எண்ணியவற்றையும், அவர்களது கனவையும், பெற்றோரது எண்ணங்களையும் நாம் நனவாக்கவிழைகின்றோம். அத்துடன் நவீன கல்விச்சிந்தனைகள் கல்விப்போக்குக்களையும் உள்வாங்கி சமூகம் விரும்புகின்ற நற்பிரஜைகளை உருவாக்க எண்ணி வருகின்றோம். எனினும் எமது பாடசாலையை அடுத்த நிலைக்கிட்டுச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்ல வேண்டிய தேவை உருவாகியுள்ளது. அதில் முதலாவதாக எமது பாடசாலையின் பெயர் மாற்றப்பட வேண்டியுள்ளது. வட்டக்கச்சி பிரதேசத்தின் இராமநாதபுரம் என்னும் நாமத்தைக் கொண்ட ஒரே ஒரு நிறுவனம் இதுவாகும். இது உடனடியாக நடைமுறைப்படுத்தல் வேண்டும். அத்துடன் க.பொ.த. உயர்தர (கலை,வர்த்தகம்) ஆரம்பிக்கப்பட வேண்டியுள்ளது. அதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றோம். அடுத்து (120'×25') அளவு கொண்ட ஒரு நிலையான கட்டடம் தேவையாகவுள்ளது. அத்துடன் பெற்றோர் பங்களிப்புடன் 4 சீரொழுங்கான வகுப்பறைகளே காணப்படுகின்றது. இவை அனைத்து வகுப்புக்களிற்கும் விரிவுபடுத்த வேண்டிய தேவை உள்ளது. இதற்கு எப்போதும் போன்று எமது மேலதிகாரிகள் தங்களது பூரண ஒத்துழைப்பை வழங்க ஆவண செய்ய வேண்டும் என்பதுடன் எல்லாம் வல்ல இறைவன் தனது கடைக்கண் பார்வையுடனான கருணையையும் வழங்க வேண்டுகின்றேன். அத்துடன் இந்த 60வது ஆண்டு விழா பலசிரமத்தின் மத்தியில் நிறைவேறுகின்றது. இதற்கு பண உதவி, பொருள் உதவி நினைவுத்தூபி அமைத்தவர்கள் பணத்தைச் சேகரித்தவர்கள் நிகழ்ச்சிகளை நடாத்தி முடித்தவர்கள், நிகழ்விற்கு அனுமதி தந்தவர்கள், விருந்தினராகக் கலந்து கொண்டவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், புலம்பெயர் நாட்டில் வாழும் அன்புள்ளம் கொண்டவர்கள் அனைவரையும் இந்நாளில் தலைசாய்த்து வணங்கி வாழ்த்துகின்றேன். மேலும் இந்நிகழ்விற்கு சகல விதத்திலும் உதவி நல்கிய அனைத்து அன்புள்ளங்களிற்கும் நாவெழா நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**-திருவாளர் சுந்தரரேஸ்வரன் சுதாஸ்கரன்-**

**அதிபர்,**

**கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதி முதல்வர் திருமதி சி.சுதாகரன் அவர்களின் வாழ்த்துச்செய்தி

வடமாகாணத்தின் ஒரு மாவட்டமாக விளங்கும் கிளிநொச்சி மாவட்டத்தின் கண்ணே நீர்வளம், நிலவளம், களனிகளும், கவின் கனி மரங்களும் சூழப்பெற்ற வட்டக்கச்சி கிராமத்திலே வானுயர்ந்து நிற்கும் கலைக்கூடம் கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை.

அறிவு, திறன், ஒழுக்க விழுமியங்கள், பழக்கவழக்கங்களை பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ளும் செயற்பாடே கல்வி ஆகும். நாட்டிற்கு நல்லதொரு பிரஜையை உருவாக்கும் பாடசாலையாக உயர்ந்து நிற்கின்றது. சமூகம் எதிர் பார்க்கும் சிறந்த மாணவர்களை உருவாக்குவதில் சிறந்த ஆளுமை கொண்ட தலைமைத்துவங்கள் ஆர்வம் மிக்க ஆசிரியர்குழாம் ஆர்வம் மிக்க மாணவர்களை தன்னகத்தே கொண்ட பாடசாலைச்சூழல் பற்றுக்கொண்ட பெற்றோர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகளை தன்னகத்தே கொண்ட பாடசாலை.

இவ்வனைத்துறவுகளும் ஒன்றிணைந்து பாடசாலை வளங்களை பயன்படுத்தி பாடசாலை வளர்ச்சிக்கு பாடுபட்டும்,உழைத்தும் அதாவது சிறந்த உள்ளீடுகளை இட்டு மிகப்பாரிய வெளியீடுகளைப் பெற்று மேலும் உயர கிளி மாவட்டத்தில் ஏனைய பாடசாலைகளுடன் ஒப்பிடும் போது மேலும் சிறப்புற்று விளங்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**-திருமதி சி.சுதாகரன்-**
**பிரதி அதிபர்**
**கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளரின் திருமதி. ற. நாதவர்மா அவர்களின் வாழ்த்துச்செய்தி

பச்சைப்பசேலென விளங்கும் வட்டக்கச்சிக் கிராமத்தில் தனக்கென ஓர் தனி இடம் பிடித்து நிமிர்ந்து நிற்கும் இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை தனது அறுபதாவது அகவை நிறைவை அடைந்திருக்கும் இவ்வேளையில் கல்விப்பணியிலும் விளையாட்டு ஏனைய இணைபாடவிதான செயற்பாடுகளிலும் பாடசாலை சமூகத்தினருக்கு அளப்பரிய பணியை ஆற்றி நிமிர்ந்து நிற்கின்றது.

அறுபதாவது ஆண்டு வைரவிழாக்காலத்தில் பாடசாலையின் அபிவிருத்திச் சங்க செயலாளராக இருப்பது எனக்கு கிடைத்த வரம் ஆகும்.

அறுபது ஆண்டுகள் தனக்கென ஒரு மிடுக்கோடு சகலதுறைகளிலும் கால்பதித்து சாதனைபடைத்து தனக்கென்ற தனித்துவத்தோடு சிறந்து விளங்கிக் கொண்டிருக்கின்றது. அத்தோடு பொன்விழாக்காலத்தில் பாடசாலைத்தாயின் பிள்ளையாக இருந்து வைரவிழாக்காலத்தில் பாடசாலைத்தாயின் பெற்றோராகவும், பாடசாலைச்சங்க செயலாளராகவும் இருப்பதையிட்டு பெருமகிழ்வு கொள்கின்றேன்.

மேலும் இப்பள்ளியானது சகல துறைகளிலும் மென்மேலும் சாதனைகள் பல படைத்து வைரவிழா சிறப்புற அமைய எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**-திருமதி. ற. நாதவர்மா-**

**செயலாளர்**

**பாடசாலை அபிவிருத்தி சங்கச் செயலாளர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புலம்பெயர் பழைய மாணவன் திருமிகு. ம. வேணுதன் அவர்களின் வாழ்த்துச்செய்தி

தன்னை உருவாக்கி அன்னைக்கு மணிமகுடம் சூட்டி மகிழும் ஒரு குழந்தையின் மனநிலையில் என் மகிழ்ச்சியையும் இங்கு பகிர்ந்து கொள்ள விளைகிறேன்.

ஒரு மனிதன் தன் பாடசாலைப்பருவத்தில் பெற்றுக் கொள்ளும் சிந்தனைகளும் ஆற்றல்களுமே அவனது எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றன. அதிக ஆற்றல்களை வெளிப்படுத்தும் தகைமையும் அதிக தேடல்களை தோற்றுவிக்கும் மனவெழுச்சியும் பாடசாலைப்பருவத்தில் இருப்பதைப் போல பிறகெப்போதுமே இருப்பதில்லை

அவ்வாறு பிறக்கும் ஆற்றல்களை நல்ல விளைவுகளுக்குரியனவாகவும், சமூகத்துக்குரியனவாகவும் ஒழுங்குபடுத்தும் உன்னத பணி பாடசாலையைச் சேர்ந்தது.

மிக இடர்பாடான காலங்களிலும் நாட்டின் அசாதாரண சூழல்களிலும் கூட இந்தச் சேவையிலிருந்து வழுவாது மிகச்சிறந்த பாடசாலைப்பருவத்தை எமக்களித்த எம் பாடசாலைத்தாய் வணக்கத்துக்குரியவளாகின்றாள். வளங்களின் பற்றாக்குறைகளையும் மனிதவலுக்களால் முறியடித்த அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் அனைவருமே எண்ணங்களிலேற்றிப் போற்றப்பட வேண்டியவர்கள்.

தொழில் முறைச் சிந்தனையற்ற குடும்பம் போன்ற பாதுகாப்பான சூழல் இங்கே கல்வி கற்ற என்போன்றோருக்கு கிடைத்த வரமாகும். இங்கு கற்றோரும், கற்போரும் இது எனது பாடசாலை என்ற தலை நிமிர்வைப் பெற இவை போன்ற வரங்களே காரணம். அதே நிமிர்வோடு எம் பாடசாலையின் வரலாறு காலங்களில் நிலைபெறப் பிரார்த்திப்பதோடு இந்த வாய்ப்பை வழங்கிய அதிபர் உள்ளிட்ட நூலாக்கக் குழுவிற்கும், பாடசாலையின் வளர்ச்சியையும், இலட்சியங்களையும் தாங்கி உழைத்து வரும் அனைவருக்கும் நன்றி பாராட்டி எனக்கு முன்பே என் அன்னைக்கும் எழுத்தறிவித்த பாடசாலைத்தாயின் தாழ் பணிந்து விடைபெறுகிறேன்.

**-ம.வேணுதன்-**
**பழைய மாணவன்**
**ஊடகவியலாளர் (கனடா)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதழாசிரியர் திருமதி. நி. விஜயகுமார் அவர்களின் உள்ளத்திலிருந்து

வன்னிப்பெரு நிலப்பரப்பின் கிளிநொச்சி மாவட்டத்தில் வட்டக்கச்சிப் பிரதேசத்தில் புகழ் பூத்த பாடசாலையாக திகழும் கிளி/இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அமைந்துள்ளது.

இப்பாடசாலை 60 ஆண்டுகளாக கல்விப்பயிர் வளர்த்து புகழ் மணம் பரப்பி நிற்கும் இவ் வேளையில் தனது வினைத்திறனான செயற்பாட்டினால் இருப்பை நிலை நிறுத்தி வருகிறது. பாடசாலையில் வைரவிழா மலரின் ஆசிரியராக இருக்கக் கிடைத்த தருணத்தையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

2016ஆம் ஆண்டு இப் பாடசாலையைப் பொறுப்பேற்ற அதிபர் திரு.சு.சுதாஸ்கரன் அவர்கள் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் அணிதிரட்டி வைரவிழாவினையும், நூல்வெளியீட்டினையும் மேற்கொள்ள வழிசமைத்தார்.

இப்பாடசாலை பொன்விழா கொண்டாடி மலர்வெளியீட்டினைச் செய்து இன்புற்று இப்பொழுது வைரவிழா மலர்வெளியீட்டில் பல்துறைசார்ந்த அறிஞர்களின் கட்டுரைகளையும் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகளின் ஆக்கங்களையும் தாங்கி சிறப்பான ஒரு மலராக வெளிவருகிறது.

இவற்றைவிட பாடசாலையின் சாதனைகளும், வெற்றிகளும் அவற்றிற்கு காரணமான அதிபர்களினதும், ஆசிரியர்களினதும் விபரங்களும், பரீட்சைப் பெறுபேறுகளும், அட்டவணைகளும், புகைப்படங்களும் இம்மலரை அலங்கரிக்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மலரை சிறந்த முறையில் வெளியிடுவதற்கு என்னோடு ஒத்துழைத்த முதல்வர், பிரதி முதல்வர், ஏனைய ஆசிரியர்கள், மலர்க்குழுவினர் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு மலருக்குரிய ஆசிச்செய்திகள், வாழ்த்துச்செய்திகள் வழங்கிய சமயப்பெரியார்கள், கல்வியியலாளர்கள், அறிஞர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எனது உள்ளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வைரவிழா மலருக்கான நிதிமூலத்தைத் தந்துதவிய பாடசாலையின் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் வெளிநாடுகளில் வாழுகின்ற கல்லூரியின் பழைய மாணவர்கள் அனைவருக்கும் உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் அட்டைப்படம், அட்டைப்படக்கவிதையை வழங்கிய எமது பாடசாலை ஆசிரியர்கள் பாடசாலையின் வரலாற்றினை எமக்குத் தந்துதவிய அன்பு உள்ளங்களிற்கும் எமது நன்றிகள். வைரவிழா நூலாக்கத்திற்காக என்னோடு அல்லும் பகலும் உழைத்த அதிபர் மலர்க்குழுவினருடன் பாடசாலைச் சமூகத்திற்கும் எனது பாராட்டுக்கள். நூலாக்கத்திற்கான ஆக்கங்களை தட்டச்சு செய்துதவிய எமது பாடசாலையின் பழைய மாணவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். எமது பாடசாலையின் வைரவிழா மலரை அழகுற சிறந்த முறையில் அச்சிட்டுத் தந்துதவிய இராஜ் ஆட்ஸ் பதிப்பக நிறுவனத்தினருக்கும் எனது கனிவான நன்றியைக் கூறுவதில் உவகையடைகின்றேன்.

**–திருமதி.நி.விஜயகுமார் –**

**ஆசிரியை**

**கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை ஆளணி விபரம்

| இல | ஆளணி விபரம் | தகுதி |
|---|---|---|
| 01 | திரு.சுந்தரேஸ்வரன் சுதாஸ்கரன் | SP.Trd (Ag), DSM. (NIE) BEd (NIE), SLPS 2 |
| 02 | திரு.சுந்தரலிங்கம் பிரேம்குமார் | SP.Trd (Maths) |
| 03 | திரு.ஆறுமுகம் இராஜேந்திரகுமார் | SP.Trd (Primary) |
| 04 | திரு.வேலும்மயிலும் நமணன் | BSc |
| 05 | திரு.படிகலிங்கம் இளஞ்செழியன் | SP.Trd (Primary) |
| 06 | திரு.தேவராஜா ஜசிந்தன் | Dip.Ed (Art) |
| 07 | திரு.அப்துல் அஸீஸ் அப்துல் அலீம் | SP.Trd( Social Science) |
| 08 | திரு.சிவபாலன் லினோசன் | GCE(A/L) |
| 09 | திருமதி.சிவகலை சுதாகரன் | SP.Trd (Home Economics), Dip in Councling |
| 10 | திருமதி.சிவரூபவதி சிவபாலசுந்தரம் | SP.Trd (Music) |
| 11 | திருமதி.விஜயரஜனி நந்தகுமார் | B.Ed, SP.Trd (Primary) |
| 12 | திருமதி.தேனுகா சத்தியபாலன் | SP.Trd (Science) |
| 13 | திருமதி.தர்ஷிகா விஜிதரன் | SP.Trd (Physical Education) |
| 14 | திருமதி.நிசாந்தினி விஜயகுமார் | BA,SP.Trd (Tamil) |
| 15 | திருமதி.கஸ்துர்ரி யோகரட்ணம் | BBM |
| 16 | திருமதி.பிரேமினி ரவிசங்கர் | SP.Trd (Primary) |
| 17 | திருமதி.கீதாஞ்சலி தேசன் | B.Ed, SP.Trd (Primary) |
| 18 | திருமதி.நசிதா அகிலன் | SP.Trd (Primary) |
| 19 | திருமதி.திருலேகா தசிகரன் | SP.Trd (Physical Education) |
| 20 | திருமதி.பாலதேவி தருமரூபன் | BA,SP.Trd (commerce) |
| 21 | திருமதி.யூஜின் ஷர்மிலானி அன்ரனிராஜா | SP.Trd (English) |
| 22 | திருமதி.கலைமகள் ஜெகதீபன் | SP.Trd (Dance) |
| 23 | திருமதி.கசந்தினி சுதாகரன் | BA, Dip.Ed (Hin) |
| 24 | செல்வி.குலேந்திரன் அபிநயா | BA |
| 25 | திரு.செபமாலை றெஜி இராசநாயகம் | தொண்டர் ஆசிரியர் |
| 26 | செல்வி.சௌந்திரலிங்கம் சயானி | தொண்டர் ஆசிரியர் |
| 27 | செல்வி.வினோதன் பிரதீபா | தொண்டர் ஆசிரியர் |
| 28 | செல்வி.தேவராஜ் சிந்துஜா | தொண்டர் ஆசிரியர் |
| 29 | செல்வி.யோகநாதன் நிலாவினி | மறைக்கல்வி ஆசிரியர் |
| 30 | செல்வி.இராமச்சந்திரன் விமலராணி | பாடசாலைப்பணியாளர் |
| 31 | திரு.வேல்முருகன் மதிவேந்தன் | பாடசாலை காவலாளி |
| 32 | திரு.விநாயகமூர்த்தி வஜீகரன் | அமைய காவலாளி |
| 33 | திருமதி.பிரேமிலன் பெனார்டோ பற்றிமா | ஒப்பந்த சிங்கள பாட ஆசிரியர் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி / இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை
# அதிபர், ஆசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள் – 2018



**1ம் வரிசையில் அமர்ந்திருப்போர்**

திரு. ஆ. இராஜேந்திரகுமார், திரு. அ. அப்துல் அலீம், திருமதி சி. சிவபாலசுந்தரம்,
திருமதி. சி. சுதாகரன், திரு. சு. சுதாஸ்கரன், திருமதி. பா. தருமரூபன், திரு. சு. பிறேம்குமார், திரு. ப. இளஞ்செழியன்.

**2ம் வரிசையில் நிற்பவர்கள்**

திரு. வே. றமணன், திரு. வே. மதிவேந்தன், திரு. சி. லினோசன், திருமதி. நி. விஜயகுமார், திருமதி. தி. தசிகரன், திருமதி. த. விஜிதரன்,
திருமதி. க. ஜெகதீபன், செல்வி. கு. அபிநயா, திருமதி. யூ. அன்ரனிராஜா, செல்வி. தே. சிந்துஜா, செல்வி. வி. தீபா,
திரு. செ. றெஜி இராசநாயகம், திரு. தே. ஜசிந்தன், திரு. செ. வஜீகரன்.

**3ம் வரிசையில் நிற்பவர்கள்**

திருமதி. க. யோகரத்தினம், திருமதி. கீ. தேசன், செல்வி. சௌ. சயானி, திருமதி. வி. நந்தகுமார், திருமதி. தே. சத்தியபாலன்,
திருமதி. பி. ரவிசங்கர், திருமதி. ற. அகிலன், செல்வி. இ. விமலராணி, செல்வி. யோ. நிலாவினி, திருமதி. க. சுதாகரன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரவிழா மலரினை அலங்கரிப்பவை


01. ஆசியுரைகள், வாழ்த்துரைகள் I-XXIII

02. கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலையின் அறுபது வருடங்களின் வரலாற்றுத்தடங்கள் ........ 01 - 06

03. பாடசாலையும் பெற்றோர்களின் வகிபாகமும் ........ 07 - 11

04. மாணவர்களின் சமூகமயமாக்கல் காரணியாக ஊடகங்கள் ........ 12 - 17

05. மாணவரின் ஆளுமையை வளர்ப்பதில் இணைக்கலைத்திட்டத்தின் பங்களிப்பு ........ 18 - 22

06. யாழ்ப்பாணத்தில் அகராதிக்கலை ........ 23 - 28

07. மானிடத்தின் மேன்மை ........ 29 - 31

08. நீரிழிவு குறித்த ஆற்றுப்படுத்தலும் ஆலோசனை வழிகாட்டலும் ........ 32 - 34

09. கிளி / இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலையின் வளர்ச்சிப்பாதை பற்றிய எனது கருத்து. ........ 35 - 36

10. இந்துநாகரிகத்தில் இசைக்கலை ........ 37 - 43

11. கன்மக் கோட்பாடும் மறுபிறப்பும் ........ 44 - 53

12. ஆற்றுமைத் திறன்விருத்தியில் உடல்மொழியின் பங்களிப்பு ........ 54 - 57

13. CFL (சீ.எப்.எல்) மின்குமிழா? எளிமை சிக்கனம் அபாயம் ........ 58 - 59

14. மனம் எனும் பேய்க்குரங்கு ........ 60 - 62

15. ஈழத்து இலக்கிய வரலாற்றில் ரசிகமணி கனக. செந்திநாதன் ........ 63 - 66

16. சிற்பிகளை உருவாக்கும் சிகரங்கள் பாடசாலை ........ 67 - 68

17. BUDS TO BLOOM ........ 69

18. இரணைமடு நீர்த்தேக்கம் ........ 70 - 97

19. உளநலம் காப்போம் சந்தோசமாக வாழ்வோம் ........ 98 - 100

20. இசையின்பத்தினுள் தெய்வீகம் ........ 101 - 102

21. பாடசாலை விருத்தி நிகழ்ச்சித் திட்டத்தில் பெற்றோர் பங்களிப்பு ........ 103 - 105

22. கல்வியின் அரங்காக சிறுவர் அரங்கு அறிமுகம் ........ 106 - 108

23. வைரவிழாகாணும் வித்தகியே.... ........ 109 - 110

24. எமது பாடசாலையின் கல்வித்தொழில்நுட்பத்தின் பிரயோகம் ........ 111 - 114

25. CLASS ROOM MANAGEMENT ........ 115 - 116

26. சூழலும் இலத்திரனியல் கழிவுகளும் ........ 117 - 118

27. வர்ணம் முதல் ஓவியம் வரை உளவியல் தொடக்கம் மருத்துவம் வரை வர்ணத்தின் ஓர் அலசல் ........ 119 - 124

28. ஆரோக்கிய வாழ்வும் விளையாட்டும் ........ 125 - 129

29. குறவஞ்சி நாட்டிய நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் ........ 130 - 139

30. தித்திக்கும் தமிழ் ........ 140

31. பாரதி பாடல்களில் பெண்விடுதலை ........ 141 - 143

32. மாணவர்களின் ஆக்கங்கள் ........ 144 - 186

33. பெற்றோர், பழைய மாணவர்களின் ஆக்கங்கள் ........ 187 - 204

34. பாடசாலை ஈட்டியவை ........ 205 - 218



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி / இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலையின் அறுபது வருடங்களின் வரலாற்றுத் தடங்கள்.

இந்து சமுத்திரத்தின் முத்து என சிறப்பிக்கப்படும் இலங்கைத் திருநாட்டிலே வன்னிப்பெரு நிலப்பரப்பிலே கற்றோரும் மிக்காரும் சீரோடும் சிறப்போடும் வாழும் வடமாகாணத்திலே கிளிநொச்சி மாவட்டம் சிறப்போடு மிளிர்கின்றது. இயற்கையன்னை எமக்களித்த நீர்வளத்தையும், நிலவளத்தையும் தன்னகத்தே கொண்டு வந்தாரை வரவேற்கும் வட்டக்கச்சிக் கிராமம் 1953.10.12 இல் ஆரம்பிக்கப்பட்ட குடியேற்றமாகும்.

இக்காலப்பகுதியில் வாழ்ந்த மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு செல்வங்களுள் சிறந்த செல்வமாம் கல்விச்செல்வத்தை குழந்தைகளுக்கு வழங்க வேண்டுமென எண்ணி காணி அபிவிருத்தி திணைக்களத்தினரால் பாடசாலையை உருவாக்குவதற்கு காணி ஒதுக்கப்பட்டதுடன் அதில் நீண்ட காலம் நிலைத்திருக்கக் கூடியதும் பிரம்மாண்டமான 120'×25' அளவுடைய மண்டபமொன்றும் குடிநீர்க்கிணறு ஒன்றும் அதிபர் விடுதி ஒன்றும் அமைக்கப்பட்டு அறிவாலயம் மணம் வீசத் தொடங்கியது. 13.05.1954இல் வட்டக்கச்சி கிழக்கு அ.த.க. பாடசாலைஎனும் பெயருடன் 19 மாணவர்களுடனும் தன் பணிக்காக காலடி எடுத்து வைத்தது எனலாம். இவ்வேளையில் இப்பணியின் மேன்மைக்காக உழைத்த திருவாளர் பா.கனகசபை அவர்கள் தலைமை ஆசிரியராகவும் செல்வி க.கௌரியம்மா உதவி ஆசிரியராகவும் கடமையாற்றிய சிறப்புக்குரியவர்கள் ஆவார்.

27.05.1955 அன்றைய நாள் வட்டக்கச்சி குடியேற்றத்திட்டத்தின் பொன்னான நாள் அன்று தான் அதிகாரபூர்வமான பாடசாலையாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டது. அக்காலப்பகுதியில் கிராம சங்கத்தலைவராக விளங்கிய திருவாளர்.வீரகத்தியார் சிதம்பரப்பிள்ளை அவர்களின் தலைமையில் திறப்புவிழா கோலாகலமாக ஆரம்பமாகி வடமாநில வித்தியாதியினால் பாடசாலை திறந்து வைக்கப்பட்டது. இத்திறப்பு விழாவிற்கு பாராளுமன்ற உறுப்பினர், வடமாகாண அரசாங்க அதிபர் திருவாளர்.ம.சிறீகாந்தா உதவி அரசாங்க அதிபர் திருவாளர் பத்மநாதன் மாணவர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து இவ்விழாவைச் சிறப்படையச் செய்தனர்.

இப்பாடசாலையானது ஆரம்பத்திலே முதல் வகுப்பு தொடக்கம் ஐந்தாம் வகுப்பு வரை மட்டுமே அமைந்திருந்தது. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து 1961ஆம் ஆண்டில் பத்தாம் வகுப்பு வரை கொண்டதாக உயர்வடைந்தது. இலவச மதிய உணவு, பாடசாலைச்சீருடை போன்ற ஊக்குவிப்புக்களை வழங்கி மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்கிட வழிவகைகள் செய்து கொடுக்கப்பட்டன. இதில் சிறப்பு என்னவென்றால் மதிய உணவாக தோசை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த தலைமைத்துவமும், ஆளுமையும் உடைய அதிபர்களாக திருவாளர் பெ.ஏ.த ஜயாத்துரை, திருவாளர் சீ.கந்தப்பு ஆகியோர் ஒவ்வொருவரும் சுமார் ஆறு ஆண்டுகள் வரை தொடர்ச்சியாகப் பணியாற்றினார்கள்.இவர்களது வழிகாட்டலில் பாடசாலையின் வளர்ச்சியைக் கண்ட மக்கள் களிப்பற்று இருந்தனர். 1960ஆம் ஆண்டு 5ம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்கு முதல் தடவையாக மாணவர்கள் தோற்றினார்கள். 1962இல் முதன் முறையாக இல்ல விளையாட்டுப் போட்டி நடைபெற்றதுடன் கலைவிழா ஒன்றும் மிகச் சிறப்பாக நடாத்தப்பட்டது. 1966ல் திருவாளர் சி.கந்தப்பு அவர்கள் அதிபராக இருந்த காலத்தில் தபால் விநியோகத்தை இலகுபடுத்தும் நோக்கில் இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை எனும் அழகிய நாமத்துடன் பிரகாசிக்கத் தொடங்கியது. இக்காலப்பகுதியில் தான் மாணவர்கள் சிலர் உயர்தர வகுப்பிற்கு தகுதி பெற்று உயர் கல்வி கற்பதற்காக வேறு பாடசாலைக்குச் சென்றனர். மாணவர் தொகையும் அதிகரிக்க ஆசிரியர் தொகையும் காலத்திற்கு காலம் அதிகரிக்கப்பட்டு வந்தமையும் பாடசாலை வளர்ச்சிக்கு ஊன்று கோலாக அமைந்தது.

சமநிலை ஆளுமைப்பண்பும் சிறந்த தலைமைத்துவமும் பாடசாலையை நிர்வகிக்கும் திறனும் கொண்ட திருமதி செ.செல்லையா, திருவாளர் ந.மகாலிங்கம், திருவாளர் பொ.சுப்பிரமணியம்,திருவாளர் சி.பே.சூசைப்பிள்ளை, திருவாளர் என்.கே.தருமலிங்கம், திருவாளர் இ.இராசரத்தினம், செல்வி தி.வேலுப்பிள்ளை, திருவாளர் கனக மகேந்திரா, திருவாளர் ஆ.கருணாநிதி, திருவாளர் சி.பாலகிருஷ்ணன், திருவாளர் சி.திரவியம், திருமதி சி.சுதாகரன் ஆகிய தலைமையாளர்களின் வழிகாட்டுதலிலும் இவர்களின் அயராத அர்ப்பணிப்பான சேவை மனப்பாங்கிலும் கலைக்கூடம் வளர்ச்சி கண்டு தேசிய ரீதியிலும் முன்னிலை அடைந்தது. என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

1982இல் செல்வி தி.வேலுப்பிள்ளை அவர்கள் அதிபராக பதவி ஏற்ற காலத்தில் அணி இசைக்கருவிகள் பெறப்பட்டு அணி இசைக்குழு முதன் முதலில் உருவாக்கப்பட்டது. தட்டெழுத்து இயந்திரங்கள் பாடசாலைக்கு கிடைத்ததும் சிறந்ததொரு வரப்பிரசாதமாகும். இத்துணைச்சாதனங்களைக் கொண்டு கல்வி வளர்ச்சிப்பாதையில் வீறுநடை போட்டுக் கொண்டிருந்தது.

1989.06.23 இல் திருவாளர் கனக மகேந்திரா அவர்கள் அதிபராகக் கடமைப் பொறுப்பேற்றார். மேற்கின் புகழ் சூரியக்கதிர் போல் பரவிய காலம் அன்று அரும்பாடுபட்டு மாணவரது வளர்ச்சியிலும் தீவிர ஈடுபாடு கொண்டு மேன்மை மிக்க பாடசாலையாக விளங்க அடிகோலினார். பாடசாலைச்சூழல் நிழல் தருமரங்கள் கொண்டதாகவும் தற்காலிக கொட்டகைகளுடன் அதிபர் விடுதிக்கான கிணறும் அமைக்கப்பட்டு எழில் மிக்க கலைக்கூடத்தில் தொடர்ச்சியாக பத்து ஆண்டுகள் பணியாற்றிய பெருமையைப் பெறும் அதிபரும் இவரன்றோ.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலப்பகுதியிலேயே தமிழ்மொழித்திறன் போட்டிக்கான காத்தான் கூத்து மாவட்டத்தில் முதல் நிலை பெற்றமையும் மற்றும் இசை, நடன, நாடகப் போட்டிகளிலும் விவசாயப் பொதுஅறிவுப் போட்டிகளிலும் கோட்ட, மாவட்ட பரிசில்களை பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும். வன்னிப்பெரு நிலப்பரப்பின்வலைப்பந்தாட்ட சம்பியனாகவும், எறிபந்துப்போட்டியின் சம்பியனாகவும், தாச்சிப்போட்டி சம்பியனாகவும், தெரிவு செய்யப்பட்டு மாணவர்களுடைய திறமைகள் வெளிக்கொணரப்பட்ட காலமாக விளங்குகின்றது.

1991ம் ஆண்டிலிருந்து இடப்பெயர்வு காலம் வரை தொடர்ச்சியாக உடற்பயிற்சிப் போட்டியில் பெண்கள் அணி மாவட்டமட்ட பரிசில்களோடு மாகாணம், தேசியம் வரை சென்று வென்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். 1989இலிருந்து இடப்பெயர்வு காலம் வரை தரம் ஐந்திற்கான புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்கள் தொடர்ச்சியாக சித்தியடைந்து வந்தமையும் அறியமுடிகின்றது. அந்த வகையில் செல்வன் ம.ரூபவண்ணன் எனும் மாணவன் 163 புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று இப்பாடசாலைக்கு பெருமை சேர்த்தான்.

திருவாளர் கனகமகேந்திரா அதிபர் அவர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்ல 04.06.1999 இலிருந்து திருவாளர் ஆ.கருணாநிதி அவர்கள் அதிபராக கடமை ஏற்றுக் கொண்டார். 2002ஆம் ஆண்டில் உடற்பயிற்சிப் போட்டியில் தேசிய ரீதியில் தங்கப்பதக்கத்தை தனதாக்கி வெற்றி வாகை சூடியது எமது பாடசாலை பெண்கள் அணி என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ் வெற்றிக்கு பாடுபட்ட ஆசிரியர்கள் பாராட்டுதற்குரியவர்கள். திருமதி ஜெ.நளாயினி ஆசிரியரின் நெறிப்படுத்தலில் “கீற்று” (இதழாசிரியர் செல்வி கவிதா.கனகராசா) எனும் கையெழுத்து சஞ்சிகை மாணவர்களால் வெளியிடப்பட்டு மாகாண மட்டத்தில் பரிசிலையும் பெற்றுக் கொண்டமையும் மேலும் கல்வி, கலை, விளையாட்டு எனப் பல்துறை வளர்ச்சியிலும் மாவட்ட, மாகாண, தேசிய ரீதியிலும் பரிசில்களைப் பெற்றுக்கொண்ட பாடசாலையாகும். மாணவர்கள் சிறந்த ஆளுமைப்பண்பு கொண்டவர்களாக வளர வேண்டும் எனும் நோக்கில் கல்விச்சுற்றுலா ஒன்று ஒழுங்கமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டமையும் காலத்திற்கேற்ற வகையில் எங்கெல்லாம் போட்டிகளும், பரீட்சைகளும் நடைபெறுகின்றனவோ அங்கெல்லாம் எமது பாடசாலை காலடி பதித்துக் கொண்டது.

திருவாளர் ஆ.கருணாநிதி அதிபர் அவர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்ல 06.01.2003 இல் திருவாளர் சி.பாலகிருஷ்ணன் அவர்கள் அதிபராகக் பொறுப்பேற்றுக் கொண்டார். இவர் பதவி ஏற்ற காலம் தொடக்கம் மாணவர்கள் தமிழ்மொழிக் கலைத்திறன் போட்டிகள், மெய்வல்லுனர்போட்டிகள், ஆங்கிலதினப் போட்டிகள், பெருவிளையாட்டுக்கள், திருக்குறள் போட்டிகள், சைவநெறித்தேர்வுகள், பொதுப்பரீட்சைகள் எனப் பல்துறைகளிலும் மாணவச் செல்வங்கள் தடம் பதித்த மாவட்ட, மாகாண, தேசிய போட்டிகளில் பங்கு பற்றி பெருமை சேர்க்கும் வகையில் பெறுபேறுகள் அமைந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடற்பயிற்சிப் போட்டியில் எமது பாடசாலை பெண்கள் 2003, 2005 ஆகிய காலப்பகுதிகளில் சிறப்பு வழிநடத்தலின் ஊடாக மாகாண ரீதியில் 1ம்,2ம் இடங்களை பெற்றும் 2004ல் தேசிய ரீதியில் பங்குபற்றி வெண்கலப்பதக்கங்களை பெற்றமையும் பாடசாலைக்கு பெருமை சேர்ப்பனவாகும். ஆங்கிலதினப் போட்டிகளில் பங்குபற்றி தேசியம் வரை சென்று வந்தமை, வெற்றியீட்டியமையும் குறிப்பிடத்தக்கதாகும். இவருடைய காலப்பகுதியில் தான் ஆண்கள் அணி முன்னிலைப்படுத்தப்பட்டு கரப்பந்தாட்ட அணி பல வெற்றிகளைப் பெற்று பெருமை சேர்த்தது. இவற்றோடு தடகள விளையாட்டுக்களிலும் மாணவர்கள் மாவட்ட, மாகாண, தேசிய ரீதியில் பரிசில்களை பெற்றமையும் போற்றுதற்குரிய விடயமாகும்.

பௌதீக வளங்களின் தேவையை உணர்ந்து எமது பாடசாலை மாணவர்களின் வாசிப்பு திறனை மேம்படுத்துவதற்காக நூலகம் ஒன்றினை நிலையானதாக 40'×25' அளவுடையதாக அமைக்கப்பட்டுள்ளதுடன் 40'×20' அளவுடைய விஞ்ஞான அறை ஒன்றும் அமைக்கப்பட்டும் மாணவர்களிற்கு போதிய வகுப்பறை இன்மையால் 120'×25' அளவுடைய ஆறு பிரிக்கப்பட்ட வகுப்பறைகளைக் கொண்டதுமான நிரந்திர கட்டிடங்கள் அமைக்கப்பட்டமையும் காலத்திற்கு காலம் பாடசாலை வளவினை பாதுகாப்பதற்கு வேலி அடைக்க வேண்டிய தேவை அறிந்து 180அடி நீளமுடைய மதில் கட்டப்பட்டு நிரந்தர வாயிற்கதவு இடப்பட்டமையும் இக்காலப்பகுதியிலேயே எமது பாடசாலை பொன்விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடி பாடசாலைச்சமூகம் மகிழ்வடைந்தமையும் போற்றப்பட வேண்டியவையாகும்.

திருவாளர் சி.பாலகிருஷ்ணன் அதிபர் அவர்கள் 09.01.2007 இல் இடமாற்றம் பெற்றுச் செல்ல அதிபராக திருவாளர் சி.திரவியம் அவர்கள் 10.01.2007ல் பொறுப்பேற்றுக் கொண்டார். இக்காலப்பகுதியில் மாணவர்கள் கலைத்திட்ட பரீட்சைகளிலும் மற்றும் இணைபாடவிதான செயற்பாடுகளிலும் பொதுப் பரீட்சைகளிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்ட காலத்தில் நாட்டில் ஏற்பட்ட போர்ச்சூழல் காரணமாக 08.01.2005 இடப்பெயர்வினை சந்தித்து மீண்டும் 26.04.2010 இல் தன் சொந்த இடத்தில் இயங்கத் தொடங்கியது. இவருடைய காலப்பகுதி எமது பாடசாலையின் வரலாற்றில் பொற்காலம் என்று குறிப்பிடக்கூடிய அளவில் மாணவர்களது கலைத்திட்ட தேவைகளிற்கும் நிர்வாகத் தேவைகளிற்கும் இணைபாடவிதான செயற்பாடுகளிற்கும் என்று கருதத்தக்க கட்டடங்கள் அனேகமானவை கட்டப்பட்டன.

அந்தவகையில் கணனி அறை 26'×20' அளவுடையதும், அதிபர் அலுவலகம் 20'×25' அளவுடையதும், நடன கட்டிடத்திற்கான அறை 20'×25' அளவுடையதும், மிகப் பிரமாண்டமான முறையில் அமைக்கப்பட்ட திறந்த வெளி அரங்கு போன்றவற்றை பாடசாலை சமூகத்தினரிடம் இருந்து அன்பளிப்பாக பெற்று கட்டப்பட்டமையும் ஆரம்பக்கல்வி மாணவர்கள் கற்பதற்கு சகல வசதி வாய்ப்புக்களுடன் கூடிய 5 வகுப்பறைகள் 25'×120' அளவுடையதாகவும் KOICA கட்டடம் கட்டப்பட்டமையையும் கொண்டு பார்க்கும் போது இராமநாதபுரம் மேற்கின் கட்டடங்களின் மன்னன் எனச் சிறப்பிக்கப்படும் அளவிற்கு இவரது செயற்பாடுகள் அமைந்திருந்தமை கண்கூடாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைக்குள் வரும் பள்ளிச் சிட்டுக்கள் மனமகிழ்ச்சியோடு வருகை தர வேண்டும் என்பதனை கருத்திற்கொண்டு பாடசாலை வளாக முன்றலில் அழகிய பூந்தோட்டம் வந்தனை செய்யவும் அதில் கல்விக்கூட வளர்ச்சிக்கு அன்னையவள் ஆசி வேண்டிட அழகிய சரஸ்வதி சிலையையும் அமைப்பித்த பெருமையும் இவரையே சாரும். இவை அனைத்திற்கும் பெருமை சேர்க்கும் வகையில் கலைத்திட்ட பரீட்சைகள், இணைபாடவிதான செயற்பாடுகள், பொதுப்பரீட்சைகள் என சகல விதமான செயற்பாடுகளிற்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து கோட்ட, மாவட்ட, மாகாணப் போட்டிகளில் ஈடுபட்டு வெற்றியீட்டியமையும் மனங்கொள்ளத்தக்கதாகும். 2013 கரப்பந்தாட்ட அணியினர் மாவட்ட மட்டத்தில் 1ம் நிலை பெற்று மாகாண மட்டம் சென்று வெற்றி பெற்றமையும் மாவட்ட மட்ட ஆங்கில தினப் போட்டியில் Role Play 1ம் இடத்தைப் பெற்று மாகாண போட்டியில் பங்குபற்றியமையும் குறிப்பிடத்தக்கதாகும். எமது பாடசாலையில் சாரணர் இயக்கம் திருமதி சி.சுதாகரன் அவர்களால் 10.02.2012 அன்று ஆரம்பிக்கப்பட்டு தற்போதும் வீறுநடை போட்டுக் கொண்டிருப்பதும் இப்பள்ளிச் சாரணர்கள் பாடசாலைக்கு மட்டுமன்றி எமது கிராமத்திற்கும் அரும் பெரும் பணியாற்றி வருகின்றமை பொறிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

திருவாளர் சி.திரவியம் அவர்கள் 17.11.2014இல் ஓய்வு பெற்றுச் செல்ல திருமதி சி.சுதாகரன் அவர்கள் 18.11.2014இல் அதிபராக பொறுப்பேற்றுக்கொண்டார். பாடசாலையை செவ்வனே நடாத்தி மாணவர்களது கலைத்திட்ட செயற்பாடுகள், இணைப்பாடவிதான செயற்பாடுகள் மற்றும் பொதுப்பரீட்சைகள் ஆகிய சகல துறைகளிலும் எமது பாடசாலை பிரகாசித்து விளங்கியமையும் அறிய முடிகிறது. கரப்பந்தாட்ட அணியினர் மாவட்ட நிலையில் வெற்றி பெற்று மாகாண போட்டியில் பங்கு பற்றியமையும் குறிப்பிடத்தக்கதாகும். எமது பாடசாலையின் அழகிய சூழலை பாதுகாப்பதற்கும் மாணவர்களின் குடிநீர் பிரச்சினை எக்காலத்திலும் ஏற்படாதிருக்க நீர்க்குழாய் அமைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். மேலும் 2015ல் ஆங்கில தினப் போட்டியிலும் மற்றும் சமூக விஞ்ஞான போட்டியிலும், சித்திரப்போட்டி, தமிழ்மொழித்திறன் போன்ற போட்டிகளில் மாவட்ட ரீதியில் வெற்றி பெற்று மாகாண, தேசிய ரீதியில் இடங்களைப் பெற்றமையும் பாராட்டுதற்குரியதாகும்.

திருவாளர் சுந்தரேஸ்வரன் சுதாஸ்கரன் 01.01.2016 அதிபராக கடமைப் பொறுப்பேற்று அன்று தொடக்கம் பாடசாலைச் சூழலில் அழகை செவ்வனே பேணியதுடன் கலைத்திட்ட செயற்பாடுகள் ஊடாக மாணவர்களை முன்னிலை அடையச் செய்ததுடன் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் மாணவர்களின் ஒழுக்க விழுமியங்களை மேம்படுத்தலிலும் மற்றும் பொதுப்பரீட்சைகள், போட்டி நிகழ்வுகள் அனைத்திலும் மாணவர்கள் போட்டியிடக் கூடிய வகையில் மாணவச் செல்வங்களை வழிப்படுத்தி பாடசாலைக்கு பெருமை சேர்க்கும் வகையில் பெறுபேறுகளைப் பெற்று பாடசாலை உயர்நிலை அடைந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைப் காணியை சீர்நிலைப்படுத்தி நில அளவைத்திணைக்களத்தால் அளவிடப்பட்டதும் சிறுவர் பூங்கா மிக அழகான முறையில் அமைக்கப்பட்டதுடன் பாடசாலை திருவள்ளுவர் சிலை அமைத்தும் பாடசாலைக்கான சுற்றுமதில் அமைக்கும் பணியையும் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். இவற்றிற் கெல்லாம் பெருமை சேர்க்கும் வகையில் இடப்பெயர்வுக் காலத்தின் பின் பெண்கள் உடற்பயிற்சி அணி போட்டியில் 2016இல் மாகாணமட்ட போட்டியில் பங்குபற்றியமையும் மாகாணமட்டப் போட்டிகள் , சித்திரப்போட்டிகள், சமூக விஞ்ஞான போட்டிகள், ஆங்கில தினப்போட்டிகள் பலவற்றில் மாவட்ட, மாகாண, தேசிய ரீதியில் பரிசிலைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ் மொழித்திறன் போட்டியில் பாவோதலில் 2018இல் தேசிய ரீதியில் 1ம் இடத்தை செல்வி ச.பாமகள் பெற்று பெருமை சேர்த்தமையும், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் செல்வன் பா.யுகான் 191 புள்ளிகளை பெற்று மாவட்ட நிலையில் 9ம் இடத்தைப் பெற்றமையும் பாராட்டுக்குரியதாகும். கல்வி அமைச்சின் புள்ளிவிபரப்படி 2017இல் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் 87.2% பெறுபேறுகளைப் பெற்று மாவட்ட நிலையில் பெருமைபெற்ற பாடசாலையாக திகழ்ந்து வருகின்றமையும் மேலும் எமது பாடசாலையானது சுகாதார மேம்பாடுடைய பாடசாலை என்பதை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மாகாண ரீதியாக தங்கப்பதக்கத்தைப் பெற்று பெருமை சூடியமையும் 2018ல் தமிழ்மொழித்தின திறந்த நாடகப்போட்டி மற்றும் குழுநடனம்(பொம்மலாட்டம்) மாகாணரீதியில் பங்குபற்றியமையும், சமூக விஞ்ஞானப் போட்டியில் தேசிய ரீதியில் பரிசில்களைப் பெற்றுக்கொண்டமையும் அரச நடன விழாவில் தேசிய ரீதியில் 1ம் இடத்தை பெற்றமையும் போற்றுதற்குரிய விடயமாகும்.

எங்கெல்லாம் தேர்வுகளும், போட்டிகளும் நடைபெறுகின்றனவோ அங்கெல்லாம் எமது பாடசாலை கால்த்தடம் பதித்து தமது பெருமையை பறைசாற்றி வருகின்றமை போற்றப்பட வேண்டியதாகும். இவ்வாறாக வைரவிழா காணும் எமது பாடசாலை பழம் பெரும் பெருமைகளைப் பேணி புதுமைக்கும் முகங்கொடுத்து தளராது வெற்றி வாகைசூடி வீறு நடை போட்டுக் கொண்டிருக்கின்றது. இப் பாடசாலையானது சமூகத்திலும், மாவட்டத்திலும், மாகாணத்திலும், ஏன் தேசியத்திலும் பெருமையை பறை சாற்றக்கூடிய பாடசாலையாகவும் பல புத்திமான்களையும், நற்பிரஜைகளையும் உருவாக்கு வைரவிழாவைக்கடந்தும் தலை நிமிர்ந்து நிற்பது இக்கிராமத்திற்கு பெருமை சேர்ப்பதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையும் பெற்றோர்களின் வகிபாகமும்

– மா. கணபதிப்பிள்ளை
M.A, PGDEM, SLEAS
முன்னாள் பிரதி அதிபரும்,
தமிழ்த்துறை அதிபரும்
கொ/றோயல் கல்லூரி, கொழும்பு 07.

இன்று எல்லா இடங்களிலும் மாணவர்கள் நடத்தை தவறுகின்றனர், பிறழ்வு நடத்தையில் ஈடுபடுகின்றனர், கைத்தொலைபேசியுடன் நேரத்தை போக்குகின்றனர், சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரித்துள்ளது, மாணவர் - ஆசிரியர் உறவு சீராக இல்லை, மோட்டார் சைக்கிள்களில் சுற்றுவதிலையே நாட்டம் காட்டுகின்றனர் என்ற பலமான கண்டனங்கள் பரவலாகப் பேசப்படுகின்றன. இதற்கான பிரதான காரணத்தை ஆராய்ந்து அறிந்து தீர்வு காண வேண்டியது இன்றைய பெற்றோர்களதும் ஆசிரியர்களதும் பிரதான கடமையாகும்.

பெற்றோர்களாகிய நீங்கள் இவ்விடயத்தினை ஆழமாக சிந்தித்துப் பாருங்கள் பாடசாலை ஒன்றில் மாணவன் ஆறு மணி நேரம் தான் செலவிடுகின்றான். மிகுதி பதினெட்டு மணிநேரம் உங்களுடன் தான் இருக்கின்றான். அவர்கள் உங்களுடன் இருக்கும் சந்தர்ப்பங்களை நீங்கள் எவ்வாறு கற்றல் சூழலுக்கு பொருத்தமாக்குகிறீர்கள் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். தவறு எங்கு நடைபெறுகிறது என்று திருத்திக்கொள்ளலாம்.

உங்களது பிள்ளை நல்லதொரு பாடசாலையில் படிக்க வேண்டுமென்பதற்காக பல்வேறு முயற்சிகள் எடுத்து பாரம்பரியம்மிக்கதும், புகழ் பூத்ததுமான கல்லூரிகளில் பிள்ளைகளைச் சேர்க்கிறீர்கள் அவ்வாறு சேர்த்த பின்பு மாறுபட்ட மனப்பாங்குகளுடன் பழகும் மாணவர்களைக் கொண்ட பிரத்தியேக வகுப்புகளுக்கு உங்கள் பிள்ளைகளையும் அனுப்புகின்றீர்கள். எந்தத் தீய பழக்கங்கள் உங்கள் குழந்தைகளை அணுகக் கூடாது என்று நினைத்து சிறந்த பாடசாலைகளை தெரிவு செய்கிறீர்களோ அதே தவறு நடக்கும் பிரத்தியேக வகுப்புகளுக்கு உங்கள் அனுமதியுடன் சென்று அங்கு நடைபெறும் தீய பழக்க வழக்கங்களுக்கு உங்கள் குழந்தை பரீட்சயமாகின்றது. உங்களுக்கு பிரத்தியேக வகுப்புகளின் பொருத்தமான நேரசூசிகள் தெரிவதில்லை. ஒரு மணி நேர வகுப்புக்காக 3 அல்லது 4 மணிநேரம் உங்கள் பிள்ளைகள் பாதையிலும், பேருந்து தரிப்பு நிலையங்களிலும் வீண் அரட்டை அடிக்கின்றார்கள். அது மட்டுமல்ல உங்களைப் போன்ற மற்றைய பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுடன் போக முடியாத அளவுக்கு மனதைப் புண்படுத்தும் வார்த்தைகளை பாவிக்கின்றனர். பிரத்தியேக வகுப்புக்களுக்கு மாணவர்களை அனுப்புவது உங்களைப் பொறுத்த விடயம். ஆனால் மாணவ நடத்தை அதனால் பாதிக்கப்படுகிறது. அங்கிருந்துதான் பிழையான பல எண்ணக்கருக்களை மாணவர்கள் பெற்றுக்கொள்ளுகின்றனர். அதன்பின் பெற்றோர்களாகிய உங்களாலோ அல்லது ஆசிரியர்களாலோ திருத்த முடியாத நிலை ஏற்பட்டுவிடுகிறது. இப்பிழைகளுக்கு பெற்றோர்களே பொறுப்பு சொல்ல வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று இலங்கையில் தொலைக்காட்சிப் பாவனை 85% ற்கு கூடி விட்டது. தொலைக்காட்சிகளில் காண்பிக்கப்படும் பெரும்பாலான படங்களிலும், குறுந்திரைப்படங்களிலும் ஆசிரியர்களை கொச்சைப்படுத்தல், கிண்டல் பண்ணுதல் ஆகிய பண்புகள் அதிகரித்துள்ளன. அவை இந்தியாவிற்கு பொருத்தமாக இருக்கலாம் அல்லது இந்தியா அதைக் கண்டும் காணாமல் இருக்கலாம் அது வேறு விடயம். அந்த காட்சிகளை பார்த்த மாணவர்கள் தமது வகுப்பறை ஆசிரியர்களை இலங்கையிலும் கொச்சைப்படுத்த முயல்கிறார்கள் எனவே வகுப்பறைகளில் மாணவர் - ஆசிரியர் உறவு சீர் இல்லாமல் போக அது அடிப்படை காரணமாகின்றது.

பெற்றோர்களே! உங்களது அபிலாசைகளைக் குறைத்து மாணவர்களுக்காக தொலைக்காட்சிப் பெட்டிகளை மூடி வைக்க வேண்டிய தேவை உண்டு என்பதை நீங்கள் உணராதவரை மாணவர்களைத் திருத்துவது கஷ்டமான காரியமே.

வீடுகளில் பெற்றோர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளின் முன் ஆசிரியர்களை ஒப்பிட்டு பேசுகின்றீர்கள். ஆசிரியர்களின் நன்மை தீமைகளை மாணவர்களின் முன் கலந்துரையாடுகின்றீர்கள். பல பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் முன் ஆசிரியர்களை “அவன்” “அவள்” என்ற சொற் பிரயோகங்களைப் பாவித்தே பேசுகின்றீரகள் இந்த முன்மாதிரியை உங்கள் குழந்தைகள் பின்பற்றி வகுப்பறைகளில் ஆசிரியர்களை மதிக்காத நிலை ஏற்படுகின்றது.

பெற்றோர்களாகிய நீங்கள் பிள்ளைகளின் குறிப்பு புத்தகங்களைப் பார்ப்பதில்லை. அதில் ஆசிரியர்கள் என்ன குறிப்புகள் எழுதியுள்ளனர் எனக் கவனித்து திருத்துவதும் இல்லை. அதனால் மாணவர் கல்விநிலை பாதிக்கப்படுகின்றது. பல பெற்றோர்கள் தாம் வேலைக்குச் செல்வதால் பிள்ளைகளின் பயிற்சிப் புத்தகங்களை பார்ப்பதுமில்லை, திருத்துவதுமில்லை எனவும் அதற்காக பிரத்தியேக ஆசிரியர்களை நியமித்திருப்பதாகவும் குறிப்பிடுகின்றனர். ஆனால் பிரத்தியேக வகுப்பாசியர்கள் பலர் குறித்த தேர்ச்சி மட்டத்தை அடைந்தவர்கள் அல்ல. பயிற்சிப் புத்தகத்தில் ஆசிரியர்கள் எழுதிய குறிப்புக்களை அவர்கள் பார்ப்பதுமில்லை. மாறாக மாணவர்கள் தன்னிடம் கற்காமல் விட்டுவிட்டால் தனது வருமானம் குன்றிவிடும் என்பதற்காக, குறிப்புகள் எழுதியனுப்பிய வகுப்பாசிரியர்களை தாக்கிப்பேசி மாணவர்களின் உள்ளத்தினை மகிழச் செய்து தனது “இருத்தலை” நிச்சயப்படுத்தி கொள்கின்றனரே தவிர மாணவர்களின் தவறுகளை திருத்துவதில்லை. அத்துடன் அத்தவறுகளை தூண்டிவிடுகிறவர்களாகவே காணப்படுகின்றனர். பிரத்தியேக வகுப்பாசிரியர்களில் பலர் க.பொ.த. உயர்தர வகுப்புக்கள் சித்தியெய்தாதவர்களே க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு பிரத்தியேக வகுப்பாசிரியர்களாக இருக்கின்றனர். முப்பது மாணவர்களைத் தனி வகுப்பறையில் வைத்து கற்பித்து திருத்த முடியாத போது 150 மாணவர்களை வைத்து படிப்பிக்கும் பிரத்தியேக வகுப்பறைகளில் உங்கள் பிள்ளைகளின் தேர்ச்சி மட்டம் உயர்வடையும் என நினைத்தால் அதற்கு கடவுளும் பதில் சொல்ல முடியாது.

100 புள்ளிகளில் 80 புள்ளிகளை உங்கள் பிள்ளைகள் பெற்றுவிட்டார்கள் என்று சந்தோசப்படாதீகள், பெறாத 20 புள்ளிகளும் ஏன் பெறப்படவில்லை என்பதனையும், அதற்கான காரணத்தையும் கண்டறியுங்கள். அந்த புள்ளிகளைப் பெறச் செய்ய முயற்சியுங்கள். அதற்காக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்த பாட ஆசிரியர்களைச் சந்தியுங்கள். அவர்கள் உங்களுக்கு வகை சொல்ல வேண்டிய பொறுப்புடையவர்கள். உங்கள் கோரிக்கைகள் நியாயமாக இருந்தால் அவ் ஆசிரியர்கள் அவற்றில் அக்கறை காட்டி செயற்படுவார்கள்.

பல பெற்றோருக்கு வெவ்வேறு பாடசாலைகளுடன் தொடர்பு இருக்கும். ஒரு பிள்ளை ஆண் பாடசாலையிலும் மறு பிள்ளை பெண் பாடசாலையிலும் கற்கலாம். அல்லது இரண்டு தரம்மிக்க பாடசாலைகளில் உங்கள் இரண்டு பிள்ளைகள் கற்கலாம். இந்த நிலையில் ஒரு பாடசாலையில் சிறப்பான ஒப்படைகள், கணிப்பீடுகள் செய்யப்பட்டால். மறு பாடசாலையில் அத்தகைய எவையும் நடபெறாமல் இருக்கலாம். இத்தகைய சந்தர்ப்பத்தில் சிறந்த வேலைகள் நடைபெற்றிருக்கும் பாடசாலை நடிவடிக்கைகள் ஏன் மற்றைய பிள்ளைக்கு நடைபெறவில்லை என அவாவுவதற்கு உங்களுக்கு உரிமையுண்டு. பல பெற்றோர்கள் தாங்கள் கேள்வி கேட்பதால் தங்கள் பிள்ளைகள் பாதிக்கப்படலாம் என்று எண்ணுகின்றனர். இக்கருத்தில் உண்மை இல்லை. நல்ல சில கருத்துக்களை நீங்கள் குறிப்பிடும் போது குறிப்பிட்ட ஆசிரியர் திருந்துவதற்கு வாய்ப்பு உண்டு என்பதை நீங்கள் உணர வேண்டும். அத்துடன் உங்கள் பிள்ளைகளுக்கு முறையான கற்றல் நிகழவும் சந்தர்ப்பங்கள் தருகின்றீர்கள். எனவே பிள்ளையின் கற்றலில் நீங்கள் அக்கறை உள்ளவராக இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

உங்கள் பிள்ளை படிக்கும் பாடசாலையில் ஒழுங்காக கற்றல் நிகழவில்லையெனில் நீங்கள் தெருவில். சாப்பாட்டுக் கடைகளில் அல்லது கள்ளுக்கொட்டில்களில், மதுபான சாலைகளில் அல்லது அன்னதான நிலையங்களில் பேசிப் பிரயோசனம் இல்லை. பாடசாலையின் கற்பித்தல் சிறப்பாக நிகழ வேண்டுமெனில் பாடசாலை நிர்வாகத்தில் நீங்களும் பங்குதாரர்களாக மாறவேண்டும் என புதிய கல்வித்திட்டம் பரிந்துரைக்கிறது. எனவே கற்றல் ஒழுங்காக நிகழாத பாடங்களை பாடசாலை நிர்வாகத்திற்கு சுட்டிக்காட்டின் பாடம் ஒழுங்காக நடைபெற அவர்கள் ஆவன செய்வார்கள். அது நிகழவில்லையெனில் வலய மட்டம், மாகாண மட்டம், அமைச்சு மட்டம் என பல மட்டங்களில் உங்கள் பிரச்சினைகள் முன் வைக்கப்பட்டு பிரச்சினைக்கு தீர்வு காணப்படலாம். அதைவிடுத்து பொருத்தமற்ற இடங்களில் நீங்கள் பேசுவதால் உங்கள் பிள்ளையின் பாடசாலையை நீங்கள் கொச்சைப்படுத்துகிறீர்களே தவிர வேறு எந்தப் பயனையும் எய்த மாட்டீர்கள். நீங்களும் பங்காளியாக இருந்து திருத்த வேண்டிய நடவடிக்கைகளை நீங்கள் வெளியே நின்று விமர்சிப்பதில் பிரயோசனம் இல்லை.

மாணவர் சம்பந்தமான கலந்துரையாடலுக்கு பாடசாலைகள் அழைப்பு விடும் நேரத்தில் பெற்றோர் இரண்டு (தாய் + தந்தை) பேரும் சமூகம் தரல் வேண்டும். ஒரு பூ மரம் அல்லது பழமரத்தை வீட்டுத் தோட்டத்தில் நடுகின்ற பொழுது அதற்கு தண்ணீர் ஊற்ற வேண்டும், பொருத்தமான பசளை போட வேண்டும் அவற்றை அவ்வவ் காலத்தில் செய்ய வேண்டும் அப்போதுதான் அந்த மரம் செழிப்புற்று வளரும். அதைப் போலவே பெற்றோர் ஆசிரியரின் உரையாடலின் போது மாணவரின் குறைநிறைகளை முறையாக ஆராய்வார். மாணவர் சோம்பலுக்கான காரணம் காலை ஆகாரம் அருந்தாமல் பாடசாலைக்கு வருதல் என்பது அடையாளப்படுத்தப்படின் அதை தாய் கவனிப்பார். பாடத்தில் கவனக்குறைவு, வகுப்பறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்கீனம் என்ற விடயங்களில் தாயும் தந்தையும் கவனமெடுக்க வேண்டும். மாணவர்களின் அடைவு விடயங்களில் ஆசிரியர்களின் வகை சொல்லல் எந்தளவுக்கு உள்ளது என்ற விடயங்களையும் அவதானிக்கலாம். எனவே பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டம் நடைபெறும் ஒரு மூன்று மணி நேரம் இருவரும் நேரத்தை ஒதுக்கி பாடசாலை கூட்டத்திற்கு சமூகம் தரும் பட்சத்தில் மாணவர்கள் உள ரீதியாகப் பயப்பிடுவார்கள். அதனால் அவர்கள் சிறப்பாகத் துலங்க அதுவே காரணமாக அமையலாம்.

வீடுகளில் இருந்து வெளியே சென்றுவிட்டு வரும் உங்கள் பிள்ளைகள் வீடுகளுக்கு வந்ததும் அவர்களுக்குத் தெரியாமல் அவர்கள் பாடசாலைப் பை (School Bag) அவர்களின் கைத்தொலைபேசி, சட்டைப்பை, காற்சட்டைப் பைகள் என்பவற்றை அவதானிக்க வேண்டும். உங்களின் பிள்ளைகளில் நீங்கள் நம்பிக்கை வைப்பது நியாயம். அதேவேளை சமூகத்தில் உள்ள துர்நடத்தையான ஏனையவர்களால் உங்கள் குழந்தைகள் பிறழ்வு நடத்தைகளுக்கு உள்ளாகலாம். எனவேதான் உங்கள் குழந்தைகளை நீங்கள் தொடர்ந்து அவதானிப்பதன் மூலம் அவர்களைத் திருத்தலாம். அதனால் தான் "நம்ப நட நம்பி நடவாதே" என்ற பொன் மொழிகள் தோற்றம் பெற்றன. மாணவர்களின் நடத்தைக் கோலங்களில் ஏற்படும். மாற்றங்களுக்கான சரியான காரணங்களை பெற்றோராகிய நீங்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டும் அவற்றை ஆசிரியர்களுக்கு உங்கள் பிள்ளைகளின் முன் நீங்கள் நியாயப்படுத்தும் போது, எங்களை எப்படி எமது பெற்றோர்கள் அவதானிக்கின்றார்கள் என்ற நல்லெண்ணம் உங்கள் குழந்தைகளிடம் தோன்றும். அந்நடத்தை அவர்களை மிகச் சிறப்பான நடத்தைக் கோலங்களுக்கு உட்படுத்தும் பருவ வயதில் உங்கள் குழந்தைகளை சீர்திருத்திவிட்டால் பின்னர் அவர்கள் தாமாக தமது நடத்தைக் கோலங்களை சீர்செய்து கொள்வார்கள் என்பதை ஒவ்வொரு பெற்றோரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

பாடசாலை என்பது மாணவர், ஆசிரியர், பெற்றோர், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள் அடங்கிய ஒரு பல்கூட்டு நிறுவனம். அது சிறப்படைய எல்லோரது வகிபாகமும் பொருத்தமானதாகவும், தன்னலமற்றதாகவும் இருக்க வேண்டும். இதில் ஒரு விடயத்தைக் கவனித்தல் பொருத்தமானது. பெற்றோர்கள் தான் அந்தப் பாடசாலையின் முக்கிய பங்காளிகள் என்பதுடன் பெற்றோர்களுக்கு வகை சொல்ல வேண்டிய பொறுப்பு பாடசாலை நிர்வாகத்திற்கு உண்டு என்பதும் ஆகும்.

பெற்றோர்கள் பாடசாலையில் நடைபெறும் நிகழ்வுகள் தொடர்பாக தங்களது உள்ளார்ந்த அபிப்பிராயங்களை பாடசாலை நிர்வாகத்துடன் பகிர்ந்து கொள்ளுங்கள் இன்று பாடசாலைகள் பெற்றோர்களின் ஆதரவிலேயே உயர்ந்து நிற்கின்றன. செல்வாக்குள்ள பாடசாலைகளின் செல்வாக்குக்கு அடிப்படைக் காரணம் விழிப்புணர்வு உள்ள பெற்றோர்களும், பழைய மாணவர்களும் தான் என ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

எனவே பெற்றோர்களே உங்களது வகிபாகத்தை உணர்ந்து பாடசாலையையும், வீட்டுச்சூழலையும் மாணவர்களுக்கு பொருத்தமான கற்றல் சூழலுக்கு ஏற்புடைய இடங்களாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றுங்கள். உங்கள் நடத்தைக் கோலங்களில் இருந்து தான் பெரும்பாலன விடயங்களை மாணவர்கள் பெற்றுக்கொள்வதால் முன்மாதிரியாக நீங்கள் நடவுங்கள். மாணவர்களுக்கு முன் புகைத்தல், மதுபானமருந்துதல், அவதூறான வார்த்தைகளை பாவித்தல் போன்றவற்றை தவிருங்கள். பெருந்தன்மையுடனும், கண்ணியத்துடனும் பழகுங்கள். சிறியன பற்றி பேசாதீர்கள். இத்தகைய விழுமிய நடத்தைகளை பிள்ளைகளும் பார்த்து அவ்வாறே பழகுவார். அத்தகைய சிறந்த மாணவ நடத்தையால் பாடசாலைக்கும் மதிப்பு, சமூகத்திற்கும் பெருமை, உங்களுக்கும் சந்தோசம், ஆசிரியர்களுக்கும் மகிழ்ச்சி இத்தகையதொரு இனிய பாடசாலை கவின்நிலையை ஏற்படுத்துபவர்கள் பெற்றோர்களே!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் சமூகமயமாக்கல் காரணியாக ஊடகங்கள்

-அ.பௌநந்தி-
விரிவுரையாளர்
கல்விப் பீடம்
கொழும்புப் பல்கலைக்கழகம்

### முகவுரை

சமூக இசைவாக்கம் பெற்றவர், சமூகத்தோடு ஒத்துப் போபவர், சமூகமயப்படுத்தப்பட்டவர் என்ற பதங்களையும் இவற்றுக்கு எதிரான பதங்களையும் நாம் அடிக்கடி பயன்படுத்தி வருகின்றோம். அவற்றின் அர்த்தத்தை முழுமையாகப் புரிந்துகொள்ளாத வேளைகளிற்கூட அவற்றைப் பயன்படுத்துகின்றோம். இப்பின்னணியில் ஒரு பிள்ளை தான் வாழும் சமூகத்தின் உறுப்பினராக இசைவாக்கம் பெறுவதும் ஏற்றுக்கொள்ளப்படுவதும் அவசிமாகின்றது. சமூகமயமாக்கல் என்ற சொற் பயில்வு கல்விப் புலத்தில் மட்டுமின்றி ஏனைய பல துறைகளிலும் இன்று முக்கியத்துவம் பெற்றுவருவதனை அவதானிக்கலாம். சமூகமயமாக்கப்படாத ஒரு பிள்ளை இந்த உலகத்தின் சவால்களை எதிர்கொள்வதில் சிக்கல்களுக்கு முகங்கொடுக்கின்றது. இந்நிலையில் கல்விப் புலத்தில் சமூக மயமாக்கல் பற்றி அதிக கவனமெடுத்துவருவதனை நன்கு அவதானிக்கலாம். கல்வியின் நோக்கமே பிள்ளையைச் சமூகமயமாக்குவதாகும் என்று பலர் கருதுகின்றனர். உலகப் பெருவெளியின் எதோவொரு தீவில் தனித்துவிடப்பட்ட தன்மையோடு பிள்ளை சிக்கல் நிறைந்த இந்த உலகை எதிர்கொள்ள முடியாது. சமூகத்திலுள்ள சவால்களை எதிர்கொண்டு தப்பிப்பிழைத்து தனது இருப்பை நிலைநாட்டுவதற்கு பிள்ளையைச் சமூகமயமாக்குவது அவசியமாகின்றது. சமூகமயமாக்கற் செயற்பாட்டின் பலவீனமே இன்று பல பிள்ளைகளைத் தற்கொலைவரை இட்டுச் செல்கின்றது என்றும் பலர் கருதுகின்றனர். இப்பின்னணியில் பிள்ளையின் ஆரோக்கியமான எதிர்காலத்தை நோக்கி ச் சமூகமயமாக்கற் செயன்முறைக்குள் உள்வாங்குவது அவசியமாகின்றது.

### சமூகமயமாக்கல் என்ற எண்ணக்கருவை விளங்கிக் கொள்ளல்

சமூகமயமாக்கல் என்று பொதுவாகக் கருதுகின்றபோது ஒரு தனிமனிதன் அல்லது பிள்ளை சமூகத்தின் அங்கத்தவராக அல்லது உறுப்பினராக வாழ்வதற்குரிய ஏற்புடைமை ஆகும். இவ்வேற்புடைமை ஒருவரிடத்தில் பலவேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு காரணிகளால் ஏற்படும். சமூகமயமாக்கல் பற்றி ஸ்ரேர்மன் என்ற அறிஞர் கூறுகின்ற கருத்து இங்கு முக்கியமானது.

**"சமூகமயமாக்கல் என்பது தனிநபர்கள், சமூக உறுப்பினர்கள் ஆவதற்கு அல்லது சமூகத்தின் கூறுகளின் உறுப்பினர்கள் ஆவதற்கு நிகழ்த்தப்படும் செயன்முறை என்று பரந்த கருத்தில் பொருள்கொள்ளலாம். வாழும் கலாசாரத்தின் அல்லது உப கலாசாரத்தின்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விழுமியங்கள், வழக்கங்கள், நோக்குகள் என்பவற்றைத் தனிநபர்கள் எவ்வாறு கைக்கொள்கின்றார்கள் அல்லது விளங்கிக்கொள்கின்றார்கள் என்பதுடன் இது தொடர்பானது"**

- Sturman, 1998

அதாவது குழந்தையொன்று உலகில் பிறந்து வாழ்ந்து இறக்கும் வரையில் அவர் சமூகமயமாக்கலுக்கு உட்படுத்தப்படுகின்றார். எனினும் பிள்ளையின் பாடசாலைப்பருவத்துச் சமூகமயமாக்கல் என்பது முக்கியமானதாக அமைகின்றது. அங்கு சமூகமயமாக்கலுக்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட வேண்டும். சமூகமயமாக்கல் என்பது ஒரு செயன்முறையாகும். அதாவது தனிநபர் தான் சார்ந்த சமூகத்தின் கலாசாரத்தை, பண்பாட்டை, இருப்பைக் கற்றுக்கொள்கின்ற செயன்முறையாகும். தான் வாழும் சமூகத்தினால் அங்கீகரிக்கப்படுகின்ற நடத்தைக் கோலத்தை ஒருவர் கொண்டிருக்கும்போது அவரை உயர்ந்த சமூகமயமாக்கல் நபராகக் கொள்கின்றோம். அது குறைவடைகின்றபோது குறைந்த சமூகமயமாக்கலுடையவராகக் கொள்கின்றோம்.

**சமூகமயமாக்கல் வகைகள்**

- ஆரம்பச் சமூகமயமாக்கல்
- எதிர்பார்க்கப்படும் சமூகமயமாக்கல்
- பால்நிலைச் சமூகமயமாக்கல்
- வகிபங்கு மாற்றம்
- மீள் சமூகமயமாக்கல்

**சமூகமயமாக்கல் வாய்ப்புக்கள்**

குழந்தையொன்று தான்வாழும் சமூகத்தின் கலாசாரத்தைப் புரிந்துகொண்டு வாழப்பழகவேண்டும் என்றநிலையில் அப்பிள்ளைக்குத் தேவையான சமூகமயமாக்கல் வாய்ப்புக்கள் போதியளவில் வழங்கப்படுவது அவசியமாகின்றது. சிக்கலான சமூகம் ஒன்றில் சமூகமயமாக்கலுக்கான வாய்ப்புக்கள் ஏராளம் உள்ளன (கெகாஸ், 1981). அவற்றுள் பிரதானமாக ஐந்து வாய்ப்புக்களை அவர் முன்வைக்கின்றார்.

- குடும்பம்
- பாடசாலை
- சமவயதுக் குழுவினர்
- தொழில் நிலையங்கள்
- புனர்வாழ்வு நிலையங்கள்

ஆனால், வாய்ப்புக்கள், சந்தர்ப்பங்கள் பெருகிவரும் இன்றைய உலகில் இதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன. அவற்றில் மிக முக்கியமானதொன்றாக ஊடகம் என்பது அமைகின்றது. இவற்றைச் சமூகமயமாக்கல் முகவர்கள் என்றும் கூறுகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பம் என்ற சமூக நிறுவனமே ஆரம்பப் படிநிலையில் சமூகமயமாக்கற் செயற்பாட்டை முன்னெடுக்கின்றது. ஒரு பிள்ளை ஆரம்பத்தில் குடும்ப உறுப்பினராவதற்கும் பின்னர் சமூக உறுப்பினராவதற்குமுரிய சமூகமயமாக்கற் செயற்பாடுகள் இங்கு நடைபெறுகின்றன. குடும்பத்தினரிடையே காணப்படும் இறுக்கமான நீண்ட காலம் நிலைத்திருக்க வேண்டும் என்ற உறவினடிப்படையில் இங்கு நடைபெறும் சமூகமயமாக்கற் செயற்பாடுகள் மிக முக்கியமானவை என்று சமூகவியலாளர்கள் கருதுகின்றனர். குடும்பத்தோடு இணைந்தவகையில் பிள்ளை பிறந்துள்ள குடும்பத்தின் சமூகவகுப்பு, இனம், பிரதேசம் என்பனவும் பிள்ளையின் சமூகமயமாக்கலில் கணிசமான அளவு பங்கெடுக்கின்றன. பிள்ளை குடும்ப உறுப்பினர்களதும் உறவினர்களதும் அயலவர் மற்றும் கிராமத்தவர்களதும் நடத்தைகளையும் பண்புகளையும் பார்த்துப் பின்பற்றுகின்றான். இவ்வகையில் பிள்ளையின் சமூகமயமாக்கற் செயற்பாடு நடைபெறுகின்றது. பிள்ளையொன்றின் சமூகமயமாக்கல் முகவர் என்ற வகையில் பாடசாலைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. பாடத்திட்டங்களோடு கூடிய கலைத்திட்ட நடைமுறைப்படுத்தலைப் பிரதான நோக்கமாகக் கொண்டு பாடசாலைககள் இயங்குகின்றபோதிலும் அவற்றின் செயற்பாடுகளினூடே பிள்ளையைச் சமூகமயமாக்கல் என்ற செயற்பாடு நிறைவேற்றப்படுவதும் எதிர்பார்க்கப்படுகின்றது. முறைசார் கல்வியை வழங்கி பிள்ளைகள் சமூகம் பற்றிப் புரிந்துகொள்வதற்கான சமூகமயமாக்கற் சந்தர்ப்பங்கள் அங்கு வழங்கப்படுகின்றன. பிள்ளைகளின் அறிவுசார் ஆட்சி மட்டுமின்றி மனவெழுச்சிசார் ஆட்சிகளும் இங்கு கட்டமைக்கப்படுகின்றன. பாடசாலைகளின் இணைக் கலைத்திட்டம், மறைக்கலைத்திட்டம் என்பனவும் பிள்ளையின் சமூகமயமாக்கற் செயற்பாடுக்கு வழிவகுக்கின்றன. பாராட்டு, கடிதல், முதன்மை மற்றும் தரங்கள் வழங்குதல் என்பவற்றின் மூலம் வகுப்பறையில் பிள்ளைகள் சிறப்பான முறையில் சமூகமயப்படுத்தப்படுகின்றார்கள் (கெகாஸ், 1991).

சமவயதுக் குழுவினரும் சமூகமயமாக்கற் செயற்பாட்டில் முக்கிய முகவராக அமைகின்றனர். குடும்பம் என்ற நிலையிலிருந்து பிள்ளை முன்பள்ளிப் பருவத்துக்குச் செல்லத் தொடங்குகின்ற, நண்பர்களோடு பழக ஆரம்பிக்கின்ற அண்ணளவாக நான்கு அல்லது ஐந்து வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகள் தம்வயதையொத்த பிள்ளைகளோடு பழகத் தொடங்குவதற்கான வாய்ப்பு அதிகரிக்கின்றது. இந்நிலையில் அவர்களின் சமூகமயமாக்கற் செயற்பாடுகள் ஒரு பிள்ளையின் சமூகமயமாக்கலில் முக்கியத்துவம் பெறுகின்றன. இதனை மார்க்கிரட் மீட், ஜீன்பியாஜே ஆகியோரது கருத்துக்களும் வலியுறுத்துகின்றன. குடும்பத்தைத் தாண்டியநிலையில் பிள்ளை வேறுபட்ட சமூக இடைத்தாக்கத்தைப் பெறுகின்றது. சமவயதுக் குழுவினர் என்பது ஒருவரின் வாழ்நாள் முழுவதிலும் செல்வாக்குச் செலுத்துகின்ற சமூகமயமாக்கல் முகவராகக் கொள்ளலாம்.

தொழில் நிலையங்களின் நோக்கம் மனிதனை சமூகமயமாக்குவது அன்று. எனினும், அங்கும் சமூகமயமாக்கற் செயற்பாடுகள் நடைபெறுவதை மறுக்கமுடியாது. தொழில்நுழைவின்போது தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகின்ற திசைமுகப்படுத்தல், பயிற்சி ஆகியவற்றிலும் தொழிலில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபட்டுள்ளபோது வழங்கப்படுகின்ற சேவைக்காலப் பயிற்சிகளின்போதும் அவர்களுக்கான சமூகமயப்படுத்தற் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆண்டிறுதி விழாக்கள், ஒன்றுகூடல்கள், கலைநிகழ்வுகள் போன்றனகூட அவற்றுக்கு வழி கோலுவனவாக அமையும். அவர்கள் நிறுவனதத்தின் கலாசாரத்தைப் புரிந்துகொண்டு அதற்குத் தம்மை இசைவாக்கிக் கொள்வதுகூட சமூகமயமாக்கற் செயற்பாடாகவே அமைகின்றது.

இவை எல்லாவற்றுக்கும் அப்பால் சமூகமயமாக்கற் செயற்பாடின் முக்கிய காரணியாக ஊடகங்கள் அமைகின்றன என்பதையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**சமூகமயமாக்கற் செயற்பாட்டில் ஊடகங்களின் பணி**

தொடர்பாடல் தொழினுட்பத்தின் துரித வளர்ச்சி சமூகமயப்பபடுத்தலில் ஊடகங்களின் செல்வாக்கை அதிகரிக்கச் செய்துள்ளது என்றே கூறலாம். சுயகற்றல், செயற்பாடினூடாகக் கற்றல், சுய தேடல் போன்றன கற்றல் பற்றிய போக்கில் முக்கியத்துவம் பெறத் தொடங்கியுள்ளன. ஆசிரியர் வகிபங்கு வசதிப்படுத்துனராக மாற்றம் பெற்றிருக்கின்றது. தொடர்பாடல் தொழினுட்பத்தின் வளர்ச்சி பெரியவர்களிடத்தில் மட்டுமின்றி பிள்ளைகளிடத்திலும் வேகமாகச் சென்றடைந்துகொண்டிருக்கின்றது. தொழினுட்பத்தின் வேகமான வளர்ச்சியும் தேவையும் மக்களையும் மாணவர்களையும் அவற்றைப் பயன்படுத்துவதிலிருந்து விலக்கிவைக்க முடியாத அளவிற்கு அவை முக்கியத்துவம் பெறத் தொடங்கிவிட்டன.

அச்சு ஊடகங்கள், இலத்திரனியல் ஊடகங்கள் என ஊடகங்களை அடிப்படையில் இரண்டாக வகைப்படுத்தலாம். பத்திரிகைகள், சஞ்சிகைகள்,நூல்கள் முதல் வகையின. சினிமா, தொலைக்காட்சி, வானொலி, இணையத்தளங்கள் போன்றன இலத்திரனியல் சார்ந்தன. இந்த வகைப்பாட்டில் இறுக்கமான தன்மையைப் பின்பற்ற முடியாத அளவிற்கு ஊடகங்கள் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்டு வளர்ச்சிபெற்றுவருகின்றன. இவை இன்றைய பிள்ளைகளின் சமூகமயமாக்கற் செயற்பாட்டில் அதிக செல்வாக்குச் செலுத்துகின்றமையை நாம் அவதானிக்கலாம். குறிப்பாக சினிமா, இணையம் ஆகியன பிள்ளைகளிடத்தில் அதிக பாதிப்பை ஏற்படுத்துவதாக பலரும் விசனப்படுவதை நாம் அவதானிக்காமல் இருக்க முடியாது.

- விளம்பரங்களால் அதிகம் ஈர்க்கபடுவதும் அப்பொருட்களை அனுபவிக்க வேண்டும் என்று தூண்டப்படுவதும்
- சினிமாக்களால் அதிகம் கவரப்பட்டு அதில் வரும் முக்கிய பாத்திரங்களுக்கு ஏற்ப தமது உடை, பேச்சு, சிந்தனை, செயற்பாடுகளை மாற்றிக் கொள்வதும்.
- உற்பத்தியாளர்கள் சினிமாப்படங்கள், தொடர் நாடகங்களின் பெயர்கள், பாத்திரங்களின் பெயர்களில் பொருட்களை உற்பத்தி செய்து சந்தையைக் கைப்பற்றிக் கொள்வது.

போன்றவற்றை இவற்றுக்குச் சில உதாரணங்களாகக் கூறிக்கொள்ளலாம்.

தற்போது வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் நிகழும் இளைஞரிடையேயான அசம்பாவிதங்களின் தன்மைகளை நோக்குகின்ற பலர் அவை சினிமாப் பாணியை ஒத்திருப்பதாகக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறிக்கொள்வதை நாம் தட்டிக்கழித்துவிட முடியாது. குறிப்பாகக் காட்சிப்படுத்தல் ஊடகங்கள் பிள்ளைகளை அதிகம் பாதிக்கின்றன. காட்சிப்படுத்தல் ஊடகங்கள் சினிமா முக்கியத்துவம் பெறுகின்றது. அது தவிர இணையத் தளங்களினூடாகவும் பலவிடங்களைப் பார்க்கின்றனர். நேரான சமூகமயமாக்கல் மட்டுமின்றி சமூக விரோதப் போக்கினையும் அவர்கள் கற்றுக்கொள்கின்றனர். காட்சிப்படுத்தல் ஊடகங்களைக் கற்றலுக்காகப் பயன்படுத்துகின்றபோது அவற்றின் பயன் காத்திரமானது. ஆனால், இன்றைய சமூகத்தில் அவை எதிர்விளைவுகளையே அதிகம் உண்டாக்கியுள்ளன என்று கொள்ளவேண்டியுள்ளது.

வீட்டுக்கொரு தொலைக்காட்சி என்ற நிலை இன்று பல இடங்களில் காணப்படுகின்றது. இலங்கையில் நகரப் புறங்களில் இந்நிலைமை காணப்பட்டாலும் கிராமப் புறங்களில் இன்றும் மின்சாரம், தொலைக்காட்சி சென்றடையாத இடங்கள் பல உள்ளன. அபிவிருத்தியடைந்த நாடுகளில் தொலைக்காட்சியுடன் நேரத்தைச் செலவிடுபவர்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் அதிகமாகும். குறிப்பாக அமெரிக்காவில் வீட்டில் உள்ளவர்கள் நாளொன்று அண்ணளவாக ஏழு மணித்தியாலங்கள் தொலைக்காட்சி பார்ப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. எமது நாட்டிலும் இன்று பிள்ளைகள் தொலைக்காட்சிக்கு முன்னால் தமது நேரத்தைத் தொலைத்துவிட்டு அலைவதை அவதானிக்க முடிகின்றது. பிள்ளையைத் தொலைக்காட்சிக்கு முன்னால் படுத்திவிட்டு தமது சோலியைப் பார்க்கும் எத்தனையோ பெற்றோரை நாம் அவதானிக்க முடிகின்றது. வயது முதிர்ந்தவர்கள்கூட தொலைக்காட்சித் தொடர் நாடகங்களில் தமது அதிகமான நேரத்தைச் செலவிடுகின்றனர். இதனால் அவர்கள் தமது வீட்டிலுள்ள குழந்தைகளுடன் நேரத்தைச் செலவிட முடியாதவர்களாக உள்ளனர்.

தமிழ்த் தொலைக்காட்சிகளிலும் பாலுணர்வைத் தூண்டும் காட்சிகள் கணிசமான அளவு இடம்பெறுகின்றன என்பதை மறுக்கமுடியாது. இவற்றால் பிள்ளைகளிடத்தில் தாக்கம் ஏற்படுவதும் அவதானிக்கக் கூடியதாகவே உள்ளது. தொலைக்காட்சிகளிலும் இணையங்களிலும் ஒளிபரப்பப்படும் விடயங்கள் காணொளிகளாக அமைவதால் அவை பார்ப்போரின் கண்களுக்கும் செவிகளுக்கும் தீனிபோடுகின்றன. இலகுவாக பார்ப்பவர்களை உள்ளிழுத்துவிடுகின்றன. அதாவது, அவற்றில் வேகமாகவும் நாடகப் பாங்குடனும் காட்டப்படும் விடயங்களால் பார்ப்பவர்கள் வேகமாகக் கவரப்படுகின்றனர். இதனால், நுணுக்கமாகச் சிந்திக்காது அவற்றை நுகர்கின்றனர். இந்நிலைமை பிள்ளைகளின் தர்க்கரீதியான சிந்தனையை மழுங்கடித்துவிடுவதோடு அவர்களின் கற்பனைத்திறனையும் வறிதாக்கி விடுகின்றது எனலாம்.

வெகுசன ஊடகங்கள் ஒரு சமூகத்தின் கலாசாரத்தைக் கட்டிக்காக்கும் பணியைக் கண்ணியமாக மேற்கொள்ள வேண்டும். அதாவது, வாழ்வியல் மதிப்பு, பொறுப்புணர்வு, நேர்மை, பராமரிப்பு, குடியியல் விழுமியம் போன்றவற்றைக் கட்டிக்காக்க வேண்டும். ஆனால், பலவேளைகளில் இவற்றை அவை அலட்சியம் செய்கின்றன என்பதை மறுக்க முடியாது. இன்றைய தமிழ்ச் சிறுவர்களிடத்தில் **'சுட்டி டிவி'** அதிக செல்வாக்கினைப் பெற்றுள்ளது. அவற்றில் பல விடயங்கள் அவர்களின் சமூகமயமாக்கலை சிக்கலுக்குரிதாக்குகின்றன என்பதை அவதானிக்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெகுசன ஊடகத்தில் காட்டப்படும் வன்செயல்களுக்கும் உண்மையான வாழ்க்கையில் ஏற்படும் வன்செயல்களுக்கும் இடையில் ஆட்சேபனைக்கு இடமின்றி நேரடியான தொடர்பு உண்டு (Strasburger & Donnerstein, 2000). சில ஆண்டுகளுக்கு முன்னர் கிழக்கு மாகாணத்தில் பாடசாலை மாணவி ஒருத்தியும் மாணவனொருவனும் சினிமாப் பாணியில் மாணவியின் பெற்றோரைக் கொலை செய்ததாக அளித்த வாக்கு மூலம் பலரது கவனத்தையும் ஈர்த்திருந்தமை எம்மத்தியில் இதற்கு ஓர் உதாரணமாகக் கொள்ளத் தக்கது. புகைத்தல், மது அருந்துதல், வன்முறை போன்ற விடயங்களில் இளைஞர் யுவதிகளிடையே அதிக செல்வாக்கினைச் செலுத்தி வருவனவற்றில் தொலைக்காட்சிகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

அச்சு ஊடகங்களை வாசிப்பதில் காட்டுகின்ற அக்கறை குறைந்து வருகின்றது. முக நூல்களிலும் ஏனைய வலைத்தளங்களிலும் கட்டற்ற வாசிப்புத் தளத்தை நோக்கி வாசகர்கள் நகரத் தொடங்கியுள்ளனர். பத்திரிகைகள், சஞ்சிகைகளில் சமூக மயமாக்கலுக்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்படுவது மேலும் வலுவூட்டப்பட வேண்டியதாக உள்ளது.

## நிறைவுரை

பிள்ளைகளின் சமூகமயமாக்கற் காரணிகளில் ஊடகங்களின் செல்வாக்கு அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றது. ஏனைய சமூகமயமாக்கல் முகவர்களைக் காட்டிலும் இவை விரைவாகத் தொற்றிக் கொண்டு செல்வாக்குச் செலுத்தும் தன்மையுடையவையாகக் காணப்படுகின்றன. இவற்றை நோக்கி பிள்ளைகளை வழிப்படுத்துவதில் பெற்றோரும் ஆசிரியர்களும் அதிக கவனமெடுக்க வேண்டியவர்களாக உள்ளனர். பிள்ளைகளின் சமூகமயமாக்கற் செயற்பாட்டிற்காகப் பெரியவர்கள் பல விடயங்களைத் தியாகம் செய்ய வேண்டியவர்களாக உள்ளனர். பிள்ளைகள் சமூகவலைத் தளங்களில் எவ்வாறு பிரவேசிக்கின்றனர், எவற்றைப் பெற்றுக்கொள்கின்றனர் என்பதில் கவனமெடுக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. குறிப்பாகப் பதின்ம வயதுப் பிள்ளைகளின் ஊடக பயன்பாடு பற்றி அதிக கவனமெடுக்க வேண்டும். அது மட்டுமின்றி இலத்திரனியல் ஊடகங்களிலிருந்து அச்சு ஊடகங்களை நோக்கி அவர்களை வழிப்படுத்துவது சாதகமான சமூகமயமாக்கற் செயற்பாடாக அமையும் எனலாம். ஊடகங்களில் வரும் விடயங்களை அப்படியே உள்வாங்காது சீர்தூக்கிப் பார்க்கும் பக்குவத்தை பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும். ஊடகங்களும் பொறுப்புணர்வோடு செயற்பட வேண்டும். இந்நிலையில் பலதரப்பினரும் அக்கறையோடு செயற்படுவார்களானால் இன்றிருக்கும் நிலையிலிருந்து முன்னேறி ஊடகங்களையும் பிள்ளைகளின் சமூகமயமாக்கற் காரணிகளில் முக்கியமானவையாகக் கையாள முடியும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவரின் ஆளுமையை வளர்ப்பதில் இணைக்கலைத்திட்டத்தின் பங்களிப்பு

–ச. லலீசன்–
பிரதி அதிபர்
கோப்பாய் ஆசிரிய கலாசாலை

போட்டித் தன்மை வாய்ந்த கல்வியுலகு இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகளை அமுல்படுத்துவதில் பல சவால்களை உருவாக்கியுள்ளது. குறிப்பாக உயர்தரம் கற்கும் மாணவர்களும் அவர்தம் பெற்றோரும் இணைக்கலைத்திட்டம் பற்றிக் கொண்டிருக்கும் தவறான புரிதல்களால் பெரும்பாலான செயற்பாடுகளில் இருந்து ஒதுங்குவதுடன் நல்வாய்ப்புக்களை இழக்கும் நிலை அவதானிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இணைக்கலைத்திட்டம் பற்றிய விழிப்புணர்வை மாணவர்களுக்கும் அவர்தம் பெற்றோருக்கும் உணர்த்தும் நோக்கில் இக்கட்டுரை அமைகின்றது.

இணைக்கலைத்திட்டம் என்பது கல்வித்துறைக்கு புதிதான விடயமல்ல. கல்வி கற்பிக்கப்பட தொடங்கிய ஆரம்ப காலத்திலிருந்தே இச்செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ளன. சங்கீதம், இசை, விவாதம் மற்றும் விளையாட்டுகள் முதலியன முற்காலத்தில் இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகளாகக் கொள்ளப்பட்டன.

பரீட்சையில் போட்டித்தன்மை அதிகரித்தமையால் இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகள் வலுக்குன்றத் தொடங்கின. குறிப்பாக தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை காரணமாக ஆரம்ப வகுப்புச் செயற்பாடுகளும் க.பொத. சாதாரணதர மற்றும் உயர்தரப் போட்டிப் பரீட்சை காரணமாக இடைநிலை வகுப்பு இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகளும் வலுக்குன்றின.

பாடசாலைகளில் பாட அறிவை மாத்திரம் வழங்கும் செயற்பாடுகள் பூரணமான மனிதனை உருவாக்கத்தவறிவிட்டன. பூரணமான வளர்ச்சியென்பது அறிவு அபிவிருத்தி, பௌதிக அபிவிருத்தி, உள அபிவிருத்தி, பூரண ஆளுமைமிக்கவர்களை உருவாக்குதல் என்ற பரந்த விடயங்களை உள்ளடக்கியுள்ளது.

வகுப்பறைக்குள்ளே இடம்பெறும் கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளுக்கு சமமான வகையில் மாணவனுக்கு முக்கியத்துவமுடையவையான வகுப்பறைக்கு வெளியிலான செயற்பாடுகள் யாவும் இணைக்கலைத்திட்டம் சார் செயற்பாடுகள் என அழைக்கப்படுகின்றன. (உதாரணம்: தமிழ்த்திறன் போட்டிகள், விளையாட்டு சார் போட்டிகள், சாரணர் இயக்கம், கல்விச் சுற்றுலா) இதிலிருந்து அப்பாற்பட்டவைகளாக புறக்கலைத்திட்டச் செயற்பாடுகளும் உள்ளன. (உதாரணம் : பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் ஏற்பாடு செய்யப்பட்ட டெங்கு விழிப்புணர்வுப் பேரணியில் கலந்துகொள்ளல்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைக்கலைத்திட்டம் பின்வரும் துறைகளின் வளர்ச்சிக்கு உதவுகிறது.

- ஜனநாயக வாழ்க்கை முறையொன்றுக்கான அத்திவாரத்தை இடுகிறது.
- சமூகத்திறன்களை வளர்க்கின்றது.
- கூட்டுறவாக பணியாற்றும் உணர்வைத்தருகிறது.
- அணியாக செயற்படும் மற்றும் சுய ஒழுக்கத்தை பேணும் உணர்வை வளர்க்கிறது.

## இணைக்கலைத்திட்டம்-எண்ணக்கரு

கடந்த நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகள் புறக் கலைத்திட்டச் செயற்பாடுகள் என்ற பெயருடனேயே முன்னெடுக்கப்பட்டன. இவை பாடசாலைகளுக்குப் பெரிய சவாலாக இருக்கவில்லை. மாணவர்கள் தமது பாடச் செயற்பாடுகளுக்குப் புறம்பாக விளையாட்டுச் செயற்பாடுகளில் ஈடுபட்டனர். ஆனால் இணைக்கலைத்திட்டம் இன்று சிக்கலான, இலகுவில் வரையறுக்க முடியாத விடயமாக வளர்ந்துள்ளது. இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகளுக்கென பிரத்தியேகமான ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட்டு அமுலாக்கம் இடம்பெறுமளவிற்கு இது முக்கியத்துவம் பெற்றுள்ளது. பெருமளவிலான பணம், பௌதீக வளம் மற்றும் நேரம் என்பன இதற்காகச் செலவு செய்யப்படுகின்றன.

புறக்கலைத்திட்டம் என அழைக்கப்பட்ட செயற்பாடுகள் இன்று இணைக்கலைத்திட்டம் என அழைக்கப்படுகின்றன என்றால் பாடசாலைக் கலைத்திட்டத்தில் பிரிக்கப்பட முடியாத ஒரு பகுதியாக இவை முக்கியத்துவம் பெற்றுள்ளமையை உறுதியாகின்றது.

## இணைக்கலைத்திட்ட வகைகள்

- அறிவுசார் அல்லது இலக்கியம் சார் செயற்பாடுகள்
- உடல் அல்லது பௌதீக வளர்ச்சிசார் செயற்பாடுகள்
- அழகியல் மற்றும் கலாசாரம் சார் செயற்பாடுகள்
- குடியியல் திறன் அபிவிருத்தி செயற்பாடுகள்
- சமூக நலன்பேண் செயற்பாடுகள்
- ஓய்வு நேரத்தை பயனுள்ளதாக்கும் பொழுது போக்கு செயற்பாடுகள்
- சுற்றுலாசார் செயற்பாடுகள்

**இணைக்கலைத்திட்ட செயற்பாடுகளின் முக்கியத்துவத்தைப் பின்வருமாறு குறிப்பிடலாம். கல்வி விழுமியம் அல்லது பயன்**

- கோட்பாட்டு அறிவை பிரயோக அறிவாக மாற்றக்கூடியது.
- கல்விச்சுற்றுலா முதல்தர அனுபவத்தை தரக்கூடியது.
- விவாதம் மொழித்திறனை வளர்க்கக்கூடியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சுய ஆளுகைக்கான திறன்களை வளர்க்கின்றது (Self- Governing Skills)
- எழுத்தாற்றலை வளர்க்கும்
- கலைவிழாக்கள் ஒழுங்கமைப்பு ஆற்றலையும் தலைமைத்துவ பண்புகளையும் வளர்க்கும்
- செயற்றிட்டங்களில் ஈடுபடல் நேரடிக்கற்றலுக்கு உதவும்

## உளவியல்ரீதியிலான பயன்

- மாணவர்களின் உளவியல் தேவைகளை பூர்த்திசெய்ய இணைக்கலைத்திட்ட செயற்பாடுகள் உதவும்.
- இயல்பாக உள்ள ஆற்றல்களை வெளிக்கொணர உதவும்.முத்திரை நாணயங்கள் சேகரித்தல் போன்ற துறைகளில் உள்ள ஆர்வத்திற்கு வாய்ப்புகள் வழங்குவது போன்ற செயற்பாடுகள் உளவியல் தேவைகளை பூர்த்திசெய்ய உதவும்.
- மாணவர்களின் மனவெழுச்சி ஆரோக்கியம் மேம்பட உதவும்.
- ஒவ்வொருவருக்கும் தனக்கேயுரித்தான இயற்கை குணங்கள் உள்ளன. அவற்றை கல்விக்கான மூலதனமாக்குவதற்கு இணைக்கலைத்திட்ட செயற்பாடுகள் உதவும்.
- கல்வியில் பின்தங்கியுள்ள மாணவன் தனக்குள் தாழ்வு மனப்பான்மையை உருவாக்கிக் கொள்கின்றான். அதன்பின் மனவெழுச்சி ரீதியாக சமநிலையை இழக்கின்றான். அதை தடுக்க உதவுவது இணைக்கலைத்திட்ட செயற்பாடுகள்.
- பாடசாலை மீதான மாணவர்களின் விருப்பத்தை உருவாக்க உதவும்.
- தனியாள் வேறுபாட்டையும் வேறுபட்ட திறன்களையும் அடையாளங்காண உதவும்.

## மாணவர்களின் சமூக விழுமிய அபிவிருத்தி

- நற்பிரஜை ஒருவருக்கு இருக்க வேண்டியது சமூக கூட்டுறவு. இதை பாடங்கள் ஊடாக வழங்க முடியாது. குழுச்செயற்பாடுகள் மூலம் அணியாக செயற்படுவதன் மூலம் மாணவர்கள் ஆளிடைத் தொடர்புகள் ஒத்துழைப்பு மனப்பாங்குளை கற்றுக்கொள்வர்.

## குடியியல் விழுமிய அபிவிருத்தி

- ஒருவன் தான் சமூகத்தில் ஆற்ற வேண்டிய கடமைகளை தானாக முன்வந்த ஆற்ற பயிற்றுவிப்பது இணைக்கலைத்திட்டமாகும்.
- ஒருவன் தனது சமூக பொறுப்புகளை தானாக முன்வந்து நிறைவேற்ற பயிற்றுவிப்பது இணைக்கலைத்திட்டமாகும்.
- பாடசாலை ஒரு சமூக நிறுவனமென்ற வகையில் பாடசாலையின் செயற்பாடுகள் சமூக செயற்பாடுகளுடன் இணைந்ததாக அமைதல் வேண்டும். இணைக்கலைத்திட்டம் இதற்கு ஆதாரமாக அமைதல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பௌதீக வளர்ச்சி

- உடல் ஆரோக்கியம். துரிதம். வேகம், உடற்பலம், பாச்சல் சக்தி என்பன வளர்ச்சியடைதல் மனிதனுக்கு அவசியமாகும்.
- விளையாட்டுகள், உடற்பயிற்சிகள் மாணவர்களுக்கு அவசியமான செயற்பாடுகளாகும்.

## பிரயோசனமான பொழுது போக்கு

- இதுவும் அவசியமான ஒரு அம்சமாகும். ஓய்வுள்ள நேரம் தவறான செயற்பாடுகளில் ஈடுபடாதிருக்க பிரயோசனமாக கழிக்கப்பட தேவையான திறன்கள் வழங்கப்படல் வேண்டும்.

## கலாசார விழுமிய வளர்ச்சி

- இணைக்கலைத்திட்ட செயற்பாடுகள் கலாசார அம்சங்கள், மரபுரிமைகள் என்பனவற்றை விளங்கிக்கொள்ளவும் பாதுகாத்திடவும் உதவக்கூடியவை.
- இணைக்கலைத்திட்ட செயற்பாடுகள் இல்லாத பாடசாலை மாணவர்கள் வெறும் புத்தக பூச்சிகளாக இருப்பர்.

## இணைக்கலைத்திட்ட செயற்பாடுகள் - ஒழுங்கமைக்கப்படுமிடத்து கவனத்திலெடுக்க வேண்டியவைகள்

- தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவைகள்.
- கல்விக்கு பொருத்தமானவைகள்.
- ஆக்கத்திறனுக்கு ஊக்கமளிப்பவைகள்.
- வகுப்பறை கற்றல்-கற்பித்தலால் அடையப்பட முடியாத கல்வி நோக்கங்களை அடைய உதவுபவை.
- மாணவர்களில் அதிக எண்ணிக்கையானோர் பங்குபற்றக்கூடியவை.
- பாடசாலையிலுள்ள வளங்களுக்கேற்புடைத்தாக இருத்தல்.

## இணைக்கலைத்திட்ட செயற்பாடுகள் ஒழுங்கமைக்கப்படுதல்

- ஜனநாயக ரீதியிலானதாக அமைதல் வேண்டும். பலரின் கருத்துகளுக்கும் அபிப்பிராயங்களுக்கும் இடமளித்தல் வேண்டும்.
- தலைமைத்துவ வாய்ப்புகள் சுழற்சி அடிப்படையில் வழங்கப்படல் வேண்டும்.
- பொறுப்புகள் பலருக்கு பிரித்து வழங்கப்படல் வேண்டும் .
- முகாமைத்துவம், நிர்வாகம் மற்றும் மேற்பார்வை இடம்பெறல் வேண்டும்.
- நேர அட்டவணைப்படி செயற்பாடுகள் இடம்பெறல் வேண்டும்.
- சிறியதிலிருந்து பெரியதற்கு செல்வதாக அமைதல் வேண்டும்.
- மாணவர் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்கலைக்கழக அனுமதியில் செல்வாக்கு

விளையாட்டுக்கள், கலாசாரச் செயற்பாடுகள் (உதாரணம் : நாட்டியம், சித்திரம், இலக்கியம்) மற்றும் சாரணர் சேவை, மாணவர் பயிற்சிப் படை, சமூக சேவை ஆகியவற்றிலும் வேறு படிப்புத் தவிர்ந்த செயற்பாடுகளிலும் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களை தேசிய மட்டத்திலோ அல்லது சர்வதேச மட்டத்திலோ குறித்த காலப்பகுதிக்குள் பெற்று சாதனை புரிந்த மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியின் போது விசேட கவனத்திற்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

ஒவ்வொரு கற்கை நெறியிலும் தீர்மானிக்கப்பட்ட அனுமதியின் 0.5 வீத இடங்கள் இத்தகைய சாதனையாளர்களுக்காக ஒதுக்கப்படுகின்றன. இதனால் பல்கலைக்கழக அனுமதிக்கு அண்மித்து அதனைத் தவறவிடுபவர்கள் இணைப்பாட விதானச் செயற்பாட்டுச் சாதனைகளின் ஊடாக பல்கலைக்கழக அனுமதியைப் பெறும் வாய்ப்புக் காணப்படுகின்றது.

## நிறைவுரை

ஆளுமையுள்ள சமூக அங்கத்தவர்களை உருவாக்குவதற்கு இணைக்கலைத்திட்டச் செயற்பாடு இன்றியமையாததாகும். பிள்ளைகள் இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகளில் ஈடுபட பெற்றோர் தயக்கமின்றி அனுமதி வழங்க வேண்டும். இது பிள்ளைகளின் ஆளுமை விருத்திக்கான அடிப்படைச் செயற்பாடுகளில் ஒன்று என்பதை உணர வேண்டும்.

### இறைவன் நேசிக்கும் மனிதர்கள்

| | | |
|---|---|---|
| முதலில் வணங்க வேண்டிய தெய்வம் | - | தாய், தந்தை |
| மிக மிக நல்லநாள் | - | இன்று |
| மிகப்பெரிய வெகுமதி | - | மன்னிப்பு |
| மிகவும் வேண்டியது | - | பணிவு |
| மிகவும் வேண்டாதது | - | வெறுப்பு |
| மிகப்பெரிய தேவை | - | சமயோஜித புத்தி |
| மிகக்கொடிய நோய் | - | பேராசை |
| மிகவும் சுலபமானது | - | குற்றம் காணல் |
| மிகவும் கீழ்த்தரமான விஷயம் | - | பொறாமை |
| நம்பக் கூடாதது | - | வதந்தி |
| ஆபத்தை விளைவிப்பது | - | அதிக பேச்சு |
| செய்யக் கூடாதது | - | உபதேசம் |
| செய்ய வேண்டியது | - | உதவி |
| விலக்க வேண்டியது | - | விவாதம் |
| உயர்வுக்கு வழி | - | உழைப்பு |
| நழுவ விடக்கூடாதது | - | வாய்ப்பு |
| பிரியக் கூடாதது | - | நட்பு |
| மறக்க கூடாதது | - | நன்றி |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பாடசாலையின் மன்றங்கள்

கிறிஸ்தவ மன்றம்



இந்து மன்றம்



இஸ்லாமிய மன்றம்



ஆங்கில மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மன்றம்



சுகாதார மன்றம்



ஆரம்பக் கல்வி மன்றம்



சமூக விஞ்ஞான மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணித விஞ்ஞான மன்றம்



மாணவர் பாராளுமன்றம்



அழகியல் மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் அகராதிக்கலை

–பேராசிரியர். கலாநிதி.எஸ்.சிவலிங்கராஜா–
முதுதமிழ்ப் பேராசிரியர்
மேனாள் தமிழ்த்துறைத்தலைவர்
யாழ்.பல்கலைக்கழகம்

தமிழ்க்கல்வி புலமைமரபிலே புதுவதாகப் புகுந்து நிலையான இடத்தைப் பெற்ற துறைகளுள் அகராதித்துறையும் ஒன்றாகும். அகராதித்துறை, அகராதி இயல், அகராதிக்கலை முதலான சொற்களை அகராதி பற்றிய ஆய்வாளர்கள் பயன்படுத்துகின்றனர். நாம் இக்கட்டுரையிலே அகராதிக்கலை என்ற சொல்லையே பயன்படுத்துகின்றோம்.

யாழ்ப்பாணத்து கிராமங்களிலே பிரச்சினைக்குரிய வினாக்களைத் தொடுப்பவனை அல்லது பல்வேறு அர்த்தங்களிற் பேசுபவனை "அவன் ஒரு அகராதி பிடிச்சவன்" என்று கூறும் வழக்கம் நீண்டகாலமாக நிலவி வந்தது. இன்றும் சிறுபான்மையான வழக்கில் உள்ளது. யாழ்ப்பாணத்துப் பாமரமக்களிடையே அகராதி என்பதன் கருத்துநிலை விளங்காதவற்றை விளங்க/விளங்க உதவுவது என்பதற்கு மறுதலையாக வழங்கி வந்தமை வியப்பிற்குரியது. அகராதி படிச்சவன் என்பது அகராதி பிடிச்சவன் என மருவியதோ என்பதும் ஆய்வுக்குரியது. எனவே யாழ்ப்பாணத்துக் கல்வி மரபிலே அகராதியின் தோற்றம், வளர்ச்சி பயன்பாடு பற்றி அறிவதும் ஆராய்வதும் சுவை பயப்பதாகும்.

யாழ்ப்பாணத்துச் சமூகத்தில் நீண்ட நெடுங்காலமாக நிலவி வந்த மரபுவழிக்கல்விப் பாடத்திட்டத்திலே நிகண்டுகளுக்கு மிக முக்கியமான இடம் இருந்தது. அக்காலத்திலே நிகண்டு படிக்காதவனைப் படித்தவனாகச் சமூகம் அங்கீகரிக்கவில்லை. தமிழிலே பல வகையான நிகண்டுகள் காலத்திற்கு காலம் தோன்றியுள்ளன. இவற்றிலே மண்டலபுருடரின் சூடாமணி நிகண்டு சிறப்பானதென மரபுவழிப் புலமையாளர்கள் கூறியுள்ளனர். 19ம் நூற்றாண்டுத் தமிழ்க்கல்வி மரபிலே நிகண்டுகள் பிரதான இடத்தைப் பெற்றன என்பதற்குப் பல நிகண்டுகளும் உரைகளும் அச்சுவாகனம் ஏறியமை சான்றாகும். சூடாமணி நிகண்டினை ஆறுமுகநாவலர் 1867ம் ஆண்டு பதிப்பித்துள்ளார். சுன்னாகம் அ.குமாரசுவாமிப்புலவர் சூடாமணி நிகண்டுக்கு உரையெழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது. தமிழ்ப்புலமையாளர்கள் நிகண்டிலே நல்ல பயிற்சியும் தேர்ச்சியும் உடையவர்களாக விளங்கினர். யாழ்ப்பாணத்து தமிழ்ப்புலமையாளர்கள் புதுவதாக நிகண்டினை ஆக்கும் திறன் உடையவர்களாகவும் விளங்கினர்.

19ம் நூற்றாண்டின் கடைக்கூறிலே (1876) வல்வை வைத்திலிங்கம்பிள்ளை எழுதிய சிந்தாமணி நிகண்டு வெளிவந்தது. நாமறிந்தவரையிலே யாழ்ப்பாணத்திற் புதுவதாக நிகண்டொன்றினை ஆக்கியவர் வல்வை வைத்திலிங்கம்பிள்ளை அவர்களே என்பது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடத்தக்கது. மாணவர்கள் மனனம் செய்து வைத்திருக்கச் செய்யுள் வடிவிலான நிகண்டுகள் வசதியாய் இருந்தன. வல்வை வைத்திலிங்கம்பிள்ளையின் சிந்தாமணி நிகண்டு தாது வருசம் சித்திரை மாதம் (1876) வெளிவருவதற்கு முன்னரே யாழ்ப்பாணத்திலே அகராதியும் வெளிவந்து விட்டது. நவீனத்துவ நோக்கில் அகராதி எழுந்த போதும் மரபுவழிக் கல்விப்பண்பாட்டின் கட்டிறுக்கத்தைப் பேண விரும்பியவர்கள் நிகண்டினையே பெரிதும் விரும்பிக் கற்றனர், கற்பித்தனர்.

மரபுவழிப் புலமையாளர்களில் ஒரு சாரார் நிறுவன வழி வரும் அறிஞர்களுடன் இணைந்து அகராதி ஆக்கும் பணியிலே ஈடுபட்டிருந்த வேளையிலே வல்வை வைத்திலிங்கம்பிள்ளை சிந்தாமணி நிகண்டினை இயற்றினார். நிகண்டு செய்வதற்கு ஆழ்ந்தகன்ற இலக்கிய, இலக்கண, மொழிப்புலமை வேண்டும். வல்வை வைத்திலிங்கம்பிள்ளையிடம் இவை நிரம்பியிருந்தன என்பதற்குச் சிந்தாமணி நிகண்டு சாட்சியாகும். கருதிய பொருளைக் கொடுக்கும் என்ற கருத்தில் அமையும் சிந்தாமணி என்ற சொல்லை மகுடமாக வைத்த நிகண்டினை இயற்றினார். 2013ம் ஆண்டு சிந்தாமணி நிகண்டின் இரண்டாம் பதிப்பு நோக்கு வெளியீட்டாளர்களால் வெளியிடப்பட்டுள்ளது. சிறப்பான முறையில் நேர்த்தியாக இதனை ஜெயதேவன், பன்னிருகைவேலன் ஆகியோர் மீளப் பதிப்பித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்து மரபுவழித் தமிழறிஞர்களுக்கு நிகண்டு கடினமானதாக இருந்தது என்று கூறமுடியாது. தமிழைக் கற்றுத் தம் சமயத்தின் பால் ஈர்க்க விரும்பிய மிஷனரிமார் தமிழ்மொழியைக் கற்க விரும்பினர். அவர்களுக்குத் தமிழ்மொழியிலே வழங்கும் சொற்களுக்குச் சரியான பொருத்தமான பொருளை அறிவதற்கு நிகண்டுகள் கடினமானவையாக இருந்தன. செய்யுள் நடையிலே கடினமான பதப்பிரயோகத்துடன் விளங்கிய நிகண்டுகளுக்குப் பதிலாக தமது தேசத்து நடைமுறையை ஒட்டிய அகராதிகள் ஆக்க வேண்டுமென்று விரும்பினர். இதற்காகப் பல சிரமங்களைப்பட்டுக் கடின உழைப்போடு அகராதி முயற்சியில் ஈடுபட்டனர். “தமிழ்மொழியை ஐந்திரிபறக் கற்றாலொழியத் தமிழ்ப் பிரதேசத்திற் சேவை செய்ய முடியாதென்ற உண்மையை மிஷனரிமார் நன்கு உணர்ந்திருந்தனர்” என்று பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் குறிப்பிடுவர். அகராதி முயற்சியிலே மிஷனரிமாரை ஈடுபடவைத்தது அவர்களது கல்வித் தேவையே எனலாம்.

கடின உழைப்பும் செவ்வன திருந்தச் செய்யும் பாங்கும் கொண்ட அக்கால மிஷனரிமார் மேலைப்புல அணுகுமுறைக்குள் யாழ்ப்பாணத்து மரபுவழித் தமிழ்ப்புலமையைப் பாயவிட்டனர். அந்தப் பாய்ச்சலின் வெளிப்பாடுகளில் ஒன்றாக அகராதி முயற்சிகளையும் குறிப்பிடலாம்.

மிஷனரிமாரின் அகராதி முயற்சிகளுக்கு யாழ்ப்பாணத்து மரபுவழி தமிழ்ப் புலமையாளர்கள் மிகுந்த பங்களிப்புச் செய்தனர். யாழ்ப்பாணத்திலே மிஷனரிமார் அகராதி தொகுக்கும் பணியிலே ஈடுபடுவதற்கு முன்னர் வீரமாமுனிவரின் சதுர அகராதியும் உறோட்லரின் தமிழ் ஆங்கில அகராதி ஒன்றும் வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. சதுரகராதியின் முன்பக்கத்திலே வீரமாமுனிவர் “அருளிச்செய்த” சதுரகராதி என்றிருப்பதை அவதானிக்கும் பொழுது ஆரம்பகாலத்தில் அகராதியும் அருளிச் செய்யும் பணியாகவே கருதப்பட்டது என்பது புலனாகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிமனித முயற்சியாலே சாத்தியமாவது கடினம் என்பதை உணர்ந்த மிஷனரிமார் கூட்டுமுயற்சியாக அகராதி ஆக்கும் பணியை மேற்கொண்டனர். புரட்டஸ்தாந்து மதத்தினரிடையே பல பிரிவுகள் இங்கு நிலவியபோதும் அகராதி முயற்சியில் அவர்கள் ஒருமுகமாக ஒன்றுபட்டு உழைக்கத் திட்டமிட்டனர். சேச்மிஷன், மெதடிஸ்தமிஷன், அமெரிக்கமிஷன் ஆகியவற்றைச் சேர்ந்த அனைவரும் அகராதிப்பணியில் ஒன்றாக உழைக்க முன்வந்ததோடு மதமாற்றம் பெறாத மரபுவழித் தமிழ்ப்புலமையாளர்களையும் இணைத்துக் கொண்டு பணியை ஆரம்பித்தனர்.

1833ம் ஆண்டு வண.ஜே.நைற் என்பவர் தலைமையிலே தமிழ்-ஆங்கிலம், ஆங்கிலம்-தமிழ், தமிழ் அகராதிகளை ஆக்குவதற்கு திட்டமிட்டனர். அகராதி ஆக்கும் முறையியலை நன்கு அறிந்திருந்த வண.நைற் கொழும்பு காபிரியேல்திசெரா, உடுவில் சந்திரசேகரபண்டிதர், இருபாலை சேனாதிராஜமுதலியார், இன்னும் சில தமிழறிஞர்கள் ஆகியோரின் உதவியுடன் சொற்களைத் தொடுத்து விளக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். ஏறத்தாழ ஆறு ஆண்டுகளாக இப்பணி முன்னெடுக்கப்பட்டது. துரதிஸ்டவசமாக 1938ம் ஆண்டு வண.நைற் அவர்கள் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

வண.நைற் அவர்களின் தலைமையின் கீழ் தொகுக்கப்பட்ட விடயங்களை ஆதாரமாகக் கொண்டு வண.லெவி ஸ்பால்டிங் என்பார் 1842ல் ஒரு தமிழகராதியை வெளியிட்டார். வண.ஸ்பால்டிங் என்பவறின் வழிகாட்டலில் சந்திரசேகர பண்டிதர், சரவணமுத்துப்பிள்ளை ஆகியோர் இந்த அகராதியை ஆக்கினர்.

யாழ்ப்பான அகராதியென்றும் மானிப்பாய் அகராதியென்றும் அழைக்கப்பட்ட இந்த அகராதியே ஈழநாட்டில் எழுந்த முதலாவது தமிழ்அகராதி என்ற பெருமைக்குரியது. "Manual Dictionary of the Tamil Language" என்று ஆங்கிலத்தில் அச்சடிக்கப்பட்ட முதற்பக்கத்துடன் யாழ்ப்பாண புத்தகசங்கத்தாரால் 1842ம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்த அகராதியின் தற்போதய விலை 10சிலிங்ஸ் அல்லது ஐந்து ரூபா என அச்சிடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண அகராதி 2006ம் ஆண்டு மறுபதிப்பாக கோ.இளங்கோவன், பூ.பத்மசீலன் ஆகியோரினால் தமிழ்மண் பதிப்பகம், சேமமடு பொத்தகசாலை ஆகிய நிறுவனங்களினூடு வெளியிடப்பட்டுள்ளது. இம்மறுபதிப்புக்குப் பேராசிரியர் கா.சிவத்தம்பி வாழ்த்துரையும், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் ஆகியோர் அணிந்துரையும் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த அணிந்துரைகள் ஈழத்து அகராதி முயற்சிகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண அகராதியிலே 58,500 சொற்களுக்குப் பொருள் கூறப்பட்டுள்ளது. இன்றும் பயன்படக்கூடியதாகவுள்ள இந்த அகராதியை மீள் பதிப்புச் செய்தவர்களைப் பாராட்ட வேண்டும்.

யாழ்ப்பாணத்து தமிழ் அகராதி உருவாக அரும்பாடுபட்டுழைத்த மிஷனரிமார் தாம் ஏலவே திட்டமிட்டிருந்தபடி ஆங்கில தமிழ் அகராதி முயற்சியை முன்னெடுக்க வண.மைரன் உவின்சிலோ தலைமையில் அகராதி ஆக்கக் குழுவொன்றினை உருவாக்கினார். வண.மைரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவென்சிலோ, கறோல் விசுவநாதபிள்ளை, நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை ஆகியோரின் உதவியுடன் சொற்களைத் தொகுக்கும் பணியில் ஈடுபட்டார். 1855ல் மைரன் உவென்சிலோ விடுதலையிலே அமெரிக்கா சென்ற போது அவருக்குப் பதிலாகப் பீற்றர் பேர்சிவல் அகராதிப்பணியைக் கவனித்தார். உவென்சிலோ நாடு திரும்பியதும் துரிதகதியில் அகராதி வேலைகள் நடைபெற்றன. 1862ம் ஆண்டு செம்மையான முறையிலே தமிழ்-ஆங்கிலப் பேரகராதி வெளிவந்தது. 67452 சொற்களையுடைய இவ்வகராதி 976 பக்கங்களைக் கொண்டது. இவ்வகராதியே பிற்காலத்தில் எழுந்த மதராஸ் லெக்ஷிக்கனுக்கு வழிகாட்டியாக அமைந்ததென்று அறிஞர்கள் கூறுவர்.

நிறுவனவழி வந்த முயற்சிகளினாலே 19ம் நூற்றாண்டு யாழ்ப்பாணம் பல நன்மைகளைப் பெற்றது. அதிலே அகராதிக்கலையில் நம்மவர்கள் ஈடுபட்டுழைத்தமையும் ஒன்றாகும். மிஷனரிமாரின் அனுசரணையுடன் தொடங்கிய அகராதிப்பணி பின்னர் தனியாள் முயற்சியாக இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதிவரை யாழ்ப்பாணத்திலே நடைபெற்றது.

உவைமன் கதிரவேற்பிள்ளை, சுன்னாகம் அ.குமாரசுவாமிப்புலவர், நாவலர்கோட்டம் முத்துத்தம்பிப்பிள்ளை, பருத்தித்துறை சுப்பிரமணிய சாஸ்திரிகள், நா.சி.கந்தையாப்பிள்ளை முதலானோர் அகராதி முயற்சிகளிலீடுபட்டுழைத்த ஈழநாட்டுத் தமிழறிஞர்கள் என்ற பெருமைக்குரியவர்கள்.

உவைமன் கதிரவேற்பிள்ளை ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் சிறந்த புலமையும் தேர்ச்சியும் உடையவர். வட்டுக்கோட்டை மிஷனரிகளோடு அத்தியந்த உறவை வைத்திருந்தவர். அத்துடன் மரபுவழி தமிழறிஞர்களுடன் நெருக்கமான உறவைப் பேணியவர். உவைமன் கதிரவேற்பிள்ளையின் அகராதிப் பணிக்கு யாழ்ப்பாணத்து மரபுவழி தமிழறிஞர்கள் பலர் உதவியுள்ளனர். சுன்னாகம் அ.குமாரசுவாமிப்புலவர் கதிரவேற்பிள்ளையின் அகராதி முயற்சிகளுக்குப் பெரிதும் உதவியுள்ளார். இதனைக் குமாரசுவாமிப்புலவரே பலவிடங்களிலும் குறிப்பிட்டுள்ளார். உவைமன் கதிரவேற்பிள்ளை அரச உயர் பதவிகளை வகித்தார். ஊர்காவற்துறை நீதிபதியாகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர் நல்லூரிலிருந்து (இவர் வாழ்ந்த வீதி இன்றும் உவைமன் றோட் என்று வழங்குகின்றது) அகராதி முயற்சியிலே தீவிரமாக ஈடுபட்டார். செம்மையாகவும் சிறப்பாகவும் அகராதி வெளிவர வேண்டும். என்பதிலே கண்ணும்கருத்துமாகவிருந்த உவைமன் கதிரவேற்பிள்ளை அகராதி அச்சிடுவதற்குத் தயாரான நிலையிலே இருக்கும்பொழுது அமரானார். சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர் உள்ளிட்ட அக்காலத்து தமிழறிஞர்கள் பலர் இவரைப் பாராட்டி புகழ்ந்துள்ளனர்.

ஸ்ரீகதிரவேற்பிள்ளையவர்கள் எழுதிய அகராதி மதுரைத் தமிழ்ச்சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டு மூன்று பாகங்களாக வெளிவந்தது. முதலாவது பாகம் 17,600 சொற்களையும் இரண்டாவது பாகம் 18,100 சொற்களையும் மூன்றாவது பாகம் 28,200 சொற்களையும் கொண்டது.

உவைமன் கதிரவேற்பிள்ளையின் தமிழ்ச்சொல் அகராதியை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1998ம் ஆண்டு மீளபதிப்புச் செய்தமை குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்து அறிஞர்கள் தமிழுக்குப் புதுவதாக அறிமுகமான அகராதிக் கலையிலே அதிக ஆர்வத்துடன் ஈடுபட்டனர். கல்வி பரவலாகியமையும் அகராதியின் பயன்பாட்டின் அதிகரிப்பக்குக் காரணமெனலாம்.

பல்பரிமாண ஆளுமை கொண்ட நாவலர் கோட்டம் ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை அபிதானகோசம் என்னும் அகராதியை ஆக்கினார். ஒருவகையிலே கலைக் களஞ்சியத்தின் தன்மையைக் கொண்டதாக அபிதானகோசம் அமைந்தது எனலாம். அபிதானகோசத்துடன் ஆங்கில-தமிழ் அகராதியொன்றினையும் இவர் ஆக்கியுள்ளார். 1908ம் ஆண்டு இவரது ஆங்கில-தமிழ் அகராதி வெளிவந்தது.

யாழ்ப்பாணத்தில் எழுந்த தமிழ் அகராதிகளிலே சுன்னாகம் அ.குமாரசுவாமிப்புலவர் எழுதிய இலக்கிய சொல்லகராதி சற்று வித்தியாசமானது. பழந்தமிழ் இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள பெயர்சொற்களுக்குப் பொருள் கூறும் இச் சொல்லகராதிக்கு மாணாக்கர் மத்தியிலே நல்ல வரவேற்பு இருந்ததாக அறிய முடிகின்றது. உவைமன் கதிரவேற்பிள்ளையின் தமிழகராதிப்பணிக்கு உதவியமை சுன்னாகம் அ.குமாரசுவாமிப்புலவருக்கு நல்ல பயிற்சியையும் அனுபவத்தையும் கொடுத்திருக்கும் என நம்பலாம். மரபுவழித் தமிழறிஞரான குமாரசுவாமிப்புலவர் நவீன கல்வி மரபினூடு முகிழ்த்த அகராதிக்கலையிலே ஈடுபட்டமை குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்தது. அ.குமாரசுவாமிப்புலவரின் இலக்கியச் சொல்லகராதி 1944ம் ஆண்டு வெளிவந்தது. ஈழத்தவர்களின் அகராதி முயற்சிகளிலே மேலைப்புலோலி நா.கதிரவேற்பிள்ளையின் தமிழகராதிக்கும் குறிப்பிடத்தக்கதோர் முக்கியத்துவம் உண்டு.

பருத்தித்துறை தும்பளையைச் சேர்ந்த சோதிடகணித சித்தாந்தியாகிய சுப்பிரமணிய சாஸ்திரிகள் எழுதிய சொற்பொருள் விளக்கம் என்னும் அகராதி மாணக்கரின் கல்வித்தேவையையும் மனங்கொண்டு எழுதப்பட்டது. மரபுவழித்தமிழறிஞரான சுப்பிரமணிய சாஸ்திரிகள் கந்தபுராணத்திற்கு உரையெழுதியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நா.சி.கந்தையாப்பிள்ளையின் தமிழ் இலக்கிய அகராதி 1952ம் ஆண்டு சென்னையிலே அச்சாகியது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கந்தையாப்பிள்ளை தமிழ்நாட்டையே வாழ்விடமாகக் கொண்டு தமிழ்ப்பணியாற்றியவர். இவரது தமிழ் இலக்கிய அகராதி இன்றும் ஆய்வாளர்களுக்குப் பயன்படக் கூடியது. இந்த அகராதியிலே இன்று கிடைக்காத பல நூல்களின் விபரங்கள் அடங்கியுள்ளன. பின்வந்த இலக்கியச் சொல்லடைவுகள் பலவற்றிற்கு இத் தமிழ் இலக்கிய அகராதி வழிகாட்டியாக அமைந்தது எனக் கூறலாம்.

தமிழகராதி வரலாற்றிலே புதுமை படைத்தவராக நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரைக் குறிப்பிடலாம். தமிழ் சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி இவரது ஆராய்ச்சித் திறனை அகில உலகுக்கும் தெரியப்படுத்தியது எனலாம். 1938ம் ஆண்டுக்கும் 1946ம் ஆண்டுக்கும் இடையே ஒப்பியல் அகராதியின் ஆறு பாகங்கள் வெளிவந்தன. மொழியியல் நன்கு வளர்ச்சியடையாத காலத்திலே சுவாமிகளின் அகராதி மொழியியலுடன் தொடர்புடையதாக இணைந்தமை பிரதான அம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகராதி பற்றி பல்வேறு சர்ச்சைகள் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. குறிப்பாக வெளிவந்த பதிப்புக்கள், பதிப்பித்த ஆண்டுகள், பதிப்பிலே பங்குபற்றியோர், இடம்பெற்ற சொற்கள் இவ்வாறாகப் பல பிரச்சினைகள் உள்ளன. இவை பற்றி ஆராய்வதும் ஒரு வகையில் ஆரோக்கியமானதே. ஆனால் அக்காலகட்டத்தையும், சூழலையும், வசதிகளையும் மனங்கொண்டு நோக்கும் போது அகராதி முயற்சிகளிலே ஈடுபட்ட அனைவரும் பாராட்டிற்குரியவர்களே. இன்றைய நவீன வசதிகள் இல்லாத காலத்திலே புதிய சிந்தனைப் போக்கிற்கு ஈடுகொடுத்து அகராதி ஆக்கியவர்களை நாம் நன்றியுடன் நினைவு கூற வேண்டும்.

அகராதி பற்றிய ஆய்வுகள் இன்றைய ஆய்வு முறையியலுக்கு ஏற்ப ஆய்வு செய்யப்பட வேண்டும். அகராதி பற்றிய ஆய்வுகள் ஈழத்திலே மிக அருந்தலாகவே காணப்படுகின்றன. அகராதிகள் பற்றித் தனி நூலொன்று ஈழநாட்டிலே வெளிவந்ததாகத் தெரியவில்லை. காலத்திற்கு காலம் ஈழத்து இலக்கியம் பற்றி எழுதியவர்கள் ஆங்காங்கே அகராதி முயற்சிகள் பற்றிக் குறிப்பிட்டுச் சென்றுள்ளனர். நாமறிந்த வரையிலே பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை, பேராயர்.எஸ்.ஜெபநேசன், ஞா.பாலச்சந்திரன், விருபாகுமரேசன் முதலியோர் ஈழத்து அகராதிகள் பற்றிக் கட்டுரைகள் எழுதியுள்ளனர்.



சிந்திக்கத் தெரிந்தவனுக்கு
ஆலோசனை தேவையில்லை,
துன்பங்களை சந்திக்கத்
தெரிந்தவனுக்கு வாழ்க்கையில்
தோல்வியே இல்லை
- அப்துல் கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிடத்தின் மேன்மை

- திரு. கி. சின்னராசா-
ஓய்வு நிலை
பிரதிக்கல்விப்பணிப்பாளர் கிளிநொச்சி

மானிடத்துவத்தின் சீர்மைக்காக காலம் காலமாக சித்தர்கள், ஞானிகள், அறிஞர்கள், சான்றோர்களால் உதிர்க்கப்பட்ட பல சிந்தனைகள் இன்று வரை உயிர்த்துவமுடையவையாக உள்ளன. அவற்றுள் சிலவற்றையேனும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். என்ற நோக்கில் இக்கட்டுரை ஆக்கப்பட்டுள்ளது.

எம்மை எல்லாம் வியப்பில் ஆழ்த்தும் வாக்கியத்தை தந்த அன்னியரான **"கால்ட் வெல்ட்"** தமிழ் மொழியைப் பற்றி பின்வருமாறு கூறுகிறார்.

**"தமிழ் சமஸ்கிருதத்தில் இருந்து பிறந்த மொழியல்ல அது திராவிடக் குடும்பத்தின் மூத்தமொழி இன்னும் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் பிற மொழிகளின் உதவி இல்லாமல் தனித்து இயங்கக்கூடிய செம்மொழி"**

மணிப்பிரவாளமே மேன்மைப்படுத்தும் என்ற நம்மவர்களுக்கு இது ஒரு சிறந்த சாட்டையடியாக சிந்திக்கத் தோன்றுகிறது. சில சொற்களுக்கு தமிழே தெரியாமல் வாழ்ந்து விட்ட பலரும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற பலரும் உதாரணபுருசர்களாவர். உதாரணமாக

1. உருத்திராட்சம் என்பதன் தமிழ் வடிவம் **"அக்கம்"**
2. துர்க்கை என்பதன் தமிழ் வடிவம் **"கொற்றவை"**

சொந்த தமிழ்ச் சொல்லே தெரியாத தமிழர்களாக வாழவேண்டியுள்ளது. உலகத்திலே மிகச்சிறந்த தலைவர்கள் பற்றிய கருத்துக்கணிப்பிலே 17வது தடவையாகவும் தேர்வு செய்யப்பட்டவர் அமரர் ஆபிரகாம்லிங்கன் இவர் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்து ஜனநாயகம் நீதி, நேர்மை, சமநிலைப்போக்கு, ஆகியவற்றிற்காகக் குரல் கொடுத்தவர். அவர் தனது மகனுக்கு எதைக் கற்பிக்க வேண்டும் எதைக் கற்க வேண்டும் என்பது தொடர்பாக மகனின் பாடசாலைத் தலைமை ஆசிரியருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டவற்றை அறியலாம்.

**"அனைத்து மக்களும் நீதி, உண்மை சார்ந்தவர்கள் அல்ல என்று கற்க வேண்டும். ஆனால் பயந்த சுபாவமுள்ள அனைவருக்குள்ளும் வீரன் ஒருவன் உள்ளான் என்று கற்றுக் கொடுங்கள் அனைத்து சுயநல அரசியல் வாதிக்குள்ளும் தலைமைத்துவமுள்ள தலைவர் உள்ளார். என்றும் ஒவ்வொரு எதிரிக்குள்ளும் தோழமை உணர்வு உள்ளது என்றும் கற்பியுங்கள்"**

இதற்கு நீண்டகாலம் எடுக்கலாம் ஆயினும் உழைப்பின்றி கிடைக்கும் ஐந்து டொலர்களை விட தம் உழைப்பின் வியர்வையில் கிடைக்கும் ஒரு டொலர் பெறுமதியானது பெருமைக்குரியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப் புகட்டுங்கள் வெற்றி மகிழ்ச்சிகரமானது எனக் கூறுவதோடு தோல்வியை எவ்வாறு அனுபவிப்பது என்றும் கற்றுக் கொடுங்கள் பொறாமையினின்று அவனை விடுவியுங்கள் முடிந்தால் அமைதியாகச் சிரிப்பது எவ்வாறு என்றும் சொல்லிக்கொடுங்கள் புத்தகங்களின் பெறுமதி எத்தகையது என்பதை அவனுக்கு உணர்த்துங்கள் இவையெல்லாம் போதிக்கும் அதே நேரம் ஆகாயத்தில் பறந்து திரியும் குருவிகள் சூரிய ஒளியில் தேனைத்தேடும் வண்டுகள் மலைகளில் பூத்துக் குலுங்கும் மலர்கள் ஆகியவற்றின் நீண்டகால நிலையான உண்மையின் இரகசியத்தை சிந்திக்கக் கற்றுக் கொடுங்கள்.

குறுக்கு வழியிலும் பார்க்க பரீட்சையில் தோல்வியடைவது சிறந்தது என்று கற்றுக் கொடுங்கள் எல்லோரும் பிழை என்று கூறினாலும் தமது கருத்தில் சிந்தனையில் நம்பிக்கை வைக்கும் படி தூண்டுங்கள் அன்புள்ளம் கொண்டவர்களோடு அன்போடும் கடின உள்ளம் கொண்டோரோடு கடினமாக நடந்து கொள்வது எவ்வாறு என்றும் அவன் கற்றுக்கொள்ள வேண்டும்.

அனைவரும் செய்வதைப் போன்று செய்யாமல் அனைவருக்கும் செவிமடுப்பது எவ்வாறென்றும் மகனுக்குச் சொல்லிக்கொடுங்கள். ஆனாலும் தான் கேட்டவற்றில் உண்மையானதை மட்டும் ஏற்றுக்கொள்ளப் பழக்கப்படுத்துங்கள் அவ்வாறே துன்பம் ஏற்படும் போதும் சிரிப்பது எவ்வாறென்று கற்பியுங்கள் அழுவது, கண்ணீர் விடுவது வெட்கத்திற்குரிய ஒன்றல்ல என்றும் புகட்டுங்கள்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் பணத்திற்காக உள்ளத்தையும் ஆன்மாவையும் விற்க வேண்டாம் என கட்டாயமாகச் சொல்லிக் கொடுங்கள். பாய்ந்து வரும் மக்கள் கூட்டத்தைக் கண்டு பயந்து விடாமல் நேருக்கு நேர் நின்று சண்டை பிடிப்பது எவ்வாறு என்று சொல்லிக் கொடுங்கள். இவனைக் கருணையோடும், அன்போடும் கவனித்துக் கொள்ளுங்கள். ஆனாலும் செல்லப்பிள்ளையாக்காதீர்கள். ஏனெனில் சுடச் சுடத்தான் பொன் மிளிரும் வாழ்வை எதிர்நோக்க அவனுக்கு தைரியம் உண்டாகட்டும் கோழையாக இல்லாமல் இருக்க பொறுமையைப் பழக்கப்படுத்திக் கொள்வதையும் உணர்வில் ஊட்டுங்கள் தன்னைப்பற்றி பாரிய நம்பிக்கை ஏற்படுத்திக் கொள்கின்ற போது மனித இனத்தைப் பற்றியும் அவன் நம்பிக்கை ஏற்படுத்திக் கொள்வான். இது பெரியதோர் பொறுப்பாகும் ஆயினும் உங்களால் இயன்றதைச் செய்யுங்கள். அவன் இன்னும் சிறிய செல்லப் பிள்ளையாக இருக்கின்றான்.

மேலே கூறப்பட்ட கடிதத்தின் மூலம் பாடசாலைகளினதும், ஆசிரியத்துவத்தினதும் மகத்தான பணியினை எம்மால் உணர முடிகிறது.

உலக வரலாற்றிலே பல சான்றோர்கள் தோன்றி மறைந்துள்ளனர். உயிரோடிருக்கும் போது அக்கால அரசியல் மற்றும் தனிப்பட்ட சமூகச் சூழல்களால் புறக்கணிக்கப்பட்டவர்கள் பல ஆண்டுகட்குப் பின் இறை அருளாளர்களாகவும், தத்துவஞானிகளாகவும், அறிஞர்களாகவும், விஞ்ஞானக் கண்டுபிடிப்பாளர்களாகவும் போற்றப்படுகின்றமையைக் கண்கூடாகக் காண முடிகின்றது. இந்த வகையில் கிரேக்க தத்துவஞானியைப் பற்றிய குறிப்பு ஒன்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"எதென்ஸ் நகர நீதிமன்றம் புகழ் பூத்த தத்தவ ஞானியான சோக்கிரட்டிசுக்கு மரண தண்டனை வழங்கியது அவருடைய சீடர்கள் அவரைச் சிறையில் சந்தித்து "நீங்கள் தப்பி ஓடி விடுங்கள்!"** என்று கேட்டுக் கொண்டனர். அதற்கு சோக்கிரட்டிஸ் சொன்ன பதில் "நாட்டின் சட்டங்களை மதித்து செயற்பட வேண்டும் என்பதில் நான் முழு நம்பிக்கை கொண்டவன் அவ்வாறு செயற்படுபவன் தான் ஒரு நாட்டின் நல்ல குடிமகனாக இருக்க முடியும்.

எதென்ஸ் நாடு பின்பற்றி வரும் சட்டங்களினடிப்படையில் எனக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. ஒரு நல்ல குடிமகன் என்ற முறையில் நான் இறக்க வேண்டும். என்று தன் சீடர்களிடம் கூறி சோக்கிரட்டிஸ் சிறையிலிருந்து தப்பி ஓட மறுத்து விட்டார். பின்பு அவர் விஷம் அருந்தி சாவைத் தழுவினார்.

இங்கே சோக்கிரட்டிஸின் நாட்டுப்பற்றும் நேர்மையும் எடுத்துக்காட்டப்படுகிறது. இன்றைய இளைஞர்களின் குழப்பங்களுக்கெல்லாம் காரணம் தந்தையரின் வளர்ப்பின் மகிமை என்பதைக் கதை மூலம் சுட்டிக்காட்டுகிறார் பிளேட்டோ.

பிளேட்டோ வீதியால் சென்று கொண்டிருக்கும் போது குழந்தை ஒன்று குறும்புத்தனம் செய்கின்றது. அங்கே அவர் குழந்தையைத் திருத்த முயற்சிக்கவில்லை தந்தை யார் என்று விசாரித்தறிந்து அவரைத் திருத்த முயற்சிக்கிறார். அங்கே அது பற்றி விசாரிப்பதற்கு பிளேட்டோ கூறியது. "குழந்தையை நல்ல முறையில் வளர்ப்பதற்கு பெற்றோரே காரணமாகின்றனர். பெற்றோரைப் பார்த்தே குழந்தைகள் கற்றுக் கொள்கின்றனர். பெற்றோரிடம் நல்ல பழக்கவழக்கங்களும் நல்ல பண்பாடும் அமையாமல் குழந்தைகளிடம் மட்டும் அவற்றை எதிர்பார்ப்பது வீண்விரயத்தனமாகும் என்றார்.

இங்கே தந்தையரின் விந்தைகள் எவ்வாறு இருக்க வேண்டும் என பிளேட்டோவின் சாண்றாண்மை வலியுறுத்துகிறது.

**"மனம் போல வாழ்வு"** இது ஒரு முதுமொழி. முதுமொழிகள் வாழ்வின் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒவ்வொன்று முதன்மை பெற்று புதுப் பொருள் தந்து வழிகாட்டுகின்றன. அந்த வகையில் சுவாமி விபுலானந்த அடிகள் கூறுவது பேரதிசயத்தை ஊட்டுவதாக உள்ளது. **"மனம் போல் வாழ்வு"** என்பது முதுமொழிகளாய் நின்று பல உண்மைகளை விளக்குகிறது. மனத்தைப் பொறுத்து வாழ்வு அமைவதாகவும் மனச்சாட்சி வழி நடந்து கொள்ள வேண்டும் என்றும் ஒருவனின் போக்கு ஒருவனின் வாழ்க்கையை ஆக்குவதாகவும் அமைவதாக கூறப்பட்டுள்ளது. இது போன்று இன்னும் பல விடயங்களை பொருளுக்கேற்ப பயன்படுத்திக் கொள்ளலாம். என விபுலானந்த அடிகள் புட்டுக் காட்டுவதை அவதானிக்க முடிகிறது.

காலச் சூழ்நிலைக்கேற்ப மேன்மையான மனித வாழ்வை வேண்டி முன் வாழ்ந்த சான்றோர்களிற் சில விடயங்கள் இங்கு புகுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான எல்லாக் கருத்துக்களும் கூற்றுக்களும் மானிடத்துக்காக வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொருவரும் வாசிக்கும் அறிவு சார் நூல்களில் இருந்து இவற்றைப் பெற்று மானிடகுலத்தின் மேன்மையினைக் காப்பாற்ற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவுகுறித்த ஆற்றுப்படுத்தலும் ஆலோசனை வழிகாட்டலும்

-மருத்துவர் எம். அரவிந்தன்-
நீரிழிவு அகஞ்சுரக்கும் தொகுதி சிறப்பு வைத்தியர்
யாழ் போதனா வைத்தியசாலை

பன்னாட்டு ரீதியில் நீரிழிவு போன்ற தொற்றா நோய்கள் பல்கிப்பெருகி வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது. இலங்கை போன்ற வளர்முகநாடுகளிலும் சிறிது சிறிதாக தாக்கம் அதிகரித்துச் செல்கின்றது. மிக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின்படி கொழும்பு நகரப்பகுதியில் ஏற்குறைய 23 சதவீதத்தின் நீரிழிவு அல்லது நீரிழிவுக்கு முந்தைய நிலையால் பாதிக்கப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

இனங்களை ஒப்பிடுகையில் இலங்கைத் தமிழரிடையே நீரிழிவு ஏற்படும் சதவீதம் அதிகரித்துச் செல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது.

## சீனி மற்றும் மாச்சத்துப் பொருள்களின் பாவனை

தமிழ் மக்களிடையே சீனி மற்றும் மாச்சத்துப் பாவனையானது அதிகமாக இருப்பது இதற்கான காரணமாகும். இதே போல அதிகரித்து வரும் மேற்குலத்தின் துரித உணவுகளின் பயன்பாடும் இதற்கு முக்கிய காரணமாகும். உடற்பயிற்சியற்ற வாழ்க்கைமுறையும் கூட இதற்கு ஏதுவாக அமைகின்றது.

இவ்வாறான தவறான உணவுப்பழக்கங்களால் நீரிழிவு ஏற்படும்போது பல்வேறுபட்ட நீண்ட காலப்பிரச்சினைகள் ஏற்படலாம். கண்குருடாதல், சிறுநீரகச்செயலிழப்பு, நரம்புகளில் ஏற்படும் தாக்கம், மாரடைப்பு மற்றும் பாரிசவாதம் போன்றவை இதற்கு உதாரணங்களாகும்.

## மென்பானங்கள் என்றும் உடல் நலங்கேடுதருபவை

எமது மக்களிடையே தாகம் ஏற்படும் போது அருந்தும் பானமாக சோடா எனப்படுகின்ற மென்பானங்கள் அமைந்திருப்பது மிகவும் துர்ப்பாக்கியமான விடயமாகும். நேநீர் மற்றும் பழச்சாறு என்பவற்றுக்கு நேரடியான முறையிலும் பல்வேறுபட்ட மறைமுகமான வழிகளிலும் நாம் சீனியைப்பயன்படுத்தி வருகின்றோம்.

மென்பானங்கள், ஐஸ்கிறீம் மற்றும் இனிப்பூட்டிய பிஸ்கற், சொக்லேட் என்பவற்றில் மிகவும் அதிகமான அளவில் சீனிச்சத்து இருக்கின்றது. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின்படி ஒரு வருடத்தில் இலங்கையர் ஒருவர் உள்ளெடுக்கும் சீனியின் அளவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறக்குறைய 30 கிலோகிராம் என தெரியவந்திதுள்ளது. எமது விழாக்கள் மற்றும் சடங்குகளில் சீனி மற்றும் மாச்சத்துள்ள உணவுப்பண்டங்களின் அளவு மிக அதிகமாக இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

அதிகரித்துவரும் ஐஸ்கிறீம் மற்றும் குளிர்பான நிலையங்களும் இவ்வாறன சீனிப்பாவனை அதிகரித்துச் செல்வதற்குக் காரணமாகும்.

## நிறக்குறியீடு

சுகாதார அமைச்சானது மிக அண்மையில் குளிர்பானங்களுக்கு வர்ணக்குறியீட்டை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி பச்சை மிகக்குறைந்த சீனியளவு மஞ்சள் (இடைப்பட்ட அளவு) சிவப்பு (மிக அதிகளவு) ஆகிய நிறக்குறியீடுகளை பானங்களில் பார்க்க முடிகிறது.

## தீர்வுகள்

- சிறுவர்களுக்கு ஆரம்பகாலத்திலிருந்தே அதிகரித்த சீனி மற்றும் மாச்சத்துப்பாவனையால் ஏற்படும் தீமைகளை எடுத்துரைத்தல் அவசியமாகும். இவ்வாறன பாவனையில் நீண்ட கால அடிப்படையில் ஏற்படும் நீரிழிவுபோன்ற தொற்றா நோய்களின் தாக்கம் குறித்து அவர்களுக்கு எடுத்துரைப்பது அவசியமாகும்.

- பொதுமக்கள் மத்தியில் அதிகரித்த சீனி மற்றும் மாச்சத்துப்பாவனையினால் ஏற்படும் பிரச்சினைகள் பற்றி விரிவாக எடுத்துக்கூறுவது இன்றியமையாததாகும். இதற்குப்பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி மற்றும் இணையம் போன்றவற்றை நாம் பயன்படுத்திக் கொள்ளமுடியும்.

- பாடசாலை உணவகங்களில் அதிகரித்த சீனி மற்றும் மாச்சத்துள்ள உணவுகளையும் துரித உணவுகளையும் தடைசெய்து ஆரோக்கிய உணவுகளை அறிமுகப்படுத்த வேண்டும். தாகம் ஏற்படும் போது சோடா போன்ற மென்பானங்களை அருந்துவதைத்தவிர்த்து சீனி சேர்க்கப்படாத இயற்கையான பழச்சாறு செவ்விளநீர் அல்லது நீரை அருந்தப்பழக வேண்டும்.

- பொதுச் சுகாதாரப்பிரிவினர் சுகாதார அமைச்சின் ஆலோசனைப்படி குளிர்பான மற்றும் ஐஸ்கிறீம் தயாரிப்பு நிலையங்களில் சீனிப்பாவனை அளவினைக் கண்காணித்து தேவையான நடைமுறைக்களைக் கடைப்பிடித்தல், சீனிப்பயன்பாட்டைக் குறைத்தல் அவசியமாகும்.

- நாம் உறவினர் மற்றும் நண்பர்களின் வீட்டுக்குச் செல்லும் போது சொக்லட் பிஸ்கற் மற்றும் ஐஸ்கிறீம் போன்றவற்றைக் கொண்டு செல்லாது பழங்கள் போன்ற ஆரோக்கியமான உணவுப்பொருள்களை அவர்களுக்குக் கொடுக்கப்பழக்கிக்கொள்ள வேண்டும். எமது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவினர்களுக்கோ நண்பர்களுக்கோ சீனி மற்றும் மாச்சத்து அதிகமான தின்பண்டங்களை வழங்குவதன் மூலம் அவர்களை நாம் ஆரோக்கியமற்ற நோயாளராக மாற்றாது இருத்தல் அவசியமாகும்.

- எந்தவொரு அலுவலகக் கூட்டமாக இருந்தாலும், விழாக்களாக இருந்தாலும் சீனியை வேறாக வைத்திருத்தல் அவசியமாகும். இவ்வாறு வைத்திருக்கும் போது தேவைப்பட்டவர் தமக்குத் தேவையான அளவில் அதனைச் சேர்த்துக்கொள்ளமுடியும்.

- இறுதியாக நாம் அனைவரும் அதிகரித்த சீனி மற்றும் மாச்சத்துப்பாவனையால் நீண்டகால அடிப்படையில் ஏற்படுகின்ற பாரதூரபின்விளைவுகளையும் தொற்றா நோய்களையும் கருத்திற்கொண்டு அவைபற்றிப்புரிந்து கொள்ள முன்வரவேண்டும்.



நற்சிந்தனையோடு ஆரோக்கியம் பற்றிச் சிந்திக்கவேண்டும் இதுவே காலத்தின் கட்டளையாகும்.

**"நாளைய மாற்றத்துக்காக இன்றே சிந்தித்து செயலாற்றுவோம்"**

◈

◈ ◈ ◈

◈





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலையின் வளர்ச்சிப் பாதை பற்றிய எனது கருத்து

-சி.க.தண்டாயுதபாணி-
ஓய்வு நிலை கிராம அலுவலர்
அகில இலங்கை சமாதான நீதவான்.

அனைவருக்கும் எனது அன்பான வைரவிழா வாழ்த்துக்களும், வணக்கங்களும் உரித்தாகட்டும். சி.க.தண்டாயுதபாணி ஆகிய நான் கரைச்சி கிழக்குப் பிரதேசத்தில் உள்ள வட்டக்ச்சி, இராமநாதபுரம், மாயவனூர், மாவடி அம்மன் ஆகிய பிரிவுகளில் கிராம அலுவலராக கடமை புரிந்து 30 ஆண்டு சேவையை நிறைவு செய்து தற்பொழுது ஓய்வு நிலை கிராம அலுவலராக உள்ளேன். இப்பகுதி மக்களின் தேவையை உடனடியாகவும் மக்கள் அலைந்து திரியாமலும் இருக்கும் நோக்கில் இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தின் முன்னால் உள்ள அரச கட்டிடத்தில் கரைச்சி பிரதேச செயலரின் உப அலுவலகம் ஒன்று திறக்கப்பட்டது. அதன் பொறுப்பலுவலராக திருமதி.சி.நித்தியானந்தன் பதவி வகித்தார். அதன் பின் திரு.சி.இராமமூர்த்தி என்பவர் பதவி வகித்தார். இதன் பின் காலம் சென்ற அரசாங்க அதிபர் திரு.தி.இராசநாயகம் அவர்களின் சிபார்சில் நான் இவ் அலுவலகத்தின் பொறுப்பலுவலராகவும் அதேவேளை மாவடி அம்மன் பிரிவின் கிராம அலுவலராகவும் கடமைபுரிந்தேன். இக்காலப்பகுதியில் கரைச்சி கிழக்குப் பகுதியில் உள்ள பாடசாலைகளின் தேவைகள் என்னால் செய்து முடிக்க கூடியதாக இருந்தது. இதில் முக்கியமான பாடசாலையாக இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அடங்கும். வட்டக்கச்சி குடியேற்றத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலேயே இப் பாடசாலையும் ஆரம்பிக்கப்பட்டது. வட்டக்கச்சி குடியேற்றத்திட்டத்தின் போது இப்பாடசாலையை அண்டிய பகுதியில் 32 முஸ்லீம் குடும்பங்களும் குடியேற்றப்பட்டன. இப்பாடசாலையை அண்டிக் குடியேற்றப்பட்ட தமிழ், முஸ்லீம் குடும்பங்களில் உள்ள பிள்ளைகள் அனைவரும் எவ்வித வேறுபாடுகளுமின்றி கல்வி கற்று வந்தார்கள். காத்தல் கடவுள் கண்ணன் ஆலயமும், வீரத்தின் தெய்வமாம் மாவடி அம்மன் ஆலயமும் மற்றும் ஐயப்பன் ஆலயமும் புடைசூழ அமைந்துள்ள இப் பாடசாலை வைரவிழா காணுகின்றது. என்பதை நினைத்து பெருமையடைகின்றேன்.

இப் பாடசாலைக்கு தெற்குப் பக்கமாக ஜொனிபுரம் என்ற ஓர் சிறிய கிராமம் இருந்தது. இக்கிராமத்தை ஊடறுத்து புழுதியாறு என்ற ஆறு ஓடிக் கொண்டிருக்கின்றது. மாரி காலமாகிய கார்த்திகை, மார்கழி மாதங்களில் இவ் ஆறு பெருக்கெடுக்கும் இதன் காரணமாக அங்குள்ள மக்கள் இப்பாடசாலையில் தஞ்சமடைவார்கள். இம்மக்கள் இப்பாடசாலையில் தங்குவதற்குபாடசாலை சமூகத்தினரும் அனுமதி வழங்கி கிராம அலுவலர்களாகிய எம்முடன் சேர்ந்து வேண்டிய உதவிகளை செய்வார்கள். 15,20 நாட்களில் ஆற்று வெள்ளம் வடிந்து ஓடியதும் இவர்கள் தமது இருப்பிடம் செல்வார்கள். வருடாவருடம் இது நடைபெறுவதால் அக் கிராமத்தில் வசித்த மக்கள் தற்பொழுது புதுக்காடு மாயவனூர் கிராமங்களில் உள்ள அரச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணிகளில் குடியேறியுள்ளனர். செல்வி.தி.வேலுப்பிள்ளை என்பவர் அதிபராக பதவியேற்ற காலத்தில் இப்பாடசாலை வளர்ச்சிப்பாதையில் செல்லத் தொடங்கியது. அவர் இப் பாடசாலையை ஓர் மகளீர் பாடசாலையாக்குவதற்கும் முயற்சி மேற்கொண்டார். ஆனால் அவரின் எண்ணம் ஈடேறும் முன் வேறு பாடசாலைக்கு மாற்றமாகிச் சென்று விட்டார். அதன் பின்னர் அதிபராக பதவியேற்ற திரு.கனகமகேந்திரா காலத்தில் இப்பாடசாலை மேலும் வளர்ச்சியடைந்தது. தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சை என்பவற்றில் பல மாணவர்கள் சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமை சேர்த்தார்கள். இப்பாடசாலையின் தெற்குப் பக்கமாகவுள்ள காணி வெறுமையாகக் கிடப்பதைக் கண்ணுற்ற அதிபர். திரு.கனகமகேந்திரா அவர்கள் பிரதி அதிபரான திருமதி. க.முத்துலிங்கம் என்பவரின் உதவியுடன் தென்னை நாற்றுக்கள் நாட்டப்பட்டன. அவை தற்பொழுது பயன்தரும் மரங்களாக உள்ளன. அதிபராக வந்த திரு. சி. திரவியம் அவர்களின் காலத்தில் பல கட்டடங்கள் கட்டப்பட்டன. தற்போதைய அதிபரின் காரியாலயத்திற்கு முன்னால் உள்ள கட்டடத்தின் அடிக்கல் என்னால் நாட்டப்பட்டது. கட்டிடம் வெகு விரைவாக கட்டி முடிக்கப்பட்டதை எண்ணிப் பெருமைப்படுகின்றேன்.

இப் பாடசாலையின் தற்போதைய அதிபரான திரு.சு.சுதாஸ்கரன் என்பவர் இளம் வயதுடையவர். நிர்வாகத்திறமையாலும் பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் மற்றும் பழைய மாணவர்கள், பாடசாலை நலன் விரும்பிகளின் உதவியுடன் கலைத்தாய் சரஸ்வதிக்கு சிலை அமைக்கப்பட்டது. திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்டது. சுற்று மதில்கள் அமைக்கப்பட்டன. அத்தோடு சிறுவர் பூங்கா, விளையாட்டு மைதானம் என்பனவும் புதுப்பொலிவு பெற்றன.

இப்பாடசாலை பழம் பெரும் பெருமைகளைப் பேணி சமூகத்திலும், மாவட்டத்திலும், தேசியத்திலும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய பாடசாலையாகவும் பல புத்திஜீவிகளையும், நல்ல மாணவர்களையும் உருவாக்கிய பாடசாலையாகவும் தலை நிமிர்ந்து நிற்கின்றது. இதற்கு காரணமாக இருக்கும் அதிபர், ஆசிரியர்கள், மாணவச் செல்வங்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் நன்றி கூறுவதுடன் இப்பாடசாலை மேலும் வளர்ச்சி அடைவதற்கு இவர்கள் அனைவரும் உறுதுணையாக இருக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

***நன்றி***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து நாகரிகத்தில் இசைக்கலை

-ஆசிரியர் - சி.சிவஞானம்-
B.A.Hons

திருக்கோயில்கள் மூலம் வளர்ந்த நுண்கலைகளுள் இசைக்கலை முக்கியம் பெறுகின்றது. இசை மனித மனங்களை இசைவுபடுத்தும் சாதனமாகவும் உள்ளது. இறைவனே இசைவடிவினன் என்பதால் அக் கடவுளை நாதப் பிரமமாக புராணங்கள் போற்றுகின்றன. இசையால் வசமாகாத இதயம் யாரிடமும் இருப்பதில்லை மனிதன் மட்டுமன்றி விலங்குகள், தாவரங்கள், இயற்கைகள் எல்லாம் இசையின் ஆற்றுகைக்கு உட்பட்டவை என்றும் விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இத்தகைய இசையானது செவிக்கு இன்பமூட்டுவதோடு ஐம்புலன்களையும் கட்டுப்படுத்தி உள்ளத்தை பண்படுத்தி பேரின்பப் பேற்றையும் தரவல்லது. இந்துப் பண்பாட்டு வரலாற்றில் இசைக் கலையானது மிக உன்னதமான கலையாக மிளிருவதற்கு பல காரணங்கள் உண்டு.

அழகியல்
ஆன்மீகம்
மனமகிழ்ச்சி
தேசிய உணர்வு

என்ற பல்வேறு நிலைகளில் இசை மனிதப் பண்பாட்டை ஆக்கிரமித்துள்ளது.

### இசைக்கலையின் தோற்றமும் வளர்ச்சியும்

இசை தோன்றிய வரலாறு மனித நாகரிகத்துடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருக்கின்றது. ஏனெனில் இசை மொழியுடன் தொடர்புபட்டுள்ளது. மனித நாகரிகத்தில் பேச்சாற்றல் இசைப் பண்பாட்டின் ஆரம்ப கட்டமாகும்.

இந்திய நாட்டிலே பெரும்பாலான கலைகள் கோவில்களுடன் இணைந்து வளர்ந்தவையாக உள்ளன. கலைகளைத் தெய்வத்துடன் தொடர்புபடுத்தி பார்ப்பது இந்திய மக்களுடைய வழமையாகும். எந்தக் கலையானாலும் அதனை ஆரம்பித்து வைத்த பெருமை கடவுளைச் சேரும் என்பார்கள்.

இசைக்கலையானது மனிதன் தோன்றிய காலந்தொட்டு இன்று வரையும் வளர்ச்சியடைந்த ஒன்றாகவே காணப்படுகின்றது. இசையினுடைய வரலாறுகளை ஆய்வு செய்த அறிஞர்கள் தொன்மையான காலம் முதல் மனித நாகரிகத்துடன் இணைந்த ஒரு செயற்பாடாக இசை இருந்து வந்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ளனர். இசைக்கலையின் தொன்மையை அறிந்து கொள்வதற்கு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியம்
தொல்பொருள்
மனித நாகரிகத்தின் மரபுகள்
பிற நாட்டவரின் குறிப்புக்கள்

முதலியன ஆதாரங்களாக உள்ளன. இசை தோன்றிய வரலாறு பற்றிய பல கர்ண பரம்பரைக் கதைகளும் உள்ளன. இசை ஆரம்ப நாகரிகங்களிலும் இருந்துள்ளது என்பதனை மொகஞ்சதாரோ ஹரப்பாவில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருள்களான புல்லாங்குழல், மத்தளம் என்பவற்றைக் கொண்டு அறிய முடிகிறது. இசைக்கருவிகளை மனித உருவங்கள் மீட்டும் படிமங்களும் சிந்துவெளிச்சுவர் ஓவியங்களில் காணப்பட்டுள்ளன.

இசைக் கலையின் தோற்றத்தினைப் பற்றி அறிவதற்கு எமக்கு கிடைத்த முதலாவது சான்று வேதமாகும். வேதங்களில் ஒன்றாகிய சாமவேதம் இந்திய இசை பற்றிய ஆரம்பங்களை அறிந்து கொள்வதற்கு உதவுகின்றது. சாமம் என்பதன் பொருள் இசை என்பதாகும். இசைக்கலையின் நுணுக்கங்களை சாமவேதம் குறிப்பிடுகின்றது. முற்றிலும் இசைப்பாடல்களால் அமைந்தது.

வேதகால இசைமரபு
உதாத்தம்
அனுதாதத்தம்
ஸ்வரிதம்

ஆகிய மூன்று நிலைகளில் காணப்பட்டது. சாமவேதப்பாடல்களை ஓதுபவர்கள் **"உட்காதா"** என்று அழைக்கப்பட்டனர். பின்னைய காலங்களில் எமது அருளாளர்கள் புண் சுமந்த மேனி கொண்டு பண் சுமந்த பாடல்களைப் பாடுவதற்கு சாமவேதம் உதவியது.

புராணங்களில் இசை கடவுளருடன் இணைத்துக் கூறப்பட்டது. இசையின் வடிவமாக கடவுளர் விளங்கினர். இசைக் கருவிகளைக் கொண்டு விளங்குவதாக கடவுளர் காணப்பட்டனர்.

சிவன் - உடுக்கு
நாரதர் - தம்புரா
சரஸ்வதி - வீணை
கண்ணன் - புல்லாங்குழல்,சங்கு

என்ற அடிப்படையில் தொடர்புகள் குறிப்பிடப்படுகின்றன. தேவ சபையில் இந்திரனுக்கு முன்னால் மேனகை, ஊர்வசி என்போர் இசைமீட்டி நடனமாடுவோராக புராணங்கள் குறிப்பிடுகின்றன.

இராமாயணத்தில் வரும் இராவணன் சாமகானம் பாடுவதில் வல்லவன் தனது 10 தலைகளில் ஒன்றினை வெட்டி எடுத்து நரம்புகளின் துணையுடன் இசைமீட்டி சிவனிடம் வரம் பெற்றதாக சிவபுராணம் குறிப்பிடுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராண இதிகாச காலங்களில் இசைக்கலை பற்றி கூறப்படும் கதைகளில் இறைவனே இசை வடிவானவன் என்ற கருத்து காணப்படுகின்றது. இறைவனை இசையினால் பாடி வழிபட்டால் வாழ்வு சிறக்கும் என்னும் கருத்தும் நிலை பெற்றது இறைவனை இசையினால் பாடி வழிபட்டால் வாழ்வு மேன்மையடையும் என சமய நூல்கள் குறிப்பிடுகின்றன.

ஆகம நூல்கள் இசையை இறைவனை வழிபடுவதற்குரிய சாதனமாக குறிப்பிடுகின்றன. ஆகம வழிபாடுகளில் தோத்திர மரபுகள் முக்கியம் பெறுகின்றன.

மந்திர உச்சாடனங்களும் செல்வாக்குப் பெற்றன. புஷ்பாஞ்சலி, நிருத்தாஞ்சலி, நாமாஞ்சலி ஆகிய அஞ்சலிகளும் இசையினால் ஆனவை. திருக்கோயில் வழிபாட்டில் இசையின் முக்கியத்துவம் கருதி அக்காலத்து அரசர்கள் கோயில்களை அமைத்த பொழுது அங்கு இசை மரபுகளைப் பேணுவதற்குரிய ஏற்பாடுகளையும் செய்வித்தனர்.

## தமிழகத்தில் இசைக்கலை

கால அடிப்படையில் இசைக் கலையினுடைய வரலாறுகளை அறிக்கையில் தமிழகத்தின் முதல் வரலாற்று காலமாகிய சங்க காலத்தில் மக்களது வாழ்க்கையுடன் இசையானது இரண்டறக் கலந்து காணப்பட்டது. இசை பற்றிய நூல்களில் பரிபாடல் குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு என்பன செல்வாக்குப் பெற்றன. இவற்றுள் பரிபாடல் முக்கிய நூலாக இடம்பெற்றது. மேலும் ஐவகை நிலங்களுக்கும் உரிய இசைப்பண்களும் செல்வாக்குப் பெற்றன. அவை முறையே

குறிஞ்சிப்பண்
முல்லைப்பண்
மருதப்பண்
நெய்தல்பண்
பாலைப்பண்

என்ற அடிப்படையில் பண்கள் அமைந்தன. சங்கமருவிய காலத்தில் தமிழ் இசை மேலும் ஒரு படி வளர்ச்சியடைந்தது. சங்க மருவிய காலத்தின் பிற்பகுதியில் வாழ்ந்த காரைக்காலம்மையார் முதல் மூவாழ்வார்கள் என்போர் புதிய இசைப்பண்புகளை உருவாக்குவதில் முன்நின்றனர். இசைப்பாடல்களால் யாப்பமைத்து இறைவனைப் பாடும் மரபை காரைக்காலம்மையார் முதலில் தொடக்கி வைத்தார். இக் காலத்தில் எழுந்த

சிலப்பதிகாரம்
மணிமேகலை

முதலிய நூல்களிலும் திருக்குறளிலும் இசையின் சிறப்புக்கள் கூறப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***"குழலினிது யாழினிது என்பர் தம் மக்கள்***
***மழலைச் சொல் கேளாதவர்"***

என்கிறது திருக்குறள். சிலப்பதிகாரம் தமிழரின் சங்கீதம் செந்நெறிச் சங்கீதமாக இருந்தததை உணர்த்துகின்றது. **"யாழும் குழலும் மிடறும் தாழ் குரல் தண்ணிமை ஆடலோடு இசைந்த பாடல் இசையாகும்"** எனச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது.

காரைக்காலம்மையாருடைய அற்புதத் திருவந்தாதி, திருவீரட்டை மணிமாலை என்பன ஆன்மாவை இறைவனுடன் இணைக்கும் சாதனங்களாக உள்ளன. இக்காலத்திலெழுந்த மூவாழ்வார் பாடல்களும் தமிழிசையில் ஒரு திருப்பு முனையாக அமைந்தன. இந்திய இசை வரலாற்றில் பல்லவர் காலம் என்பது புதிய திருப்பங்களை ஏற்படுத்திய காலமாக அமைந்தது. பல்லவர் கால சூழ்நிலை இசைக்கலை வளர்ச்சியில் மட்டுமன்றி இந்தியக்கலைகள் அனைத்திலும் ஒரு எழுச்சிக்காலமாக விளங்கியது. அக் காலச் சமயச் சூழ்நிலை மக்களிடத்தில் கடவுள் இருப்பை நிலைநாட்ட வேண்டிய தேவையை உணர்த்தியது. இக்கால இசை வளர்ச்சியில்

ஆலயங்கள்
அரசர்கள்
அருளாளர்கள்
சமய இலக்கியங்கள்

என்பன பங்கு கொண்டன. இக் காலத்தில் எழுந்த தேவாரத் திருமுறைகளும், திவ்வியப்பிரபந்தங்களும் இசையை மேன்மைப்படுத்தின. இக் காலத்து பக்தி நெறி வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்தது.

இறைவனின் விருப்பை உண்டு பண்ணிய தேவாரங்கள் கடவுள் நம்பிக்கையையும், இறைபக்தியையும் வளர்க்க உதவின. நாயன்மார்களுடைய பாடல்களில் பண்ணிசை நலிந்து காணப்பட்டது. **"பண்ணும் பதம் ஏழும்"** என திருஞானசம்பந்தரும் **"ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே"** என அப்பர் சுவாமிகளும் **"ஏழிசையாய் இசைப்பயனாய்"** என சுந்தரரும் **"பண் சுமந்த பாடல் பரிசு"** என மணிவாசகரும் இசையால் இறைவனைப் போற்றினர்.

பல்லவர் காலத்தை தொடர்ந்து சோழர் காலத்தில் இசைக்கலை மேலும் வளர்ச்சியடைந்தது. ஆலயங்களை அடிப்படையாகக் கொண்டு இசைக்கலை வளர்ச்சியடைந்தது. பஞ்ச தோத்திரங்கள் ஆலய வழிபாடுகளில் செல்வாக்குப் பெற்றன. தக்கை, தண்மை முதலிய இசைக்கருவிகள் ஆராதனைகளின் போது வாசிக்கப்பட்டன.

இசை மண்டபங்கள்
இசைக்கலைஞருக்குரிய நிலபுலங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன ஆலயத்துக்குரியனவாக விளங்கின. சோழமன்னர்கள் இசைக்கலையை ஆலயங்களில் வளர்ப்பதற்கு பல ஏற்பாடுகளைச் செய்தனர். 1ம் இராஜராஜசோழன் கோயில்களில் தேவார திருமுறைகளை ஓதும் வழக்கத்தை நடைமுறைப்படுத்தினான். தேவாரங்களை ஓதுவதற்கு சிறப்புப் பயிற்சி பெற்ற ஓதுவார்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். ஓதுவார்களை கண்காணிப்பதற்கு **"ஓதுவார் நாயகம்"** என்ற அதிகாரியும் நியமிக்கப்பட்டார். மேலும் இசைத்துறையில் வல்லவர்க்கு "வாச்சிய மாறாயன்" என்ற பட்டமும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

தமிழக இசை வரலாற்றில் நாயக்க மன்னர் காலம் அடுத்த நிலையில் செல்வாக்குப் பெறுகின்றது. இக் காலத்தில் இசைத்துறையில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. தமிழிசையில் **"கீர்த்தனை"** என்ற இசை வடிவம் புதிதாக சேர்ந்துக் கொண்டது.

நந்தனார் கீர்த்தனை
இறைபுகழ் கீர்த்தனை
இராம நாடக கீர்த்தனை

ஆகிய இசைவடிவங்கள் இக்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. பிற்கால தோத்திரப்பாடல்கள் என்ற வகையில் திருமுறைகளுக்குப் பின்னர் எழுந்த முருக பக்திப் பாடல்களும், அம்மன் பாடல்களும் இக் கால மரபில் பெரும் செல்வாக்கைப் பெற்றன. அருணகிரிநாதருடைய திருப்புக்கள் சந்தக்கவி இன்பம் நிறைந்த இசைப்பாடலாகும்.

## தற்காலத்தில் இசைக்கலை

நாயக்கர் காலத்தின் பின்னர் இந்திய இசை பல்வேறு நிலைகளில் பல மாற்றங்களை எய்தி பிற்கால நிலையைப் பெற்றது. மேலைத்தேச இசை மரபு,கீழைத்தேச இசை மரபில் அதிக ஆதிக்கம் செலுத்தியது. அதே நேரம் கர்நாடக இசை மரபில் வளர்ச்சியும் காணப்பட்டது. பிற்கால கர்நாடக இசைத்துறை வளர்ச்சியில்

முத்துத்தாண்டவர்
மாரிமுத்துப்பிள்ளை
தியாகராஜபாகவதர்
சியாமாசாஸ்த்திரி
அருணாசலக்கவிராஜர்

முதலியோர் முக்கிய பணியாற்றினர். கீர்த்தனைப் பாடல்களுடன் மெல்லிசை என்ற இசை மரபும் 19ம் நூற்றாண்டில் வளர்ச்சியடைந்தது. இக் காலத்தில் இந்திய நாட்டில் சினிமாத்துறை வளர்ச்சியும் இசைத்துறைக்கு வலுச்சேர்த்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைய காலங்களைப் போலவே ஆலய வழிபாடுகளில் இசை முக்கியம் பெற்றது. இந்நிலையில் தாளம், மிருதங்கம், நாதஸ்வரம், புல்லாங்குழல் முதலிய இசைக்கருவிகளின் செல்வாக்கும் வளர்ச்சி பெற்றது. ஆலய வழிபாடுகளை அடிப்படையாகக் கொண்டு

பஜனை
புராணபடலம்
நாமசங்கீர்த்தனம்
கதாகாலேட்சவம்

என்பனவும் இசை வளர்ச்சியில் முக்கியம் பெற்றன. ஆலயக் கலை வளர்ச்சியோடு நாட்டார் கலை வடிவங்களின் எழுச்சியும் பிற்கால இசை வளர்ச்சியில் முக்கியம் பெற்றன. குறிப்பாக கரகம், காவடி, கோலாட்டம், கும்மி, கூத்து ஆகிய நாட்டுப்புறக் கலைகளினூடாக பிற்கால இசைத்துறை தனித்துவமான வளர்ச்சியைப் பெற்றது.

தற்கால இசை வளர்ச்சியில் இந்திய நாட்டு இலங்கை நாட்டுக் கல்விக் கொள்கைகளும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. அரச முறைமைகளில் கலை பண்பாட்டிற்கென்று தனியான அமைச்சுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கல்லூரிகள்
பாடசாலைகள்
பல்கலைக்கழகங்கள்
அறநெறிப்பாடசாலைகள்
பௌத்த சமய பிரிவேனாக்கள்

ஆகியவற்றில் இசைக்கலை வளர்க்கப்படுகின்றது. இசையை மாணவர்கள் தனியாக கற்பதற்கும் கல்வி நிறுவனங்களில் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. பாடசாலைகளில் கர்நாடக சங்கீதம் அரச பாடத்திட்டத்தில் இடம்பெறுவதும் அரசாங்கம் இசை ஆசிரியர்களுக்கான நியமனங்களை வழங்குவதும் காணக்கூடியதாகும். கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் இசைத்துறையை வளர்ப்பதற்கு இசைத்துறைகள் music accadamy தனியாக அமைக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்களில் இசைத்துறையினை பட்டப்படிப்பாக மேற்கொள்ள முடிகின்றது. இசைத்துறையில் பட்டம் பெற்றவர்களுக்கு இசைமானி, கலாபூசணம், இசைவித்தகர், பத்மபூசன் முதலிய விருதுகள் பட்டங்கள் என்பன வழங்கப்படுகின்றது.

ஈழநாட்டைப் பொறுத்தவரையில் அரச சார்புடைய நிறுவனங்களைத் தவிர தனியார் இசைக்கல்லூரிகளிலும் இசைத்துறை வளர்ச்சியில் பங்காற்றி வந்துள்ளன. இலங்கை முழுவதும் இத்தகைய அமைப்புக்களின் செயற்பாடுகளைக் காணமுடிகின்றது. சங்கீத சபைகள் பாடசாலைகளைப் போன்று இசைப்பயிற்சிகளையும் பரீட்சைகளையும் வழங்கி ஊக்கமளிக்கின்றன. இவ் வகையில் வட இலங்கை சங்கீத சபையின் செயற்பாடு குறிப்பிடத்தக்கதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுபூராகவும் உள்ள எல்லாச் சமயங்களையும் சார்ந்த அறநெறிப்பாடசாலைகளும் இசைத்துறையை மேம்படுத்தி வருகின்றன. சைவ அறநெறிப் பாடசாலைகளில் பஞ்ச தோத்திரம் ஓதுதல் பண்ணிசை வகுப்புக்கள் என்பன நடாத்தப்படுகின்றன.

தென்னிந்தியாவில் இசை சினிமாக் கலையுடன் இணைந்த ஒரு செயற்பாடாக வளர்ச்சியடைந்துள்ளது. இசை அரங்குகள், இசை வேள்விகள் என்பன பிரபல்யம் பெற்றுள்ளன. இந்தியத் தொலைக்காட்சிகள் தமிழிசை வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றி வருகின்றன. சிறியவர் முதல் எல்லா வயதுப் பிரிவினரும் பங்கு பற்றும் இசைக்கச்சேரிகள் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன. ஆலயங்கள், அரச வைபவங்கள், வீட்டு நிகழ்வுகள் என்பவற்றில் இசைக்கச்சேரிகள் நடாத்தப்படுகின்றன. கர்நாடக இசைப் போட்டிகளை நடாத்தி விருதுகளை வழங்குகின்ற நிகழ்வுகளும் நடைபெறுகின்றது. குறிப்பாக

Sun singer சரிகம
unior super singer

போன்ற தொலைக்காட்சி நிகழ்வுகளைக் குறிப்பிடலாம். ஆகவே பிற்காலத் தமிழிசை வளர்ச்சியில் பண்ணிசை முக்கியம் பெறுகின்றது.

**இசைக்கலை பற்றிய பிரபல்யமான நூல்களும் அதன் ஆசிரியர்களும்**

1. சங்கீதரட்ணாகரம் - சாரங்கதேவர்
2. யாழ்நூல் - விபுலானந்தர்
3. இராகவிபோதம் - சோமநாதர்
4. சங்கீத சுதாகரம் - அரிபாலதேவர்
5. சங்கீரக சூடாமணி - கோவிந்த சாமியார்
6. தேவாரவர்த்தினி - சாரங்கதேவர்
7. நாரதர் பஞ்சாரத்திரம் - தியாகராஜர்
8. சங்கீதசுதானி - கோவிந்ததீட்சிகர்
9. சதுர்தண்டிப்பிரகாசிகை - வேங்கடசாமி
10. வர்ணமாலிகா - துரவநேதாயி
11. கிருஷ்ணலீலாதரங்கனி - நாராண தீர்த்தர்
12. மத்த விலாசம் - மகேந்திரவர்மன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்மக் கோட்பாடும் மறுபிறப்பும்

-திருமதி. திருமகள் குகதாசன்-
ஆசிரியை
யா/கொக்குவில் இந்துக்கல்லூரி

## 1.1 நன்மை தீமை

**"நன்மை கடைப்பிடி"** என்பது ஔவையார் திருவாக்காகும். நல்ல காரியங்களைச் செய்வதிலேயே மனம் உறுதி கொள்ள வேண்டும். என்பதே இதன் பொருள். அது தனக்கும் பிறருக்கும் பயன்படக்கூடிய நன்முயற்சியாகும். ஒரு தொழிலில் ஈடுபட்டு அதிக முயற்சியுடன் கடமை செய்பவனும் அதனாற் பெறும் ஊதியத்தைத் தனக்கும் பிறருக்கும் பயன்படச் செய்து பழகி வருபவனும் சமுதாயத்திற்கும் உலகிற்கும் நற்காரியங்களைச் செய்பவனாவான். சோம்பல் தீமை பயக்கும் நன்மை செய்வதிலேயே கண்ணும் கருத்துமாயிருக்கிற ஒருவர் எல்லா உயிர்களின் நன்மையையும் கருத்திற் கொண்டு செயலாற்றினால் அவன் கருணையுடைய இறைவனுக்கு ஒப்பாவான்.(1)

நல்லார் இணக்கம் நலன் பல செய்யும் என்பார்கள். இது பற்றி ஔவையார்

**"நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலன்மிக்க**
**நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே – நல்லார்**
**குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு**
**இணங்கியிருப்பதுவும் நன்று"** (2) என்றார்.

நல்ல செயல்களைச் செய்ய முற்படுபவன் தீய காரியங்களிலேயே ஈடுபடமாட்டான். பொறாமை, ஆசை, கோபம்,முதலிய தீய எண்ணங்களே ஒருவனைத் தீய செயல்களிலே ஈடுபடத் தூண்டுகிறது. தீயானது எந்தப்பொருளினிடத்து சார்ந்து நின்றாலும் அது சாம்பராய்ப் போகும் வரை எரிந்து கொண்டே நிற்கும். இதனாலேயே வள்ளுவர்.

**"தீயவை தீய பயத்தலால் தீயவை**
**தீயினும் அஞ்சப்படும்"**(3) என்றார்.

தீப்பற்றி எரியும் ஒரு பொருளை ஒருவர் அனுதாபங்கொண்டு அவ்விடம் சென்று தண்ணீர் ஊற்றி அப்பொருளை சாம்பராகாமற் தடுக்கலாம். அதே போன்று தீவினையாயினும் இறை வழிபாட்டில் ஈடுபட்டால் தன்மையுடைய இறைவனின் கருணை தீவினையாளனை முற்றாக அழிந்து போகா வண்ணம் தடுத்து நல்வழிப்படுத்தும் இறைவனுக்குப் பயன்படாது தொடர்ந்து தீவினையற்றுபவர்கள் பொறாமை காரணமாகத் தீவினைகளைத் செய்வோர் ஈற்றிலே துரியோதனனும் ஒழுக்கத்தினின்று தவறிய இராவணனும் அடைந்த அழிவை அடைய நேரிடும். **"மறந்தும் பிறன்கேடு சூழற்க"** என்ற வாக்கியத்திற்கமைய வாழுதல் அவசியமாகும். மேலும் தீயவர்களுக்கு நற்புத்தி கூறினாலும் அது தீமையையே தரும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"ஞானமும் கல்வியும் நவின்ற நூல்களும்**
**ஈனருக்குரைத் திடில் இடரதாகுமோ"**

என்ற ஆன்றோர் கூற்று சிந்தனைக்குரியது ஒரு ஊரிலே நல்லவன் ஒருவன் இருந்தாலே அவ்வூர் பெருமையடையும். இதனையே

**"நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடி**
**புல்லுக்குமாங்கே பொசியுமாந் - தொல்லுலகில்**
**நல்லாரொருவருளரேல் அவர் பொருட்டு**
**எல்லார்க்கும் பெய்யும் மழை"**(4)

என்று அறிவுடையோர் உரைப்பர்.

நன்றும் தீதும் பிறர்தரவாரா என்பது முதுமொழியாகும். நாம் ஒவ்வொருவரும் செய்யும் வினைக்கு நாமே பொறுப்புடையோம்.

**"ஈண்டுநீர் வையத்துளெல்லாருமெத் தனையும்**
**வேண்டாமற் தீய விழைபயனல்லவை**
**வேண்டினும் வேண்டாவிடினு முதற்பால**
**தீண்டா விடுதலரிது"** (5)

என்று நாலடியார் கூறுகிறது.கல்வியறிவும் முன்னைய தவமும் மற்ற மக்கள் அறியாமை காரணமாகத் தீய செயல்களில் ஈடுபடுவதைக் காணும் பெரியோர்கள் அவர்களுக்கு அறிவு புகட்டி நன்னிலைப்படுத்த வேண்டிய கடமையுடையவராவர். நூல்களைக் கற்கும் ஆற்றல் இல்லாதவர்கள் சமய விரிவுரைகளைக் கேட்டும் புராணப் படிப்பைக் கேட்டும் சமய நாடகங்களைப் பார்த்தும் பெரியோருடைய புத்திமதிகளைக் கேட்டு அறிவை வளர்க்க முடியும். ஆனால் நூல்களைக் கற்றும் உண்மை அறிவைப் பெற்றுக் கொள்ளாத மக்கள் தீய செயல்களைப் புரிகின்றனர். அவர்களுடைய கல்வி அவர்களுக்குப் பயன் அளிக்காமையைக் கண்டு அவர்களைப் பார்த்து நாம் பரிதாபப்பட வேண்டும். அவ்வித மாந்தரின் தீய செயல்களுக்கு காரணத்தைக் கூறும் போது நாலடியார்

**"அறியாருமல்ல ரறிவதறிந்தும்**
**பழியோடு பட்டவை செய்தல் - வளியோடி**
**நெய்தனறவுயிர்க்கு மீள் கடற்றண்சேர்ப்ப**
**செய்த வினையான் வரும்"** (6)

என அதாவது நூல்களை அறிந்தும் தீவினைகளைச் செய்தல் முன் செய்த வினைப்பயனாகும். என்பதே இதன் பொருள் கற்றுத் தீய செயல்களைச் செய்வோரைக் காணுமிடத்து அவர்கள் முற்பிறப்பிற் தீவினையாளர் என்பதை அறிந்து கொள்ளலாம். மக்கள் தாம் முன் செய்த வினைகள் தம்மை அணுகாவண்ணம் தீதில்லாததும் நல்லதையே தம் வசங்கொண்ட ஞான சொருபராகிய சிவபெருமானுடைய பாதங்களைச் சேரவேண்டும் இது பற்றியே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> **"பேதமற நின்றுயிருக்குயிராகி யன்பருக்கே பேரானந்தக்**
> **கோதிலமுதூற்றரும்பிக் குணம் குறியொன்றறத்**
> **தன்னைக் கொடுத்துக் காட்டும்**
> **தீதில் பராபரமான சித்தாந்தப் பேரொளியை சிந்தை செய்வோம்"** (7)

என்று தாயுமானவர் பராபரனுடைய தன்மையை விளக்குகின்றார்.

இறைவன் எம்மனத்திலிருக்கின்றான் என்பதை உணர்ந்தோ மென்றால் நாம் நல்வினை தீவினையென்ற பேதந்தருஞ் செயல்களில் ஈடுபட்டு காலத்தை அவமே கழிப்பதற்கு இடமேயில்லை தீவினை மறுகையில் துன்பத்தைத் தரும். நல்வினை இன்பத்தைத் தரும். ஆகையால் இருவகை வினைகளும் பிறவிக்கு ஏதுவாகும். நம்முள் இருக்கின்ற இறைவனைக் காண முடியுமானால் நாம் உய்யும் நிலையை அடைந்து விடுவோம். இதனைத் தாயுமானவர்

> **"நன்றெனவுந் தீதெனவு மெனக் கிங்குண்டோ**
> **நானாகி நீயிருந்த நியாயஞ் சற்றே**
> **இன்றெனக்கு வெளியானாவெல்லாம் வல்ல**
> **விறைவா நின்னடியருடனிருந்து வாழ்வேன்"** (8)

என்று கூறிவதிலிருந்து இறைவனை அடைந்து விட்டால் நன்றுதீது என்று சொல்லப்படும் உலக காரியங்களீடுபடத் தேவையில்லை என்பதை அறியலாம். ஆகவே புண்ணியமானது ஆக்கத்தை கொடுக்கும் பாவமானது அழிவை உண்டாக்கும் எனவே பாவத்தை நீக்கி புண்ணியத்தைச் செய்வோமாக.

## 1.2 கன்மத்தின் பார்வையில் பௌத்தமும் சைவசித்தாந்தமும்

இந்து மதத்தோடு தொடர்புடைய பௌத்தத்திலும் நல்வினைகள் தீவினைகள் பேசப்படுகின்றன. கன்மம் மறுபிறப்பு பற்றிய கொள்கைகளில் இந்து மதத்துடன் உடன்பட்டு செல்கின்றது.

பௌத்தமதக் கொள்கைப்படி பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வாழ்வில் நிகழ்வனவெல்லாம் கன்மத்தின் படியே நடக்கின்றன. ஆனால் எல்லா நிகழ்வுகளும் **"கம்ம"** வின் படி நடக்கின்றன. என்று சொல்ல முடியாது கம்ம என்பதை விதியெனக் கொள்வர். கம்மவின்படி அல்லது உலக நியதிப்படி தான் எந்தச் சிறு விடயமும் நிகழ்கின்றது. காரண காரியத் தொடர்பிலிருந்து தப்புவது என்பது எம்மால் முடியாததென்றாகும். நிர்வாண மோட்சத்தையும் அடையமுடியாது நட்பு, பகைமை, நொதுமை ஆகிய உணர்ச்சிகள் கூடக் கடந்த காலச் செயல்களினாலேயே நிகழ்கின்றன என்ற கொள்கையைப் பகவான் புத்தர் மறுத்துள்ளார். அவர் கடந்த காலச் செயல்களினால் மனிதர் கொலைகாரர், கள்வர், பொய்யர், வேசியர் போன்றவர்களாக பிறக்கின்றனர். முன்செயல்களில் நம்புகிறவர்கள் அவ்வாறு மனிதர்கள் செய்வதற்கு அல்லது செய்யாமல் விடுவதற்கு எவ்வித விருப்போ, செயலோ, தேவையோ இருப்பதில்லை என்று **"அங்குத்தர நிகாயவில்"** (1173) கூறியிருக்கிறார். எனவே வாழ்க்கை சாதாரண இயந்திரம் போன்று இயங்குகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள்தோறும் நடக்கும் நிகழ்வுகள், வாழ்க்கைச் சம்பவங்கள் என்பவற்றிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட காரணங்கள் அமையலாம். நோய்,விபத்து என்பவற்றை இதற்கு உதாரணமாக கொள்ளலாம். என்னும் கம்ம என்பது தான் வெளித்தாக்கங்கள் அனைத்தையும் இணைக்கின்றது. புத்த பகவானின் வாழ்க்கையில் நடந்த சம்பவம் ஒன்று கம்மவின் செயலை விளக்குகின்றது. தேவதத்த என்பவனால் பகவான் ஒருமுறை தாக்கப்பட்டார். கல்லடியினால் காலில் காயப்பட்டார். இவற்றிற்குரிய காரணம் முற்பிறப்பில் தாம் செய்த ஏதோ ஒருவன் செயல் தான் அத்துடன் தேவத்தனின் செயலும் சேர்ந்து கம்ம காரியப்பட்டது என்று குறிப்பிட்டார். இதே போன்று மொக்கல்லான என்பவருடைய கோரக்கொலையும் நிகழ்ந்தது இவற்றில் கம்மவுடன் எதிரித் துறவிகளின் கொலை எண்ணமும் சேர்ந்து தேவையான வெளிக்காரணங்களாய் அமைந்தன. (9)

பழையகம்ம வினைகளின்றி நிகழ்கால கம்ம வினைகளைப் பற்றியும் புத்தமதம் குறிப்பிடுகின்றது. இவ்வுலக வாழ்வில் நிகழும் நோய், நொடிகள், காயம், மரணம் என்பன உதாரணங்களாகும். நிகழ்கால கம்மவினால் சாதகமான சூழல்கள் ஏற்படுத்தப்படும் போது பழைய கம்ம (பிராரத்தம்) காரியப்படுகின்றது. அதாவது விளைவை உண்டாக்குகின்றது. சாதகமற்ற சூழல் ஞானத்தாலும் முயற்சியானலும் தடுக்கப்படுகின்றது. இந்த உலகிலே நிகழும் காயம், மரணம் என்பவற்றில் நிகழ்கால கன்மமே முனைப்புப் பெறுகின்றது. இவை முற்றாகப் பழைய கம்மவினால் (நிகழ்கால கம்மவின்றி) நிகழ்வது அரிதாகும். ஞானத்தாலும் முயற்சியினாலும் வெற்றி கொள்ளப்படும் வினைகள் பற்றிப் பௌத்த மதம் குறிப்பிடுகின்றது. இக்கருத்தினை அடியோற்றியே திருவள்ளுவர்

**"தெய்வத்தான ஆகாதெனினும் முயற்சி தன்**
**மெய்வருத்தக் கூலிதரும்"(10)**

என்றார். ஞானம், முயற்சி என்னும் இரண்டும் பயன்படுத்தப்படாவிட்டால் நன்மையைப் பெறமுடியாது. இதனை தம்மபதவிரிவுரையில் புத்த பகவான் அருளிய ஒரு கதை தெளிவாக விளங்குகிறது.

ஒருவன் விதைத்த வினைகள் எல்லாவற்றையும் அறுவடை செய்தேயாக வேண்டுமா? என்பது கேள்வி. இதற்கு அங்குத்தர நிகாயவில் புத்தபகவான் பதிலை அருளிச் செய்துள்ளார். விதைத்த விதைகளை அறுவடை செய்தேயாக வேண்டும் எனினும் சமய வாழ்க்கையும் ஒரு சந்தர்ப்பமும் முழுத் துன்ப நீக்கத்திற்கு அளிக்கப்பட்டிருக்கின்றன என விளக்கியுள்ளார். எனவே பௌத்த மதத்தில் ஒருவனுடைய கம்ம வினையைச் செப்பனிடுவதற்குத் தகுந்த சந்தர்ப்பம் இருக்கிறது.

இதற்கு அங்குலிமாலாவின் வாழ்வியல் உதாரணமாகும். அங்குலிமாலா என்பவர் ஒரு வழிப்பறிக் கள்வர் கொடுங் கொலையாளி மனிதர்கள் பலரைக் கொன்று அவர்களின் விரல்களை (அங்குலி) மாலையாக போட்டிருந்தவன். அவனே புத்தபகவானின் உபதேசத்தால் ஞதனியாக மாறினான் அல்லவா? அவனுடைய கெட்ட செயல்கள் மறைய **"அரகத்"** தாக (அருகன்) மாறினான். அசோகச் சக்கரவர்த்தியின் வாழ்வும் அவ்வாறேயாம். பழைய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்மவின் படி கலிங்க போரிலே பலரைக் கொண்டான். ஆனால் புதிய கம்மவின் படி தம்ம அசோகனாக மாறினான். இவ்வரலாறுகள் ஒருவரது வாழ்நாளில் நன்நடத்தையின் முழுமாற்றத்தையும் விளக்குகின்றன.

கம்ம – கன்மம் தொழில்படும் போது சாதக பாதகச் சக்திகள் துணையாகவும் எதிர்ப்பாகவும் செயற்படுகின்றன. பிறப்பு நிலைமைகள் அல்லது காலம் அழகு முயற்சி ஆகியன கம்மவின் கனிவுக்கு உதவிகளாகவும் தடைகளாகவும் அமைகின்றன.(12)

உதாரணமாக ஒருவன் துயர் நிறைந்த அல்லது அதிஷ்டமில்லாத குடும்பத்திற்கு பிறந்துவிட்டால் இச்சாதகமில்லாத பிறப்பு கெட்டகம்ம தொழிற்படுவதற்கு இலேசான சந்தர்ப்பத்தை வழங்கும்.

பௌத்த மதத்தின்படி கம்ம வெளிச்சூழல் நிலைகளினால் சிலவேளையில் தாக்கம் பெறுகின்றது. முற்பிறப்பிற் செய்த புண்ணியத்தால் ஒருவன் செல்வந்தனாகப் பிறக்கின்றான் என்றாலும் இவ்பிறப்பில் அவ்வளவில் நிற்காது மேலும் தருமம் செய்தல் வேண்டும் வங்கியொன்றில் தனது பணத்தை முதலீடு செய்பவன் அந்தபணத்தையே வாழ்நாள் முழுவதும் செலவழித்தால் என்ன நடக்கும்? அவன் செய்ய வேண்டியது என்ன? அப்பணத்தை மேன்மேலும் பல அறவழிகளில் பெருக்கிக் கொள்ளல் வேண்டும் அப்போது தான் மறுபிறப்பிற்கும் வேண்டிய புண்ணியத்தைத் தேடிக்கொள்ளமுடியும். இப்புத்த மதக்கோட்பாட்டை திருவள்ளுவர்

**"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்**
**பெற்றான் பொருள் வைப்புழி"** (13) என்றார்.

இவ்வாறு நோக்கும் போது கடவுளைப் பற்றிக் கவலைப்படாத சமண பௌத்த சமயங்கள் கன்மத்தையும் மறுபிறப்பையும் ஒப்புக்கொள்வது சிறப்பானது. அறம் முறை பிறழாது என்பதில் அவனது ஆழ்ந்த நம்பிக்கையுடையன் என்பது குறிப்பிடத்தக்கது.

### 1.3 கன்மம் மறுபிறவியும்

முற்பிறவியில் செய்த நன்மை தீமைகள் எடுத்த பிறவியில் பயன் விளைவிக்குமாம். இதைப் போலவே இப்பிறவியில் செய்த நன்மை தீமைகளும் நிறைவேறாத ஆசைகளும் அடுத்த பிறவிக்கு வித்தாகும் என்பர். இவ்வாறு மறுபிறவிக் கோட்பாட்டின் உண்மை ஒப்புக் கொள்ளப்பட்டது. இக்கருத்தினை இரண்டாவது சூத்திரத்திலே மெய்கண்ட தேவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

**" அவையே தானேயாய் இருவினையின்**
**போக்குவரவு புரிய ஆணையின்**
**நீக்கமின்றி நிற்குமன்றே"** (14) என்பதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்பிறவியில் செய்த வினைப் பயன் நுகர்வதற்கு ஆன்மாக்கள் பல பிறவிகளை எடுப்பதும் அப்பிறவிகளின் தன்மை, தராதரம் ஆகியவற்றைக் கண்காணிப்பதும் கன்மத்தின் வலிமையைப் பொறுத்ததேயாம். எண்பத்து நான்கு இலட்சம் பிறப்பு வேறுபாடுகள் உண்டென்றும் அவை புல், பூண்டு செடி கொடிகளைத் தவிர்த்து நீரில் வாழ்வனவும், நிலத்தில் ஊர்வனவும், பறப்பனவும் நான்கு காலால் நடப்பனவும் கடைசியாக மானிட வாழ்வும் கொண்டதாகும் என்ற கருத்தினைச் சிவசித்தியாரில் விளக்குக் கூறப்படுகிறது. ஆன்மா குடிகொள்ளும் தேகத்தைக் தேகம் சூக்குமதேகம் என்றும் இருவகையாகப்பிரித்துக் கூறுவர். தூலதேகம் தான் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் அழிவுக்கும் பொருந்தும் எனவே அவ்வித மாற்றங்களுக்குக் கட்டுப்படாத நிரந்தரமான தேகம் சூக்குமதேகம் என்பதாம்.

இத்தேகம் கனவு உலகத்தில் தங்கு தடையின்றி எங்கும் பிரவேசிக்கப் பிரயாணம் செய்வதை அறிவோம். இத்தேகமே மறுபிறவிக்கும் தொடர்பு ஏற்படுத்துவதாகும். அவ்வுண்மையை எடுத்துக் காட்டுவதற்கே பாம்பு தன்னுடைய உறையை நீக்கிவிட்டு வேறொரு உறையை ஏற்படுத்திக் கொள்ளும் உவமானம் கையாளப்படுகின்றது. ஆன்மா ஒரு தேகத்திலிருந்து மற்றொரு தேகத்திற்குச் செல்கின்றதென்றால் தூலதேகம் தான் மாறுகின்றது. சூக்கும தேகம் மாறுவதில்லை ஆகவே கன்மத்தின் வலிமைக்கேற்ப பல பிறவிகளை ஏற்படுத்துவதுமாம். (15)

இவ்வாறு ஈன்மா பல பிறவிகளில் உழன்று அறியாமையில் மூழ்கியிருக்கும் நிலையை மிகவும் உருக்கமாக விளக்கியுள்ளார் பட்டினத்தார்.

**"தந்தையராகியும் தாயராகியும்**
**வந்திராததும் இல்லை முத்து**
**பிறவா நிலனும் இல்லை அவ்வயின்**
**இறைவாநிலனும் இல்லை பிறிதில்**
**என்னைத்தின்னா உயிர்களுக்கு இல்லை யான் அவை**
**தம்மைத் தின்னா தொழிந்ததும் இல்லை – அனைத்தே**
**காலமும் சென்றது யான் இதன்மேலிரி**
**இளைக்கு மாறிலேனே"** (16)

பட்டினத்தாருடைய கூற்றிலிருந்து நாம் அறியும் உண்மைகள் பலவாம். ஆன்மாக்கள் மானிடப்பிறவியில் மட்டும் உழலுவதில்லை வேறு பலதரப்பட்ட பிறவிகளிலும் உழன்று வினைப்பயனை நுகருகின்றன ஒன்பதாம் இதனைவிட சித்தர்களால் கையாளப்பட்டு வந்தது கூடுவிட்டு கூடுபாய்தல் என்ற வித்தையாகும். அதன் அடிப்படைத் தத்துவம் என்னவென்றால் ஆன்மாக்கள் பலபிறவிகளிலும் மானிடராகவே பிறக்க வேண்டுமென்பதில்லை. வினைப்பயன்களின் வன்மை மென்மைக்குத் தக்கவாறு பல்வேறு தரப்பட்ட பிறவிகளையும் எடுக்க வேண்டியுள்ளது என்பதாகும். புலன்களைக் கட்டுப்படுத்தி யோக நித்திரையில் அமரும் வல்லமை பெற்ற சித்தர்கள் ஒரு தேகத்திலிருந்து மற்றொரு தேகத்திற்குள் நுழைவதும் சாத்தியம் என்ற கருத்தினையும் வலியுறுத்துமாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாகக் கன்மத்தின் தன்மைக்கேற்ப மாயையின் துணைகொண்டு ஆன்மாவின் வாழ்க்கைப் பயணத்தை நடத்தியே தீரும் என்பது மாற்றமுடியாத உண்மை என்றே சித்தர்கள் ஒப்புக் கொண்டிருக்கின்றனர். எனினும் இவ்வித நடவடிக்கை யாவும் இறைவனின் திருவுள்ளப்படியே நடைபெறுகின்றன என்ற சித்தாந்தக் கருத்தினையும் வலியுறுத்தியுள்ளனர்.அதனால் தான் கன்மத்தை இறைவனின் ஆணை என்றே குறிப்பிட்டனர். அவ்வானை இறைவனின் திருவருளுக்குக் கட்டுப்பட்டதே என்ற கருத்தினை அழகாக எடுத்துக் கூறியுள்ளார் தாயுமானவர்.

**" கர்ம பந்தத்தினாற் கன்மபந்தம் பெறக்**
**கற்பித்த துன்னருளே"** (17) என்றார்.

இவ்வாறாக கன்மவினைகளுக்கமைய பிறவியும் வாழ்நிலையும் அமைகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ் இலக்கியங்களிலே விதி,ஊழ் என்ற பதங்கள் கன்மத்தையே குறிப்பிடுகின்றது. உலகத்திலே உள்ள மக்கள் ஒரே மாதிரியான ஒரேயளவான துக்கங்களை அனுபவிப்பதில்லை.சிலர் தங்களுடைய வாழ்க்கையிலே கூடிய சுகத்தையும் சிலர் கூடிய துக்கத்தையும் அனுபவிக்கின்றனர். தேக சௌக்கியத்தோடு செல்வம் செல்வாக்கோடும் ஒருசிலர் வாழவும் வேறுசிலர் நோய்வறுமை பல்வகைப்பட்ட துன்பங்கினாற் பீடிக்கப்பட்டு அல்லற்படுவதையும் நாம் கண்கூடாகக் காண்கின்றோம். நல்லவர்கள் கஷ்டப்படுவதையும் தீயவர்கள் சுகமாக வாழ்வதையும் காணலாம். சிலர் குறுகிய ஆயுளையும் சிலர் நீண்ட ஆயுளையும் உடையவராக காணப்படுகின்றனர். அதிக பண்பாடும், கல்வி அறிவும் நற்குணாதியங்களும் ஒருங்கேயமையப்பெற்ற குடும்பத்திற் பிறந்து உயர்ந்த வகுப்பினரென்று மற்றையோர் மதிக்கத்தக்கச் சிலர் வாழ்ந்து வருகின்றனர். கல்வியறிவு நற்பழக்கவழக்கங்கள் நல்ல பண்பாடு ஆகியன சிறிதேனும் இல்லாதவர்களாயும், புலாலுண்ணல், மது அருந்தல் முதலிய தவறான முறைகளைப் பின்பற்றுகின்றவர்களாய்ச் சிலரும் வேறுசிலர் மேல்வகுப்பினராகச் சமுதாயத்திலே கணிக்கப்படக் கூடியவர்களாயும் காணப்படுகின்றனர். இவைகள் எல்லாவற்றிற்கும் காரணம் யாதெனில் ஊழ்வினையே எனக் கூறப்படுகின்றது. விதியை நொந்து மனம் நொந்து அழுபவர் பலர் இந்நிலையினை அருணகிரிநாதர்

**"சுகிதனை யொன்றையுங் காண்கிலேன் கந்தவேள் முருகா**
**நிதிதனை யன்னபொய் வாழ்விலன்பாய் நரம்பாற் பொதிந்த**
**பொதிதனையுங் கொண்டு திண்டா டுமாறெனைப் போதவிட்ட**
**விதிதனை நொந்து நொந்திங்கே யென்றன் மனம் வேகின்றதே"**

உலகத்திற் சிலர் முன்செய்த நல்வினையின் பயனாக இன்பத்தை அனுபவிப்பதைக் கண்டு சிலர் மனம் வருந்துவதைக் காணலாம். தாம் செய்து வைத்த புண்ணிய பாவத்தின் அளவுக்குத்தக்கபடி பலனை அனுபவிக்க முடியும் வினையின் பயன்குறித்த அளவேயாகும். கடும் முயற்சி செய்த பொழுதிலும் ஊழ்வினை வலிமையுடையதாகக் காணப்படும். இது பற்றியே குமரேச சதக்கத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"வங்காளம் ஏறுகினும் வாருகோல் ஒருகாசு மட்டமின்றி அதிகமாமோவானேறி உயரப்பறந்தாலும் ஊர்க்குருவி வண்ணப்பருந்தாகுமோகங்காசலந்தன்னில்மூழ்கினும் பேய்ச்சுரக்காய் நல்லசுரையாகுமோகடலுக்குள் நாழியை அமுக்கியே மொண்டிடிற் காணுமோ நால்வாழிதான் ஐங்காதம் ஓடினுங் தன்வினைகள் தன்னோடே அடையாமல் நீங்கிவிடுமோ யாரிடஞ் சென்றாலும் வெகுதொலைகள் சுற்றிலும் அமைந்த படியன்றி வருமோ மங்காத செந்தமிழ்க் கொண்டு நக்கீரர்க்கு வந்ததுயர் தீர்த்த முருகா மயிலேறி விளையாடுகுகனே புல்வயல் நீடு மலைமேவு குமரேசனே"** (18)

என்று கூறப்பட்டிருக்கிறது. இதிலிருந்து விதித்தளவே கிடைக்குமென அறிகிறோம். இளம் வயது தொட்டு வறுமையினாற் பீடிக்கப்பட்டு அதிக துன்பத்தை அனுபவித்த ஒரு வாலிபன் தனக்குப் பெற்றோருடைய சொத்துக்கள் இல்லாமையினாலேயே தான் அத்துன்பமான நிலையை எய்த நேரிட்டது என்று ஒருநாள் யோசித்தான். சிறிது நேரத்தின் பின் அவனுக்கு ஒரு உபாயம் தோன்றியது. தூன் சோம்பலை நீக்கி முயற்சி செய்தால் செல்வந்தனாகலாம். என்ற எண்ணத்துடன் ஒரு பெரியவரை அணுகி பயிரிடுவதற்கு ஏற்ற ஒரு நிலத்தைக் கொடுக்கும் படியும் தான் பெற்ற வருமானத்தில் ஒரு பகுதியை நிலத்துக்காக அப் பெரியவருக்கு கொடுப்பதாகவும் கூறி அவரிடம் நிலத்தைப் பெற்றுக் கொண்டேன். அது நெல் செய்யும் நன்னிலமாகையாலும் அவ்வாலிபனுடைய விடாமுயற்சியின் காரணத்தாலும் முதல் வருடத்திலேயே பெரும் விளைவு அவனுக்கு கிடைத்தது. இவ்வருவாய் வருவதற்கு சில நாட்களுக்கு முன்பாக அவனுக்கு குன்ம நோய் உண்டானது. உணவு ஜீரணிப்பதில்லை சோறு சாப்பிட முடியவில்லை அவன் தனக்குள்ளே சிந்தித்தான். இளம் வயதில் நேரத்துக்கு போசனம் அருந்த முடியாமல் வறுமைத்துன்பம் என்னை வாட்டியது. நான் விடாமுயற்சி செய்து பெற்ற ஊதியமும் பயனற்றதாயிருக்கின்றது. விதியை வெல்ல யாராலும் முடியுமென்பதை ஔவையார் கூறியிருக்கின்றார்.

**"வினைப்பயனை வெல்வதற்கு வேதம் முதலாய**
**அனைத்தாய நூலகத்தும் இல்லை நினைப்பது எனக்**
**கண்ணுறுவது அல்லாமல் கவலைப்படேன் நெஞ்சேமெய்**
**விண்ணு றுவார்க்கு இல்லைவிதி"** (19)

முற்பிறவியிலே செய்த வினையின் பயனை வெல்லும் வழி வேதம் முதலாய் ஒரு நூலிலும் சொல்லப்படவில்லை. ஆனால் முத்திநெறியில் நின்று ஒழுகுவாருக்கு அவர் தம்முள் நிலைப்பது போல தோன்றுமேயன்றி விதியென்று ஒன்றுமில்லை ஆகையால் வினைப்பயனை வெல்வதற்கு ஈசுவர தியானமே வழியாகும். இந்த உண்மை

**"சிவாய நம என்று சிந்தித்து இருப்போருக்கு**
**அபாயம் ஒருநாளும் இல்லை – உபாயம்**
**அதுவே மதியாகும் அல்லாத எல்லாம்**
**விதியே மதியாய் விடும்"** (20)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று ஔவையார் கூறியிருப்பதிலிருந்து விளங்கும் சிவாய நம என்று சிந்திப்போர்க்குத் தீங்கு ஒன்றும் ஏற்படாதென்றும் துன்பத்தை வெல்வதற்கு அது தான் ஒரேயொரு வழியொன்றும் அவ்விதம் நடந்து கொள்ளாது கையாளும் மற்றும் யோசனைகளையெல்லாம் விதி கொண்டு செலுத்தும் வழிகளாகும். என்பதை நாம் இச்செய்யுள் மூலம் அறியலாம்.

இவ்வாறாக இறைவழிபாடு இறைதியானம் என்பவற்றின் மூலமாக கன்மத்தை ஓரளவு குறைத்துக் கொள்ளக் கூடியதாய் அமையும் என்ற கருத்து பெறப்படுகிறது.

**ஊழ்வினை மாறலாம்**

உன் வாழ்க்கையில் என்னென்ன நடக்கவேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கிறதோ அதுவே விதி உனக்கு விதிக்கப்பட்டது எதுவோ அது நடந்தே தீரும் அனைவருக்கும் பிறப்பு ஒரு மாதிரித் தான் அமைகின்றது. எல்லோரும் அன்னையின் வயிற்றில் தான் உற்பத்தியாகின்றார்கள். ஆனால் வாழ்க்கைப்பாதை ஒரே விதமாக அமைவதில்லை. நாம் இந்து மதம் விதியை வலியுறுத்திக் கூறுகின்றது.

**"ஊழிற் பெரு வலி யாவுள மற்றொன்று**
**சூழினும் தான் முந் துறும்"** என்றார் வள்ளுவர்.

ஊழ் என்பது முற்பிறப்பில் செய்த வினைகளின் பயனே **"ஊழ்வினை உருத்துவர் தூட்டும்"** என்கிறது சிலப்பதிகாரம். முற்பிறப்பின் பாவமே இந்தப் பிறப்பின் விதியாக மாறுகின்றது. இதனை சமண சமயக் காப்பியமான சிலப்பதிகாரமும் ஒப்புக் கொள்கிறது. ஜாதகம் எழுதும் போது முதலில் ஒரு வாசகமும் எழுதுவார்கள் அவ்வாசகம் இந்தக் கருத்தை மெய்ப்பிக்கின்றது.

**"ஜனனீ ஜென்ம செரிக்யாணாம் வர்த்தனீ குலசம்பகாம் பதவீ பூர்வ புண்யானாம் விக்யதே ஜன்மபக்ரிகா"** என்பதே அது மனிதன் எத்தனையோ இயந்திரங்களை உருவாக்குகின்றான். அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு செயலுக்காக உருவாக்கப்பட்டவை அதாவது இயந்திரங்களின் செயற்பாடுகள் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட ஒன்று அது போல் மனிதனின் வாழ்க்கையும் நிர்ணயிக்கப்பட்டதே.

விதியின் சாலையில் தான் நாம் பயணம் செய்தாக வேண்டும் பாதை மாறிச் செல்ல நம்மால் இயலாது அது முடியவும் முடியாது இராமன் வில்லை முறித்ததும் சீதையை மணந்ததும் விதிக்கப்பட்டதே.

மகாபாரதத்தில் தர்மன் சூதாடியதும் பாஞ்சாலி அவமானப்பட்டதும் அவள் சபதம் ஏற்றதும் போர் நடந்ததும் அனைத்தும் விதியே விதி தான் இரண்டு இதிகாசங்களுக்கும் உயிர்நாடி இவ்வாறு விதியைப் பற்றி சொல்லிக் கொண்டே போகலாம் ஆனால் இறைவனிடத்தில் உன்னை முழுமையாக ஒப்படைத்து விட்டால் விதி வேலை செய்வதில்லை உனக்கு இறைவன் பொறுப்பேற்றுக் கொள்கிறான். பதினாறு வயதில் ஆயள் முடியவேண்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது தான் மார்கண்டேயரின் விதி ஆனால் இறைவன் அருளால் அவருக்குக் கிடைத்தது என்றும் இளமையாக இருக்கும் பேறும் சாகாவரமும் இறைவன் நினைத்தால் ஊழ்வினை மாறலாம் விதி என்பது ஒன்பது கோள்களின் மூலமாக அவற்றின் ஆணைக்குட்பட்டுத்தான் தன் வேலையைச் செய்கிறது. நீ இறைவனை சரணடைந்தால் இந்த ஒன்பது கோள்களும் உனக்கு நன்மையே செய்கின்றன. இது திருஞானசம்பந்தப் பெருமான் அருள்வாக்கு கோளறு பதிகம் அவர் பாடியது. இதைப்படித்தால் நவகோள்களும் உனக்கு அருள் புரியும் இறைவன் அருளாலன்றி விதியை வெல்ல முடியாது.

**"வேயிறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன் மிகநல்ல வீணை தடவி**
**மாசறு திங்கள் கங்கை முடிமெலணிந்தென்**
**உளமே புகுந்த அதனால்**
**ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி**
**சனி பாம் பிரண்டு முடனே**
**ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல**
**அடியாரவர்க்கு மிகவே"** கோளறு பதிகம்

நாளென் செய்யும் வினை தானென் செயும் எனை நாடி வந்த
கோளென் செயுங் கோடுங்
கூற்றென் செயுங்குமரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந்
தண்டையுஞ் சண்முகமுந்
தோளும் கடம்பும் எனக்கு முன்
னே வந்து தோன்றிடினே

என்றார் அருணகிரிநாதர் இந்த அடியார்கள் சொல்பவை முற்றிலும் உண்மையே இவ்வாறாக அவர் அவர் செய்த கன்ம நியதிகளின் படியே பிறவிகள் வாய்க்கப் பெறுகின்றன என்ற கருத்து நிலை நிறுத்தப்படுகின்றது.

◈

◈ ◈ ◈

◈


**மதிப்பீடுகளுடன் கூடிய**
**கல்வி முறையே**
**இன்றைய தேவை.**

**Dr. A.P.J. அப்துல் கலாம்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆற்றுகைத்திறன் விருத்தியல் உடல் மொழியின் பங்களிப்பு

– திரு. இ. சஜித்–
தகுதிகாண் விரிவுரையாளர்,
சு.வி.அ.க.நிறுவகம்,
கிழக்குப்பல்கலைக்கழகம்.

### அறிமுகம்

ஒருமனிதன் இன்னொரு மனிதனுடன் உறவுகொள்வதற்க்கு மொழி என்பது அவசியமாகின்றது. இன்று பேச்சுமொழி, எழுத்துமொழி, உடல்மொழி என்பன வழக்கில் இருக்கின்றது. எனினும் மனிதனின் ஆரம்பகாலத்து மொழி உடல் மொழியாக காணப்பட்டது. அசைவின் ஊடாகவே அதிர்வு ஏற்படுகிறது அவ் அதிர்விலிருந்தே ஒலி உண்டாகிறது. புராதனமனிதன் தனது தேவைகளை,உணர்வுகளை வெளிப்படுத்துவதற்க்கு தனது உடலையே பயன்படுத்தினான் அவ் அசைவுகள் ஊடாகவே தனது விருப்பு, வெறுப்புக்களை எந்த ஒளிவு மறைவு இன்றி வெளிப்படுத்தலானான்.

உடல் மொழியானது உலகமொழியாகவும், பொதுமொழியாகவும் கருதப்படுகின்றது. உடல் மொழியானது இரத்தமும், சதையும், உணர்வும் கொண்டதாகவும் எழுத்து மொழியைவிட அதிகம் உயிருள்ள ஒன்றாகவும் காணப்படுகின்றது. விழிம்பு நிலைமக்களினால் கூட இலகுவில் உணர்ந்து கொள்ளமுடியும். உடல் மொழியானது பண்பாட்டுடன் ஒன்றியதாக காணப்படுகின்றது. பண்பாட்டைபோலவே சுற்று சூழலுக்கும் உடல் மொழிக்கும் இடையில் தொடர்புண்டு.

எமது உடலின் அசைவுகளினால் எமது எண்ணங்கள், சிந்தனைகள் என்பவற்றை பிறருக்கு வெளிப்படுத்திவிடலாம். இது ஒருநாட்டின் அரசியல் எல்லைகளைத் தாண்டி உலகில் உள்ள அனைவராலும் இலகுவில் புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும். மனித உடலில் வெளிவாரியான, உள்வாரியானபாகங்கள் காணப்படுகின்றன. உள்வாரியானபாகங்கள் முக்கியமானவையாக இருப்பினும், கட்புலனாகும் வெளிவாரியான பகுதியே உடல் மொழித் தொடர்பாடலில் அங்கம் வகிக்கின்றன. ஆற்றுகைகலைகள் தொடர்பாடலையே பிரதானமாககொண்டு அமைவதால் ஆற்றுகை கலையானது மேம்பட்டு அமையவேண்டுமாயின் உடல் மொழியின் பங்களிப்பு இன்றியமையாததாகும்.

### உடல் மொழியின் பிரதானபிரிவுகள்

உடல் மொழியினைஅவற்றின் தன்மைகளைக் கருத்திற் கொண்டுபின்வரும் பிரிவுகளாகவகைப்படுத்துகின்றனர்.

1. உலகளாவியஉடல் மொழி
2. இனக்குழுமஉடல் மொழி


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

3. மோடிப்படுத்தப்பட்டஉடல் மொழி
4. படைப்பாக்க உடல் மொழி
5. குறியீட்டு உடல் மொழி
6. அரங்கியல் உடல் மொழி

### உலகளாவிய உடல் மொழி

உலகம் முழுவதும் உடலின் செயல்கள் மூலம் பொதுவான அர்த்தத்தில் மேற்கொள்ளப்படும் தொடர்பாடலாக உலகளாவிய உடல் மொழி காணப்படுகின்றது. உதாரணமாக வாய் பேசமுடியாதவர்கள் பயன்படுத்தும் சைகைமொழியை குறிப்பிடலாம்.

### மோடிப்படுத்தப்பட்ட அல்லது ஒயிலாக்கம் செய்யப்பட்ட உடல் மொழி

ஆற்றுவோர் அல்லது மனிதர் குறிப்பிட்ட ஒருகருத்தை மிகைப்படுத்தப்பட்ட உடல் செயல்பாட்டினால் வெளிப்படுத்துகின்ற தொடர்பாடல் மொழியாக மோடிப்படுத்தப்பட்ட உடல் மொழியை கருதலாம். உதாரணமாக நாட்டிய சாஸ்திரத்தில் பேசப்படுகின்ற அபிநயங்கள் கதகளிமுத்திரைகள், தெருக்கூத்து, வெளிப்பாடு போன்றவற்றை குறிப்பிடலாம்.

### படைப்பாக்கஉடல் மொழி

படைப்பாக்க உடல் மொழி என்பது உடல் செயற்பாடுகளினூடாக உணர்வுகளை, எண்ணங்களை, கற்பனையை, அனுபவங்களை காத்திரமாக வெளிப்படுத்துகின்றமை ஆகும். இதற்கு எந்தவரையறையும் அமைவதில்லை. அது அனுபவத்திற்கும், ஆளுமைக்கும் ஏற்ப வளர்ந்து செல்லக்கூடியதாகும். அதற்கு பின்வரும் பண்புகளை அடிப்படையாகக் கூறலாம்.

1. கவிதைத் தன்மை வாய்ந்தது
2. லயத் தன்மையானது
3. வரன் முறைக்கு உட்படாதது
4. குறியீட்டு தன்மையானது
5. நிலையமைதிப் பண்புஅற்றது
6. கோலங்களுக்கு உட்படாதது
7. வெளிப்படுத்துபவரின் உளவியல் சார்ந்தது
8. நிகழ்கணங்களில் அர்த்தம் கொள்ளப்படுவது
9. தனித்தன்மை வாய்ந்தது

போன்றபல பண்புகளின் அடிப்படையாக கொண்டதே படைப்பாக்கஉடல் மொழிஆகும்.

### இனக்குழும உடல் மொழி

இனக்குழும் உடல் மொழி என்பது ஒரு குறிப்பிட்ட இனம், பிரதேசம், மதம் போன்ற பலபிரத்தியேகமான தன்மைகளிற்கு ஏற்ப வெளிப்படுத்தப்படும் மொழியை இனக்குழும உடல் மொழியாக குறிப்பிடலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறியீட்டுஉடல் மொழி

குறியீட்டு தன்மையாக உடலைப் பயன்படுத்திவலிமையாக தொடர்பாடும் முறைகுறியீட்டுரீதியிலான உடல் மொழியாகக் குறிப்பிடலாம்.

சசூர் என்பவர் குறயீடுகள் மனித வாழ்க்கைக்கு மிகத் தேவையானவை. தேவைகளிற்கேற்ப குறியீடுகள் உருவாக்கப் படுகின்றன. ஒவ்வொரு குறியீடும் படைக்கப்படுவது அது தன்னிருலிந்து வேறுபட்ட மற்றொன்றோடு தொடர்புடையது என குறியீடு பற்றி குறிப்பிடுகின்றார். குறியீட்டு ரீதியிலான உடல் மொழியானது படைப்பாக்கதன்மை நிறைந்ததாகும். இது பண்பாடு, அனுபவம் என்பவற்றின் ஊடாக வெளிக்கிளம்புகின்றபோது அதன் வலிமை செறிவுடையதாக இருக்கும். இரகசியமான சங்கேததொடர்பாடலுக்கு உடல்மொழி தொடர்பாடல் பயன்படுத்தபடுகிறது.

தொடர்பாடல் நோக்கம் இன்றி இயல்பூக்கமாக உருவாக்கும் உடல் மொழி உள்ளமை குறிப்பிடத்தக்கது. விசில் அடித்தல், மேசையில் தாளம் போடுதல், போன்ற செயல்கள் எம்மை அறியாமலே மேற்கொள்வதுண்டு. இவை இயல்பூக்கமாக உருவாகும். உடல் மொழியானது குறிப்பிட்ட ஒருநபரின் உளவியல் நிலை, மனநிலை, உணர்வுநிலை என்பவற்றுடன் தொடர்புடையதாகும். இவற்றினை அடிப்படையாகக் கொண்டு அது உருவாக்கம் அடைவதாகவும் அர்த்தம் கொள்வதாகவும் அமைகிறது.

## அரங்கியல் உடல் மொழி

பௌதீக நிலையிலான அரங்கு என்பது பார்ப்பதற்கும், கேட்பதற்கும் உரியதொன்றாகும். கேட்டலுடன் தொடர்புடையனவாக நடிகனின் பேச்சு, இசை, ஒலிவிழைவுகள் என்பன அமைந்திருக்க பார்த்தலுடன் தொடர்புடையதாக நடிகன், ஒளிவிதானிப்பு, காட்சிவிதானிப்பு, கைப்பொருட்கள், வேடவுடை, ஒப்பனை, வேடமுகங்கள், அணிகலன்கள் என்பவை அமைந்திருக்கும்.

அரங்கில் நடிகன் இருப்பதென்பது ஒருமொழியாகும். அவன் தன்னைகருவியாகக் கொண்டே பார்வையாளருடன் தொடர்பாடலை மேற்கொள்கின்றான். அரங்கவரலாற்றில் காலத்துக்கு காலம் வெவ்வேறு வகையான நடிப்பு முறைகள் இருந்து வந்த போதிலும் அவை எல்லாவற்றிலும் நடிகனும் அவனது உடல் மொழியும் இன்றியமையாததாக இருந்துவந்துள்ளது. நடிப்பு முறைகளினை இரண்டுபெரும் பிரிவுகளில் உள்ளடக்கிகொள்ளலாம்.

1. யதார்த்த நடிப்பு
2. யதார்த்த தன்மைஅற்றநடிப்புஅல்லதுமோடிப்படுத்தப்பட்டநடிப்பு

மேற்குறிப்பிட்ட நடிப்பு வகைகளிற்கு ஏற்ப உடல் மொழி பயன்படுத்தபடுகின்றது. சில அரங்குகள் தொடர்ச்சியாக சில உடல் அசைவுகளினை பயன்படுத்தி வரும்போது அதுகாலப்போக்கில் அதற்குரிய நியமமாக உருவெடுக்கின்றது. இதற்கு உதாரணமாக நாட்டிய சாஸ்திரத்தை குறிப்பிடலாம். ஒருவெற்று வெளிசலனங்களுக்கு உட்படுத்தப்படும் போது அர்த்தமுள்ளதாகமாறும். இவ்வகையில் உடல் மொழியானது ஒரு வெளியை செயல் பொதிந்த வெளியாகமாற்றி அழகியல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவத்தினை வழங்குகின்றது. அரங்கின் படைப்பாக்க செயற்பாட்டில் உடல் மொழியின் பங்கு அவசியமாகும். அது அனுபவங்களினாலும், கற்பனையாலும் விரிவாக்கம் பெற்று இரசனைக்கு உரியதாகிறது. நடன நாடகங்களில் உடல் மொழி அவசியமானதொன்றாக காணப்படுகின்றது.

### முடிவுரை

மனித நாகரிக வரலாற்றிலே கலைகள் முக்கிய இடத்தினை வகிக்கின்றன. மனித பண்பினை நன்கு புலப்படுத்தும் சீரியகலைகளிலே ஆற்றுகைகலைகள் குறிப்பிடப்பாலது. **"ஆயகலைகள் அறுபத்துநான்கு"** எனநம் முன்னோர் தாம் அறிந்திருந்தகலைகளின் எண்ணிக்கை பற்றிகுறிப்பிட்டுள்ளனர். இவ் எண்ணிக்கை நாகரீகவளர்ச்சிக்கேற்ப அதிகரித்து விட்டதாயினும் சீரும் சிறப்புமுள்ள பலகலைகளின் முக்கியத்துவம் குன்றவில்லை.

மனிதர்கள் அலைந்து திரிந்தமிகப் புராதனகாலத்தில் கூட ஒருவகையான ஆற்றுகைகலை நிலவிற்று. பேச்சுக்கலை, எழுத்துக்கலை தோன்றமுன்பே ஆற்றகைகலை தோன்றிவிட்டது. புராதனமனிதன் அசைவு, நெளிவுகளிலிருந்து நடனம், கூத்து போன்றகலைகள் மேம்பட்டுவிட்டது. இப்பெயர்பட்டகலைகள் உலகின் பலபாகங்களிலும் விரிவாக்கம் பெற்று இன்று நமக்கு பல்வேறு பெயர்கள், வடிவங்கள் பெற்றுகிடைக்கப் பெற்றுள்ளன.

**"கலையின் வெளிப்பாட்டினாலேற்படும் கவர்ச்சியினால் ரசிகனின் உள்ளம் நன்கு மகிழ்ச்சியடையாவிடின் உண்மையாகக் கலையழகு ஏற்படாது"** எனஅலங்காரராகவன் கூறியிருப்பது இங்கு குறிப்பிடற் பாலது. ரசிகனை மகிழ்விப்பதற்கும் ஆற்றுகையாளர்கள் தாம் கூறவருகின்ற விடயத்தை மக்களுக்கு புலப்படுத்துவதற்கும் உடல் மொழி பயன்பாடு அவசியமானதாகும். ஒரு ஆற்றுகைக் கலையானது சிறந்து இலங்குவதற்கு ஆற்றுகை கலைஞர்கள் அனைவரும் உடல் மொழியின் பயன்பாடு பற்றி அறிந்திருப்பது அவசியமான தொன்றாகும்.

◇

◇ ◇ ◇

◇

**வெளித்தோற்றத்தில் அப்பழுக்கில்லாமல்
தூய்மையாகக் காட்சி தரும்
வாழ்க்கையையே மக்கள் நாடுகிறார்கள்.
ஆனால், வாழ்க்கையின் தராதரம் என்பது
ஒருவரின் மனத்தூய்மையால் தான்
நிர்ணயிக்கப்படுகிறது.**

**- சத்குரு ஜக்கி வாசுதேவ்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CFL (சீ.எப்.எல்) மின்குமிழா? எளிமை சிக்கனம் அபாயம்

-திருமதி. நளாயினி ஜெயபாலசிங்கம்-
ஆசிரியை (பழைய மாணவி)
கிளி/இராமநாதபுரம் ம.வி

உலகை ஒளிபெறச் செய்தவர் தோமஸ்அல்வா எடிசன் ஆவார். அவரால் முதன் முதலில் காபன் இழை கொண்ட மின்குமிழ் கண்டுபிடிக்கப்பட்டது. விஞ்ஞான அறிவு வளர்ச்சியின் விளைவால் காபன் இழை மின்குமிழ் பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்டு தங்குதன் இழை மின்குமிழ்கள் சீ.எப்.எல் (CFL) மின்குமிழ்கள் எல்.ஈ.டீ (LED) மின்குமிழ்கள் எனப் பல்வேறுவகையாக பயன்பாட்டில் உள்ளன.

சீ.எப்.எல். மின்குமிழ்கள் LED மின்குமிழ்களின் பாவனை அதிகரித்து காணப்படுகின்றமைக்கு காரணமாக குறைவான மின்சக்தியை நுகர்தல் கூடிய ஆயுட்காலம் என்பவற்றை குறிப்பிடலாம். இதன் விளைவாக வீடுகளிலும் பல்வேறுபட்ட நிறுவனங்களிலும் அவற்றின் பயன்பாடு அதிகரித்துக் காணப்படுவதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

CFL மின்குமிழ்களை எடுத்து நோக்கினால் அவற்றின் பயன்பாடு இலாபகரமானவை என்பது போன்றே அவை உடையும்போது அவற்றைப்பொருத்தமான முறையில் அகற்றாமையால் ஏற்படும் விளைவுகளும் ஆபத்தானதாகும். CFL மின்குமிழ்களின் கண்ணாடிச் சுருள்களினுள் காணப்படும் இரசம் மிகவும் நச்சுத்தன்மை உள்ளதாகும். CFL மின்குமிழ்கள் உடையும் போது இரசம் அடங்கிய ஆவி வளியுடன் சேர்ந்து வளிமாசடைவதனூடாக சுவாசத்தொகுதியினைச் சென்றடைகின்றது. அத்துடன் உடைந்த மின்குமிழ்களின் பாகங்கள் சரியான முறையில் அகற்றப்படாமையினால் மண்ணில் சேரும் இரசம் படிப்படியாக நீருடன் சேர்ந்து முழுச் சூழல் தொகுதிகளையும் மாசடையச்செய்கின்றது.

நீரில் சேரும் இரசமானது உணவுச்சங்கிலியின் ஊடாக ஒரு போசனை மட்டத்திலிருந்து அடுத்த போசனை மட்டத்திற்கு செல்லும் போது செறிவடைகின்றது. இவ்வாறான உயர் செறிவடைதல் காரணமாக உயர் போசனை மட்டத்தில் உள்ள மனிதன் உட்பட பல்வேறு விலங்குகள் பாதிப்புக்களை எதிர் நோக்குகின்றன.

இவ்வாறு உயிர் செறிவடையும் பார உலோகமான இரசம் ஆய்வுகூடங்கள் வீடுகளில் பயன்படும் வெப்பமானிகள் உடைவதன் மூலமும் கப்பலில் மீது பூசப்படும்தீந்தைகள் தொழிற்சாலைக்கழிவுகள் என்பவற்றின் மூலமும் சூழலில் சேர்க்கப்படுகின்றன. CFL மின்குமிழ்களில் மிக சிறியளவான இரசம் காணப்படுவதனால் அவற்றைப்பயன்படுத்துவதையிட்டு நாம் பயப்படவேண்டியது எதுவுமில்லை. எவ்வாறாயினும் CFL மின்குமிழ்களை சரியான முறையில் பயன்படுத்துவதனாலும் பழுதடையும் சந்தர்ப்பங்களில் பொருத்தமான முறையில் அகற்றுவதாலும் சூழல் மாசடைவதைத்தடுப்பதுடன் நம்மை நாமே பாதுகாத்துக்கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***CFL மின்குமிழ் ஒன்று உடையும் போது நாம் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் சில***

- ❖ அவ்விடத்தை விட்டு உடனடியாக வெளியேறல் (இதன் மூலம் சுவாசப்பைக்குள் இரச ஆவி செல்வதனைத்தடுக்கலாம்.)
- ❖ மூடிய இடமாயின் கதவுகளையும் யன்னல்களையும் திறந்து வளி வெளியேறுவதற்கு இடமளித்தல்.
- ❖ வளிப்பதமாக்கி (air conditioner) இருந்தால் அதனைச்செயலிழக்கச்செய்தல்.
- ❖ கண்ணாடித்துண்டுகள் வெண்ணிறத்தூள்கள் மின்குமிழின் எஞ்சிய துண்டுகள் ஆகியவற்றை கைகளால் தொடாமல் பொருத்தமான உபகரணங்களைப்பயன்படுத்தி ஒன்று சேர்த்தல். கையுறைகளையும் பாதணிகளையும் அணிந்திருப்பது பாதுகாப்பானதாகும்.
- ❖ சேகரித்த உடைந்த பொருட்களை இறுக்கமான கண்ணாடி அல்லது பிளாஸ்ரிக் போத்தலினுள் இட்டு இறுக்கமாக மூடுதல் வேண்டும்.
- ❖ உடைந்த மின்குமிழின் பாகங்களை ஒன்று சேர்ப்பதற்கு பசை நாடவினைப் பயன்படுத்துவது சிறந்ததாகும்.
- ❖ மின்குமிழ் உடைந்தது கம்பளம் அல்லது தரை விரிப்பு ஒன்றின் மீது எனின் அதனைப்பயன்பாட்டிலிருந்து நீக்குதல்.
- ❖ இறுதியாகஈரத்துணியால் தரையைத் துடைத்தல். துடைத்த துணியையும் பாத்திரத்தில் இட்டு மூடுதல்.
- ❖ இறுக்கமாக மூடிய பாத்திரத்தை புதைத்தல். எரித்தல் அல்லது வீசுதல் ஆகியவற்றை தவிர்த்தலுடன் வீட்டிற்கு வெளியே வைத்து அனைத்தையும் நச்சுப்பொருள்கள் சேகரிக்கும் நிலையத்திற்கு வழங்குதல்.
- ❖ இறுதியாக நன்கு சவர்க்காரம் பூசி குளிப்பதன் மூலம் உடலைத்தூய்மைப் படுத்திக்கொள்ளல்.

நவீன விஞ்ஞான கண்டுபிடிப்புக்களானது மனித சனத்தொகை வளர்ச்சியினால் ஏற்படும் சக்தி நெருக்கடிகளுக்கு தீர்வுகாண வழி ஏற்படுத்துகின்றது. அதே வேளை அவ் உபகரணங்களை பயன்படுத்துதல் சூழலை விட்டு அகற்றுதல் தொடர்பான அறிவும் விழிப்புணர்வும் மக்களை சென்றடைவதனூடாக பூகோளத்தை பாதுகாத்துக்கொள்ளலாம்.

◈

◈ ◈ ◈

◈






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் எனும் பேய்க் குரங்கு

-திருமதி. சண்முகராஜா மணிமேகலை-
(B.A) சிறப்பு (பழைய மாணவி)
உள்ளூராட்சி உதவியாளர்
பிரா/உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்
கிளிநொச்சி

மனம் என்பது ஒரு வியக்கத்தக்க கருவி அதிலும் மனித மனம் மிகவும் வியப்புக்குரியது. மனிதன் என்ற சொல்லே மனம் எனும் சொல்லின் அடிப்படையாகத் தோன்றியதேயாகும். மனிதன் இயல்பை நினைத்து உணர உணர நாம் பெரிதும் வியப்பில் ஆழ்கின்றோம். மனம் என்பது அணுபரிமாணம் உடையது என்று அறிஞர் கூறுவர் ஆனால் அதன் கண் மாறி மாறிக் கணந்தோறும் தோன்றும் எண்ண அலைகளைக் கருதினால் மனமானது ஒரு வகையிற் கடலினும் பெரியது எனத் துணியலாம்.

மனம் போல வாழ்வு என்பது பழமொழி மனம் தான் மனிதனை தேவனாக்கியும் உயர்த்தும் விலங்காக்கியும் வீழ்த்தும். நன்மையை தீமையாகவும் தீமையை நன்மையாகவும் மாற்றிக்காட்டும் இயல்பு மனதிற்கு உண்டு. மனத்தின் இயல்பிற்கு ஏற்பவே மனிதர்கள் உயர்வு அல்லது தாழ்வு எய்துகின்றனர். மனம் நம்மை நல்லவர்களாக்கி வாழவும் வைக்கின்றது. தீயவர்களாக்கிக் கெடுத்து உழலவும் செய்கின்றது. அதனால் அறம் என்றால் என்னவென்று விளக்கம் தரும் வள்ளுவனார். **"மனத்துக்கண் மாசிலனாதல் அறம்"** என்றார். மனத்தின் இயல்புகள் பலவற்றையும் ஆராய்ந்து உணர்ந்து அறிஞர்களும் கவிஞர்களும் அருளாளர்களும் அதனைப்பல வகைகளுள் உருவகம் செய்து இகழ்ந்தும் புகழ்ந்தும் உரைத்துள்ளனர். **"மனம் எனும் நெடுந்தேர்" "மனம் எனும் மாயப்புரவி" "மனமெனும் தோணி"** என்றெல்லாம் பல வகைகளில் மனதின் இயல்பை உருவகம் செய்து காட்டியுள்ளனர்.

**"கல் மனம்" "இரும்பு மனம்" "மனம் எனும் காடு" "மனக்குகை" "மனக்கோயில்" "மன மலர்"** என்றெல்லாம் இலக்கியங்களில் மனதைப்பற்றிய கருத்துகள் ஆங்காங்கே அழகுற வருகின்றன. இவ்வாறு பல வகைகளில் மனிதன் இயல்பினை அறிஞர்கள் வெவ்வேறு வகைகளில் உருவகம் செய்து உணர்த்தியுள்ளனராயினும், அவை எல்லாவற்றையும் விட ஓர் உருவகம் மிகச்சிறப்பானதாக அமைந்து விடுகின்றது. அது தான் மனதைக் **"குரங்கு"** என்று குறிப்பிடும் சிறந்த உருவகமாகும். மனதின் இயல்புகளை விளக்குவதற்கு இதைவிட சிறந்த உருவகம் பிறிதொன்றில்லை. குரங்கின் குறும்புகளும் மனித மனத்தின் பல்வகை அலைவுகளும் பெரிதும் ஒத்துக்காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மனமெனுமோர் பேய்க்குரங்கே!
மடப்பயலே! நீதான்
மற்றவர் போலெனை நினைத்து
மருட்டாதே கண்டாய் !
இனமுறவென் சொல்வழி
யிருத்தியெனிற் சுகமாய்
இருந்திடு நீ என் சொல்வழி
யேற்றிலை யானாலோ
தினையளவுன் னதிகாரஞ்
செல்ல வொட்டேன் !உலகஞ்
சிரிக்கவுனை யடக்கிடுவேன் !
திருவருளாற் கணித்தே
நனவிலெனை அறியாயோ?
யாரென இங்கிருந்தாய் ?
ஞான சபைத் தலைவனுக்கு
நல்ல பிள்ளை நானே!

என்று இராமலிங்க அடிகளார் திருவருட்பாவில் சுட்டியமை இனிது சிந்தித்து மகிழ்தற்குரியது. குரங்கு ஒரு சிறிது நேரமும் வாளா இராமல் பல்வகைக் குறும்புகள் செய்து கொண்டே இருக்கும். எங்கும் தாவித்தாவி ஏறி ஓடும். அதுபோலவே மனமும் அங்குமிங்கும் அலைந்து திரியும். தீய பல எண்ணங்களை மாறி மாறி எண்ணிக்கொண்டு கிடக்கும். குரங்குகள் காடுகளில் திரியும், மலைகளில் ஏறும். மரக்கிளைகளில் தாவும், தன் விருப்பம் போல் எங்கும் சுற்றித்திரியும். அதற்கேற்ப மனமும் உலகியல் வேட்கையாகிய காடுகளில் அலையும் ஐம்புல ஆசைகளாகிய கிளைகளில் தாவித் தாவி கீழும் மேலும் சுழன்று கரணமிடும். நன்று தீது என்று பாராமல் எங்கும் சென்று எதையும் பற்றிக்கொண்டே உழலும். இத்தகு பொருத்தங்கள் கண்ட சான்றோர்களும் ஞானிகளும் மனதைக் குரங்கு என்று தகவறிந்து கூறியுள்ளனர்.

குரங்கு இத்தகைய குணங்களால் இழிந்தது போலக்காணப்படினும் தக்க ஒரு குரங்காட்டியின் தொடர்பு பெற்றால் நல்ல பயிற்சியும் பண்பும் பெற்றுச் சிறப்பு எய்துதலைக் காணலாம். அங்ஙனமே நம்முடைய மனமாகிய குரங்குக்கும் ஒரு சிறந்த குரங்காட்டியின் தொடர்பும் பயிற்சியளிப்பும் ஏற்படுமாயின் மிகப்பெருநலம் பயக்கும்.

நம் மனத்தையும் திருத்திப் பண்படுத்தி சிறப்பு எய்துவிக்க வல்ல சிறந்த குரங்காட்டியொருவன் உளன். அவன் இறைவனாவான். இந்தக்குரங்காட்டியிடம் மனமாகிய குரங்கை ஒப்படைத்தால் அதனை நனியுவந்து ஏற்று நன்கு பழக்கி மனக்குரங்கை திருத்தி பண்படுத்தி மனத்துக்கண் மாசிலராய் அற வாழ்வு வாழ வழிகாட்டுவான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுண்மையை **"சிவானந்தலகரி"** என்னும் சிறந்த துதி நூலில் ஆதிசங்கராச்சாரிய சுவாமிகள் அழகிய ஒரு சுலோகத்தின் வாயிலாக செவ்வையாக விளக்கியுள்ளார். திருவாவடுதுறை ஆதீன மகா வித்துவான் பெருங்கவிஞர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் இச்சுலோகத்தைப் பின்வருமாறு மொழி பெயர்த்துள்ளார்.

**"மோகமாம் அடவி திரிந்து அரிவையர் தம்**
**முலைக்கு வட்டிடை நடம் ஆடித்**
**தாகமார் ஆசைத் தருக்குலம் தோறும்**
**தாவும் என் புன் மனக்குரங்கைப்**
**பாகமார் பக்தி நான்கொடு கட்டிப்**
**பலிக்கு நீ செல்க! யான் கொடுத்தேன்**
**ஏகநாயகனே தில்லையில் ஆடும்**
**இறைவனே எம் பெருமானே"** சிவபெருமானே!

என்னுடைய மனம் உலகியல் மயக்கமாகிய காட்டில் அலைந்து திரிந்து கொண்டிருக்கின்றது. இளம் பெண்களின் தனங்களாகிய மலைக்குவடுகளில் ஓடியாடி நடனமிடுகின்றது. ஐம்புல ஆசைகளாகிய கிளைகளில் சுழன்று உழல்கின்றது. தன் விருப்பம்போல கட்டுப்பாடு இல்லாமல் சுற்றித்திரிந்து அலைகின்றது. இவ்வாறு அலையும் எனது மனமாகிய குரங்கை நின்பால் யான் ஒப்படைக்கின்றேன். அதனை பக்தி எனும் கயிற்றினால் கட்டி கெட்டியாக தங்கள் பால் வைத்துகொள்ளுங்கள்.

தாங்களோ கையிற் கபாலத்தை வைத்துக்கொண்டு அடியார்களின் அன்பாகிய பிச்சையை எடுத்துலவும் தொழில் உடையவராகத் திகழ்கின்றீர். ஒரு குரங்கையும் உடனழைத்துக்கொண்டு செல்லின் அவர்களுக்கு அது பெரிதும் உதவியாக அமைதலைக் காண்கின்றோம்.

இந்த இனிமையான அரிய செய்யுளின் சொற்பொருட் சுவை நலன்களில் ஈடுபட்டு இன்புறுவதுடன் நாம் ஒவ்வொருவரும் நமது மனமாகிய குரங்கை பிச்சாடன வடிவம் கொண்டு திகழும் சிவபெருமானாகிய குரங்காட்டியின் கையில் ஒப்புவித்து அன்பு செலுத்தி நலம் பலவும் பெற்று வாழ்வோமாக!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய மாணவர்கள் சங்கம்



நிற்பவர்கள் இடமிருந்து வலம்

செல்வி. கி. கிருஸ்ணபிரியா, செல்வி. கி. சசிகலா, செல்வி. கோ. கிருஸ்ணபிரியா, திருமதி. தி. கயூரன், திருமதி. க. தேவகரன்

இருப்பவர்கள் இடமிருந்து வலம்

திரு. ஆ. இராஜேந்திரகுமார், திருமதி. ற. நாதவர்மா, திரு. சி. லினோசன், திரு சு. சுதாஸ்கரன், திரு. க. விக்ரமன், திருமதி. ம. சண்முகராசா, திரு. வை. கோபிநாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையின் மாணவ தலைவர்கள்



# சாரணர் குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வகுப்பாசிரியரும் மாணவர்களும்



தரம் 1



தரம் 2



தரம் 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள்



**நிற்பவர்கள் இடமிருந்து வலம்**

திரு. க. சிவனேசன், திருமதி. ப. தங்கேஸ்வரன், திருமதி. த. சிறீதரன், திருமதி. மோ. நந்தகுமார், திருமதி. ச. தீபகுமார், திருமதி. தி. கயூரன், திருமதி. ச. பாலசிவராம், திருமதி. ற. நாதவர்மா, திருமதி. க. சிவசீலன், திரு. ஆ. கந்தசாமி

**இருப்பவர்கள் இடமிருந்துவலம்**

திரு. ந. தெய்வகுமார், திரு. வே. செல்வவிநாயகமூர்த்தி, திருமதி. சி. சுதாகரன், திரு. சு. சுதாஸ்கரன், திரு. கா. கைலாயபிள்ளை, திரு. சு. பிறேம்குமார், திருமதி. பா. தருமரூபன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் 7



தரம் 8



தரம் 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தரம்
10

தரம்
11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போட்டிகளில் சாதனை புரிந்தோர் தேசிய ரீதியில் வெற்றியீட்டியோர்

சமூக விஞ்ஞானப் போட்டியில் வெற்றியீட்டிய - செல்வி தீ. சதுர்ஜா



தமிழ்மொழி தினப் போட்டி "பாவோதல்" - ச. பாமகள் - நிலை - 01



சமூக விஞ்ஞானப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவிகள்



அரச நடனவிழா ஸ்ரீ ஒயிலாட்டம் - நிலை - 01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண ரீதியில் பங்குபற்றியோர்

மாகாண நிலை 03
செல்வி அ.அருணவி



தமிழ் மொழித்திறன் - பொம்மலாட்டப்
போட்டியில் பங்குபற்றியோர்



தமிழ் மொழித்திறன் திறந்த நாடகப்
போட்டியில் பங்குபற்றியோர்



பண்ணிசைப் போட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுவர்
நாடகம்
2016
நிலை-02



ஆங்கில
தினப்
போட்டி
2018
நிலை-01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட ரீதியில் வெற்றியீட்டியோர்



சித்திரப் போட்டி

பண்ணிசைப் போட்டி நிலை - 02





சிறுவர் நாடகம் 2017 நிலை - 01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து இலக்கிய வரலாற்றில் இரசிகமணி கனக. செந்திநாதன்

-திரு.எம்.கே.அகிலன்-
B.A (cey) sp.Trd (primary)
PGDE M.A(HONS) MED
பழையமாணவர்
ஆசிரியர்- கிளி / திருவையாறு ம.வி

ஈழத்து இலக்கிய வரலாற்றின் பிரதான செல்நெறியினை வளர்த்துச் சென்றவரான இரவிகமணி கனக.செந்திநாதன் யாழ்ப்பாணத்தின் குரும்பசிட்டி எனும் கிராமத்தில் கனகசபை பொன்னம்மா தம்பதியருக்கு இரண்டாவது பிள்ளையாக 26-10-1916 ஆம் ஆண்டு பிறந்தார். இவருக்கு பெற்றோர் இட்ட பெயர் திருச்செவ்வேல் ஆனால் செந்திநாதன் என்ற பெயரால் சிறுவயதில் இருந்தே அழைக்கப்பட்டதனால் அப்பெயரே நிலைபெற்றுவிட்டது. செந்திநாதன் என்ற பெயருக்கு முன்னால் தனது தகப்பனாரின் கனக என்ற முன்லெழுத்துக்களை போட்டு கனக செந்திநாதன் என்று வழங்குவது வழக்காகிவிட்டது.

தனது ஆரம்பக்கல்வியினை குரும்பசிட்டியிலுள்ள மகாதேவா வித்தியசாலையில் கற்றார். இடைநிலைக்கல்வி உயர்கல்வியினை முத்துத்தம்பி வித்தியசாலையிலும் கற்று எஸ் எஸ் எல் சி (S.S.L.C) பரீட்சையில் 1935 ஆம் ஆண்டு சித்தியடைந்து ஆசிரியர் தராதர பத்திர வகுப்பிற்கு சேர்வதற்கான பரீட்சையில் சித்தியடைந்தார். இதன் பின்னர் 1937 ஆம் ஆண்டு திருநெல்வேலி ஆசிரியர் கலாசாலையில் புலமை மிக்க விரிவுரையாளர்களான சுவாமிநாதன் உப அதிபர் பொ. கைலாசபதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை ஆகியோரின் வழிகாட்டலால் தனது ஆசிரியப் பயிற்சியினை நிறைவு செய்து தமிழாசிரியராக வெளிவந்து இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் தனது பணியினை மேற்கொண்டுள்ளார்.

தமிழாசிரியராக கடமையாற்றியதுடன் நவீன தமிழ் இலக்கியத்தின் சகல கூறுகளிலும் தனது கைவண்ணத்தைக் காட்டியவர். குரும்பசிட்டியின் இலக்கிய பாரம்பரியத்திற்கு இலக்கணம் வகுத்தவர். 25 சிறுகதைகளையும் 04 நாவல்களையும் 12 நாடகங்களையும் ஈழத்து தமிழ் இலக்கியத்திற்கு வழங்கிய கனக செந்திநாதனின் **"வெண் சங்கு"** என்ற சிறுகதைத் தொகுதியும் விதியின் கை மத்தாப்பு என்ற குறு நாவல்களும் நீதிக்கரங்கள் என்ற கவிதையும் ஒருபிடி சோறு என்ற நாடகமும் என் கதை என்ற சுயசரிதையும் நூல்களாக வெளிவந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை விட ஈழம் தந்த கேசரி என்று ஈழகேசரி பொன்னையா பற்றிய நூலை எழுதியுள்ளார். மற்றும் தனது குருவான பண்டிதமணி கணபதிப்பிள்ளை பற்றி மூன்றாவது கண் என்ற நூலையும் எழுதியுள்ளார். மேலும் ஈழத்து பிரபல சிற்பாசாரியார் திருநெல்வேலி திரு. வி ஆறுமுகம் பற்றிய வாழ்க்கை வரலாறாகிய கலை மடந்தையின் தவப்புதல்வன் என்ற நூலையும் அல்வாயூர் கவிஞர் மு. செல்லையாவின் கவிதைத்தொகுதியின் விமர்சனமாக கவிதை வானில் ஒரு வளர்பிறை என்ற விமர்சன நூலையும் எழுதியுள்ளார்.

மாணவர்களுக்கான இலக்கியப்பாடப்புத்தகமான இலக்கிய மஞ்சரி 4ம் 5ம் வகுப்புப்புத்தகங்களையும் பண்டிதர் வ. நடராசாவுடன் கனக செந்திநாதன் இணைந்து எழுதியுள்ளார். இவற்றை விட சிறுவர் கவிநயம் என்ற சிறுவர்களுக்கான கவிதை நூலையும் ஈழத்து தமிழ் நூல் வழிகாட்டி என்னும் 19 ஆம் நூற்றாண்டிற்குப்பின் இலங்கையில் வெளியான தமிழ் நூல்கள் பற்றிய விபரங்களின் தொகுப்பாக இது அமைந்துள்ளது.

இவரது ஆய்வு நூலாக ஈழத்து இலக்கிய வளர்ச்சி என்னும் நூல் காணப்படுகின்றது. இது ஈழத்து இலக்கியம் பற்றி அறிய விளைவோருக்கும் இலக்கிய வரலாற்று ஆசிரியர்களுக்கும் பலமான அத்திவாரமாக அமைந்துள்ளது. இந் நூலில் ஈழத்து இலக்கிய வரலாற்றை பத்துப் பத்து ஆண்டுகளாக வகைப்படுத்தி ஆராய்ந்துள்ளார். முதன்முதல் காலப்பகுப்பிற்கு உட்படுத்தி ஈழத்து இலக்கியங்களை ஆய்வு செய்தவர் என்ற பெருமையும் இவருக்குரியது.

ஈழத்து இலக்கிய வளர்ச்சி எனும் நூலை எழுதியதன் காரணத்தை கனக செந்தி நாதன் கோபுர வானில் எனும் முகவுரையால் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "ஈழத்து இலக்கிய வளர்ச்சியைப்பற்றிய நேர்மையான வரலாறு எழுதப்படல் வேண்டும் என்கின்ற வேணவாவே என் நெஞ்சமெல்லாம் நிறைந்திருந்தது. மனிதனிடம் இயல்பாகவுள்ள பந்தபாச உணர்வுகளை ஓரளவுக்கேனும் என்னிடமிருந்து பிரித்து வைத்து வரலாற்று ஆசிரியரின் பொறுப்புணர்ச்சியுடன் அந்தரக்கயிற்றின் நடக்கும் குழைக்கூத்தாட்டியின் நிதானத்துடன் இதனை எழுதியுள்ளேன்." ஏன்று நேர்மையுடன் குறிப்பிடும் திறன் கவனிக்கத்தக்கது.

கனக செந்திநாதன் பல்வேறு கூட்டங்கள் நூல் வெளியீடுகள் என்பவற்றிற்கு தலைமை தாங்கி நடாத்தியதுடன் சிறந்த மேடைப்பேச்சாளராகவும் திகழ்ந்தவர். தமிழாசிரியராக இருந்து பல மாணவர்களை உருவாக்கயதுடன் குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் வளர்ச்சிக்கு தொண்டாற்றினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமர்சனத்துறையில் இரகசிகமணி விமர்சனங்கள் காலத்தால் அழியாததாக அமைகின்றன. தனக்கென்றொருபாணியை பின்பற்றி விமர்சனங்களை மேற்கொண்டார். இரசனை முறை விமர்சனத்தை கையாண்டார் இதனால்த்தான் இரகசிகமணி என்ற பட்டத்தையும் பெற்றார். பழைமைப்பெண் வாதிகள் நவீனத்தை எதிர்கொண்ட பொழுது கையாண்ட முறை இரசனை முறை விமர்சனமாகும்.

எமது பாரம்பரியத்தின் நவீனத்திற்கு முன் இருந்தவற்றை சிலாகித்துப் பேசி வந்தனர். அவ்வாறு சிலாகித்துப்பேசும் பொழுது நவீனத்தன்மைக்கு உரியதான நவீனத்துவத்தை நாசூக்காக கண்டித்தமை குறிப்பிடலாம். டி. கே சிதம்பரநாத முதலியாரையும் கனக செந்திநாதனையும் உதாரணமாக குறிப்பிடலாம். இவர்கள் இவரின் பெயருக்கு முன்னாலும் இரசிகமணி என்ற பெயர் சூட்டிக்கொண்டதே இதற்கு சான்றாகும்.

கனக செந்தில் நாதனது சிறுகதைகள் தனித்துவமானது சமூகத்தை குறிப்பாக யாழ்ப்பாண சமூக பண்பாட்டு அம்சங்களை தனது கதைகளூடாக மேற்கிளம்பச்செய்தவர். தனது சிறுகதைகள் பற்றி அவரே பின்வருமாறு குறிப்பிடுகின்றார். **"எந்த இலக்கிய கோட்பாடுகளுள்ளும் என்னை சிக்கவைக்காமலும் நான் நல்லவை என்று எண்ணியவற்றை சித்தரித்து கதைகளை புனைந்திருக்கின்றேன். பழைய யாழ்ப்பாணக்கலாசாரம் எனது புதிய சிறுகதைகளுக்கு வலுவான பகைப்புலமாக அமைந்திருக்கின்றது. புராணப்படிப்பு, தாளக்காவடி, அன்னதானம், நாட்டுக்கூத்து சமரகவி, காணிப்பற்று என்பவற்றில் துடிக்கும் யாழ்ப்பாணக்கலாசாரம் இக்கால போலித்தன்மைகளோடு யாழ்ப்பாணத்தில் வேரோடி இருக்கின்றது. இக்கலாசாரத்தை படம் பிடித்து கதையாக்கி காட்டவேண்டும்."**

என்று கூறுவதில் இருந்து அவரது சிறுகதை பற்றிய நிலைப்பாட்டை அறிய முடிகின்றது.

விதியின் கை வெறும்பானை ஆகிய நாவல்களை எழுதியுள்ளார். இவை சமுதாய அமைப்பிலும் மனித உறவிலும் மாற்றங்கள் தோன்றி வளர்வதற்கும் ஆக்க இலக்கிய கர்த்தாக்களின் உணர்வினை தாங்குவதற்கும் ஏற்றாற்போல் தனது நாவல்களின் சமுதாய பிரச்சனைகளையும் சமூகப் பழக்கவழக்கங்கள் சடங்குகள் போன்றவற்றை முன்னிறுத்திப் படைத்துள்ளார் எனலாம்.

மாணவர்களிடத்தே இரசனைத்தன்மையை வளர்க்கும் வகையிலும் மொழி விருத்தி ஏற்படக்கூடிய வகையிலும், சிறுவர் உளவியலைப்புரிந்து கொண்டும் சிறுவர் பாடல்களை எழுதியுள்ளார். வகை மாதிரிக்கு பின்வரும் பாடலைச் சுட்டிக்காட்டலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாட்டி அழுகின்றாள்

சிறிய பூச்சி பிடிக்கவே
பெரிய பல்லி ஊர்ந்தது

பெரிய பல்லி பிடிக்கவே
கரிய பூனை பதிங்கிற்கு

கரிய பூனை பிடிக்கவே
வெள்ளை நாயும் பாய்ந்தது

வெள்ளை நாயைத் துரத்தவே
மெல்லப்பாட்டி எறிந்தனள்

பாட்டி எறிந்த தடியினால்
பானை சட்டி உடைந்ததே

காட்டிக் காட்டி அழுகிறாள்
கவலை தீர்ப்பார் இல்லையே

இப்பாடல் தரம்-2 ஆசிரியர் வழிகாட்டியில் இடம்பெற்றுள்ளது. கனக செந்தி நாதனுக்கு இலக்கிய உலகில் எதிரிகள் என்று எவருமில்லை மாற்றுக்கருத்து உடையவர்களையும் அவர்களது ஆற்றல்களையும் போற்றிமதிக்கும் பண்புடையவர். அந்தக்காலத்து ஏனைய படைப்பாளிகளுடன் சுமுகமாக உறவை பேணிவந்தவர்.

கனக செந்திநாதன் பற்றி பேராசிரியர் கா.சிவத்தம்பி குறிப்பிடும் போது "முன்னோர் சென்ற மரபைப் போற்றிப் பேணவேண்டும் என்பது கனக செந்திநாதனின் வாதம் அந்தளவில் கணபதிப்பிள்ளையின் நவீன இலக்கிய வழி நின்ற வாரிசு தான்" எனக் கூறியுள்ளமை பண்டிதமணியின் சாயல் கனக செந்தில் நாதனிடம் காணப்படுவதாக குறிப்பிடுகின்றார். ஏனெனில் கனக செந்தில்நாதனின் ஆசிரியராக இருந்தவர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை என்பது குறிப்பிடத்தக்கது.

16-11-1977 ஆம் ஆண்டு இரகசிகமணி கனக செந்தில்நாதன் இவ்வுலக வாழ்வை நீத்தார். தான்வாழ்ந்த வாழ்க்கையை இலக்கியத்திற்காகவும், தமிழிற்காகவும் வாழ்ந்து ஈழத்து இலக்கிய வரலாற்றில் இடம் பிடித்ததுடன் இன்னும் நம்மிடையே வாழ்ந்துகொண்டிருக்கின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிற்பிகளை உருவாக்கும் சிகரங்கள் பாடசாலை

-திரு பொன்னையா பரமேஸ்வரன்-
ஆசிரியர்

பாடசாலை என்பது பள்ளிச்சிறார்களை அரவணைத்து அள்ளி எடுத்து அமுதமொழியினை இனிதே ஊட்டி அறிவு என்னும் தேடலைத்தேட ஊக்குவித்துச் சாதனைகள் பல படைக்கும் பண்பட்ட நிறுவனமாகத் திகழ்வது யாவரும் அறிந்த உண்மையாகும். கல்வியானது காலத்தின் தேவையாகவும் சமுதாயத்தின் கண்ணாடியாகவும் விளங்குகின்றது. கண்ணாடியின் முன்னின்று பார்க்கும் ஒருவரை எவ்வாறு துல்லியமாகத் தெட்டத்தெளிவாக காட்டுகின்றதோ அவ்வாறே கல்வி கற்றவர்களையும் வெளிப்படையாக காட்டி நிற்கும் கண்ணாடி போல் பாடசாலை திகழ்கின்றன. என்றே கூறிக்கொள்ளலாம். இவ்வாறாக சமூகத்தின் சிற்பிகளாக கற்றவர்களை உருவாக்குகின்ற தொரு நூதனசாலையாக கல்விக்கூடங்கள் விளங்குகின்றன.

ஒரு குழந்தையானது மண்ணிலே பிறந்து புரண்டு தவழ்ந்து தளர்நடை பயின்று மழலை மொழி பேசி முன்பள்ளிப்பருவத்தைத் தாண்டித் தரம் ஒன்றில் காலடி எடுத்து வைத்து பாடசாலை எனும் புதிய வளாகத்திற்குள் நுழைகின்றான். அவனை அன்போடு கிள்ளை மொழி பேசி அரவணைத்துக் கல்வி எனும் வித்தை விதைக்க வழிகோலும் ஓர் இடமாக பாடசாலைகள் திகழ்கின்றன. பாடசாலைக்கல்வியானது இன்று நேற்று ஆரம்பமானது ஒன்றல்ல அது பண்டைக்காலம் தொட்டுப் பழந்தமிழர்களால் பயிலப்பட்டு வந்த பாரம்பரிய கல்வி என்றே கூறிக்கொள்ளலாம்.

பண்டைய காலங்களிலே குருகுலக்கல்வி முறை மூலமாகக் கல்வியானது பயிலப்பட்டு வந்தன. அக்காலக்கல்வி முறையிலே ஒழுக்கம் பண்பாடு பழக்கவழக்கம் பொறுமை நிதானம் கீழ்ப்படிவு பணிவிடைசெய்தல் நேர்மை தவறாமை முதியோரை மதித்தல் முதலியன இன்னோரன்ன விடயங்கள் முதன்மையாக விளங்கின. இவற்றை அடிநாதமாகக் கொண்டே போதனைகள் வித்தைகள் கலைகள் என்பன பயிலப்பட்டு வந்தன. இவற்றுக்கெல்லாம் அடிப்படையாகத்திகழ்ந்தவை குருகுலங்களே ஆகும். இக்குருகுலங்கள் கூடக்கிட்டத்தட்ட இப்பாடசாலைகளை ஒத்தவையாகச் சமுதாயத்திலே பல சிற்பிகளை உருவாக்கத் தவறவில்லை எனலாம். அந்த வகையில் அவற்றுள் வகைமாதிரியாக ஏகலைவன் அர்ச்சுணன் என்போரைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம். பண்டைக்காலங்களில் நிலவி வந்த கல்வி முறைமைகளை அடியொற்றியே தற்காலக்கல்வி முறையானது பின்பற்றப்பட்டு வந்துள்ளது. ஆனால் அவை காலப்போக்கில் அருகி பல்வேறு மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டு புதிய வடிவத்தில் பர்ணமித்து இருப்பதைக்காணலாம்.

அந்த வகையிலே இக்காலக்கல்வியை வழங்குகின்ற பாடசாலைகள் அதி உன்னதமான அளப்பெரிய சேவையை ஆற்றி வருவதைக் காணலாம். மனிதனை மனிதனாக வாழவைக்கின்ற இடமாகப் அவை விளங்குகின்றன. ஆரம்பக்கல்வியாகிய அத்திவாரக்கல்வியை ஊட்டுகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடமாக பாடசாலைகள் திகழ்கின்றன. கல்விக்கு அடிப்படைத்தளம் ஆரம்பக்கல்வி என்பதனை நாம் என்றும் மறக்கவோ மறுக்கவோ முடியாது. அந்தளவிற்கு அடிப்படைக்கல்வியை அதாவது அ... ஆ...,... என ஆரம்பித்து இருநூற்று நாற்பத்தேழு எழுத்துக்களைப் புகட்டி அவற்றினூடே சொல் வாக்கியம் பந்தியென விரிவுபட்ட நிலையில் மொழியை விருத்தி செய்வதில் பாடசாலையானது உயர்ந்து நிற்கின்றது. அவ்வாறே எண்கணிதம் ஆங்கிலம் சுற்றாடல் சிங்களம் வரைதல் எனக் கற்றல் செயல் ஒழுங்குகளை நெறிப்படுத்துகின்ற ஒரு இடமாகவும் விளங்குகின்றன.

இவை மட்டுமன்றி இடைநிலைக்கல்வி உயர்கல்வி முதலியவற்றை சிறப்பான முறையில் போதிக்கின்ற ஒரு இடமாகவும் காணப்படுகின்றது. பாடசாலைக் கல்வியானது ஒரு தனிமனிதனை மனிதனாக வாழவைப்பதற்கு வழிகாட்டியாகத் திகழ்கின்றது. அதாவது இணைப்பாடவிதமான செயற்பாடுகளினூடாக வெற்றி தோல்விகளை சமமாக மதிக்கும் திறன் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்தல் அன்பு காருண்யம் தலைமைத்துவம் நேரம் தவறாமை போட்டிகளில் பங்குகொள்கின்ற மனப்பாங்கு ஏனையோரை மதிக்கின்ற பண்புகள் முதலியவற்றை மாணவர் மத்தியிலே விதைப்பதன் மூலம் அவர்கள் சமுதாயத்திலே நல்லதொரு சிற்பிகளாகத் திகழ வழிகோலுகின்றன.

பாடசாலைக்கல்வியை முடித்த ஒருவன் தனது எதிர்கால வாழ்க்கையை நல்லதொரு வாழ்க்கையை பயணிப்பதற்கான செயல் ஒழுங்குகளை விரிவுபடுத்தக்கூடியவனாக ஆற்றுப்படுத்துகின்றான். அந்தவகையில் பாடசாலைகளைப் பொறுத்தவரையில் எத்தனையோ பட்டதாரிகள், பொறியியலாளர்கள், விஞ்ஞானிகள், வைத்தியர்கள், எழுதுவினைஞர்கள் என எண்ணிலடங்காதவர்களை உருவாக்குவதன் மூலம் பல சிற்பிகள் உருவாகுவதனைக் காணலாம். இச்சிற்பிகள் யாவும் சமுதாயத்திற்கு உகந்தவர்களாகவும் உயிர்த்துடிப்பு உடையவர்களாகவும் திகழ்கின்றனர். இதனூடாக நல்லதொரு சமுதாயக்கட்டமைப்பு உருவாவதற்கும் பாடசாலைகளே வித்திடுவதனை நாம் உணரலாம். கல்வி ரீதியிலான சாதனைகளாயினும் சரி விளையாட்டுத்துறை ரீதியிலான சாதனைகளாயினும் சரி பேச்சு இசை நாடகம் நடனம் கட்டுரையாக்கம் முதலிய நிகழ்வுகளே சாதனைகளை படைப்பதற்கு மாணவர்களை பயிற்று விற்கின்ற களமாக பாடசாலைகள் திகழ்கின்றன.

**"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"**
**"கல்விக்கூடங்கள் இல்லாத ஊரிலே குடியிருக்கவேண்டாம்"**

எனும் முதுமொழிக்கு இணங்க கல்விக்குக் கொடுக்கின்ற முன்னுரிமையை நாம் அறியக்கூடியதாகவுள்ளது. பாடசாலைகள் அறிவு எனும் கல்வியைப்போக்க தீனி போடுகின்ற ஒப்பற்ற இடமாக திகழ்கின்றது. **"தேடல் உள்ள உயிர்களுக்கே தினமும் பசியிருக்கும்"** என்பது போல கல்வியைக்கற்றுக்கொண்டு இருப்பவனுக்கே அறிவு எனும் தேடல் இருக்கும். அவ்வறிவினைத்தேடுவதற்குரிய தூண்டுகோலாக பாடசாலைகள் மிளிர்கின்றன.

இவ்வாறாக பாடசாலையானது உலகிலுள்ள மூலைமுடுக்குகளில் வாழுகின்ற மக்களின் மொழி, இன, மத பேதமின்றி எல்லோர்க்கும் பொதுவான கல்வியை ஊட்டி பல்தரப்பட்ட சிற்பிகளை உருவாக்கி சிகரங்களாக விளங்குவதனை நாம் அன்று தொட்டு இன்று வரை காணக்கூடியதாவவுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BUDS TO BLOOM

-Mrs.Y.Karthiyayani-
Teacher
Kn/Kanakapuram M.V

Teaching is a vocation and it is built on trust, Children are given to us as contract of trust. Our responsibility as educators is to keep up to that trust and help them to uplift their lives.

The students we get into our hands are the most important human resource in the field of education. They are the life blood of a country. It is in our hands to make them or mar them.

Each pupil is a unique person with inborn talents and skills. They are the buds with potentials. It is our duty to help them to grow gradually and make them bloom with different fragrance becoming blessing to the society they live in.

As a result they will become responsible citizens with well balanced personalities which may enable them to live in peace and harmony in the society.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைமடு நீர்த்தேக்கம்

– முத்து. சிவமோகன் –
செயலாளர்
இரணைமடு கமக்காரர் அமைப்புக்களின் சம்மேளனம்
கிளிநொச்சி

## 01. அமைவிடம்

இக்குளமானது கிளிநொச்சி நகரில் யாழ் - கண்டி வீதியில் 157¾ மைல் கல்லால் கிழக்குப் பக்கமாக திரும்பி வில்சன் வீதி வழியாக 4½ மைல் தூரம் பயணித்தால் குளக்கட்டு காணப்படும்.

ஆள்கூறு :- A/19 (8.35 x 6.57)

## 02. ஆரம்ப கட்டுமானம்

இது நீர்ப்பாசன திணைக்களத்தினால் முதன் முதலாக கட்டப்பட்ட புதுக்குளம். இதற்கான ஆரம்ப அறிக்கையையும் மதிப்பீட்டினையும் நீர்ப்பாசன பணிப்பாளராக இருந்த H.T.S வாட் அவர்களால் 1902ம் ஆண்டு 26 நீரினைத் தேக்குவதற்காக தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டது. இக் குள வேலை 1906 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 1922ம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. எல்லா வேலைகளும் முன்னணி தொழிலாளர் படையணியினால் முற்றுமுழுதான மனித வலுவினால் நிறைவேற்றப்பட்டது. இக் குளமானது கனகராயன் ஆற்றில் ஆதிகாலத்தில் இருந்த இரண்டு மடுக்களை இணைத்ததன் மூலம் **ஈர் அணைமடு** உருவாக்கப்பட்டது.

## 03. பிற்கால அபிவிருத்தி

இக் குளமானது 1951ம் ஆண்டு 30 அடியாக உயர்த்தப்பட்டதுடன் மேலதிக துருசுகளான வலதுகரை துருசும் கட்டப்பட்டது. இதன்போது மேலதிக பாய்ச்சல் நிலங்கள் வலது, இடது கரை வாய்க்கால்களில் உள்ளவாங்கப்பட்டது.

## 04. குளத் தரவுகள்

**4.1 நீரேந்து பிரதேசம்** :- **906 சதுர கிலோமீற்றர்**

**4.2 குளக்கட்டின் நீளம் (அணை)** :- **9850 அடி**

**4.3 வான்**

4.3.1 இயல்பு - **விழுதல் வான்**

4.3.2 அமைவு - **இடதுகரை முடிவு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.3.3 நீளம் - **600 அடி**

**4.3.4** வலது கரை - **20.1 மீற்றர்**

**உடைப்புப் பகுதி (இயற்கை)**

**4.4 துருசு**

| | | | |
|---|---|---|---|
| 4.4.1 அமைவு | - | **இடதுகரை (LB)** | **வலதுகரை (RB)** |
| 4.4.2 அளவு | - | 5' x 4' | 4' x 2' 8" |
| 4.4.3 | | | |

## 1948 - 1952 காலப்பகுதி

- குளத்தின் நீரமட்டம் கடல் மட்டத்திலிருந்து 94.99' ஆகவும் (30') நீர் கொள்ளளவு 82,400 ஏக்கர் அடியாக கட்டப்பட்டது.

## 1954 - 1956 காலப்பகுதி

- குளத்தின் நீரமட்டம் கடல் மட்டத்திலிருந்து 96.94' ஆகவும் (32') நீர் கொள்ளளவு 93,500 ஏக்கர் அடியாக கட்டப்பட்டது.

## 1966 - 1967 காலப்பகுதி

- திருவையாறு ஏற்று நீர்ப்பாசனத்தின் முதலாம் கட்டம் 306 ஏக்கர்களுக்கு (102 குடும்பங்களுக்கு) நீர் வழங்கலுக்கு ஸ்தாபிக்கப்பட்டது.

## 1975 - 1977 காலப்பகுதி

- குளத்தின் நீரமட்டம் கடல் மட்டத்திலிருந்து 100.06' ஆகவும் (34') நீர் கொள்ளளவு 106,500 ஏக்கர் அடியாக அதிகரிக்கப்பட்டது.

## 1976 - 1977 காலப்பகுதி

- திருவையாறு ஏற்று நீர்ப்பாசனத்தின் 2ம், 3ம், 4ம் கட்டங்கள் ஸ்தாபிக்கப்பட்டது. மொத்தமாக 1,400 ஏக்கர் மேட்டுநில காணிகளுக்கு நீர் விநியோகிக்க திட்டமிடப்பட்டது.

## 1983ம் ஆண்டு காலப்பகுதி

- பாரிய மண் சரிவு ஏற்பட்டு 1,000ற்கு மேற்பட்ட விவசாயிகளின் பல நாள் ஒத்துழைப்புடன் 100,000ற்கு மேற்பட்ட மண் மூடைகள் அடுக்கி கட்டு பாதுகாக்கப்பட்டது.

## 1986 - 1987 காலப்பகுதி

- திருவையாறு ஏற்று நீர்ப்பாசன திட்டம் நடைமுறையில் இருந்து கைவிடப்பட்டது.

**4.5 வாய்க்கால்**

- பிரதான வாய்க்காலின் நீளம் :- 30,480 மீற்றர்
- கிளை வாய்க்காலின் நீளம் :- 13,860 மீற்றர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பிரிவு வாய்க்காலின் நீளம் :- 8,370 மீற்றர்
- வயல் வாய்க்காலின் நீளம் :- 156,540 மீற்றர்

## 05. நீரியல் தரவுகள்

- நீர்த்தேக்கத்தின் பெயர் :- இரணைமடு
- ஆள்கூறு :- A/19 (8.35 x 6.57)
- நீர்ப்பாசன பிரதிப் பணிப்பாளர் பிராந்தியம் :- கிளிநொச்சி
- மாவட்டம் :- கிளிநொச்சி
- நதிப்படுக்கை :- கனகராயன் ஆறு
- மொத்த நீர்க் கொள்ளளவு :- 106,500 ஏக்கர் அடி
- நீரேந்து பரப்பு :- 906 சதுர கிலோ மீற்றர்
- விவசாய பரப்பளவு :- 8354 ஹெக்ரேயர்
- நீரேந்து சாய்வு :- 1%ற்கும் குறைவு
- நீர் கொண்டுவரும் ஆற்றின் நீளம் :- 90 கி.மீ
- பிரதேசத்தின் தன்மை :- வரண்டது, சிறுபகுதி மத்திமம்

### நீர்த்தேக்கம்

- பூரண நீர் விநியோக மட்டம் :- **30.3 மீற்றர் - கடல் மட்டத்திலிருந்து (101 அடி)**
- அதிஉயர் வெள்ள நீர்மட்டம் :- **32.57 மீற்றர் - கடல் மட்டத்திலிருந்து (108.5')**
- பூரண நீர் விநியோக மட்டத்தின் பரப்பளவு :- **27,680 ஹெக்ரேயர்**
- உபயோகிக்கப்படாத நீர்க் கொள்ளளவு :- **இல்லை**
- அணைக்கட்டு மேல் மட்டம் :- **33.6 மீற்றர் - கடல் மட்டத்திலிருந்து (112')**
- மேல் மட்ட அகலம் :- **அதி உயரம் 4.2 மீற்றர் (14')**
- அதி உயரம் :- **13.5 மீற்றர் (45')**
- நீளம் :- **2,955 மீற்றர் (9850')**
- உட் பக்க சாய்வு :- **1.2 மீற்றர்**
- வெளிப் பக்க சாய்வு :- **1.2 மீற்றர்**

## 06. குடியேற்றம்

- கணேசபுரம் :- 1936
- உருத்திரபுரம் 1ம் வாய்க்கால் :- 1950
- உருத்திரபுரம் 8ம் வாய்க்கால் :- 1952
- வட்டக்கச்சி குடியேற்றம் :- 1953
- இராமநாதபுரம் :- 1955


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வட்டக்கச்சி EYS :- 1953
- றை ஆறு ம.வ.திட்டம் :- 1952
- வெளிக்கண்டல் ம.வ.திட்டம் :- 1956
- வில்சன் வீதி ம.வ. திட்டம் :- 1959
- திருவையாறு பகுதி 1 ஏற்று நீர்ப்பாசனம் :- 1966
- திருவையாறு பகுதி 2,3 ஏற்று நீர்ப்பாசனம் :- 1972
- வட்டக்கச்சி இளைஞர் குடியேற்றத் திட்டம் :- 1955
- உமையாள்புரம் கி.வி திட்டம் :- 1961
- கோரக்கன்கட்டு கி.வி திட்டம் :- 1968
- வெலிக்கண்டல் கி.வி திட்டம் :- 1966
- ஊரியான் கி.வி திட்டம் :- 1967
- பரந்தன் ம.வ. திடடம் :- 1959
- கோரக்கன்கட்டு ம.வ. திட்டம் :- 1960
- பரந்தன் வெளி ம.வ திட்டம் :- 1960

## 07. நீர் பெறும் பரப்பளவு

| | | | |
|---|---|---|---|
| 01 | வட்டக்கச்சி | வலதுகரை | 1,759 ஏக்கர் |
| 02 | இராமநாதபுரம் | வலதுகரை | 1,482 ஏக்கர் |
| 03 | D1, D2, D3, மகிழங்காட்டுப்பகுதி | இடதுகரை | 1,773 ஏக்கர் |
| 04 | D3, பன்னங்கண்டி | இடதுகரை | 2,680 ஏக்கர் |
| 05 | D3, No-05 முரசுமோட்டை | இடதுகரை | 2,550 ஏக்கர் |
| 06 | RB - 04, D3, ஊரியான் | இடதுகரை | 2,092 ஏக்கர் |
| 07 | D4, D4A றைஆறுஇ கணேசபுரம் | இடதுகரை | 1,740 ஏக்கா |
| 08 | D5 பரந்தன் | இடதுகரை | 1,764 ஏக்கர் |
| 09 | D5, D6, D7, கிளிநொச்சி | இடதுகரை | 2,598 ஏக்கர் |
| 10 | D8 பெரிய பரந்தன் | இடதுகரை | 1,270 ஏக்கர் |
| 11 | D9, D10 உருத்திரபுரம் | இடதுகரை | 1,997 ஏக்கர் |
| 12 | திருவையாறு மேட்டு நிலம் | இடதுகரை | 1,113 ஏக்கர் |
| | | | **22,818 ஏக்கர்** |

## 08. 2005 - 2006 காலப்பகுதி

- உலக வங்கியின் சுமார் 100 கோடி நிதி உதவியுடன் வடகிழக்கு நீர்ப்பாசன அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அணைக்கட்டு வேலைகள் மீள்நிர்மானம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- குளத்தின் நீர் மட்டம் கடல் மட்டத்திலிருந்து 102.96 அடியாக (36') அதிகரிப்பதற்கும் நீர் கொள்ளளவு 120,000 ஏக்கர் அடியாக அதிகரிப்பதற்கும் ஆய்வு வேலைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவடைந்து வேலைகள் ஒப்பந்தக்காரர்களிடம் பாரம் கொடுக்கப்பட்டது. எனினும் துரதிஸ்ரவசமாக (கடந்த காலத்தில் ஏற்பட்ட போர்ச் சூழ் நிலை) அந்தக் காலப்பகுதியில் (ரூபா 256 மில்லியன் பெறுமதியான) அணைக்கட்டு வேலைகள் ஆரம்பிக்க முடியவில்லை.

## 09. 2013 - 2015 காலப்பகுதி

- மறுபடியும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் நீர் கொள்ளளவு 120,000 ஏக்கர் அடியாக அதிகரிப்பதற்கும் நீர் மட்டம் கடல் மட்டத்திலிருந்து 102.96 அடியாக (36') அதிகரிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

- அத்துடன் கைவிடப்பட்ட திருவையாறு ஏற்று நீர்ப்பாசன திட்டம் புனரமைப்பு செய்யப்பட்டு மேட்டு நில விவசாயத்திற்கு நிர்ப்பாசன வசதிகள் செய்து கொடுப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- கலிங்கு வாய்க்காலிற்கு குறுக்காக 150 மீற்றர் நீளமான கொங்கிறீற் பாலம் புதிதாக அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

- மேலும் 03 வான் கதவுகள் புதிதாக பொருத்தப்படுவதுடன் அனைத்து வான் கதவுகளும் மின்சார தன்னியக்கி வான் கதவுகளாக மாற்றியமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

- மேற்படி வேலைகள் யாவும் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் இரணைமடுக் குளத்தின் கொள்ளளவு 120,000 ஏக்கர் அடியாக அதிகரிப்பதன் மூலம் அதில் வருடமொன்றுக்கு 12,000 ஏக்கர் அடி நீரை யாழ் மாவட்ட மக்களுக்கு குடிநீராக வழங்குவதற்கு நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை செயற்றிட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

**10** மேற்படி நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் திட்டத்தினால் இரணைமடு விவசாய சமூகத்திடம் எழுந்த சந்தேகங்களும் பின்வரும் வினாக்களாக திட்ட அதிகாரிகளிடம் வினாவப்பட்ட போது பதில் கிடைக்காமல் ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் இரணைமடுவின் கீழான 22 கமக்கார அமைப்புக்களும் எழுத்து மூலம் முறையிட்டோம். ஆசிய அபிவிருத்தி வங்கியால் திட்டம் இடை நிறுத்தப்பட்டு மீள் ஆய்வுக்கும் விவசாய சமூகத்தின் ஒப்புதலுக்கும் விடப்பட்டது. விவசாய சமூகத்திடம் உடன்பாடுகள் எட்டமுடியாமல் வட மாகாண அரசிடம் திட்ட விடயம் ஒப்படைக்கப்பட்டு, முதலமைச்சர் அவர்களால் விவசாய நீர்ப்பாசன அமைச்சர், சுகாதார அமைச்சர் ஆகியோரின் கண்காணிப்பின் கீழ் பல் நோக்கு ஆய்வு குழுவை நியமித்தார். அக் குழுவின் ஆய்வறிக்கை வடமாகாண முதலமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்டு அறிக்கை ஆசிய அபிவிருத்தி வங்கி, மத்திய அரசு ஆகியோருக்கு சமர்ப்பிக்கப்பட்டு திட்டம் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. விவசாயிகளின் சந்தேகங்களும் பல் நோக்கு குழுவின் ஆய்வறிக்கையும் அடுத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. விவசாயிகளுக்கு ஏற்பட்ட பாரிய தாக்கங்கள்

- பருவ பெயர்ச்சி மழை மூலம் கிடைக்கும் நீர் எல்லாக் காலத்திலும் போதுமானதாக இருப்பதில்லை.
- 1992ல் 6,000 ஆக இருந்த நீர்ப் பங்காளர்கள் இன்று 9,000ற்கும் மேற்பட்ட பங்காளர்களாக அதிகரித்திருப்பதனால் நீரின் தேவை இயல்பாக அதிகரித்துள்ளது.
- குளத்தின் கீழ் பாய்ச்சலிற்கு இதுவரை உட்படுத்தப்படாத 12,000 வரையான ஏக்கர் வயல்நிலங்கள் குளத்தின் அபிவிருத்தியின் பின் நீரை எதிர்பாத்திருக்கின்றன.

## 12. இணக்கப்பாடு எட்ட முடியாமல் போனவை

- ✓ இரணைமடு விவசாயிகளை ஒரு தரப்பாக கருதாமை.
- ✓ சிறு போகத்தில் நெற் செய்கையை நிறுத்தி வயல்காணியில் மாற்றுப்பயிர்ச்செய்கையை முன்மொழிந்தமை.
- ✓ நீர்ப்பாசன திணைக்களத்தின் மற்றும் விவசாயிகளின் சம்மதம் இன்றி நீர் அகத்துறிஞ்சும் இடத்தினை இரணைமடுக் குளத்திற்குள் தீர்மானித்தமை.
- ✓ ஒப்பந்தத்தை ஆங்கிலத்தில் ஒப்பந்தம் எனவும் தமிழில் புரிந்துணர்வு ஒப்பந்தம் என குறிப்பிட்டமை.
- ✓ யாழிற்கு நீர் வழங்கினால் மட்டுமே குளப் புனரமைப்பு எனத் தெரிவித்தமை. (1977 ஆம் ஆண்டு குளம் 2' ஆக உயர்த்துவதென தீர்மானிக்கப்பட்டு வான் கதவுகள் அதற்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டுள்ளது)
- ✓ மேலதிக நீர் என குறிப்பிடப்படுவது எது?
- ✓ வேறு நிதி மூலங்கள் பெறுவதற்கு தடையாக இருத்தல். (உதாரணம் - உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கிகளின் பாரிய குளங்களுக்கான குளக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர் வளத் திட்டம்)
- ✓ இத் திட்டத்தை நடைமுறைப்படுத்த மகாவலியை இரணைமடுவிற்கு கொண்டுவர முயற்சிக்கின்றமை.
- ✓ இரணைமடு விவசாயிகள் பற்றிய சமூக ஆய்வு மற்றும் குளம் தொடர்பான சுற்றுச்சூழல் ஆய்வு இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.
- ✓ எதுவித ஆய்வும் மேற்கொள்ளாமல் இரணைமடு தான் ஒரே ஒரு நீர்மூலமென ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு பரிந்துரைத்தமை.
- ✓ இது யாழிற்கான குடிநீர் திட்டமா? அல்லது நீர் வழங்கும் திட்டமா? அங்கு இரண்டாம் தர பாவனைக்கான நீர் இல்லையா? இது வியாபார நோக்கம் கொண்டதா?
- ✓ இத் திட்டத்தினால் விவசாய சமூகத்திற்கு எதுவித பிரச்சினையும் இல்லை என ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு பரிந்துரைத்தமை.
- ✓ யாழ்ப்பாணத்துக்கான ஒரே நீர்மூலம் இரணைமடுக்குளம் தான் என எதுவித ஆய்வும் இன்றி ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு அறிக்கையிட்டமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ✓ இரணைமடுவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு இடையூறு இன்றி தொடர்ந்து நீர்வழங்குவதென ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு உறுதிப்படுத்தியமை.
- ✓ சிறுபோகத்தில் நெற்செய்கையை நிறுத்தி மாற்றுப் பயிர்ச்செய்கையை உறுதிப்படுத்தி அதன் மூலம் மீதப்படுத்தப்பட்ட நீரை நம்பியே யாழ்ப்பாணத்துக்கு நீர்வழங்கல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை.
- ✓ அங்கிகரிக்கப்படாத ஒரு விவசாயப் பிரதிநிதியிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டமை.
- ✓ தமிழ் புரிந்துணர்வு உடன்படிக்கையில் குடிநீர் திட்டம் எனவும் ஆங்கிலத்திலுள்ள மூல ஒப்பந்தத்தில் நீர் வழங்கல் எனவும் குறிப்பிட்டுள்ளமை.
- ✓ நாளொன்றுக்கு ஒரு நபருக்கு 163 லீற்றர் நீர் தேவை என நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை அளவீடு செய்துள்ளது. இது சுத்தமான குடி நீருக்கான அளவீடா?
- ✓ வளர்ந்து வரும் நகரம் என்கின்ற வகையில் கிளிநொச்சியின் பல்வேறு தேவைகளுக்கும் இரணைமடுவையே நம்பியுள்ளோம்.
- ✓ எமது சுய வளங்களை நம்பி வாழ்வதையே நாம் விரும்புகின்றோம். மகாவலி போன்ற பிற வளங்கள் எம்மை பிறரில் தங்கி வாழ வைக்கும் நிலைக்கு ஆளாக்கி விடும்.

## 13. வடமாகாண முதலமைச்சரால் நியமிக்கப்பட்ட பல்நோக்கு ஆய்வுக்குழுவின் அறிக்கை

**வடமாகாண முதலமைச்சரால் நியமிக்கப்பட்ட பல் நோக்கு ஆய்வுக்குழுவின் அறிக்கை - 14.02.2014**

### அறிமுகம்

1. யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புத் திட்டம் என்றழைக்கப்படும் இரணைமடுவிலிருந்து நீரைப் பெற்று வீட்டுத்தேவைகளுக்காக நீரை விநியோகிக்கும் திட்டத்தின் பகுதியின் அமுலாக்கத்தில் இரணைமடுக் குளத்தின் கீழ்பாசன வசதி பெறும் விவசாயிகளுக்கும் திட்ட அமுலாக்கற் பிரிவினருக்குமிடையிலான முரண்பாடுகள் அதிகரித்து, தொடர்ந்து விவசாயிகள் தமது நீர் வளத்தை அபகரிக்க வேண்டாம் என வலியுறுத்தத் தொடங்கினர். விவசாயிகளின் கோரிக்கையை கருத்திலெடுத்த வடமாகாண முதலமைச்சர் அவர்கள் இத்திட்டத்தை மீள் பரிசீலிக்க வேண்டி நோக்கு ஆய்வுக்குழு ஒன்றை வட மாகாண விவசாய அமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சர் ஆகியோரின் மேற்பார்வையின் கீழ் அமைத்தார். இக்குழுவை இத்திட்டம் பற்றிய தனது ஆய்வை செய்து இத்திட்டத்தினைத் தொடர்வதா? அல்லது மாற்றங்களுடன் தொடாவதா? அல்லது கைவிடுவதா? என்பது பற்றி தமக்கு சிபார்சு செய்யுமாறு பணித்தார்.

2. இக்குழுவின் உறுப்பினர்களாகிய நாம் கடந்த இரண்டு மாதங்களாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் குறித்த திட்ட இணைப்பாளர், வடமாகாண நீர்ப்பாசனத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணைக்களத்தின் பணிப்பாளர்கள், வடமாகாண தேசிய நீர்வழங்கல் வடிகால் திணைக்களத்தின் பணிப்பாளர்கள், மற்றும் இரணைமடு விவசாய அமைப்புக்கள், கமக்கார அமைப்புக்கள், கிளிநொச்சி மாவட்ட விவசாய அமைப்புக்களின் சம்மேளனங்களின் பிரதிநிதிகள், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் (மாவட்ட செயலாளர்), திட்டத்தின் அணைக்கட்டுப் பகுதித் திருத்தத்துக்கான நிபுணத்துவ ஆலோசகர் ஆகியோரை சந்தித்தும் மற்றும் ஆவணங்களை பரிசீலித்தும் பெற்றுக்கொண்ட விடய அறிவு மற்றும் எம்முள் நடாத்திய கலந்துரையாடல்களின் விளைவாக குழுவின் உறுப்பினர்களில் 09 பேர் அடங்கிய நாம் இவ் அறிக்கையை முன்வைக்கின்றோம்.

## திட்டம் பற்றிய விபரணம்

3. 2000 ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்திலிருந்து நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் முனைப்பில் ஆரம்பிக்கப்பட்ட யாழ் குடாநாட்டுக்கு நீர் வழங்குவதற்கான திட்டத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியுட்பட சில நிறுவனங்கள் நிதியுதவி வழங்க முன் வந்தன

4. இத்திட்டத்திற்கான நீர்மூலமாக இரணைமடுக்குளம் தெரிவுசெய்யப்பட்டது.

5. 2007.07.13 அன்று தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கும் வடக்கு - கிழக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கும் 'யாழ்ப்பாணக் குடா நாட்டுக்கான நீர் விநியோகத்திற்காக இரணைமடுக்குளத்தின் நீரைப் பங்கிடல்' என்ற ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. ஒப்பந்தத்தில் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளின் சங்கங்களின் சம்மேளனத்தின் தலைவரான திரு.சு.மனோகரனும் கையொப்பம் இட்டிருந்தார்.

6. இந்த ஒப்பந்தத்தில்
   - 6.1 மாதாந்தம் 1250 ஏக்கர் அடி நீரை நீர் விநியோகத் தேவைகளுக்காக பெறுவது என்றும்.
   - 6.2 குளத்தின் நீரை உறிஞ்ச வழி செய்யும் வகையிலான நீர் உறிஞ்சு குழாயைப் பொருத்துவதற்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் அனுமதிக்க வேண்டும் எனவும்.
   - 6.3 குளத்தின் நீர் சேமிப்பை அதிகரிக்கும் முகமாக குளத்தின் அணைக்கட்டையும் அதன் கட்டுமானங்களையும் புனரமைப்பதுடன் தற்போது உள்ள இரணைமடுக் குளத்தின் அணைக்கட்டை 34' உயரத்திலிருந்து 36' ஆக உயர்த்துவதென்றும்.
   - 6.4 காலபோகத்தில் 20,900ம் ஏக்கர்கள் நெற்பயிருக்கும் சிறுபோகத்தில் 11,600 ஏக்கர்கள் உப உணவு பயிருக்கும் நீர் வழங்கப்படுமெனவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6.5 இரு பகுதியினரும் பெறும் நீரின் விகிதத்திற்கு ஏற்ப குளத்தின் அணைக்கட்டுடனான பகுதிகளின் பராமரிப்புக்குரிய நிதியை இரு பகுதியினரும் வழங்குவது என்றும்.

6.6 எதிர்காலத்தில் நீர் உறிஞ்சு குழாயின் அமைப்பில் மாற்றங்கள் செய்ய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை விரும்பினால் நீர்ப்பாசன திணைக்களத்தின் அனுமதி பெறப்பட வேண்டும் எனவும்.

6.7 நீர் விநியோகத்திற்கு நீர் பெறப்படுவதால் விவசாயம் பாதிக்கப்படுகின்றது என நீர்ப்பாசனத் திணைக்களம் கருதும் போது நீர்விநியோகத்தை கட்டுப்படுத்த அல்லது குறைக்க நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு உரிமையுள்ளது. கடுமையான வரட்சி ஏற்படும் குளத்தின் நீர்மட்டம் குறையும் போது நீர் விநியோகத்துக்கான நீர் பெறலும் நீர்ப்பாசனத்திற்கான நீர் பெறலும் ஒரே விகிதத்திலேயே குறைக்கப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது.

**6.8 ஆனால் இந்த ஒப்பந்தத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு இதை ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் என்றே கூறுகின்றது.**

7. இதன்பின்னர் 2009 இல் போர் முடிவுற்று கிளிநொச்சி மக்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியேற ஆரம்பித்த காலத்தில் (2010இல்) மாறி விட்ட சமூக, அரசியல், நிர்வாக சூழ் நிலைகளைக் கருதிக்கொண்டும் 2007 ஆம் ஆண்டின் ஒப்பந்தத்தில் தமது அங்கிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதி கையெழுத்திடவில்லை என்பதாலும் பழைய ஒப்பந்தத்தினை தம்மால் ஏற்க முடியாது என விவசாயிகள் கூறினர். அதனால் விவசாயிகள் நீர்ப்பாசன திணைக்களமும் விவசாயிகளும் நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையும் புதிதாக ஒப்பந்தம் ஒன்றை மீள உருவாக்கி கையெழுத்திட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

8. அதன்படி புதிய ஒப்பந்தத்தை வரைவதற்கான முயற்சிகளின் படிமுறைகளின் போது கிளிநொச்சி விவசாயிகளுக்கு ஏற்பட்ட சந்தேகங்களும் குழப்பங்களும் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இறுதி செய்யப்படுவதை தாமதப்படுத்தியது. பல கூட்டங்கள், சந்திப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆனாலும் விவசாயிகளுக்கு ஏற்பட்ட நியாயமான சந்தேகங்கள் போதியளவு நிவர்த்தி செய்யப்படாத நிலை ஒன்று காணப்பட்டது. நீர்ப்பாசன திணைக்களத்தினர் மற்றும் விவசாயிகள் தமக்கு போதிய தெளிவு அல்லது தகவல் நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினரால் வழங்கப்படவில்லை என குற்றம் சுமத்துகின்றனர்.

9. இந் நிலையில் முன்னைய திட்ட வரைபில் ஏற்படுத்தப்பட்ட சில மாற்றங்களுடன் 2011ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 08 ஆம் நாள் இத் திட்டத்திற்கான பின்வரும் உடன்படிக்கைகள் கையெழுத்திடப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9.1 ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசுக்கும் இடையான யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சிக்குமான நீர் விநியோகம் மற்றும் சுகாதார திட்டத்திற்கான கடன் உடன்படிக்கை[2].

9.2 ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசுக்கும் இடையான யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சிக்குமான நீர் விநியோகம் மற்றும் சுகாதார திட்டத்திற்கான கடன் (விசேட உடன்படிக்கைகள்) உடன்படிக்கை[3].

9.3 ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபைக்குமிடையிலான யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சிக்குமான நீர்விநியோகம் மற்றும் சுகாதார திட்டத்திற்கான திட்ட உடன்படிக்கை[4].

9.4 ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் வடமாகாண சபைக்குமிடையிலான யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சிக்குமான நீர்விநியோகம் மற்றும் சுகாதார திட்டத்திற்கான திட்ட உடன்படிக்கை[5].

10. இத் திட்டத்தில்

10.1 யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளுக்கான நீரை சுத்திகரித்து விநியோகிப்பதற்கான கட்டுமானங்களை அமைப்பது,

10.2 அதற்காக இரணைமடுக் குளத்தின் அணைக்கட்டை புனரமைப்பது,

10.3 யாழ் மாநகர சபைப்பகுதிக்குரிய கழிவு வாய்க்கால் மற்றும் முகாமைத்துவத்திற்கான கட்டமைப்புக்களை அமைப்பது,

10.4 மேலும் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினரின் ஆற்றல் மேம்பாட்டுகளுக்கான செயற்றிட்டங்கள் என்பன உள்ளடங்கியிருந்தன பின்னர்,

- குளத்தின் கீழான பாசன வாய்க்கால்கள் மிக மோசமாக சேதமடைந்துள்ளன இதனால் கணிசமான அளவு நீர் விரயமாவதால் நீர்ப்பாசனத்திற்கான இந்த வாய்க்கால்களையும் திருத்த வேண்டும் என்று கோரிய போது முழுமையாக அன்றி பகுதியளவுக்கு திருத்துவதற்கான IFAD நிதியுதவியுடனான திட்டமும்.

- திருவையாற்றுப் பகுதிக்கான ஏற்று நீர்ப்பாசன அமைப்புகளை ஏற்படுத்துவதற்கான திட்டமும்.

- கிளிநொச்சியின் மேலும் சில பகுதிகளுக்குரிய நீர் விநியோகத்திட்டமும் இணைத்துக் கொள்ளப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. ஆனால் விவசாயிகள் மற்றும் நீர்ப்பாசன திணைக்களத்தினரின் வேண்டுகோளான புதிய ஒப்பந்தம் கையெழுத்திடப்படாமலே இருந்தது.

12. இதற்கான மாதிரி ஒப்பந்த வரைபு[6] தமது வேண்டுகோள்களை, கரிசனைகளை உள்ளடக்கவில்லை என்று கூறி விவசாயிகளால் ஏற்றுக்கொள்ளப்படாததால் புதிய ஒப்பந்தம் இன்றுவரை கையெழுத்திடப்படவில்லை.

**13. புதிய ஒப்பந்தத்திற்கான மாதிரி வரைவில்**

13.1 யாழ்ப்பாணம் - கிளிநொச்சிநீர்வழங்கல் சுகாதார திட்டம் என்பதில் உள்ள நீர்வழங்கல் என்பது குடிநீர்வழங்கலையே குறிக்கும் எனவும்.

13.2 குளத்தின் நீர்மட்டம் நீர் விநியோகத்திற்கு தேவையான முழுமையான அளவிற்கு உயராவிட்டால் நீர் விநியோகமும் நீர்ப்பாசனமும் சமமான விகிதத்தில் குறைக்கப்படும் எனவும்.

13.3 2015ஐ அடுத்து வரும் இருபது (20) ஆண்டுகளுக்கு இத் திட்டத்தின் கீழ் வீடுகளிற்கான நீர் விநியோகம் பெறும் பயனாளிகளுக்கு கட்டம் கட்டமாகவே இணைப்புக்கள் வழங்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. இணைப்பு வழங்கப்படவுள்ள 90000 வீடுகளில் இறுதி 4000ம் வீடுகளிற்கும் இறுதி 20 வருடமே இணைப்பு வழங்கப்படும். இந்த 20 வருட முடிவு வரையான காலப்பகுதி வரை மட்டுமே இரணைமடுக் குளத்திலிருந்து யாழ் குடாநாட்டிற்கு நீர் விநியோகம் செய்யப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த 20 வருட முடிவில் யாழ் குடாநாட்டிற்கான சுகாதாரமான நீரைப் பெறுவதற்கு ஏற்கனவே 20 வருட காலப் பகுதியினுள் தம்மால் உருவாக்கப்பட்டு விடும் என வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ள வேறு நீர் மூலங்களை பயன்படுத்துவோம் என தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உறுதிகூறியுள்ளனர்.

13.4 சில வேளைகளில் மாற்று நீர் மூலங்களைப் பெறுவதில் கால தாமதமானால் பரஸ்பர ஒப்புதலின் மூலம் நீரைப் பெறும் காலம் நீடிக்கப்படலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

13.5 நீர் விநியோகத்தால் விவசாயிகள் பாதிக்கப்பட்டால் அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் எனவும் புதிதாக கூறப்பட்டுள்ளது.

13.6 மேலே 13.5ல் கூறப்பட்ட நிவாரணங்களை மாகாண சபையே வழங்கும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14. ஆய்வுக் குழுவால் கண்டறியப்பட்டவை திட்டம்

2007.07.13 அன்று தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கும் வடக்கு - கிழக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கும் "யாழ்ப்பாணக் குடா நாட்டிற்கான நீர்விநியோகத்திற்காக இரணைமடுக் குளத்தின் நீரைப் பங்கிடல்" என்ற ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இவ் ஒப்பந்தம் அதிகளவு தவறுகளுடனும் மயக்கம் தருவதாகவும் உள்ளது.

14.1 இத் திட்டம் தொடர்பான ஒப்பந்தத்தில் ஒரு தரப்பாக எங்குமே குறிப்பிடப்படாத எந்தவித மேலதிக குறிப்பும் இன்றி இரு தரப்பு ஒப்பந்தக்காரர்களுக்கும் மேலதிகமாக அக் காலப்பகுதியில் கிளிநொச்சி மாவட்ட கமக்காரர் சங்கங்களின் சமாசத் தலைவராக இருந்த திரு.சு. மனோகரன் அவர்களின் ஒப்பந்தமும் பெறப்பட்டுள்ளது, குறிப்பிடத்தக்கது. இவர் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பல்வேறு பகுதிகளின், பல்வேறு குளங்களின் கீழ் உள்ளடங்கும் விவசாயிகளின் 300க்கு மேற்பட்ட சங்கங்களின் சமாசத்தின் தலைவராவார். இரணைமடு குளத்தின் கீழ் விவசாயம் செய்யும் விவசாயிகளின் சங்கங்கள் மட்டும் 21 உள்ளன. இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட இவரை தாம் அதிகாரமளிக்கவில்லை என்று இரணைமடுக் குளத்தின் கீழ் விவசாயம் செய்யும் விவசாயிகளின் சங்கங்கள் கூறுவது ஏற்றுக்கொள்ளப்படவேண்டியது.

14.2 இந்த ஆவணத்தில் மூலப்பிரதியான ஆங்கிலப் பிரதியில் ஒப்பந்தம் (Agreement) எனவும் தரப்பட்ட தமிழ் மொழிபெயர்ப்பில் புரிந்துணர்வு உடன்படிக்கை (mou) எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது[7].

14.3 சம்பிரதாயங்களுக்கு மாறாக மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பணிப்பாளர் சார்பாக வடக்கு - கிழக்கு மாகாண காணி, விவசாய, நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் கையெழுத்திடுவதாக ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள போதும் ஈற்றில் வடமாகாணத்தின் காணி, விவசாய, கால்நடை அபிவிருத்தி, மீன்பிடி, நீர்ப்பாசன அமைச்சின் செயலாளரே ஒப்பமிட்டுள்ளார்.

14.4 இவை அனைத்திற்கும் உச்சமாக வடக்கு - கிழக்கு மாகாணம் பிரிக்கப்பட்ட 31.12.2006ற்குப் பின்னான 13.07.2007 ஆம் திகதியில் நடைமுறையில் இல்லாத வடக்கு - கிழக்கு மாகாண சபையுடன் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை இவ் ஒப்பந்தத்தை செய்துள்ளது.

14.5 மேற்கூறிய இவ் முரண்பாடுகளை கருத்தில் எடுக்கும் போது உண்மையிலேயே இப்படி ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டதா என சந்தேகம் ஏற்படுகின்றது அல்லது இவ்வளவு கவனயீனமாகவா இந்த இரண்டு திணைக்களங்களும் நடந்துள்ளன என எண்ண வைக்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**15.** குளத்தின் நீர் சேமிப்பின் அளவை அணைக்கட்டுப் பகுதியை புனரமைத்து 34' யிலிந்து 36' ஆக மேம்படுத்துவதன் மூலம் அதிகரித்து விட முடியும் என கூறப்படுகின்ற. அணைக்கட்டின் பலவீனமே அதிக நீரை தேக்காமைக்கான காரணம் எனவும் அதனாலேயே முழுக் கொள்ளளவு நீர் தேக்கப்படவில்லை எனவும் கூறப்படுகின்றது.

15.1 புவியின் வெப்பமாதலால் ஏற்படும் காலநிலை மாற்றங்களால் மாரி காலங்களில் குறைவான மழைவீழ்ச்சியோ அல்லது வழமையிலும் விட குறுகிய காலத்திற்குள் வழமையான அல்லது கூடிய மழைவீழ்ச்சியோ ஏற்படுவதால் வரட்சி ஏற்படுவதற்கான நிகழ்தகவுகள் தற்போது அதிகரித்து வருவது பற்றி கருத்தில் எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

15.2 கடந்த சில வருட கணக்குகளின் படி கணிசமான தடவைகள் குளத்தின் நீர்மட்டம் சீரான, திருப்தியான முறையில் இருக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது. இவ் ஆய்வு நிகழ்த்தப்பட்ட 2014 ஜனவரி மாதத்தில் கூட குளத்தின் நீர்மட்டம் 17' ஆக மட்டுமே உள்ளதாக நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளரால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனைப் போன்ற சூழல் இனிமேல் அதிகளவு ஏற்படுவதற்கான வாய்ப்புள்ளதையே உலகளாவிய ரீதியில் ஏற்பட்டு வரும் காலநிலை மாற்றம் புலப்படுத்துகின்றது. இதனடிப்படையில் யாழ் குடாநாட்டு மக்களின் குடி தண்ணீர் பிரச்சினையை இத் திட்டத்தின் மூலம் தொடர்ந்து ஆண்டு முழுவதும் தீர்க்கக்கூடியதாக அமையாத சந்தர்ப்பங்களும் ஏற்படும் என்பது தெளிவாக தெரிகின்றது. செய்யப்பட்டுள்ள சாத்தியக்கூற்று ஆய்வுகள் இதற்கான வாய்ப்புக்கள் குறைவு என கூறினாலும் முற்றாக இல்லை என தெரிவிக்கவில்லை. ஆனால் இவ்வாய்ப்புககளுக்கு பாவிக்கப்பட்ட தரவுகளின் அளவும் தரமும் போதாமல் உள்ளதும் குறிப்பாக கவனிக்கப்படவேண்டியது ஒரு ஆய்வில் மாறி வரும் காலநிலை கருத்தில் எடுக்கப்படவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. கவனத்திற்குரியது.

**16.** விவசாயிகள் தமக்கு குடி நீருக்கான நீர் விநியோகத்திற்கே குளத்திலிருந்து நீர் எடுக்கப்படும் என நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் கூறிவருகின்றனர் எனவும் ஆனால் குடி நீருக்காக மட்டுமே இரணைமடுக் குள நீர் யாழ் குடாநாட்டிற்கு வழங்கப்படுமென புதிய ஒப்பந்தத்தில் தெளிவாக குறிப்பிடப்படாததுடன் தரப்பட்டுள்ள தரவுகளிலிருந்து செய்யப்பட்ட கணிப்பீட்டின் படி ஆள் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 80-120 லீற்றர் வரையான நீர் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவே தெரிவதாகவும் குடி நீர்த் தேவை மட்டுமெனில் ஆள் ஒருவருக்கு நாளொன்றுக்கு 80-120 லீற்றர் தேவையில்லை எனவும் குற்றம் சாட்டினர். எமது கணிப்புகளின் படியும் நாளொன்றுக்கு ஆள் ஒருவருக்கு 80-120 லீற்றர் நீர் விநியோகிக்கப்படவுள்ளதாகவே தெரிகின்றது[8].

**17.** மேலும் ஆசிய அபிவிருத்தி வங்கியுடனான இத் திட்டத்தின் படி நீர் விநியோகம் இடையீடு இன்றி வழங்கப்பட வேண்டிய ஒன்றாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**18.** வீடுகளுக்கு அல்லது குடியிருப்பாளர்களுக்கு மட்டுமே நீர் விநியோகிக்கப்படும் என்றும் 2007 ஒப்பந்தத்தில் வரையறுக்கப்படவில்லை.

**19.** மேலும் வேறு தேவைக்கு பயன்படுத்தப்படமாட்டாது என்று விளக்கம் கூறப்பட்டாலும் நடைமுறையில் அதை அமுலாக்கும் பொறிமுறை இல்லாதது அவதானிக்கப்பட்டுள்ளது. நீரிற்கான கட்டணங்களை அதிகரிப்பதன் மூலம் தொழிற்சாலைகளோ வர்த்தகர்களோ அதிகரித்த அளவில் நீரைப் பாவிப்பதை பெருமளவில் தடுக்க முடியாது.

**20.** எந்த ஒரு வருடத்திலும் மாரியில் நல்ல மழை பெய்தாலும் சிறு போகத்தின் இறுதிப்பகுதியில் அதாவது கோடை காலமான யூன், யூலை காலங்களின் பின் குளத்தில் 24’ அடிக்கும் குறைவாகவே நீர் இருப்பது வழமை என தெரிகின்றது.

**21.** அணையை 34’ல் இருந்து 36’ ஆக உயர்த்துவதால் கிடைத்த அதிகரித்த கொள்ளளவையே நீர் விநியோகத்திற்கு பெறவுள்ளோம் என நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை தெரிவிக்கின்றது. ஆனால் பின்வரும் மாதிரி நிலைமைகள் (Scenario) எதிர்காலத்தில் ஏற்படலாம்.

- மழைவீழ்ச்சி நன்கு உள்ளது. நீர் 36’ வரை அல்லது நீர் விநியோகத்திற்கு ஒரு வருடத்திற்கு தேவையான 12000 ஏக்கர் அடி வரை 34’ நீர் மட்டத்திற்கு மேலாக தேக்கப்படுகின்றது.

- மழை ஓரளவு நன்கு உள்ளது. நீர் அதிகரிப்பு 34’ க்கு மேலே போயுள்ளது. ஆனால் தேவையான 12000 ஏக்கர் அடி அதிகரிப்பிலும் விட குறைவாகவே 34’க்கு மேல் நீர் உள்ளது.

- மழை பெய்து நீர் மட்டம் 34’லும் குறைவாகவே உள்ளது. இதில் நிலை ஒன்றில் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படாது. ஆனால் நிலை இரண்டில் வருட முழுமைக்கும் தேவையான 12,000 ஏக்கர் அடி நீர் மேலதிகமானதாக இல்லை. ஆகவே விவசாயிகளின் பங்கான இருப்பிலிருந்து நீரை நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை பெற வேண்டிவரும் நிலை மூன்றில் முழுமையாகவே விவசாயிகளின் பங்கான நீரிலேயே நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை நீரைப் பெற வேண்டி வரும். ஆகவே இரண்டாவது மற்றும் மூன்றாவது போன்ற மாதிரி நிலைமைகள் ஏற்படும் போது சிறு போக விவசாயம் செய்யப்படும் நிலப் பரப்பை நிச்சயம் குறைக்க வேண்டி ஏற்படும்.

**22.** வரட்சியான குளத்து நீர் மட்டம் குறைவான காலங்களில் நீர் வழங்கல் நிச்சயம் விகிதாசார அடிப்படையில் குறைக்கப்படும் என்பது ஒப்பந்தத்திலேயே உள்ளது. அதாவது நீர் விநியோகம் கோடை மற்றும் வரட்சி காலங்களில் பாதிப்புக்குள்ளாவது தவிர்க்கப்பட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாததாகவிருக்கும் என்பது தெளிவாகின்றது. அதாவது நீர் விநியோகத்தை வருடம் முழுவதற்கும் முழுமையாக பேண முடியாமல் போகும் அல்லது விவசாயிகளை பாதிக்கும் வகையில் முடிவுகளை எடுக்க வேண்டி ஏற்படும்.

**23.** மாரி காலங்களில் குறைவான மழை வீழ்ச்சி ஏற்படுவதற்கான அல்லது வரட்சி ஏற்படுவதற்கான நிகழ்தகவுகள் தற்போது அதிகரித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. இதற்கு கடந்த 10 வருடங்களின் மழை வீழ்ச்சியின் தரவுகள் உதாரணமாக உள்ளன.

**24.** கடந்த 10 வருடங்களிற்கான குளத்தின் நீர் நிலைப் பதிவுகளில் எமக்குக் கிடைத்த 2005, 2009, 2010,2011, 2012 மற்றும் கடந்த 2013-2014 ஆகிய 06 வருட பதிவுகளின் படியும் பதிவுகள் அற்ற வருடங்கள் குறித்தான அப்பிரதேச மக்களின் வாய்மொழி வரலாற்று மீள் நினைவு தகவல்களின் படியும் (2009ல் அணைக்கட்டும் வாய்க்கால்களும் சீராக இருந்து அணைக்கட்டு உடையும் என்ற அச்சத்தில் நீரைக் குறைக்க வேண்டிய தேவை ஏற்படாமல் இருந்திருந்தாலும்) குளத்துக்கான நீரின் வரவுநீர் விநியோகத்துக்கான திருப்தியான 106,000 ஏக்கர் அடிகளுக்கு மேல் (34 அடி நீர் மட்டத்திற்கு மேல்) ஒவ்வொரு வருடத்திலும் வந்திருக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிகினறது. அதே போல் இவ் ஆய்வு நிகழ்த்தப்பட்ட 2014 பெப்ரவரி (2013 - 2014 காலத்திற்குரிய) கூட குளத்தின் நீர் மட்டம் 15-17 அடிகளாக (கொள்ளளவு 20,100 - 25,200 ஏக்கர் அடிகளாக) மட்டுமே உள்ளதாகவும் (ஆனால் இம்முறை நீர் அணையின் பாதுகாப்புக்காக திறந்து விடப்படவில்லை) தெரிய வந்தது. இதன் மூலம் அணை பலவீனமாக இருப்பதாற்தான் போதியளவு நீரை சேமிக்க முடியவில்லை எனக் கூறப்படும் காரணம் மட்டுமே குளத்தின் நீர்க்குறைவுக்கு காரணமில்லை என்பது தெளிவாகின்றது.

**25.** ஆகவே குறைவான மழை வீழ்ச்சி குறைவான நீர் சேகரிப்புக்கு ஒரு பங்களிக்கும் காரணமாக இருக்கும் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். இதனைப்போன்ற சூழல் இனிமேல் அதிகளவு ஏற்படுவதற்கான வாய்ப்புள்ளதையே உலகளாவிய ரீதியில் ஏற்பட்டு வரும் காலநிலை மாற்றம் புலப்படுத்துகின்றது.

**26.** திட்டத்தில் வரட்சியான காலங்களில் கூட இடையூறு இன்றி நீர் விநியோகம் செய்யப்படவேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது. ஆனால் திட்டக்குழு அதிகாரிகள் வரட்சியான காலங்களில் விகிதாசார அடிப்படையில் நீர் விநியோகம் குறைக்கப்படும் என கூறுகின்றார்கள். இதன் அடிப்படையில் யாழ் குடாநாட்டு மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினையை இத்திட்டத்தின் மூலம் தொடர்ந்து ஆண்டு முழுவதும் ஒரே சீராக தீர்க்கக் கூடியதாக அமையாத சந்தர்ப்பங்களும் ஏற்படும் என்பது தெளிவாகத் தெரிகின்றது. செய்யப்பட்டுள்ள சாத்தியக்கூற்று ஆய்வுகள் இதற்கான வாய்ப்புக்கள் குறைவு எனக் கூறினாலும் அவ்வாய்வுகளுக்கு பாவிக்கப்பட்ட தரவுகளின் அளவும் தரவும் போதாமல் உள்ளது கவனிக்கப்பட வேண்டியது. ஒரு ஆய்வில் மாறிவரும் காலநிலை கருத்தில் எடுக்கப்படவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. இதனால் இத்திட்டம் அதன் பிரதான குறிக்கோளான நீர் விநியோகம் என்பதில் பயனற்ற ஒன்றாக மாறிவிடுவதற்கான வாய்ப்புக்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. ஆகக் குறைந்தது வருடத்தின் கணிசமான காலப்பகுதிகளில் அல்லது சுழற்சி முறையில் சில வருடங்களுக்கு ஒரு முறை நீர் விநியோகம் பகுதியாகவோ அல்லது முற்றாகவோ தடைப்படக்கூடிய பலவீனம் இத்திட்டத்தில் உள்ளடங்கியுள்ளது. அவதானிக்கப்பட்டுள்ளது. மறுபுறத்தில் இந்நிலையை தவிர்ப்பதற்காக விவசாயிகளை பாதிக்கும் வகையிலான முடிவுகளை எடுத்து நீர் விநியோகம் பேணப்பட வேண்டிய கட்டாய நிலை ஏற்படும்.

28. மழை வீழ்ச்சி குறைந்த காலங்களில் மேலதிகமாக இத் திட்டத்தால் சிறு போக நெல் உற்பத்தி மேலும் பாதிக்கப்படலாம். என்பது ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. (கால போகத்திலும் விட சிறு போகத்திலேயே ஒரு ஏக்கருக்குரிய நெல் விளைச்சல் அதிகமாக இருப்பதும் விவசாயிகள் அதிக இலாபம் பெறுவதும் வழக்கம் என்ற விடயம் இங்கு கருத்திலெடுக்கப்பட வேண்டியது) இந்த பாதிப்புக்களுக்கான நிவாரணங்களை வடக்கு மாகாண சபையே வழங்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

29. அடுத்துவரும் இருபது ஆண்டுகளுக்கு நீர் விநியோகத்தை கட்டம் கட்டமாகவே அதிகரிப்பதென்றும் அந்த 20 வருட காலப்பகுதி முடியும் வரை மட்டுமே இரணைமடுக் குளத்திலிருந்து யாழ்குடாநாட்டிற்கு நீர் விநியோகம் செய்யப்படும் எனவும் அந்த 20 வருட காலத்தினுள் மாற்று நீர் மூலத்தை தம்மால் கண்டறிய முடியும் எனவும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை கூறுகின்றது. ஆனால் இதற்கான திட்டங்களையோ, நிதி மூலகங்கள் பற்றிய எதிர்வு கூறல்களையோ திட்டத்தில் கண்டறிய முடியவில்லை. இத்திட்டத்தை 2002ல் வடிவமைக்க ஆரம்பித்திருந்தும் இதுவரை யாழ்ப்பாணத்தில் அது தொடர்பான எந்த காத்திரமான வேலைத்திட்டமும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையால் ஆரம்பிக்கப்பட்டதாகவும் தெரியவில்லை.

30. ஆனால் 20 வருட முடிவில் யாழ் குடாநாட்டுக்கான சுகாதாரமான நீரைப்பெறுவதற்கு மாற்று மூலத்தை கண்டறிய முடியாவிட்டால் புரிந்துணர்வின் அடிப்படையில் நிபந்தனைகளுடன் குளத்திலிருந்து நீர் பெறும் காலத்தை நீட்டிக்க புதிய ஒப்பந்தத்தில் இடமளிக்கப்பட்டுள்ளது.

31. இரணைமடுக் குளத்தை புனரமைத்தல் என்பது மிக மிக அவசியமானதும் உடனடியாக மேற்கொள்ள வேண்டியதுமாகும்.

32. இரணைமடுக் குளத்தின் அணைக்கட்டு கடந்த யுத்த காலப்பகுதியில் ஒருபோதும் முழுமையான புனரமைப்புக்கு உட்படுத்தப்படாத நிலையில் மாரி காலத்தில் நீர்க்கசிவுகளுடன் பலவீனமாகவும் ஆபத்தானதாகவும் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. நீர்ப்பாசனத் திணைக்களத்துப் பணிப்பாளரும் பிரதிப் பணிப்பாளரும் இத் திட்டத்தின் அணைக்கட்டுக் கட்டுமானத்திற்கான நிபுணரும் கிளிநொச்சி அரசாங்க அதிபரும் எம்முடனான சந்திப்புக்களில் பலவீனமாகிப்போயுள்ள குளத்தின் அணைக்கட்டினை புனரமைப்பதற்கு நிதி மூலம் எதையும் கண்டடைய முடியாத காரணத்தினாலேயே குளக்கட்டினை எப்படியாவது காப்பாற்ற வேண்டுமென்ற மனநிலையில் தாம் நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினரின் இத் திட்டத்திற்கு சம்மதித்து நீர் வழங்க முன்வந்ததாக தெரியப்படுத்தினர்.

34. குளத்துக்கான நீர் வரத்தை அதிகரிப்பதற்கான எந்த வழிமுறைகளும் இத்திட்டத்தின் கீழ் ஆய்வு செய்யப்படவில்லை அது செய்ய முடியாத ஒன்றாக கைவிடப்பட்டுள்ளது.

35. குளத்தின் கீழான பாசன வாய்க்கால்கள் மிக மோசமாக சேதமடைந்துள்ளன. இதனால் கணிசமான அளவு நீர் விரயமாவதாக தெரிகிறது. ஒரு சாத்தியக்கூற்று ஆய்வில் பாசன வசதிகளை முழுமையாக புனரமைக்காவிட்டால் நீர்விநியோகத்தை திருப்தியாக செய்ய முடியாது என கூறப்பட்டுள்ளது. ஆனால் இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி தேவையான நிதியின் 50% மட்டுமே.

36. இத் திட்டத்திற்கு ஒப்புக் கொண்டதனாலேயே அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர்வள திட்டம் (DSWRP) என்ற நிதியத்தினூடாக ஆசிய அபிவிருத்தி வங்கியும் உலக வங்கியும் பாரிய குளங்களை புனரமைப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் வழங்கி வரும் பெருமளவு நிதியுதவிகளை இரணைமடுக் குளத்தை புனரமைக்க பெறமுடியாமல் போனமை குறிப்பிடப்படவேண்டிய ஒன்றாகும்.

37. இரணைமடுக் குளத்தின் நீர் குடிநீருக்கு உகந்ததாக உள்ளதா என்பது பற்றியும் அதிகமான குழப்பம் நிலவுகின்றது.

38. திட்டப்பணிப்பாளர்களால் வழங்கப்பட்ட அறிக்கைகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் படி யாழ் குடாநாட்டில் தற்போது காணப்படும் நிலக் கீழ் நீர் தொடர்பான அண்மைக்கால அறிக்கைகளுடன் இரணைமடுக் குளத்தின் நீரை ஒப்பீடு செய்து பார்க்கும் போது குறைந்த அளவான மாசடைதலே காணப்படுவதாக தெரிகிறது. ஆனால் கோடை காலங்களில் குளத்து நீரில் கூட மாசடைதல் கணிசமான அளவு அதிகரித்துச் செல்வதாகவே தெரிகின்றது.

39. குளத்து நீரில் கலந்திருக்கக் கூடிய பார உலோக மாசுக்கள் பற்றி ஆய்வு எதுவும் செய்யப்படவில்லை.

40. இரணைமடுவிலிருந்து குடாநாட்டிற்கான குடிநீர்த் திட்டத்திற்குப் பதிலாக அதே செலவில் உள்ளூரிலிருந்தோ அல்லது இதுவரை மனிதப் பாவனையில் இல்லாத வேறு ஒரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்று நீர்மூலத்திலிருந்தோ நீர் வழங்கலைச் செய்ய முடியாதா? என்பதற்கான சாத்தியக்கூற்று ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதா? என்ற கேள்விகளுக்கு பதில் சொல்லப்படவில்லை. அப்படியொரு அல்லது பல மாற்றுவழிகள் கண்டறியப்படுமானால் மட்டுப்படுத்தப்பட்ட 20 வருடங்களுக்கு மட்டுமல்லாது நிலைத்து நிற்கக் கூடிய மற்றும் ஆண்டு முழுவதும் இடையூறு இன்றி நீர் வழங்கக் கூடிய ஒரு நீர்வழங்கல் திட்டத்தை வடிவமைப்பது இயலக்கூடும்.

**41.** எமது குழுவின் ஆய்வில் கிடைத்த தகவல்கள் மூலம் இத்திட்டம் வரையப்பட்ட ஆரம்ப நிலைகளில் நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகளினதோ இன்று வரை விவசாயம் சார்ந்த வேறு எந்த திணைக்களங்களின் அதிகாரிகளினதோ யாழ் பல்கலைக்கழக விவசாய பீடத்து புலமையாளர்களினதோ[9] துறைசார் ஆலோசனைகள் முழுமையான பயனுறுதி மிக்க அளவில் பெறப்பட்டதாக தெரியவில்லை.

**42.** இரணைமடுக் குள நீரைப் பயன்படுத்தி வரும் விவசாயிகளும் கணிசமான அளவுக்கு கணிசமான காலம் வரை இத்திட்டம் பற்றி இருட்டிலேயே வைக்கப்பட்டிருந்தனர் என்பதை அவதானிக்க முடிகிறது.

**43.** ஆசிய அபிவிருத்தி வங்கியின் இணையத்தளத்தில் காணப்படும் திட்டத் தரவுகளில்[10] இத்திட்டம் பின்வரும் காரணிகளில் ஏற்படும் தாக்கங்கள் பற்றிய வகைப்படுத்தல் பின்வருமாறு அளவிடப்பட்டுள்ளது.

43.1 சுற்றுச் சூழல் - B
43.2 தானாகவே இடம்பெறாத இடப்பெயர்வு - B
4.3.3 சுதேச மக்கள் - C

இவற்றுள் மூன்றாவது வகைப்படுத்தல் மிகவும் தவறானதாக தெரிகிறது. இவ்வகைப்படுத்தலின் பிரகாரம் இரணைமடு அமைந்துள்ள சுதேச மக்களினுடைய நிலத்தை அல்லது இயற்கை வளங்களைப் பயன்படுத்துவதற்கு அல்லது அணுகுவதற்குரிய உரிமைகளுக்கு அவர்களின் சமூக பொருளாதார நிலைக்கு அவர்களின் கலாச்சார சமூக ஒற்றுமைப்பாட்டிற்கு கல்வி, சுகாதாரம், வாழ்வாதாரம் மற்றும் சமூக பாதுகாப்பு நிலைமைகளுக்கு மற்றும் சுதேசிய அறிவின் அங்கிகாரத்துக்கு எவ்விதமான பாதிப்புக்களையும் ஏற்படுத்தாது என வகைப்படுத்தப்பட்டுள்ளது. இது முற்றிலும் தவறான வகைப்படுத்தல் ஆகும்.

**44.** ஆசிய அபிவிருத்தி வங்கி மிகவும் ஆணித்தரமாக மக்கள் குறைகேள் அமைப்புக்களினை அமைத்தல் செயற்படுத்தல் போன்றவற்றுக்கு பிரதான ஒப்பந்தத்திலேயே முக்கியத்துவம் கொடுத்துள்ளது. ஆனால் திட்டக்குழு அதிகாரிகள் இதில் அசண்டையாக இருந்துள்ளதுடன் குறைகளை கூறிய மக்களுக்கும் உரிய வகையில் பொறுப்புக் கூறவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**“கலாநிதி. திருமதி. துஷ்யந்தி மிகுந்தன், கலாநிதி. துஷ்யந்தி ராஜசூரியர், பேராசிரியர் எஸ். ரீ.பீ இராயேஸ்வரன் ஆகியோர் முன்னர் யாழ் மாவட்ட அரச அதிபரால் கூட்டப்பட்ட நீர்வளத்துறை மாநாட்டுக்கு அழைக்கப்பட்ட போதும் அவர்களிடமிருந்து அறிக்கைகள் எதுவும் எதிர்பார்க்கப்படவில்லை”**

**45.** திட்டத்தின் தோற்றம் வடிவமைப்பு பேச்சுவார்த்தைகள் ஒப்பந்தங்கள் வரவு செலவுகள் பற்றிய போதிய வெளிப்படைத் தன்மையோ அல்லது பொறுப்புக் கூறும் தன்மையோ இதுவரை காணப்படவில்லை.

குடாநாட்டின் நீர்வளம்

**46.** குடாநாட்டின் மனித மலசலக் கழிவுகள் வீட்டுப் பாவனைக் கழிவுகள் வைத்தியசாலைக் கழிவுகள் உட்பட சகல கழிவுகளும் பொருத்தமான வகையில் முகாமை செய்யப்படுவதில்லை. வீடுகளில் உரிய மூடப்பட்ட மலசல குழிகள் இன்மை, கழிவு நீர் வாய்க்கால்கள் இன்மை, கழிவுகள் கண்டபடி தரிசு நிலங்களில் குவிக்கப்படல், விவசாய செய்கையின் போது பாவிக்கப்படும் கட்டுப்பாடற்ற உர மற்றும் இரசாயன நாசினிகளின் மிகைப் பாவனை போன்றவற்றால் நிலத்தடி நீர் நச்சு கனியுப்புக்கள் (பாரக்கனியுப்புக்கள் பற்றிய ஆய்வு இதுவரை செய்யப்படவில்லை) மற்றும் நோய்க்கிருமிகளின் மாசடைதலுக்கு உள்ளாகி வருகின்றது.

**47.** தற்போது யாழ் குடாநாட்டின் நகரப்பகுதிக்கான குடிநீர்த் தட்டுப்பாட்டை தீர்ப்பதற்காக திருநெல்வேலி, கோண்டாவில் பகுதியிலிருந்து அதிகளவான நிலத்தடி நீர் சரியான முகாமைத்துவமின்றி உறிஞ்சப்படுவதனாலும் விநியோகக் கட்டுமானங்கள் பழுதடைந்துள்ளதால் அல்லது உரிய பராமரிப்பு இன்மையால் விநியோகத்திலும் பெருமளவு விரயமாக்கப்படுவதாக முறைப்பாடுகள் உள்ளன.

**48.** மேலும் விவசாயிகள் அதிக வலுக் கொண்ட நீர் இறைக்கும் இயந்திரங்களைப் பாவிப்பதாலும் நீர் விரயமாகும். பழமையான பாசன முறைமைகள் பயன்படுத்துவதாலும் குடா நாட்டின் விவசாயத்தின் போதும் பெருமளவு நிலத்தடி நீர் விரயமாவதாக தெரிகிறது.

**49.** இவற்றால் நிலத்தடி நீர் வேகமாக தேவைக்கு மேலாக சூறையாடப்படுகின்றது.

**50.** இந்த நிலையில் குடாநாட்டு நிலத்தடி நீரை உறிஞ்சி எடுத்து போத்தல்களில் அடைத்து விற்கும் முறைகேடுகள் தற்போதும் நடைபெறுவது குறிப்பிடப்பட வேண்டியது.

**51.** நிலத்தடி நீரின் அதிகரித்தவேகமான வெளியேற்றம் காரணமாக கடல்நீர் உட்புகுந்து குடாநாட்டின் நிலத்தடி நீர் உவப்பாக மாறி வருவதாக தெரிகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

52. எனினும் 2000ஆம் ஆண்டுகளின் பின் குடாநாட்டின் புனரமைக்கப்பட்ட உவர்நீர்த்தடுப்பு அணைகள் மற்றும் மண் தடுப்புகள் மூலம் அவற்றை அண்டியிருந்த கணிசமான பகுதிகளில் உவராக மாறியிருந்த நிலத்தடி நீர் நன்னீராக மாறியுள்ளமையும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக நீர்ப்பாசன திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

53. குடாநாட்டின் மழைவிழ்ச்சியில் பெரும்பகுதி பொருத்தமான வடிகால்கள், குளங்கள் மழைநீர் சேகரிப்பு விதிகள் இன்மையாலும் உள்ள குட்டைகள், நீர்நிலைகள், வாய்க்கால்கள் பொருத்தமான வகையில் தூர் வாரப்பட்டு பராமரிக்கப்படாததாலும் ஆக்கிரமிப்புக்களாலும் வீணே கடலில் கலக்கிறது. அல்லது ஆவியாகி வீணாகி விடுகின்றது என்பதுவும் குறிப்பிடப்படவேண்டியது.

54. குடாநாட்டுக்கு சுத்தமான நீரின் தேவை அதிகமாக உள்ளதை ஏற்றுக்கொண்ட போதும் அதற்கான ஒரே நீர்மூலம் இரணைமடு குளம் தான் என்பதை ஏற்கமுடியாதுள்ளது. வேறு வழி வகைகள் பற்றி ஆராயப்பட்டதாகவும் தெரியவில்லை.

55. இதே வேளை தற்போது குடாநாட்டிற்கான ஆறு அல்லது ஆற்றுமுகம் ஆற்றுத்திட்டம் என்ற திட்டம் பற்றிய சாத்தியக்கூற்று ஆய்வுகளுக்கு மத்திய அரசு நிதி ஒதுக்கியுள்ளதாக தெரிகிறது.

## பொருளாதாரம்

56. சிறுபோகத்தல் உப உணவுப் பயிர்களைச் செய்வதே பொருளாதார ரீதியிலும் நீர்த்தட்டுப்பாட்டின் அடிப்படையிலும் நல்லது என விவசாயத்திணைக்களத்தினரும் பொருளாதார வல்லுநர்களும் கூறினாலும் கிளிநொச்சி வயல்களின் மண் தன்மை காரணமாக மாறி மாறிப் பல்வகைப் பயிர்களை செய்வது தொழிநுட்ப ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் போட்டித் தன்மை வாய்ந்ததல்ல என விவசாயிகளும் விவசாய நிபுணர்களும் கூறுகின்றனர்.

57. ஆகவே வடமாகாணத்தின் நெற்களஞ்சியமாக விளங்கும் கிளிநொச்சி மாவட்டத்தின் விவாசயம் இத்திட்டத்தினால் பாதிக்கப்படும் நிலை ஏற்படலாம். குறிப்பாக சிறு போகம் நிச்சயமாகப் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதை தெளிவாக அவதானிக்க முடிகிறது. ஆனால் இது பற்றிய ஆய்வு எதுவும் செய்யப்பட்டு அதற்கான மாற்றீடு இத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டதை அவதானிக்க முடியவில்லை.

58. விதைக்கப்பட்ட வயல்கள் நீர் விநியோகத்தை பேணுவதற்காக கைவிடப்படுமாறு கோரப்படுமானால் அல்லது தொடக்கத்திலேயே சிறுபோகம் செய்வதற்கான பரப்பளவைக் குறைக்குமாறு கோரப்படும் போது விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க புதிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளதாயினும் அதற்கான பொறுப்பு வடக்கு மாகாண


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபையிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் தெளிவான பொறிமுறை எதனையும் அவதானிக்க முடியவில்லை. நீர் விநியோகத்துக்காக குளத்திலிருந்து நீரைப் பெற்று விற்பனை செய்து வருமானமீட்டவுள்ளதேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு இதில் எந்தப் பொறுப்புமிருப்பதாக தெரியவில்லை.

**59.** திட்டத்தின் கீழ் வடமாகாணத்தில் செலவு செய்யவென ரூபா 2000 கோடி வரை கடனாக வழங்கப்படுகின்றது. இந்நிதியில் திட்டம் தவறானதெனக் கைவிடப்படுமானால் பெருமளவு நிதியை வடமாகாண சபை இழக்க வேண்டி வரும் என்ற வாதமும் முன்வைக்கப்பட்டது. ஆனால் இந் நிதியில் மிகச் சிறு பகுதியே மாகாண சபையின் அதிகாரப் பரப்பினுள் வருகின்றது. அத்தோடு இத்திட்டத்தை வட மாகாணத்தை சேர்ந்த ஒப்பந்தக்காரரைக் கொண்டோ அல்லது உள்ளூர் பணியாளர்களைக் கொண்டோ தான் செய்ய வேண்டும் என் எந்த விதிகளும் கடன் ஒப்பந்தத்தில் இல்லை.

**60.** இத் திட்டத்தின் நோக்கத்தை (Seope) மாற்ற ஆசிய அபிவிருத்தி வங்கி அனுமதிக்காது என்றும் கூறப்பட்டது.

**61.** இத்திட்டத்தை வட மாகாண சபை தவிர்த்தால் ஆசிய அபிவிருத்தி வங்கியோ அல்லது அது போன்ற ஏனைய நிறுவனங்களோ வருங்காலத்தில் வடமாகாணசபைக்கு உதவமாட்டாது என பரப்பப்படும் தகவல்கள் தவறானவை ஆகும். மேலும் ஆசிய அபிவிருத்தி வங்கி 07.01.2014ம் திகதி வீரகேசரி நாளிதழில் இவ் வகையான வாதங்களை மறுத்துமுள்ளது.

**62.** மேலும் ஒரு திட்டத்திற்கு பெருமளவு நிதி கிடைக்கின்றது என்பதற்காக அத்திட்டத்தால் ஏற்படும் நிச்சயமான பாதிப்புக்களை மக்களின் நியாயமான அச்சங்களை நிராகரித்து ஒரு மக்கள் அரசு செயற்பட முடியாது.

**63.** மேலும் இத் தவறான திட்டம் மக்களின் நிஜமான பிரநிதிகளின் சம்மதத்துடன் உருவாக்கப்பட்டதுமல்ல

## சமூகம் மற்றும் அரசியல்

**64.** இக் குளம் குறிப்பாக விவசாயத்துக்கென்றே உருவாக்கப்பட்டது. இதன் நீரை நம்பி விவசாயம் செய்யுமாறே பெருமளவு மக்கள் இப் பிரதேசத்தில் குடியேற்றப்பட்டனர்.

**65.** இக் குளத்தின் உரிமையாளர்கள் இக் குளத்தை நம்பி விவசாயம் செய்து வரும் விவசாயிகள் தான். இக் குளத்தை மேலும் அபிவிருத்தி செய்து இப்போது பயிர்செய்யும் 21000 ஏக்கர்களுக்கு மேலதிகமாக இன்னமும் 15000 ஏக்கர் பயிர் செய்ய வேண்டும் என்பது விவசாயிகளின் நீண்ட நாள் எதிர்பார்ப்பாக உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

66. தெற்கில் பல இடங்களில் உள்ளது போல வருடத்திற்கு மூன்று போகங்களுக்கு இல்லாவிட்டாலும் இரண்டு போகங்களுக்காவது முழுமையாக பயிர்செய்ய முடியாதா என்பது அவர்களின் ஆவலாகும்.

67. முன்னர் ஒன்றாக இருந்த குடும்பங்கள் எல்லாம் இன்று பல குடும்பங்களாக விரிவடைந்துள்ளதால் காணிகள் பங்கிடப்பட்டு இவற்றின் பரப்பளவு சிறியதாகி வருவதாக கூறும் விவசாயிகள் அவர்களின் பரம்பரைகளுக்கு மேலும் காணிகளைப் பெற்று பொருளாதார ரீதியில் பயன்தரக் கூடிய அளவில் பயிர் செய்ய வேண்டும் என்ற நியாயமான எதிர்பார்ப்பை கொண்டுள்ளனர்.

68. வன்னியின் குறிப்பாக கிளிநொச்சியின் எதிர்கால உட்கட்டுமான, பொருளாதார, குடிப்பரம்பல் அபிவிருத்திகளுக்கான வாய்ப்புக்களும் தேவைகளும் வடமாகாணத்தினதும் வட மாகாண மக்களதும் இருப்புக்கு அவசியம் என்பதுவும் இங்கு கருத்திலெடுக்கப்பட வேண்டும்.

69. குடி நீருக்கும் விவசாயத்துக்குமான நீருக்குமான தட்டுப்பாடு முறையே யாழிலும் கிளிநொச்சியிலும் ஏற்படும் போது தவிர்க்க முடியாத நிலையில் வடக்கு மாகாண சபையே வேறு மாகாணங்களிலிருந்து இரணைமடுக் குளத்துக்கு நீரைக்கோர வேண்டிய இக்கட்டான நிலை ஏற்படலாம். இதன் மூலம் தற்போது வட மாகாணத்தின் ஆளுகைக்குள் உள்ள இரணைமடுக் குளமும் அதன் கீழ் நீர்ப்பாசனம் பெறும் நிலங்களும் கை விலகிப்போகலாம்.

70. குளத்தின் நீர் இருப்பு குறையும் காலங்களில் விவசாயிகளுக்கும் நீர் விநியோகப் பயனாளிகளுக்கும் இடையில் ஏற்படக்கூடிய நீர்ப்பங்கீட்டுக்கான போட்டிகள் பிரதேசங்களுக்கிடையில் புதிய முரண்பாடுகளை ஏற்படுத்தலாம்.

71. இன்று கிளிநொச்சி மாவட்டம் வளர்ந்து வரும் பிரதேசமாக உள்ளதாலும் நகர மயமாக்கத்தினை நோக்கி நகர ஆரம்பித்திருப்பதாலும் மாறி வரும் அரசியல், சமூக பொருளாதாரக்காரணிகளுக்கு அமைய தமிழ்மக்கள் வன்னியை நோக்கிச் சென்றுகுடியேறுவதை ஊக்குவிக்க வேண்டிய சூழ்நிலை உள்ள நிலையில் இங்கு அமுலாக்கப்படும் எந்த அபிவிருத்தித் திட்டமும் குறுகிய, நீண்ட எதிர்காலங்களில் இம் மாவட்டத்தின் இருப்பைப் பாதிக்காது பார்த்துக்கொள்ள வேண்டியது வடமாகாண சபையின் முக்கிய கடமைகளுள் ஒன்றாகும்.

72. எதிர்காலத்தில் உலகில் ஏற்படக்கூடிய நீருக்கான தட்டுப்பாடு நாடுகள், பிராந்தியங்கள் மற்றும் மக்களுக்கிடையிலான போட்டிகளையும் ஈற்றில் போர்களை ஏற்படுத்தலாம் என நிபுணர்களும் ஐ.நா அமைப்பும் எதிர்வு கூறுகின்றனர். இதனைத் தவிர்க்கும் முகமாக சிறிய நீர் முகாமைத்துவ அலகுகளை (Water Resouree Management Unit) உருவாக்கல் என்ற புதிய கருத்தை நாடுகள் கடைப்பிடிக்க வேண்டும் என்ற ஆலோசனையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிபுணர்களும் ஐ.நா. அமைப்பு முன்வைக்கின்றனர். அதாவது ஒவ்வொரு பிரதேசமும் தமக்குரிய நீர்மூலங்களை தமது பிரதேசங்களினுள்ளேயே தேடிக்கொள்ள வேண்டும் என்பதுவும் பிரதேசங்கள் என்பது நாடுகளுக்குள்ளேயே உள்ள இயலுமானவரை சிறியதான புவியியல், சமூக அலகுகளாக இருக்க வேண்டும் என்பதுவும் இந்த கருத்தின் சாரம்சமாகும்.

73. மாகாண சபை முறை உருவாக்கப்பட முன்பு நீர்ப்பாசன திணைக்களங்களின் கீழ் திட்ட முகாமைத்துவப் பிரிவு (Project Managemnet Unit) என ஒரு பிரிவு இருந்தது. இப்பிரிவு பாரிய நீர்ப்பாசனக் குளங்களின் மூலம் விவசாய செய்யும் விவசாயிகளைக் கொண்டு உப திட்ட முகாமைத்துவ குழுக்கள் உருவாக்கப்படுவதும் வழமையாக இருந்தது. இப்போதும் மத்திய அரசின் நீர்ப்பாசன திணைக்களத்தில் இப்பிரிவு இயங்குகிறது. இவை பாரிய குளங்கள், நீர்ப்பாசனம் போன்றவை பற்றிய ஆலோசனைகளிலும் முடிவுகளிலும் பங்கெடுக்கும் அதிகாரமுள்ள அமைப்புக்களாக இருந்தன. இவை இயங்காததும் இரணைமடுக்குளத்தில் இன்று ஏற்பட்டுள்ள முரண்பாடுகளுக்கு ஒரு காரணமாகும்.

74. குளத்தில் அதிக நீரைத் தேக்கி வைப்பதன் மூலமே அப்பிரதேசத்தில் அரிதாக உள்ள நிலத்தடி நீரைப் பேணி அம்மக்களின் குடி நீர்ப் பிரச்சினையையும் ஓரளவுக்கு தீர்க்க முடியும்.

75. இரணைமடுக் குளம் உள்ள கிளிநொச்சி மாவட்டத்திலேயே பல இடங்களில் கோடை காலங்களில் மோசமான குடிநீர்ப் பற்றாக்குறை உள்ளது. குடி நீரின்மை காரணமாக பரந்தன், ஆனையிறவு, தட்டுவன்கொட்டி, உமையாள்புரம், குஞ்சுப்பரந்தன், பூநகரி ஆகியவற்றின் குடிப்பரம்பல் பெருமளவு குறைந்துள்ளதை பொதுவாக அவதானிக்க முடிகின்றது. இவ்வருடம் பெப்ரவரி மாதத்திலேயே கிளிநொச்சியின் சில பகுதிகளில் நீருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

76. இரணைமடுக் குளத்திலிருந்து நீர்வழங்கல் இயலுமான சந்தர்ப்பம் அதாவது மேலதிக நீர் சேமிப்பு என்ற நிலை ஒன்று உண்மையில் ஏற்படுமானால் அதை குடிநீர் தட்டுப்பாடு பெருமளவு உள்ள கிளிநொச்சியின் பகுதிகளுக்கே முதலில் விநியோகிக்க வேண்டும். அதன் மூலம் அப்பிரதேசத்தின் குடிப்பரம்பலின் அளவினை தக்க வைப்பதுடன் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அல்லது ஏற்பட வேண்டிய குடிப்பரம்பல் அதிகரிப்புக்கேற்பவும் கிளிநொச்சி மாவட்டத்தை விருத்தி செய்ய முடியும்.

77. திட்டக்குழுவினர் அண்மைக்காலமாக யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீர் பற்றி ஏற்படுத்தி வரும் பயமும் இத்திட்டத்தை அமுல்படுத்துமாறு யாழ் மக்கள் கோர வேண்டும் அல்லது போராட வேண்டும் என செய்து வருகின்ற பிரச்சார முயற்சிகளும் வட மாகாண மக்களிடையே தேவையற்ற முரண்பாடுகளைத் தோற்றுவிக்கக்கூடும். குடாநாட்டின் நிலத்தடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரின் மாசடைதலைப்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்குப் பதிலாக அச்ச உணர்வை ஏற்படுத்தும் முயற்சிகளிலும் சிலர் அண்மைக் காலமாக ஈடுபடுவது அவதானிக்கப்பட்டுள்ளது. இது மிகவும் கண்டிக்கத்தக்கது. இதுபோன்ற செயற்பாடுகளின் பின்னாலுள்ள அபாயங்களை வடக்கு மாகாண சபை விழிப்புடன் அவசரமாக கருத்திலெடுக்க வேண்டும்.

**எமது ஆய்வுகள், சந்திப்புக்கள், கலந்துரையாடல்கள் ஆகிய வழிமுறைகள் ஊடாக நாம் பின்வரும் சிபார்சுகளை முன்வைக்கின்றோம்**

**78.** இத்திட்டத்தை தற்போதுள்ள ஒருங்கிணைந்த வடிவில் தொடராது மூன்று பகுதிகளாக பிரித்து

78.1 இரணைமடுக் குளத்தின் அணைக்கட்டையும் அணையின் ஏனைய அமைப்புக்களையும் பாசன நீர் விநியோகக் கட்டுமானங்களையும் திருவையாறு ஏற்று நீர்ப்பானத்தையும் புனரமைத்து, மேம்படுத்தல்.

78.2 **இரணைமடுவிலிருந்து யாழ் குடா நாட்டுக்கான நீர் விநியோகத்துக்கென நீரைப்பெறப்போவதில்லை என்பதை திட்டவட்டமான முடிவாகக் கொண்டு** குளத்திலிருந்து நீரைப் பெறுவதற்கான அமைப்பு, பளை வரையான நீர்க் குழாய்கள் மற்றும் பளையில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள சுத்திகரிப்பு நிலையம் ஆகிய கட்டுமானங்களை முழுமையாகக் கைவிட்டு குடாநாட்டின் வீட்டுத் தேவைக்கான அல்லது பொதுத் தேவைக்கான பாதுகாப்பான நீர் வழங்கலுக்குரிய நீர் விநியோகத்திட்டத்தை வேறு மாற்று நீர் மூலத்தை அல்லது மூலகங்களை கண்டறிந்து அவற்றிலிருந்து நீரைப்பெற்று அமுல்ப்படுத்தல்.

78.3 யாழ் மாநகர சபைப் பகுதிக்கான கழிவு நீர் வடிகாலமைப்பை உருவாக்குதல் ஆகியவற்றை வெவ்வேறான மூன்று திட்டங்களாக முன்னெடுக்க வேண்டும் எனவும்.

**79.** வடமாகாண சபை ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் பேச்சுவார்த்தை நடாத்தி மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு மாகாண அரசு அமைந்த பின் மக்களின் அபிலாசைகளை கருத்தில் கொள்ளாமல் வடிவமைக்கப்பட்ட இத்திட்டத்தை அப்படியே அமுல்படுத்த அனுமதிக்க இயலாது என்ற யதார்த்தத்தை ஆசிய அபிவிருத்தி வங்கியை ஏற்றுக்கொள்ள வைத்து திட்டத்தில் ஏற்படுத்த வேண்டிய மேற்கூறிய மாற்றத்துக்கு அனுமதி பெற முயற்சிக்க வேண்டும் எனவும்.

**80.** இரணைமடுக் குளத்தின் அணைக்கட்டை உயர்த்தி வலுவாக்குதல், விவசாய நீர்ப்பாசன வடிகால்களை புனரமைத்து மேம்படுத்தல் போன்றவை அத்தியவசியமானவை, மிக அவசரமானவை என வலியுறுத்துவதுடன் அவை அரைகுறையாக அல்லாமல் முழுமையாக புனரமைக்கப்படவும் மேம்படுத்தப்படவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**81.** எதிர்காலத்தில் இரணைமடுக் குளத்தின் நீரேந்து பிரதேசங்களில் செய்யக்கூடிய அபிவிருத்திகளை இயலுமானவரை தவிர்க்க வேண்டும் எனவும்.

**82.** இரணைமடுக் குளத்துக்கான நீர் வரத்து அதிகமான ஒரு சில காலங்களில் வான் பாய்வதால் ஏற்படும் நீர் விரயத்தை தவிர்க்க ஏதும் சாத்தியமான வழி உண்டா என (உதாரணமாக, தற்போதைய அணைக்கட்டிற்கு மேற்பகுதியில் மேலதிகமான ஒரு அணைக்கட்டை அமைப்பதான முந்தைய யோசனை மீண்டும் ஒரு தடவை ஆய்வு செய்ய வேண்டும் எனவும் இதன் போது மாங்குளம் பகுதிக்கான கரிப்பட்ட முறிப்பு நீர்த்திட்டம் பற்றியும் கவனத்தில் கொள்வது அவசியம்)

**83.** குடாநாட்டின் நிலத்தடி நீர் மாசுபட்டுள்ளதையும் குடாநாட்டின் வீட்டுபாவனைக்கான பொருத்தமான நீரின் தேவையையும் கருத்திலெடுத்து இப்போதைய திட்டத்தில் கட்டம் கட்டமாக 20 வருடங்கள் எடுத்து வீடுகளிற்கு நீரை வழங்கமுடியும் என முடிவெடுக்கக்கூடிய நிலையுள்ளதையும் கருத்தில் கொண்டும்.

83.1 விரைவாக குடாநாட்டுக்கான நீர் விநியோகத்துக்கான மாற்று நீர் மூலங்களை கண்டறிவதற்கான செயற்றிட்டத்தை அமுலாக்கி, கண்டதைந்த அந்த **மாற்று நீர் மூலகங்களிலிருந்து குடா நாட்டின் வீடுகளுக்கான நீர் விநியோகத்தை படிப்படியாக வழங்க ஆரம்பித்தல் வேண்டும்** எனவும்.

83.2 நிலத்தடி நீர் மாசடைதலைத் தடுப்பதற்கானதும் மாசடைந்த, உவரடைகின்ற நிலத்தடி நீரை மீட்டெடுப்பதற்கானதும், நிலத்தடி நீரைச் சூறையாடும் போக்கைத் தடுப்பதற்கான வழிமுறைகளைக் கண்டறிவதற்கானதும், மழை நீரை உச்ச அளவில் சேமிப்பதற்கான வழிவகைகளை கண்டறிவதற்கானதுமான நடவடிக்கைகளை அவசரமாக முன்னெடுத்தல் வேண்டும் எனவும், உதாரணமாக

83.2.1 கழிவுகளை அகற்றுவதற்கான நிபுணத்துவ ஆலோசனைகளைப் பெற்று உரிய சுற்றுச்சூழலுக்குப் பொருத்தமான கழிவு முகாமைத்துவத்தை மட்டுமே உள்ளூராட்சி சபைகள் செய்ய வழிசெய்தல்.

83.2.2 முதற்கட்டமான சன அடர்த்தி கூடிய பகுதியான மாநகரசபைப் பகுதியிலும் பின்னர் குடாநாட்டின் அனைத்துப் பகுதியிலும் கழிவு நீர் வடிகாலமைப்புக்களையும் கழிவு நீரை முகாமை செய்வதற்கான நிலையங்களையும் அமைப்பதற்கான வேலைத்திட்டங்களை முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளல்.

83.2.3 விவசாய இரசாயன உள்ளீடுகளின் கட்டுப்பாடற்ற உள்வருகையையும், கட்டுப்பாடற்ற பாவனையையும் கட்டுப்படுத்தும் விதிகளை கடுமையாக அமுல்ப்படுத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

83.2.4 நீரைக் சிக்கனப்படுத்தக் கூடிய விவசாய தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்தி, மானியங்கள் அல்லது உதவிகள் மற்றும் சட்ட நடவடிக்கைகள் மூலம் அனைவரும் கடைப்பிடிக்க வழி செய்தல்.

83.2.5 குடாநாட்டின் நிலத்தடி நீரை போத்தல்களில் அடைத்துவிற்கும் தொழிற்சாலைகளை உடனே தடை செய்து மூடல்

83.2.6 நிலத்தடி நீரை வேகமாக வெளியேற்றக் கூடிய பாரிய நீர்ப்பம்பிகளுக்குப் பதிலாக வலுக்குறைந்த நீர்ப் பம்பிகளை சிபார்சு செய்தல்.

83.2.7 மழைநீர் சேமிப்புக் கட்டுமானங்களை புதிதாக அமைக்கப்படும் கட்டடங்கள் அனைத்திலும் கட்டாயமாக்கல்.

83.2.8 குடாநாட்டில் பெய்யும் மழையின் ஒரு துளி தானும் வீணே கடலில் சேர்வதைக் தடுப்பதை இலக்காகக் கொண்டு அதற்கான அமைப்புக்களை உருவாக்குதல்.

83.2.9 குடா நாட்டின் குட்டைகள் மற்றும் நீர் நிலைகளை நிபுணத்துவ அறிவுடன் பொருத்தமான வகையில் தூர் வாருதல்.

83.2.10 நிலத்தில் வீழும் மழை நீர் முழுவதும் குட்டைகளை, நீர் நிலைகளை அடையக்கூடிய வகையில் வாய்க்கால்களை தூர் வாருதல், சீரமைத்தல், புதிதாக அமைத்தல் மற்றும் ஆக்கிரமிப்புக்களை அகற்றல்.

83.2.11 யாழ்ப்பாணத்துக்கான ஆறு அல்லது ஆறுமுகம் ஆற்றுத் திட்டத்தின் சாத்தியக்கூற்றை மீள ஆய்வு செய்தலும் பொருத்தமெனின் அமுல்படுத்தல்.

**84.** இனிமேலாவது மாற்றியமைக்கப்பட்ட திட்டமான இரணைமடுக் குளத்தின் அணைக்கான கட்டுமானங்களை திருத்துதல், நீர்ப்பாசன வாய்க்கால்களை திருத்துதல் யாழ் மாநகரசபைப் பகுதிக்கான கழிவு நீர் வடிகாலமைப்பையும் பரிகரிப்பு பொறிமுறையையும் அமைத்தல். குடாநாட்டுக்கான இரணைமடு அல்லாத மாற்று நீர் மூலத்திலிருந்தான நீர் விநியோகம் போன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவுக்கு வெளிப்படைத் தன்மையையும் சகலருக்கும் குறிப்பாக மக்களுக்கு பொறுப்புக்கூறும் கடப்பாடையும் ஈடுபடும் சகலரும் தவறாது கடைப்பிடிக்க வேண்டும் எனவும் நாம் சிபார்சு செய்கின்றோம்.

**85.** மேலதிகமாக இத் திட்டம் தொடர்பான எமது ஆய்வுகளின் மூலம் பெற்றுக் கொண்ட அனுபவங்களின் அடிப்படையில் பின்வரும் சிபார்சுகளையும் முன்வைக்கின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

85.1 எதிர்காலத்தில் இத்தகைய எந்த அபிவிருத்தித் திட்டத்தையாவது திட்டமிடுவதாயின் ஆரம்பத்திலேயே மக்கள், துறைசார் நிபுணர்கள், மக்கள் பிரதிநிதிகள், சமூக செயற்பாட்டாளரின் பங்களிப்பும் ஆலோசனைகளும் பெறப்பட்டு நிலைபேண் அபிவிருத்தியை இலக்காக கொண்டு திட்டங்களை வடிவமைக்க வேண்டும்.

85.2 அபிவிருத்தி திட்டங்களால் ஏற்படக்கூடிய தாக்கங்கள் பற்றிய குறிப்பாக சமூக, சூழலியல், அரசியல் காரணிகளால் ஏற்படக்கூடிய தாக்கங்கள் பற்றிய காத்திரமான சாத்தியக் கூற்று ஆய்வுகளை உயர்தரத்தில் வெளிப்படைத் தன்மையுடன் செய்து திட்டங்களை வடிவமைக்க வேண்டும்.

85.3 எந்த நடவடிக்கையையும் அல்லது திட்டத்தையும் திட்டமிடும் போதும் செயற்படுத்தும் போதும் குறுகிய நீண்ட எதிர்காலங்களில் வடக்கின் எந்த ஒரு மாவட்டத்தினதும், மாகாணத்தினதும் மக்களது இருப்பு, அரசியல், சமூகம், பொருளாதாரம், ஒற்றுமை ஆகிய பரிமானங்களில் தூர நோக்கு அவசியமானது.

85.4 வடமாகணத்தின் நீர்வளம் பற்றிய புலமை சார் ஆய்வு ஒன்றை மாகாண சபை மேற்கொண்டு அதன்படி அபிவிருத்தி திட்டங்களை வகுக்க வேண்டும்.

85.5 வடமாகணத்துக்குப் பொருத்தமான நவீன, பசுமை விவசாய தொழில் நுட்பத்தை வகுத்து, அறிமுகப்படுத்தி, நடைமுறைக்கு கொண்டுவர வேண்டும்.

85.6 வேகமாக சிதைக்கப்பட்டு வரும் வட மாகாணத்தின் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் சீரமைக்கவும் துரிதமான, காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

85.7 எதிர்காலத்தில் வட மாகாண அரசு அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலும் தனது ஏனைய செயற்பாடுகளிலும் போதியளவு வெளிப்படைத் தன்மையையும் பொறுப்புக் கூறும் பண்பையும் பேண வேண்டும்.

85.8 குடாநாட்டின் மட்டுப்பாடான நில, நீர் வளங்களைக் கருத்தில் கொண்டு மக்களை பெரு நிலம் நோக்கி தாமாகவே விரும்பி நகர்வதைத் தூண்டக் கூடிய வகையில் திட்டங்களை வகுத்தல் வேண்டும்.

85.9 தற்போது கடல்நீரை நன்னீராக்குவதற்கான செலவுகள் வேகமாக பாரியளவில் குறைந்து வருகின்றது. குடாநாட்டுக்கும் வடக்கின் ஏனைய பகுதிகளுக்கும் கடல் நீரை சுத்திகரித்து விநியோகிப்பதற்கான சாத்தியக் கூற்றை ஆய்வு செய்து சாத்தியமெனின் அமுல்ப்படுத்த வேண்டும்.

85.10 மாகாண சபை முறை அமுலுக்கு வர முன்னர் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் இருந்த திட்ட முகாமைத்துவ பிரிவை வட மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்குவதுடன் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நிர்வாகப்பரப்புக்குள் வரும் பாரிய குளங்களுடைய திட்ட முகாமைத்துவ குழுக்களை உள்வாங்க வேண்டும்.

மாண்பு மிகு முதலமைச்சர்
வடக்கு மாகாண சபை

தங்களால் பணிக்கப்பட்டதன் படி மேலே இவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ள தகவல்களையும் விளக்கங்களையும் எமது சிபார்சுகளையும் இங்கு கீழே ஒப்பமிட்டுள்ள நாங்கள் தங்கள் மேலான கவனத்திற்கு முன்வைக்கின்றோம்.

நன்றி

தங்கள் உண்மையுள்ள
01. திரு. தி. இராசநாயகம்
02. திரு. மாரிமுத்து கணபதிப்பிள்ளை
03. திருமதி. விஜயராணி சதீஸ்குமார்
04. வைத்திய கலாநிதி. சிங்காரவேலு குமரவேள்
05. திரு. கிருஷ்ணர் ஆறுமுகம்
06. திரு. கே.ரீ. கணேசலிங்கம்
07. திரு. என். சுந்தரேஸ்வரன்
08. திரு. ஆர். இராயேஸ்கண்ணன்
09. வைத்திய கலாநிதி என். சிவராஜ்
10. திரு. சே. கனகவபாபதி

மேற்படி முன்மொழிவுகளுக்கு அமைவாக திட்ட அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு துரித கதியில் நடைபெற்று வருகின்றது. திட்டம் நிறைவுறும் போது குளம் 36' ஆக உயர்த்தப்பட்டு 120000 ஏக்கர் அடி நீர் தேக்கப்படும் போது எமது பல்வேறு குறைபாடுகள் நிவர்த்தி ஆகும் என எதிர்பார்த்திருக்கின்றோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளநலம் காப்போம் சந்தோசமாக வாழ்வோம்

– திருமதி. சி. சுதாகரன் –
Dip. in Counseling
கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை

நாம் ஆரோக்கியமானவர்களாக வாழ வேண்டுமானால் உடல் நலத்தை காப்பது போல் உளநலத்தையும் காக்க வேண்டும். உலகில் பல கோடிமக்கள் மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் என ஆய்வுகள் கூறுகின்றன. உலகில் 35 கோடி மக்களுக்கு மேல் உளநலம் பாதிக்கப்பட்டவர்கள் என ஆய்வுகள் கூறுகின்றன. இது வயது வேறுபாடு, இன, மத, தொழில் வேறுபாடின்று அனைவரையும் பாதிக்கின்றது. இதற்குரிய காரணம் நீண்டகாலக் கவலை, தொழிலின்மை, ஏமாற்றம், ஏக்கம், தோல்வி, மதுப்பழக்கம் போன்றன சில காரணங்கள் இதனால் தற்கொலைக்கு முயற்சிப்பவர்கள் அதிகம். ஆண்டு தோறும் உலகில் 8 இலட்சம் பேர் தற்கொலை செய்கின்றனர். இவர்களில் அனேகமானவர்கள் இளம் வயதினரே.

உளநலம் என்பது நாம் வாழ்க்கையில் சில சூழ்நிலைகளினால் ஏற்படும் மன அழுத்தத்திற்கு நாம் மனநிறைவுடன் ஏற்புடையதாகும். திறமையே உளநலம் என்கின்றனர்.

உளநலம் பாதிக்கப்பட்டால் உடல் நலமும் பாதிக்கப்படும். இவ்வாறான பாதிப்பக்களிற்கு உள்ளானவர்களிற்கு நோயைக் கண்டுபிடித்து சிகிச்சை அளிக்க வேண்டியது முக்கியமானது. இந்நோயாளர்கள் மருத்துவத்திற்கு சவாலாக உள்ளனர்.

இவ்வாறு உளநலம் குன்றியவர் பலவிதமான நோய்களிற்கு உள்ளாவார்கள். இவற்றுள் மனச் சோர்வும் ஒன்று.

மனச்சோர்வு ஒரு மனிதனின் உடல், உணர்வு, சிந்தனையைப் பாதிக்கும் பாரதூரமான மனநோயாகும். பொதுவாக மனச்சோர்வின் குணங்குறிகள் பல்வேறு விதமான இயலாமைகளாய் வெளிப்படுத்தப்படுகின்றன.

படிக்க இயலாமை, வேலை செய்ய இயலாமை, நித்திரை செய்ய இயலாமை, மகிழ்ச்சியாக வாழ இயலாமை.

இவ்வாறு மனச்சோர்வு ஏற்படக் காரணம் அன்பானவர்களின் இழப்பு, சொத்து இழப்பு, கொடுமையான வறுமை, மோசமான நோய்கள் போன்றன மனச்சோர்விற்கு காரணமாகவுள்ளதோடு மற்றவர்களால் தாழ்நிலைக்கு உள்ளாக்கும் போது அதாவது பதுமை வயது கர்ப்பம், குடும்பப்பிரிவு, வேலையின்மை போன்றனவும் பாலியல் துஷ்பிரயோகம், கொள்ளை போன்றனவும் மனச்சோர்வை ஏற்படுத்தும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவருக்கு ஏதாவது ஒரு செயலால் கவலை ஏற்பட்டால் சிறிது காலம் கவலைப்பட்டு விட்டு பின் தானாகவே மீண்டு விடுவார். ஆனால் மனச்சோர்வு ஏற்பட்டால் மாதக்கணக்காக மிகவும் கவலையோடு இருப்பர். எதிலுமே ஈடுபடாது ஒதுங்கியிருப்பார். தன்னைத் தாழ்த்தி மதிப்பிடுவார்.

மனச்சோர்வின் அறிகுறிகளாக

- கவலையில் மூழ்கியிருத்தல்.
- ஊடனடியாக அழுதல்.
- எந்நேரமும் யோசித்தபடியிருத்தல்.
- எதிர்காலத்தில் நம்பிக்கையின்மை.
- தாழ்வு மனப்பான்மை.
- தனித்த நிலை.
- தனக்குத் தானே தீங்கு செய்யும் மனோநிலை.
- தற்கொலை பற்றிய நினைப்பு.
- வாழ்க்கையில் சந்தோசமின்மை.
- நித்திரைக்குழப்பம்
- பசியின்மை
- குடும்ப வாழ்வில் நாட்டமின்மை
- பலவீனமாகவிருத்தல்
- ஞாபக மறதி
- உடல் மெலிவு
- தலையிடி, நெஞ்சு நோ, கைகால் உளைவு நாட்பட்ட மருந்துகள் பாவித்தல்.

**மனச்சோர்வுடையோரை எவ்வாறு இனங்காணல்**

- மனச்சோர்விற்குரிய குணங்குறிகள் இருக்கின்றனவா? என்பதனை கண்டு பிடிக்கவும். அவை அவருடைய நாளாந்த வாழ்க்கையைப் பாதிக்கின்றனவா என்பதனை அறிந்து கொள்ளல்.
- எவ்வாறு இந் நிகழ்வு ஏற்பட்டது என்பதனை இனங்காணல்.
- கூடுதலாக உடல் சார்ந்த நோய்களைக் கூறுவார்கள். கதைக்காமல் இருப்பார்கள். இவர்கள் உண்மையிலே தங்களைத் தாங்கள் அழித்துக் கொள்ளும் ஆபத்து மிக்கவர்கள்.
- நோயாளியினுடைய முதற் சந்திப்பின் போதே அவர் தற்கொலை செய்யும் எண்ணத்தில் இருக்கிறாரா என்பதை கண்டறிவதன் மூலம் இறப்பு சிந்தனையுடையவர்களாக இருப்பார்கள். என்பதை அறியமுடியும் உதாரணம் - இறந்தவர்களைக் கனவில் காணுதல். தங்களது உடம்பு படிப்படியாக அழிந்து போவது போல் உணரலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ தவறான ஆனால் உறுதியுடன் பேணப்படுகின்ற போலி நம்பிக்கைகளை அவர் கொண்டிருக்கின்றாரா? என்பது பற்றி அவரது குடும்ப உறுப்பினர்களைக் கேட்கவும். சிலவேளைளில் இவ்வாறான நம்பிக்கைகள் அவரது உடல் சம்பந்தமானதாக இருக்கலாம். உதாரணமாக தனக்கு புற்றுநோய் வந்து விட்டது என்று எவ்வித ஆதாரமுமின்றி நம்பலாம். நோயாளியிடம் மாயப்புலனுணர்வுகள், போலி நம்பிக்கைகள் என்பன அதிகமாக காணப்படும். உளமாய நோய்கள் மனச்சோர்வின் அறிகுறிகளுடனும் தொடங்கக் கூடும். மேலும் இவர்கள் உளமாய மனச்சோர்வு என்னும் கடுமையாக அவசரமாக சிகிச்சையளிக்க வேண்டிய உளநோய்களால் பாதிப்புற்று இருக்கலாம். இவ்வாறான நிலைமைகளின் போது உள மருத்துவ உதவியை நாடுவது நன்று.

### சிகிச்சை

1. நோயாளி பற்றியும், நோயின் தன்மை பற்றியும் குடும்ப மட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தி இதனூடாக குடும்ப சமூக ஆதரவுகளை பெற்றுக் கொடுத்தல்.
2. நோயாளியை நாளாந்த கருமங்கள், வேலைகள் செய்வதற்கு ஊக்கப்படுத்துவதுடன் சமூக நிகழ்வுகளிலும் பங்கேற்கச் செய்தல்.
3. நோயாளியைஉடன்பாடாக சிந்திக்க வைத்தல்.
4. தற்கொலை எண்ணத்தை கைவிட பாடுபடல்.
5. ஆதரவு உளவளத்துணையை வழங்குதல்.

இவ்வாறு மானிடம் பல உள நோய்களிற்கு உள்ளாகி உலகில் பல கோடி மக்கள் வாழ்கின்றனர். அம் மனிதர்களை சமூகத்தோடு ஒன்றிணைத்து வாழ வைக்க வேண்டிய பாரிய பொறுப்பு உளவளத்துணையாளரின் பாரிய பொறுப்பாகும்.

எனவே மக்களினது சமூக நலன் மற்றும் சமூக அபிவிருத்தியை ஏற்படுத்துவதும் சமூகத்தில் நலிவுற்றவர்களிற்கு நல்லதொரு சூழலை உருவாக்கிக் கொடுக்க வேண்டியது உளவளத்துறை சார்ந்த ஒவ்வொருவரின் கடமையாகும்.

***"உடலுக்கு மருத்துவம் செய்வதை விட மனதிற்கு மருத்துவம் பார்ப்பதே முதன்மையானது."***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசையின்பத்தினுள் தெய்வீகம்

ஆக்கம்
-திருமதி . சிவரூபவதி சிவபாலசுந்தரம்-
ஆசிரியர்
கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை

இசை என்ற பதம் பல பொருள் உணர்த்தும் பதமாகும். இங்கு ஆங்கில பதம் உணர்த்தும் (Art) என்ற பொருளினையே கலைக்கு விளக்கம் அளிக்கப்படுகின்றது. அதாவது (Art) என்றால் வினைத்திறன் என்பது கருத்து அதாவது நுண்ணியமான நிலையில் ஆற்றப்படும் திறன்மிக்க கலைகள் அனைத்தும் கலை என்று அழைக்கப்படுகின்றது. அத்தகைய வினைத்திறன் என்னும் கலையை கலை வகுப்பிலே 64 ஆக வகுத்தனர். என்று திகண்டிலக்கியம் கூறுகின்றது. இசை (music) என்ற சொல் இசைய வைப்பது என்று பொருட்படும். மியூசிக் என்ற சொல் (mouse) என்ற கிரேக்க மொழிச்சொல்லிலிருந்து வந்தது. இச்சொல்லையே இன்று ஆங்கிலத்தில் கையாளுகின்றனர். இசையானது ஓரறிவு உயிர்முதல் ஆறறிவு படைத்த உயிர்கள் வரை இசையச்செய்யும் தன்மையுடையது. இசைக்கலை பல்லவர் காலத்தில் ஆட்சியாளர்கள் கோயில்கள் சைவ வைணவ மெய்யன்பர்கள் அவர்களின் இலக்கியங்கள் என்பவற்றைக்கொண்டு முக்கியத்துவம் பெற்றது.

தமிழ் இசைதெய்வீக இசையாக வளம் பெற்று விளங்க மேற்சொன்னவர்கள் அக்காலத்தில் கலைக்கு கொடுத்த முக்கியத்துவமே காரணம் எனலாம். அன்பே வடிவான இறைவனும் இசையே இசைப்பயனாய் விளங்குகிறான். "ஏழிசையாய் இசைப்பயனாய்" என சுந்தரரும் "ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே என திருநாவுக்கரசரும் "பண்ணமார் விணையினான்" என திருஞானசம்மந்தரும் இறைவனை இசைவடிவமாக பாடியுள்ளனர். "இசையை வானமாகக்கொண்டு சமயத்தை வளர்த்தவர்கள் நாயன்மார்கள்" எனத்தமிழிலக்கிய வரலாறு தந்த பேராசிரியர் செல்வநாயகத்தின் கருத்து அமைகின்றது.

மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை இசையில் ஊன்றித்திளைக்கின்றான். குழந்தைகள் கூட தாலாட்டுப்பாடலைக் கேட்டு உறங்கி விடுகின்றனர். கடின வேலைசெய்யும் உழைப்பாளிகள் தங்களின் உழைப்பை போக்க பாடிக்கொண்டே வேலை செய்கின்றனர். மாணவர்கள் பாட்டின் மூலமே பல அரிய கருத்துக்களை கற்றுக்கொள்கின்றனர். இசையின் பெருமை அளவிடற்கரியதாகும் முழுமுதற்கடவுளை அடைவதற்கு சிறந்த சாதனமானது இசையேயாகும். எல்லா உயிர்களினதும் மனதையும் ஒருநிலைப்படுத்துவது இசையின் இயற்கையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாட்டின் பண்பாட்டைக் காட்டுவது அந்நாட்டின் நுண்கலைகளிலேயே தங்கியுள்ளது. அத்துடன் கலை இல்லாத எந்நாடும் மற்றைய வளங்கள் இருப்பினும் சுபீட்சமாக இருக்கமுடியாது. இசையினால்த்தான் அகிம்சை தர்மம் சமாதானம் சாந்திநிலை போன்றனயாவும் ஒருங்கே வளர முடியும். பழந்தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் இசை பற்றிய பல குறிப்புகள் காணப்படுகின்றன. இசை பாடுதலையே தொழிலாக உடைய பாணன் விறலி முதலான இசைவாணர்களை பற்றிய குறிப்புக்களும் காணப்படுகின்றன. ஐவகை நிலங்களையும் இயற்கை அடிப்படையில் நிலங்களைப்பிரித்து ஒவ்வொரு நிலத்திற்கும் யாழும், பண்ணும் அமைந்துள்ளதைக்காணும் பொழுது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழகமும் அதனைச்சுற்றியுள்ள பகுதிகளிலும் இசைக்கலை பரவியிருந்ததையும் எல்லாவகை மக்களும் இசை உணர்ச்சி உடையவராய் இருத்தலையும் அறிய முடிகின்றது.

மேலும் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருவாய்மொழி முதலான இசைவடிவங்கள் யாவும் அளவிடற்கரிய இசைக்களஞ்சியங்களாக உள்ளன. ஆனால் அவைகளுக்குரிய பண்களில் இயல்பை உணர்த்தும் முறைப்படி பாடுவோர் இன்றைக்கு ஒரு சிலரே உளர் என்பது வருந்தத்தக்க ஒன்றாகும். அத்தடன் இனிய இசையை கேட்பதால் பல நன்மைகளும் நமக்கு கிடைக்கின்றன. சில குறிப்பிட்ட இராகங்களை கேட்பதால் பல நன்மைகளும் நமக்கு கிடைக்கின்றன. சில குறிப்பிட்ட இராகங்களைக் கேட்பதால் மனநோயாளிகள் நலம் பெறுகின்றனர். நினைவாற்றலைப் பெறுகின்றனர். சிலநேரங்களில் வேடிக்கைபாடல்களாலும் ஆரவார இசைக்கருவிகளாலும் மக்கள் வெவ்வேறு உணர்ச்சிகளை வெளிப்படுத்துகின்றனர். இத்தகு இசையின் சிறப்பு கருதியே நம் முன்னோர்கள் கலைமகள் கரங்களில் வீணையைக்கொடுத்துள்ளனர். பொதுவாக மக்கள் இசையின் இயல்புகளையும் வேறுபாடுகளை அறியாவிடினும் இசையை விரும்பாதவர் எவருமில்லை என்று அறுதியிட்டுக் கூறலாம்.

◈

◈ ◈ ◈

◈






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் விழா மலரின் பதிவுகள்



பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட போது கற்பித்த
முதலாவது ஆசிரியர்
திருமதி. ஆ. கௌரியம்மா அவர்கள்



முன்னாள் மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர்
அமரர் பொன். சபாபதி அவர்கள் எமது
பாடசாலையின் மெய்வல்லுநர் திறனாய்வின் போது



பாடசாலையின் ஆரம்பகால
முதல் மாணவன்
வரவேற்கப்படும் போது



மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு



2002ஆம் ஆண்டு அகில இலங்கையில்
முதலாம் இடம் பெற்ற உடற்பயிற்சி அணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வின் நிழல்கள்





















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழ் கலையரங்கில் முகிழ்ந்தவை

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பாடசாலையின் சுற்றாடல் முன்னோடிக் குழுக்கள்

தரம் - 6



தரம் - 7



தரம் - 8



தரம் - 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பாடசாலையின் விளையாட்டு அணிகள் - 2018

வலைப்பந்தாட்டக் குழு - 16 வயது பெண்கள்



வலைப்பந்தாட்டக் குழு - 18 வயது பெண்கள்



கரப்பந்தாட்டக் குழு - 16 வயது ஆண்கள்



கரப்பந்தாட்டக் குழு - 18 வயது ஆண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரப்பந்தாட்டக் குழு - 16 வயது பெண்கள்



கரப்பந்தாட்டக் குழு - 18 வயது பெண்கள்



கரம் அணி பெண்கள்



கரம் அணி ஆண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளித்தட்டு அணியினர்



சதுரங்க அணியினர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை விருத்தி நிகழ்ச்சித் திட்டத்தில் பெற்றோர் பங்களிப்பு

திரு.சு.பிறேம்குமார்,
ஆசிரியர்,
கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை

பாடசாலை மேம்பாடு என்பது ஒரு தொடருறு செயற்பாடாகக் கொள்ளப்பட வேண்டும். பாடசாலைகளில் மாணவர்கள் எல்லோரும் உயர்நிலையை அடைவதனை உறுதி செய்ய வேண்டும். இவ்வகையில், பாடசாலையின் பங்குதாரரான மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், சமூகம், தொடர்புடைய நிறுவன உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கூட்டாகச் சேர்ந்து பாடசாலைகளில் சிறந்த கற்றல் நிகழ்வதற்கான சிறந்த சூழலை உருவாக்கிக் கொள்ளவேண்டும். இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டில் பாடசாலைக்கான உருவகம் மிகவும் முக்கியத்தும் வாய்ந்தது. கூட்டிணைந்து கற்கும் ஒரு சமுதாயமாகப் பாடசாலையை உருவகித்துக் கொள்ளலானது கற்பித்தலை அல்லாது கற்றலைப் பாடசாலைகளில் முதன்மைப்படுத்துவதோடு, சிறந்த கற்றல் இடம்பெறுவதற்கான சாத்தியப்பாட்டிற்கு பலரது கூட்டிணைவு அவசியம்.

மாணவர்களின் கல்வி அடைவுகளிலும் அவர்களின் வினையாற்றல்களிலும் செல்வாக்குச் செலுத்துகின்ற காரணிகள் பலவற்றுள் பெற்றோரின் பங்களிப்பு முக்கியமான ஒன்றாகும். குறிப்பாக, பிள்ளை விருத்தி,பிள்ளையின் கல்வி அடைவு என்பவற்றில் வசதி ஏற்படுத்திக் கொடுப்பதிலும் கல்விசார், விருத்திசார் பிரச்சினைகள் ஏற்படாது தடுத்தலிலும் அப்பிரச்சினைகளுக்கான பரிகாரம் காண்பதிலும் பெற்றோரின் ஈடுபாடு இன்று முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

அதிகரித்து வரும் கல்விச் செலவீனங்களும் மாணவர் அடைவுப் புள்ளிகளின் வீழ்ச்சியும் பணித்துறைப் பண்பு நிறைந்த நிறுவனங்கள் மீதான நம்பிக்கையீனமும் இன்று பெற்றோரின் உரிமைகள், பொறுப்புக்கள், பெற்றோரின் தாக்கம் என்பவற்றின் மீதான எமது கவனத்தை மீள்குவிப்புச் செய்துள்ளன.

பாடசாலையின் முக்கிய பங்குதாரரான பெற்றோரின் பங்களிப்பினால் விளையும் அனுகூலங்கள் பலவற்றை நாம் பட்டியலிடலாம்.

- பிள்ளைகளின் கல்வியில் ஈடுபாடு காட்டும் பெற்றோரின் பிள்ளைகளின் கல்வி அடைவும் அறிகை விருத்தியும் உயர்வாக உள்ளன.
- பெற்றோர் - பிள்ளை உறவு வலுவாக உள்ள போது பிள்ளைகளின் செயற்பாடுகளில் பெற்றோர் அதிக அளவில் பங்குபற்றுகின்றனர்.
- பாடசாலை – பெற்றோர் உறவு வலுவாக உள்ள போது பாடசாலையுடன் பெற்றோர் கொள்ளும் தொடர்புகளின் எண்ணிக்கை உயர்வாக இருப்பதோடு, பிள்ளைவிருத்தி பற்றியும் கல்விச் செயன்முறை பற்றியும் பெற்றோர் சிறந்த விளக்கத்தையும் பெற்றுக் கொள்கின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பெற்றோர் - பாடசாலைப் பிணைப்பு உயர்வாக உள்ள போது வீட்டில் தமது பிள்ளைகளுக்கான ஆசிரியர்களாகவும் பெற்றோர் செயற்படுவதோடு,மீள்வலியுறுத்தல் செய்யக்கூடிய நேரான வழிவகைகளையும் வடிவங்களையும் அவர்கள் பயன்படுத்துவதையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

பங்காண்மை என்பது இன்று பிரபல்யம் பெற்று வரும் ஒரு பதமாகும். வர்த்தகம் சார் பங்காண்மை, விருத்தி சார் பங்காண்மை,பாடசாலை – பெற்றோர் பங்காண்மை என்றவாறு பங்காண்மை முதன்மைப்படுத்தப்படுவதை நாம் காணலாம்.பங்காண்மை என்ற பதத்தை விளங்கிக் கொள்வதும் அதனை நடைமுறைச் சாத்தியம் மிக்கதாகக் காண்பதும் இலகுவான ஒன்றன்று. ஆயினும்,பங்காளிகள் கூட்டிணைந்து தொழிற்படும் போது, அது பங்காண்மையை விருத்தி செய்து கொள்வதற்கான முதற்படியாக அமையும். தமது பிள்ளைகளின் அனுபவங்கள், விருப்புக்கள், மனப்பாங்குகள், ஆர்வங்கள் போன்றவை குறித்துப் பெற்றோர் பெற்றிருக்கும் அறிவானது ஆசிரியர்களுடன் பகிரப்பட வேண்டும். அதேவேளை மாணவர் விருத்தி குறித்து ஆசிரியர்கள் தொடர்ச்சியாகப் பதிவு செய்து கொள்ளும் அவதானிப்புக்களும் பதிவுகளும் பெற்றோருக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும். குறிப்பாக பாடசாலைச் செயற்பாடுகளில் பெற்றோரை ஈடுபாடு கொள்ளச் செய்யும்போதே பாடசாலை மீதான பிடிமானத்தை அதிகரிக்கச் செய்து பங்காண்மையையும் அர்த்தம் பெறச் செய்ய முடியும்.

அந்தவகையில் வகுப்பறை, பாடசாலை என்பவற்றுக்குப் பெற்றோர் வருகைதரல்,பெற்றோருடனான கூட்டங்கள்,பெற்றோருக்கான பட்டறைகள்,பெற்றோர், ஆசிரியர் மாநாடுகள் போன்றன பிள்ளைகளின் கல்வியிலும் பாடசாலையிலும் பெற்றோர் பங்குபற்றுவதற்கு ஆர்வமூட்டும். பாடசாலை நிகழ்ச்சித் திட்டங்கள் குறித்தும் மாணவர் முன்னேற்றம் குறித்தும் எழுத்து மூலமானதும் வாய்மொழி மூலமானதும் தகவல்கள் பெற்றோருக்குப் பயனுள்ளவையாக அமையும்.

பிள்ளைப் பராமரிப்பு, கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றில் ஈடுபாடு கொள்ளும் பெற்றோர், தம்மைப் பற்றி நேர் மனப்பாங்கை விருத்தி செய்து, சுய நம்பிக்கையையும் அதிகரிக்கச் செய்து தமது சுய விருத்தியை அதிகரிக்கச் செய்யக்கூடிய நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றுவதையும் காணக்கூடியதாகவுள்ளது. பாடசாலையில் ஈடுபாடு காட்டும் இவர்கள், பாடசாலை குறித்தும் பாடசாலை ஆளணியினர் குறித்தும் பாடசாலையில் ஈடுபாடு கொள்ளாத பெற்றோரை விட, அதிக அளவில் நேர்மனப்பாங்கைக் கொண்டிருக்கின்றனர்.அத்தோடு பாடசாலை நிகழ்ச்சித் திட்டங்களுக்கான சமூக ஆதரவைப் பெறுவதில் ஆர்வம் காட்டி, ஏனைய சமூக நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களாகவும் உள்ளனர்.

பாடசாலையின் மீது பெற்றோரின் ஈடுபாட்டை அதிகரிக்க மேற்கொள்ளக்கூடிய நடவெடிக்கைகளாக பின்வருவனவற்றைப் பட்டியலிடலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பாடசாலை நுழைவாயிலில் பாடசாலைக்கான வருகையாளரையும், பெற்றோரையும் வரவேற்புக் கூடத்திற்கு வழிகாட்டக்கூடியதான வழிகாட்டிப் பலகையை நிறுவுதல்.
- பாடசாலை வரவேற்புக் கூடம் தகவல் நிறைந்ததாகவும் நன்கு வரவேற்பளிப்பதாகவும் அமைந்திருத்தல்.
- பெற்றோரிடமிருந்தும் எழுத்து மூலமானதும் தொலைபேசி மூலமானதுமான விசாரணைகள் யாவும் உடனுக்குடன் கவனத்தில் கொள்ளப்படுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல்.
- நேரான காரணங்களுக்காகவும் எதிரான காரணங்களுக்காகவும் பெற்றோருடன் தொடர்ச்சியான தொடர்புகளைப் பேணல்.
- மாணவர்களுக்குக் கற்பிக்கப்படும் புதிய விடையங்கள் பற்றியும்,கலைத்திட்டத்தில் இடம்பெற்றுள்ள புதிய மாற்றங்கள் பற்றியும் பெற்றோருக்கு அறியத் தருதல்.
- பாடசாலையிலும் வீட்டிலும் கற்றல் நடவெடிக்கைகளில் பெற்றோர் எவ்வாறு உதவ முடியுமெனப் பெற்றோருக்குத் தெரியப்படுத்தி அவர்களுக்கு ஆர்வமூட்டல்.
- குடும்பப் பொருளாதாரம்,குடும்பப் பின்னணி என்பன சார்பாகப் பெற்றோரிடையே வேறுபாடு காட்டாதிருத்தல்.

இதுவரை நோக்கியவற்றிலிருந்து பெற்றோர் - ஆசிரியர் உறவு ஒருவரை ஒருவர் மதிப்பதாகவும் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதாகவும் ஒரே இலக்கு நோக்கித் தொழிற்படுவதாகவும் அமையும் போதே,பெற்றோரும் பாடசாலையின் பங்காளிகள் என்ற எண்ணக்கரு அர்த்தம் பெறும். அதேவேளை பெற்றோர் மீது அதிக பொறுப்புக்களைச் சுமத்துவதன் மூலம் ஆசிரியர்கள் தமது பொறுப்புக்களைத் தட்டிக் கழிப்பது நியாயமன்று. பெற்றோரும் ஆசிரியர்களும் இணைந்து தமது பிள்ளைகள் சிறப்புறக் கற்பதற்கான சூழலை உருவாக்கிக் கொடுத்தலே உண்மையான கல்வி மேம்பாட்டிற்கு வழிவகுத்து, மாணவர்கள் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு சாதனை படைக்க உதவும்.

◈

◈ ◈ ◈

◈

தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்!

சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்!

தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்.

உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் அரங்காக சிறுவர் அரங்கு அறிமுகம்

– திருமதி. நசிதா அகிலன் –
ஆசிரியர்
கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை

கல்விப் பணி என்பது அறிவை மட்டும் தருவதல்ல அது மகிழ்வைத் தருவதாகவும் அமைய வேண்டும். மகிழ்வூட்டி அறிவைத் தருதல் அரங்கின் பணியாகும். இன்று கல்விப்புலத்தில் அரங்கச் செயற்பாடுகளின் அவசியம் உணரப்பட்டுள்ளதுடன் கலைத்திட்டதிலும் உள்வாங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

சிறுவர் அரங்கு என்னும் பொழுது சிறுவர்கள் பார்வையாளர்கள் என்ற எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படுதல் அவசியமாகும். சிறுவர்களின் கலைத்திறன் விருத்தி செயற்பாட்டிற்கும், புத்தாக்கத்திறன் உடல் உள ஆரோக்கியம் என்பவற்றை சிறுவர்களிடம் வளர்ப்பதாக சிறுவர் அரங்கு காணப்படுகின்றது.

சிறுவர் அரங்கானது பொதுவாக சிறுவர்களுக்கு ஏதோ ஒரு விடயத்தை கற்பிப்பதை நோக்கமாகக் கொண்டதாகவே அமைகின்றது. எனினும் நாடகத்தை ஒரு கற்பித்தல் முறையாகவும் கற்பித்தல் நுட்பமாகவும் கல்வி உலகில் பயன்படுத்தப்பட்டு வெற்றியும் காணப்பட்டுள்ளது.

கற்றலின் போது மாணவர்களை கற்றலின் பால் ஆர்வத்தை தூண்டவும் பங்குபற்றுதலை ஊக்குவிக்கவும் மகிழ்வோடு கற்பதற்கான சூழலை ஏற்படுத்தவும் வலுப்படுத்தவும் சிறுவர் அரங்கு வகுப்பறைக் கற்பித்தலில் ஒரு கற்பித்தல் உத்தியாக பயன்படுத்தப்பட்டு வருவதனைக் காணமுடிகின்றது.

கற்பித்தலில் சிறுவர் அரங்கு பிள்ளைகளின் வாழ்வில் அவர்களது எதிர்காலத்தை திட்டமிடுவதில் பாடசாலைக் கல்வி பெரும் பங்கு வகிக்கின்றது. அந்த வகையில் ஒரு பிள்ளை எத்தகைய குடும்பப் பிண்ணனியில் இருந்து வந்தவராயினும் அவனிடமுள்ள எல்லா ஆற்றல்களையும் வெளிக்கொண்டு வரவும்மனித விழுமியங்களைப் பேணவும் ஏற்ற சூழலைப் பாடசாலைகள் வழங்கி வருகின்றன. சிறுவர் அரங்கப் பண்புகளை ஆடல் பாடல் மொழியும் திறன், உடலைப் பாவிக்கும் திறன், குரல் பாவனைத் திறன், வெளியை பாவிக்கும் அறிவு என்பவற்றுடன் கண்ணைக்கவரும் ஆடை அணிதல் வினோதங்கள், கேளிக்கைகள், அதீத செயற்பாடுகள் கொண்டதாக இவ்வரங்குகள் அமைதல் வேண்டும்.

இன்றைய கலைத்திட்டம் தேர்ச்சி மையக் கலைத்திட்டமாகும். தேர்ச்சிகள் என்பவை தொடர்பாடல், சுற்றாடல், சமயமும் ஒழுக்கமும், விளையாட்டும் ஓய்வும், கற்றலுக்கான கற்றல் என்பவற்றை அடைவதற்கு ஊடகமாக சிறுவர் அரங்கு பயன்படுத்தப்படுகின்றது. வகுப்பறை, மைதானம், என்பன சிறுவர் அரங்கின் களமாக கருதப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு ஆரம்பப் பிரிவுகளில் விளையாட்டுக்கள் காணப்படுகின்றன. சிறுவர்கள் விருப்புடன் விளையாட்டுக்களில் ஈடுபடுவர். சிறுவர் நாடகம் அல்லது சிறுவர் அரங்கு ஆங்கிலத்தில் Children play என்றே அழைக்கப்படுகின்றது. இதனால் சிறுவர் விளையாட்டுகளும் சிறுவர் அரங்காகவே பரிணமிக்கின்றது.

சிறுவர்கள் கற்றலில் ஈடுபடும் போது நடிப்புக்களை மேற்கொள்வது வழக்கம் போலச் செய்தல் மிகவும் முக்கியமாகும். பாடத்துடன் தொடர்புடைய மிருகங்கள் பறவைகள் போல பாவனை செய்தல். ஒலி எழுப்புதல் போன்ற விளையாட்:டு வினோதச் செயற்பாடுகள் மூலம் கற்றலை வினைத்திறனுடன் செயற்படுத்த சிறுவர் அரங்கு துணை நிற்கின்றது.

ஆரம்பக்கல்வியில் இசைவும் அசைவும் என்ற அரங்கியல் பண்பு சார்ந்த நிகழ்வு மாணவர்களிடத்து மிகுந்த விருப்பத்திற்குரியதாகின்றது. இசைக்கேற்ப தமது உடலை அசைத்து அபிநயிப்பது உடல் உள ஆற்றலை விருத்தி செய்கின்றது. இதனைக் கற்பித்தலில் பாடவேளையில் அமைக்கப்படுதல் அவசியமாகும்.

குழந்தை மா.சண்முகலிங்கத்தினுடைய **“கூடி விளையாடு பாப்பா”** என்ற சிறுவர் நாடகத்தில் வரும் பின்வரும் பாடலை வகை மாதிரிக்குச் சுட்டிக்காட்டலாம்.

***வீடு ஏன் பிள்ளைகள் வளர பிள்ளைகள் ஏன் பள்ளிக்குச் செல்ல பள்ளி ஏன் பாடம் படிக்க பாடம் ஏன் அறிவு வளர அறிவு ஏன் மனிதனாய் வாழ***

என்று தொடர்ந்து செல்கின்றது. இதன் அடிப்படையில் நோக்கும் போது குழந்தைக்கு கல்வி வழங்குவதன் அடிப்படை நோக்கம் மனிதனாய் வாழ என்ற உயரிய கருத்து புலப்படுத்தப்படுகின்றது. இதுவே இன்றைய கல்வியின் நோக்கம் என்றால் அதனை யாரும் மறுதலிக்கமுடியாது.

## முடிவுரை

ஆரம்பக்கல்வியில் ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய கல்விச் சீர்திருத்தங்கள் இன்று புதிய கவனம் பெற்றுள்ளதைக் காணலாம். அந்த வகையில் சிறுவருக்கான உடற்பயிற்சிகளையும் அரங்கச் செயற்பாடுகளையும் ஒன்றிணைத்து அரங்கம் உருவாக்கப்படுகின்றது. சிறுவர் நாடக விளையாட்டு (Drama game) செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த வகையில் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் குழந்தைகளின் ஆளுமை விருத்திக்கு மன மகிழ்விற்குரிய சிறுவர் அரங்கு அவசியமாகின்றது. காலத்தின் தேவைக்கேற்ப பாடசாலைகளில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் சிறுவர் அரங்கு பயன்படுத்தவதன் மூலம் வினைத்திறனான கற்றல் செயற்பாட்டிற்கு வழிசமைத்துக் கொடுக்கின்றது. சிறுவர் அரங்கிற்கு என்று ஒரு வலு உண்டு. அதனால் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் பாடல்களுக்கு இந்தச் செயற்பாட்டை ஆசிரியர் செயற்படுத்தலாம். பாடல்களை இலகுவாக மனதில் பதியச் செய்யவும் மகிழ்ச்சியாகவும் கற்றலில் ஈடுபடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பித்தல் செயற்பாடு என்பதே சிறந்த அரங்கச் செயற்பாடு தான் என்ற கருத்து நிலைக்கேற்ப நல்ல ஆசிரியர் என்பவர் சிறந்ததொரு நடிகராகவே இருப்பார். நல்ல நடிகரால் நல்ல ஆசிரியராக இருக்க முடியும். ஆகவே ஆசிரியருக்குள் நடிப்பு நாடகம் அரங்கியல் பண்புகள் செறிந்து காணப்படுகின்றன. ஆசிரியர் எப்பொழுதும் மகிழ்நெறிப்பாங்கில் நடிப்பவராக இருப்பார்.

இன்று எமது நாட்டில் அதிகளவான ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் பெண்களாவர். அவர்களின் சமூகக் கட்டமைப்புக்கள் ஊடாட்டங்கள் என்பன கல்வியில் சிறவர் அரங்கை சற்றுத்தளர்வடையச் செய்வதையும் காண முடிகின்றது. பெண்கள் நாடகம் நடிப்பதா என்ற மரபுவழி சித்தாந்தங்களும் அதில் இருந்து விடுபட முடியாமல் திணறும் நிலையையும் தரிசிக்க முடிகின்றது. இன்று வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும் என்பது உளவியல் புதுமொழியாக கருதமுடிகின்றது.

பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கும் வகுப்பறைகளில் பேசிச் சிரித்தல் மகிழ்நெறிப்பாங்கு இன்றி அடக்குமுறைகள் வகுப்பறை மறைப்புக்கள் இன்றி ஏனைய ஆசிரியர்களின் முறைப்புக்கள், ஏச்சுக்கள், திட்டுக்கள் என்பவற்றுடன் ஆரம்பக்கல்வி என்ற அவமதிப்புடன் காலமாகிச் செல்வதையும் காணமுடியும்.

மாற்றம் ஒன்றே நிலையானது என்பதன் அடிப்படையில் பிள்ளையின் உடல் உள முதிர்ச்சிக்கேற்ப, அனுபவத்திற்கேற்ப இசைவுறும் இசையுடன் ஆடல் பாடல் இலகுவான மொழிநடை என்பவற்றிற்கேற்ப சிறுவர் நாடகம், பாடல்கள் என்பன முழுமையாகப் பயன்படுத்துவதன் மூலம் ஆளுமை மிக்க எதிர்கால சமூகத்தை உருவாக்க முடியும் எனலாம். முடிவாக பேராசிரியர் சி.மௌனகுருவின் வேடனை உச்சிய வெள்ளைப்புறாக்கள் என்ற சிறுவர் நாடகத்தில் வரும் ஒரு பாடல்

சின்னச் சின்னக் குருவிகள் நாங்கள்
சிறுவர் சிறுமிக் குருவிகள்
வண்ண வண்ணச் சட்டை போடும்
வாயாடிக் குருவிகள்
நாளை இந்த நாட்டை இங்கு
நடத்தப்போகும் குருவிகள்
இந்த மண்ணின் புகழை உலகில்
ஏற்றப் போகும் குருவிகள்
சின்னச் சின்னக் குருவிகள் நாங்கள்
சிறுவர் சிறுமிக் குருவிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரவிழாகாணும் வித்தகியே......

ஆக்கம்
-திருமதி வி.நந்தகுமார் (ஆசிரியை)-
கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை

இளந்தென்றல் அசைந்தாட
வண்டினம் கவிபாட
பட்சிகள் சிறகடித்து ஒலியெழுப்ப
வயல் வெளிகள் தலையசைத்து வரவேற்க
வசந்தங்கள் பொங்குமூராம் வட்டக்கச்சி

பச்சைப்பசேலென வயல் வெளிகளும்
சல சலவென ஓடும் வாய்க்காலும்
வளமாகப்பெற்ற ஊராம் நம் ஊர்
அவ்வூரின் கண் மத்தியில் அமைந்த கலைக்கூடமாம்
இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையாம்

வைரவிழாக்காணும் வித்தகியே – நீ
நன் மாணாக்கரை உருவாக்கிய உத்தமியே
வித்தையில் நாம் உயர்ந்திட உழைத்த அன்னையே
அகிலத்தில் உன் குரல் மேலோங்க
அரும்பாடுபட்ட எம்மாதாவே

எழில் கொஞ்சும் சோலையை
எழிலாகக் கொண்டவளே
எண்ணிலடங்கா மாணாக்கரை
ஏணிபோல் உயர்த்தியுமே
ஏற்றம் பல கண்டவளே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய மட்டப்போட்டிகளில்
சாதனைகள் பல படைத்துமே
தேசமெல்லாம் புகழோங்க
செதுக்கிய பல முத்துக்களை
உருவாக்கிய அன்னையும் ஆனாய் நீ

சில்வாவீதியிலே தலைநிமிர்ந்து
நிற்கும் அன்னையே – உன்
பாதக்கமலங்களைப் பணிகின்றோம்
கல்விக்கு அரசி நீ
கலங்கரையாய் விளங்கும் உத்தமி நீ

அறுபது வருடங்களை இனிதாய் கடந்தவளே
அயராது எமைத்தாங்கி நின்றவளே
அகவை அறுபதில் விழாக்காணும் வித்தகியே
பட்டொளி எங்கும் வீசட்டும்.

வாணி உள்ளம் மகிழ்ந்து பாடும் கலைக்கூடமே – உன்
பொன்னாளாம் இந்நாளை
உவகையுடன் நாம் ஏற்றிடுவோம்
எழிலாய் கொண்டாடிடுவோம்
நல்வைரங்கள் பொறித்திடுவோம்.

அருளாட்சி வித்தகியே
வாழ்க நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்.
வாழ்க... வாழ்க... வாழ்க....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப் பரிசில் பரீட்சை



2018 இல் சித்தியடைந்தோர்



2018 இல் தோற்றியோர்.



2017 இல் தோற்றியோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2016 இல் சித்தியடைந்தோர்



2016 இல் தோற்றியோர்



2015 இல் தோற்றியோரும் சித்தியடைந்தோரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பாடசாலையில் கல்வித் தொழில் நுட்பத்தின் பிரயோகம்

-திரு.வே.றமணன்-
ஆசிரியர்,
கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை

பாடசாலை என்பது ஒரு கட்டடம் அன்று. அதற்கு மேலாக, அது ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் கற்றற் செயற்பாட்டைச் செப்பமாய் உருவமைக்கும் ஒரு சமூகமும் கலாசாரமும் ஆகும். எமது பாடசாலை 13.05.1954 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அக்காலத்தில் வட்டக்கச்சி கிழக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையாக இருந்தது. பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் அதிகபராக திரு.பா.கனகசபை அவர்கள் கடமையாற்றினார்.

தற்போது எமது பாடசாலையின் பெயர் கிளி/இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை. இங்கு தரம் 1 தொடக்கம் 11 வரையான வகுப்புக்களும் 322 மாணவர்களுடனும், 25 ஆசிரியர்களுடனும் நிரந்தரக் கொட்டகையில் சொந்தக்காணியில் இயங்கி வருகின்றது. எமது பாடசாலையில் இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய மூன்று சமயத்தைச் சேர்ந்த மாணவர்களும் கல்வி கற்று வருகின்றமை சிறப்பம்சமாகும்.

### கல்வித் தொழில்நுட்பவியல்.

கல்வித் தொழில்நுட்பம் என்று நோக்கும் போது மனிதக் கற்றற் செயற்பாட்டை மேம்படுத்துவதற்காக கற்றல் தொகுதிகள், நுட்பங்கள் மற்றும் கருவிகள் என்பவற்றின் விருத்தி, பிரயோகம் மற்றும் மதிப்பீடாகும். கல்வித் தொழிநுட்பமானது கல்வியில் தொழில்நுட்பம் மற்றும் கல்விக்கான தொழிநுட்பம் ஆகிய இரு பிரிவுகளைக் கொண்டமைந்ததாக காணப்படுகின்றது.

### கல்வியில் தொழில்நுட்பம். (Technology in Education)

கல்வியில் தொழில்நுட்பம் எனப்படுவது கற்றல் நோக்கங்களிற்குப் பயன்படுத்தும் சகல தொழில்நுட்ப உபகரணங்களையும் ஊடகங்களையும் குறித்து நிற்கின்றது. இது கல்வித் தொழிநுட்பத்தின் வன்பொருள் அணுகுமுறையாகும்.

### கல்விக்கான தொழிநுட்பம். (Technology Of Education)

கற்றல் கற்பித்தலோடு தொடர்புடையது. அதன் தரத்திற்கும் பயன்படு தன்மைக்கும் இக் கல்விக்கான தொழில்நுட்பம் உதவுகின்றது. அதாவது இது பாடஉள்ளடக்கம், மதிப்பீடு, உளவியல், சமூகவியல் மற்றும் முகாமைத்துவம் பற்றி ஆராய்கின்றது. இது கல்வித் தொழில்நுட்பத்தின் மென்பொருள் அணுகுமுறையைக் குறிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய நவீன உலகில் குறுகிய நேரத்தில் தகவல்களை அல்லது செய்திகளை உலகின் எப்பகுதியிலிருந்தும் அறிந்து கொள்வதற்கு நவீன தொடர்பாடல் தொழிநுட்ப கருவிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. உலக மயமாக்கற் செயற்பாட்டின் மூலம் உலகத்தை ஒரு ஆதிக்கிராமத்தின் அளவிற்குச் சுருங்கச் செய்துள்ளது எனலாம். அதாவது தகவல்களின் ஊடாக உலகம் இணைக்கப்படுகின்றது. இவ்வாறு உலகமயமாக்கலின் போது தகவல் தொழில்நுட்பம், தொழிநுட்ப சாதனங்கள் போன்றன பாடசாலை மட்டத்திலும் பாவனையில் உள்ளன. இதற்காகக் கலைத்திட்டத்திலும் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. பாடசாலையில் கற்றல் கற்பித்தல், கல்வி முகாமைத்துவம் சமூக பாவனைகளில் கணினியின் பயன்பாடு அதிகரிக்கச் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறாக தொழிநுட்பப் பாவனை பல்வேறு வடிவில் காணப்படுகின்றது.

இன்று நாளாந்தம் பல்வேறு கற்றல் துறைகளிலும் புதிய அறிவும் தகவலும் பிரபாகம் எடுத்துச் செல்கின்றன. இதனால் இத்தகவல்களைப் பெற்று கிரகித்துக் கொள்வது ஒரு சிக்கல் நிறைந்த நடவடிக்கையாக அமைகின்றது. மேலும் சனத்தொகைப் பெருக்கத்தின் காரணமாக இச் சனத்தொகைக்கு கல்வி வழங்குவது எவ்வாறு என்ற கேள்வி எழுந்துள்ளது. இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நாம் சில கல்வி முறைகளையும் தொழிநுட்பங்களையும் பயன்படுத்த வேண்டியுள்ளது. இதன் காரணமாக கல்வித்தொழிநுட்பம் தேவைமிகுந்த ஒன்றாகவுள்ளது.

எமது பாடசாலையைப் பொறுத்தவரையில் கல்வியை வழங்குவதற்குத் தேவையான தொழிநுட்ப வசதிகள் காணப்படுகின்ற போதும் ஒரு சில பின்னடைவுகளும் காணப்படுகின்றன. கணினி ஆய்வுகூடம், கணினிகள், பல்லூடக எறியி, Smart Class Rooms, தொலைக்காட்சி, வானொலி, தொலைபேசி மற்றும் இணைய வசதி போன்ற தொழிநுட்ப வசதிகள் காணப்படுகின்றன.

எமது பாடசாலையில் கணினி ஆய்வுகூடமானது காணப்படுகின்றது. ஆய்வுகூடத்தில் ஐந்து கணினிகள் காணப்படுகின்றன. இவ் ஐந்து கணினிகளில் தற்போது ஒரு கணினியே இயங்கு நிலையில் காணப்படுகின்றது. மேலும் பாடசாலை நலன்விரும்பி ஒருவரினால் வழங்கப்பட்ட மடிக்கணினி ஒன்றும் காணப்படுகின்றது. பாரம்பரிய கற்பித்தல் கற்றல் செயற்பாட்டை மாற்றி அமைப்பதில் கணினித் தொழிநுட்பம் முக்கிய இடம்வகிக்கின்றது. கணினித் தொழிநுட்பம் மாணவர்களின் செயற்பாட்டு ரீதியான கற்றலை வழப்படுத்துவதோடு அவர்கள் தாமாகவே அறிவைக் கட்டியெழுப்புவதற்கும் ஊக்கப்படுத்துகின்றது. இவ்வாறு முக்கியத்துவம் பெறும் கணினித் தொழிநுட்பம் போதியளவு இல்லாமை ஒரு பின்னடைவாகக் காணப்படுகின்றது.

கற்பித்தல் கற்றல் செயற்பாட்டில் பல்லூடகத்தின் பயன்பாடு இன்று பிரபல்யம் அடைந்து வருகின்றது. எமது பாடசாலையில் பல்லூடக எறியி காணப்படுவது ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் சிறந்த கற்பித்தல் கற்றல் செயற்பாட்டில் ஈடுபடக்கூடியதாக உள்ளது.பாடசாலையில் இதனைப் பயன்படுத்துவதற்கென தனியான ஒரு கட்டடம் காணப்படாமையும் இதனைச் செயற்படுத்துவதற்கென கணினி இல்லாமையும் ஒரு பின்னடைவாகக் காணப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்காலத்தில் மிகவும் பிரசித்தி பெற்றுவரும் கல்வித் தொழிநுட்பத்தில் சீர் ஒழுங்கான வகுப்பறை (Smart Class Room) முக்கிய இடம்பெறுகின்றன. கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ஐந்திற்கும் குறைவான பாடசாலைகளிலேயே சீர் ஒழுங்கான வகுப்பறை (Smart Class Room) காணப்படுகின்றன. மாணவர்களைக் கற்றலின்பால் ஈர்ப்பதற்கும் விருப்பத்தோடு அவர்கள் கற்பதற்கும் ஆசிரியர்கள் சிறந்த முறையில் இலகுவாகவும் தெளிவாகவும் கற்பிப்தற்கும் சீர் ஒழுங்கான வகுப்பறை (Smart Class Room) உதவியளிக்கின்றன. இவ்வாறான நான்கு வகுப்பறைகள் காணப்படுவது எமது பாடசாலையில் கற்பித்தல் கற்றலை வினைத்திறனாக்குகின்றது. சீர் ஒழுங்கான வகுப்பறை (Smart Class Room) உருவாகுவதற்கு எமது பாடசாலையில் பெற்றோர், பழைய மாணவர்கள் மற்றும் பாடசாலை நலன்விரும்பிகள் வழங்கிய நிதியுதவியே ஆகும். கிளிநொச்சி மாவட்டத்தில் சீர் ஒழுங்கான வகுப்பறை (Smart Class Room) காணப்படும் Type II பாடசாலை எமது பாடசாலையாகும். இவை ஆரம்பக்கல்வி மாணவர்களின் வகுப்பறைகள் மற்றும் விஞ்ஞான ஆய்வுகூடம் போன்றவற்றில் நிறுவப்பட்டுள்ளன. எமது பாடசாலையில் ஐந்தாவது சீர் ஒழுங்கான வகுப்பறை (Smart Class Room) உருவாகுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை சிறப்பம்சமாகும்.

மாணவர்களின் கல்வி அடைவுகளிலும் அவர்களின் வினையாற்றல்களிலும் செல்வாக்குச் செலுத்துகின்ற காரணிகள் பலவற்றுள் பெற்றோரின் பங்களிப்பு முக்கியமான ஒன்றாகும். குறிப்பாக பிள்ளைவிருத்தி, பிள்ளையின் கல்வி அடைவு என்பவற்றில் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதிலும் கல்விசார் விருத்திசார் பிரச்சினைகள் ஏற்படாது தடுத்தலிலும் அப்பிரச்சினைகளுக்கான பரிகாரம் காண்பதிலும் பெற்றோரின் ஈடுபாடு இன்று முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. அந்த வகையில் எமது பாடசாலையில் பெற்றோரின் பங்களிப்பு சிறப்பாக காணப்படுவது கல்வித் தொழிநுட்பத்திற்கு உதவி புரிகின்றது.

மேலும் பல்தரமட்டக் கற்பித்தல் வகுப்பறையாக தரம் 02 மற்றும் தரம் 03 வகுப்பறைகள் மாற்றப்பட்டுள்ளது. இதன் மூலம் மாணவர்களின் கல்வி மட்டத்திற்கு ஏற்ப குழுக்களாக்கி அவர்களிற்கு கற்பித்தலை மேற்கொள்ளக்கூடியதாக காணப்படுகின்றது. கற்றல் உபகரணங்களைத் தயாரித்து ஆரம்பத்திலிருந்தே மாணவர்களினது அறிவு, திறன், மனப்பாங்குகளை மேம்படுத்துவதற்கு இச் செயற்பாடு வெற்றிகரமாக அமையும். ஆசிரியர்கள் பற்றாக்குறையாகக் காணப்படும் வகுப்பறைகள், கிராமிய மற்றும் கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் பெரும்பாலும் அவதானிக்கப்படுகின்ற கற்றல் கற்பித்தல் முறைகளை விளைதிறன் மிக்கதாக மாற்றுவதற்கும் இது உதவிபுரியும்.

மேலும் எமது பாடசாலையில் மாணவர்களின் சுய கற்றலை விரிவுபடுத்துவதற்கு இணைய வசதியும் காணப்படுகின்றது. இணையத்தளமானது ஒரு வலிமையானதும் செழுமையானதுமான கற்றல் சூழலொன்று என இனங்காணப்பட்டுள்ளது. எளிதாகக் கூறுவதாயின் இணையத்தளமானது உலகெங்கிலும் உள்ள ஒன்றுடன் ஒன்று தொடர்புள்ள பல கணினிகளின் ஒன்று சேர்க்கையாகும். உலகில் எங்குமுள்ள மக்களால் பகிர்ந்து கொள்ளக்கூடிய எல்லையற்ற அளவுடைய தகவல்களையும் வளங்களையும் இணையத்தளம் கொண்டுள்ளது. அத்துடன் தொலைக்காட்சி, வானொலி, தொலைபேசி போன்ற தொழிநுட்ப வளங்களையும் கொண்டு காணப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 02. கல்வித் தொழிநுட்பத்தைச் செயற்படுத்துவதில் உள்ள தடைகள்

1. போதியளவு நிதிவசதி இன்மை.
2. பெரும்பாலான பெற்றோருக்கு இவை தொடர்பான தெளிவான அறிவின்மையும், வறுமையும்.
3. பாடசாலை ஆசிரியர்களின் ஆர்வம் குறைவாகக் காணப்படுகின்றமை.
4. கணினிகள் போதுமானதாக காணப்படாமை.
5. பொருத்தமான வகையில் அமைக்கப்பட்ட கட்டடங்கள் காணப்படாமை.

### 03. கல்வித் தொழிநுட்ப அபிவிருத்திக்கான முன்மொழிவுகள்

1. பாடசாலைகளுக்கு வளங்களை சமனாகப் பங்கிடலும் பாரபட்சம் காட்டாமலிருத்தலும்.
2. ஆசிரியர்களுக்கு மேலதிக பயிற்சிகளை வழங்கி இடர்பாடுகளை நீக்குதல்.
3. பெற்றோர்களுக்கு தெளிவூட்டல்களை வழங்கல்.
4. அயற்பாடசாலைகள் போட்டியுணர்வின்றி வளங்களைப் பகிர்ந்து ஒற்றுமையாகச் செயற்படல்.

◈

◈ ◈ ◈

◈

## வாழ்க தமிழ்



சேர சோழ பாண்டிய ரெல்லாம்
ஆர வளர்த்த ஆயே வாழ்க!
ஊரும் பேரும் தெரியா தவரும்
பாரோர் அறியச் செய்தாய் வாழ்க!

- பாவேந்தர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CLASSROOM MANAGEMENT

-Mrs.Eugine Antanyraja-
Teacher
Kn/Ramanathapuram West
G.T.M.S

In Learning and Teaching process Classroom Management is very very important. Through having a proper classroom management each and every teacher can get success in his/her teaching.

Classroom Management is to create an atmosphere in the classroom for the teacher and the students to have an effective teaching learning process through maximum participation of the students and their attention. There are some principles of classroom management. They reinforce an effective teaching learning process.

Physical condition of the classroom is one of the principles of classroom management. The physical condition of the classroom must be suitable for the teaching learning process. Furniture arrangement must be such a way to able to move around to get the individual attention. Light and ventilation are very essential in this physical condition. Enough light and fresh air must be allowed to come in to the classroom. Teacher has to consider about the fringe area. Black board should be kept in a suitable place almost all students can see.

Teacher – pupil relationship is an another main thing in classroom management. To achieve higher level of classroom management teacher – pupil relationship must be achieved successfully. Hence there must be a good rapport between the teacher and students in a class room. Teacher should be approachable to the students and he/she should be sensitive to the needs, intrests, problems and abilities of the pupils. Then only the students wish to approach the teacher to solve their problems. Teacher should treat every student equally. He/she should not give room to partiality.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The habbit of calling child by his/her name is appreciable one. Because it is very effective approach in Teaching Leaning Process.Eye contact also a very important one in teacher – pupil relationship, and also a good classroom management. Teacher should have eye contact with the student. Through the eye contact a teacher can identify the student and their abilities. It helps to establish rapport. Eye contact expresses pupils that the teacher likes to speak to him/her. It helps to maintain the attention of pupils. Through the eye contact a teacher can indicate to a pupil that he/she is listening to him. Eye contact helps to control the class too.

Next point is Teacher Language and Manner of speaking. A teacher should have clear and audible speech to enable the pupils to hear without strain and to command attention. Teacher's tone of voice should be kind, friendly and courteous.

Motivation is an another aspect in Classroom Management. It is the important one to get the maximum participation of the students. A teacher should motivate the students. He/she can motivate the students by verbal rewarding, putting stars in their exercise books providing small gifts etc. Motivation orients the students towards learning and a teacher can get maximum effect in the Teaching Learning Process Praising is one of the best methods of motivation for a successful learning.

Preparation of lesson also is an important one in Classroom Management. The teacher who enters the classroom with the preparation of the lesson only can conduct the lesson successfully and effectively. By the preparation of the lesson a teacher can make each and every second faithfully. There will be no room to time wastage and other distraction. Using proper teaching and also come under this.

Hence, lets understand the important of classroom management and use the above techniques to have a successful Teaching Learning process.

◈

◈ ◈ ◈

◈


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலும் இலத்திரனியல் கழிவுகளும்

-ச.தேனுகா-
ஆசிரியர்
கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை

எமது இயற்கை சூழலை மாசாக்கும் காரணிகள் பல உள்ளன. அவற்றில் முக்கியமானது. விவசாய இரசாயன கழிவுகள், தொழிற்சாலைக்கழிவுகள், அணுக்கழிவுகள், வீட்டு இரசாயனக்கழிவுகள், பச்சை வீட்டு வாயுக்கள், பார உலோகங்கள், இலத்திரனியல் கழிவுகள் என்பன அடங்கும். தற்போதைய காலத்தில் இலத்திரனியல் பாவனைகள் மிகவும் அதிகமாக காணப்படுவதால் இது பாதகமான கழிவுப்பொருளாக அமைகின்றது.

இலத்திரனியல் கழிவுகள் எனப்படுவது பயன்படுத்தப்படாமல் எறியப்படும் மின்சார மற்றும் மின்னனுக்கருவிகள் மற்றும் உதிரிப்பாகங்களை குறிக்கும். இத்தகைய கருவிகள் பொதுவாக பழுதாகிக் விடுவதன் காரணமாகவோ அல்லது அவற்றை விட திறன் மிக்க கருவிகளை பயன்படுத்த விரும்புவதாலும் சேர்கின்றது. இவ்வாறு எறியப்படும் கருவிகள் பல நச்சுத்தன்மை கொண்ட பாகங்களைக் கொண்டுள்ளன. இவை சுற்றுப்புறச் சூழலுக்குப்பாதகமான விளைவுகளை உருவாக்கக் கூடிய பார உலோகங்களான இரசம், காரீயம், செப்பு, கட்மியம் போன்றவையைக் கொண்டிருக்கும்.

இன்று உலகை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கும் இலத்திரனியல் கழிவுகள் தகவல் தொழில் நுட்பபுரட்சியினை தொடர்ந்து உலக சந்தையில் ஆக்கிரமிப்பதற்கு உள்ளாகியுள்ளது. இதனால் காலாவதியான பொருட்கள் குப்பை மேடுகளில் நிரம்பி பூமியை துாய்மையற்ற தாக்கியுள்ளது. இப்பிரச்சனை இன்று சுற்றுச் சூழலுக்கு பெரும் தலையிடியாகவுள்ளது.

இலத்திரனியல் கழிவுகளில் தொலைக்காட்சி, கணினிகள், குளிர்சாதனப்பெட்டி,சலவை இயந்திரங்கள், வீட்டுப்பாவனைக்கு பயன்படுத்தப்படும் மின்சாதனங்கள், கையடக்கத்தொலைபேசிகள் அவற்றின் பற்றிகள் என்பன அடங்கும்.

இலத்திரனியல் கழிவு வெளியேற்றத்தில் உலக நாடுகளின் தரவுகளின்படி 2006ம் ஆண்டில் இருந்து நாடுகளின் சுற்றுச்சூழல் நிகழ்ச்சித்திட்ட மதிப்பீட்டின் பிரகாரம் ஆண்டு தோறும் 20-50 மில்லியன் கழிவுகள் உருவாகின்றது என குறிப்பிடப்படுகின்றது. இக்கழிவுகளை வளர்முக நாடுகளான ஐரோப்பா, அமெரிக்கா, அவுஸ்ரேலியா போன்ற நாடுகளே முன்னணியில் உள்ளது. இவற்றை விட சீனா, இந்தியா போன்ற நாடுகளும் அதிகளவு இலத்திரனியல் கழிவுகளை வெளியேற்றுகின்றது.

பல அபிவிருத்தியடைந்த நாடுகள் அன்பளிப்பு என்ற போர்வை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிற்கு தமது இலத்திரனியல் குப்பைகளை ஏற்றுமதி செய்கின்றன. இதனால் இவ் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் இலத்திரனியல் கழிவுகள் தொடர்பான முகாமைத்துவத்தில் மேலதிகமான சுமைகளையும் தாங்க வேண்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலத்திரனியல் கழிவுகளில் காணப்படும் பார உலோகங்களை விட பொலிபலோமைற்றட் பினைல் எதர் எனும் நச்சுப்பொருள் எரிபற்று நிலையைக் குறைப்பதற்காக இலத்திரனியல் சாதனங்களில் 30 வீதம் பயன்படுத்தப்படுகின்றது. இதனால் சூழலுக்கு தாக்கத்தை ஏற்படுத்தும் பொருட்களை விட பலமடங்கு அதிக தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இதனால்

- **நீர் நிலைகள் மாசுபடல்**
- **விவசாய நிலங்கள் மாசுபடல்**
- **இலத்திரனியல் கழிவுகளை எரியூட்டுவதனால் வளிமாசடைதல்**
- **புற்றுநோய் ஏற்படல்**
- **தையரொக்சன் பிரச்சனைகள்**
- **கருவள வீதம் குறைவடைதல்**
- **வயதுக்கு முன்பு பூப்படைதல்**

என்பன உருவாகின்றது. இலத்திரனியல் கழிவு முகாமை மீள பயன்பாட்டிற்கு உட்படுத்துவது சிறந்த கழிவு முகாமைத்துவமாகும். இதனால் வளர்முக நாடுகள் இக்குப்பைகளை மீளப்பயன்பாடு செய்யும் வழியில் ஏனைய நாடுகளிற்கு ஏற்றுமதி செய்கின்றது. சீனா 80 வீத கொள்வனவு செய்து மீள் சுழற்சி செய்து ஏனைய நாடுகளுக்கு இறக்குமதி செய்கின்றது. எனவே இலத்திரனியல் கழிவுகளை மண்ணில் புதைத்தல் கூடாது. இவ்வாறு புதைக்கப்படும் சந்தர்ப்பத்தில் தாவரங்கள் இவ் உலோகங்களை அகத்துறிஞ்சி உணவுச்சங்கிலியூடாக விலங்குகளை வந்தடையும் இது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். எனவே அது தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

பூகோளத்தில் புதிய சவாலாகும் மின்னனுக்கழிவுகள் அடிப்படையில் உருவாக்கப்பட்ட "பேசல்" செயற்றிட்டத்தின் அறிக்கையின் படி ஐக்கிய அமெரிக்காவில் உருவாகும் கழிவுகளில் 50-80 வீதமானவை மீள்சுழற்சி செய்து வளர்முக நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றது என்பது புலனாகின்றது.

எனவே இலத்திரனியல் கழிவுகள் உருவாவதைக் குறைத்தும் அவற்றின் பயன்பாட்டை கட்டுப்படுத்தி காப்பதும் சரியான முறையில் அதனை மீள் சுழற்சி செய்தும் வருவோமாயின் எதிர்காலத்தில் உருவாகும் இப்பிரச்சினையையும் அதனால் உருவாகும் விளைவுகளையும் குறைத்து இப்பூமியையும் அதில் வாழும் உயிரினங்களையும் காத்து வளமுடன் வாழலாம் என்பது உண்மை.

◈

◈ ◈ ◈

◈


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலையின் முகாமைத்துவ குழு



## உணவுக்குழு



## நூலகக் குழுவினர்



## ஒழுக்காற்றுக்குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணம் முதல் ஓவியம் வரை உளவியல் தொடக்கம் மருத்துவம் வரை வர்ணத்தின் ஓர் அலசல்.

- திரு. தே. ஜசிந்தன் -
ஆசிரியர்
கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை

**"பேசும் ஓவியம் கவிதை பேசாத கவிதை ஓவியம்"** இது ஓர் கிரேக்கப் பழமொழி.

**"பச்சை நிறமே பச்சை நிறமே இச்சை ஊட்டும் பச்சை நிறமே"** என்ற சினிமாப்பாடல் வரக் காரணமாயிருந்த இந்த தாய் வர்ணமாக திகழ்ந்த சிவப்பு வர்ணம், மஞ்சள் வர்ணம், நீல வர்ணம் என்பவை மூலவர்ணமாகவும், முதல் வர்ணமாகவும், தாய்வர்ணமாகவும் திகழ்ந்து வர்ணகுலத்தை பல லட்சம் நிறமாக உருவாக பிரசவித்த பிரவம்சமாகும்.

இசைக்கு மயங்காத மனமும் இசையில் திளைக்காத மனிதனும் மனிதனே இல்லை இசையில் ஓர் பகுதி தான் **"வர்ணம்"** (ஊதா) இசையை ரசிக்கும் ஒவ்வொரு மனங்களிலும் ஆழ ஊடுருவி உள்ளமையாலே தான் எமது உடலில் ஏற்படும் **"காயம்"** ஆயினும் **"உலகம்"** ஆயினும் ஏதோ ஓர் வர்ணத்தில் தான் தொடங்குகின்றது.

மனிதனது வாழ்வியலில் இரண்டறக் கலந்துள்ள இவ்வர்ணமானது நீரின் மேல் உராய்ந்து செல்லும் வெள்ளொளியின் தெறிப்பிலே தான் தென்படுகின்றன. நீரின் மேல் பட்டு தெறிப்படைகின்ற வெள்ளொளியில் ஏழு வர்ணங்கள் தென்படுகின்றன. இதில் 3 வர்ணங்கள் அடிப்படை வர்ணங்கள் இவைகளின் தனிக்கலப்பிலே தான் பலவகை கலப்பு வர்ணங்கள் தோன்றுகின்றன. அதாவது ஒளி இல்லாத போது கறுப்பு வர்ணமும் ஒளி உள்ள போது வெள்ளை வர்ணத்தையும் உணரும் எமது உணர்வில் கலந்துள்ள வர்ணங்கள் பற்றி ஓவியர் டொமினிக் ஜீவா பல கருத்துக்களை களம் இறக்கினான்.

தொட்டுணர முடியாத நிறங்களைப் பார்த்து உணர மட்டும் தான் முடிகின்றது. அப்படியாயின் நிறங்களுக்கேற்ற செயற்பாடுகள் வெளிப்பாடுகள் ஒவ்வொரு நிறத்திற்கும் உண்டு. ஒவ்வொரு நிறத்திற்கும் ஒவ்வொரு குணாதிசயங்கள் குணஇயல்புகள் உண்டு. இவைகள் அத்தகைய நிறங்களோடு தான் உணர்வுகள் செயல்வடிவங்களில் வெளிப்படுகின்றன.

இரசனையின் மூலம் அவரது அல்லது பிறரது செயலை ஈர்க்க முடிகின்றது. எந்த விடயத்தில் திருப்தி உண்டோ அதைத் தேடி நாடுவர். அதில் வன்முறையும் நல்லுறவும் இருக்கலாம். எனவே இவைகளை இனங்காண வர்ணப்பிரயோகங்கள் உளவியலில் குண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வுகளை வேறுபடுத்திக் காட்டுகின்றது. அந்த வகையில் தான் ஆராட்சியாளர்களின் கருத்துப்படி வர்ணங்கள் ஒவ்வொன்றில் உள்ள குணத்தன்மைகளை தனித்துவமாக கூறி விளக்கியுள்ளனர்.



வெள்ளை வர்ணம் (பொது வர்ணமாகவும்) பொதுவாக வர்ணம் என்ற நிறவியல் ஆராய்ச்சியாளர்கள் இவ்வெள்ளை நிறத்தை பொது வர்ணம் எனவும் தூய்மையான, சமாதானமான தெளிவான அமைதி குணம் படைத்த வர்ணமாகவும் உண்மை, இரக்கம், நியாயம், அன்பு, ஆனந்தம், சுறுசுறுப்பு, சிந்தனை, படைப்பு, தூய்மை, சுதந்திரம் என்று இவற்றின் உணர்வுகளை நீட்டியுள்ளனர்.



கறுப்பு வர்ணம் எந்த ஒரு வர்ணமும் ஒளி இழந்து செல்லுமாயின் இது கறுப்பு வர்ணமாக அமைகிறது. வர்ணமானது காணப்படும் போது இது கறுப்பு நிறமாகவும் நிறமாகவும் அண்டிக்கொள்கிறது. இவ்வர்ணத்தையும் பொது வர்ணமாகவே கலைஞர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். உளவியலாளர்கள் கூறுகையில் இது துக்கம், உறுதி, பிடிவாதம்,சோகம், கவலை, விரக்தி, வன்முறை, பயம், பதட்டம், துணிவின்மை, மறைவான தெளிவு, கடினமனம், பழிவாங்கும் மனநிலை என்பதோடு பொதுவாக வெள்ளை நிறத்திற்கு எதிர்மறையான பண்பைக் கொண்டு காணப்படுகிறது. உதாரணமாக பல அனுபவ ஆய்வுகளின் படி எகிப்திய நாகரீகத்தில் காணப்படுகின்ற அனேகமான ஓவியங்கள் அனைத்துமே கறுப்பு ரேகைகளால் உருவங்களை அடைத்து வைத்துள்ளனர். இதற்கு காரணம் அங்குள்ள ஆட்சிமுறையும் சட்டதிட்டங்கள், சுதந்திர உணர்வு தணிக்கப்பட்டு காணப்படுகின்றது. வன்முறையான மனப்பாங்கு கொண்ட சமூகமும் காணப்பட்டுள்ளமை தெளிவாகின்றது.



வர்ண ஒளிவீச்சின் சிவப்பு மூலவர்ணத்தில் ஒன்றாகத்தான் சிவப்பு வர்ணம் காணப்படுகின்றது. இது பல வர்ணப் பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளது. தாய்வீட்டு வர்ணம், முதன்மை வர்ணம், ஆரம்ப வர்ணம் என வர்ணச்சக்கரத்தில் அடங்கும் முதன்மை வர்ணங்களில் ஒன்று தான் இச் சிவப்பு விளங்குகின்றது.

ஆராய்ச்சியாளர்கள், உளவியலாளர்களின் கருத்துப்படி கோபம், அபாயம், உணர்வு, வெளிப்பாடு, மனத்தைரியம் இல்லாதோர் இவ் நிறத்தை காணும் போது மயக்கம் போடும் நிலை, ஆழ்பதிந்த பயஉணர்வு, வன்முறை உணர்வு இதில் உண்டு. தொலைவில் உள்ள பொருளை இனம் காண்பதற்கு இத்தகைய வர்ணம் பயன்படுகின்றது. இது முன் செல்லும் இயல்புடையது. இதனை வெப்பவர்ணக் குழுவில் அடக்கியுள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் வர்ணத்தை சக்தி உணர்வு மிக்க வர்ணமாகவும், கூர்மை நிலையை உணர்த்தும் வர்ணமாகவும் இதனைக் கொள்கின்றனர். நெருப்பு என்பது ஒருவித சக்தியுள்ள வெப்பப்பொருள் சிவப்பு வர்ணப்பூ என்பது ஓர் தாவரப் பொருளாகும்.

இரசனையின் போது பூவைத் தொடுவதால் மகிழ்வும், தீயைத் தொடும் போது துன்பத்தையும் உணர்கின்றோம். உதாரணமாக பார்க்கும் போது இலங்கையிலுள்ள கண்டியகால யாதகக்கதை ஓவியங்களின் பின்னணியாக சிவப்பு வர்ணத்தை பிரயோகித்துள்ளனர். இவை பக்தி உணர்வை ஆழப்படுத்தி வைக்கும் வகையில் வலுக்கட்டாயப்படுத்தி உள்ளனர் என்பதை இனம்காணமுடிகின்றது.



மஞ்சள் வர்ணம் இரசிப்பதை மட்டுமல்ல சுவைப்பதுவும் உணவில் கலக்கவும் மஞ்சள் தூளை பயன்படுத்துகின்றோம். தேகத்தில் பூசவும் முனைகின்றோம். காரணம் மகிழ்வை மனிதன் தேடுகின்றான். என்பதுவும் தான் ஆனால் அனுபவிக்கவும் தவறுகின்றான். காரணம் பலவீனம் மூலவர்ணக் குழுக்களின் ஒன்றாக இவ்வர்ணமும் முதன்மை பெறுகின்றது. உளவியலாளர்களின் நோக்கின்படி மகிழ்வு, சந்தோசம், உற்சாகம், மங்கள நிகழ்வுகள், சமநிலை இயல்புகள் இந்த நிறத்தில் மிளிர்கின்றது. தெய்வ உருக்களின் சிரசைச் சுற்றி ஒளிவட்டம் இந்நிறத்திலே வரைந்து இவை ஞானசக்கியை பெறுவதாக நம்பப்படுகின்றது. அத்தோடு இந்த நிறத்தை பிரயோகிப்பதால் ஆனந்த நிலையை ஊட்டுகின்றது.



நீலவர்ணம் மனித உணர்வுகளை அதிகளவு ஆதிக்கம் கொண்டுள்ள நிறம் நீலநிறமாகும். உலகில் 2/3பங்கு கடல் நீர்ப்பரப்பும் வானம் முழுவதுமே நீலநிறமாகக் காணப்படுகின்றது. அதனாலே மனித மனம் உணர்கின்றது. கருவுக்குள் குழந்தை கறுப்புநிறத்தில் நீலத்தையே காண்கின்றது. இத்தகைய வர்ணம் தான் இது மூலவர்ணங்களில் ஒன்றாக உளவியலாளர்கள் கூறுவதுடன் குளிர்வர்ணமாகவும் ஏற்றுக்கொண்டுள்ளனர். எளிமை, தாழ்மை, குழப்பம், விறைப்புணர்வு, அமைதி, பக்குவம், அடக்கம், ஆளுமை, ஆனந்தம், சினம், வெறுப்பு, வைராக்கியம், தன்னம்பிக்கை குறைவு, பக்தி, கவலை, திருப்தி இன்மை, பாலியல் உணர்வும் இதில் ஆதிக்கம் செலுத்தகின்றது. (படைப்பு இருட்டில்) இனம் பெருக இவை அவசியம் வேண்டும். இவை எல்லை மீறுவதால் சமூகம் சீர்குலைகின்றது. அமைதி குறைவாக உள்ளதினால் தன்னகத்தே அமைதியை தேடுகின்றது. இவ்வாறு வர்ணங்களின் நிலைகளை வைத்து அவற்றில் உள்ளீர்ப்புக்கு உள்ளானவர்களை அவர்களது தன்மைகளை இலகுவாக பிரித்துள்ளனர் உளவியலாளர்கள்.

இதே போன்று தான் பல வர்ணங்களை கையாளும் ஓர் ஓவியனது மனோநிலை அவனது ஆற்றல் என்பதும் எளிதில் புரிந்துகொள்ள முடியாத ஓர் இயந்திரமாகவே செயற்படும் திறமை கொண்டவர்கள் மேலைத்தேய ஓவியர்கள் ஒவ்வொருவரது வாழ்க்கைப்பின்னனியும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களால் விட்டுச்சென்ற வரலாற்றுச் சான்றுகளையும் அவதானிக்கையில் உலக விந்தையும் உருவாக்கமும் வியக்கவைக்கின்றன.ஓவியர்களான லியானாடோடாவின்சி, மைக்கல் ஆஞ்சலோ, றபேலல், பிக்காசே, பொல் சொன் போன்ற ஓவியர்கள் பட்டியல் நீண்டு செல்கின்றது. மருத்துவத்துறையில் ஓவியர் லியானாடோடாவின்சியால் கண்டு வர்ணிக்கப்பட்ட/வரையப்பட்ட மனிதனின் இரத்தச் சுற்றோட்டம் இதயத்திலுள்ள பகுதிகள் என்பவற்றை துல்லியமாக வரைந்து காட்டியவர். அது மட்டுமன்றி இசைத்துறையிலும் மிகப்புகழ் படைத்த ஓர் ஓவியராவார்.



நிக்கோலஸ் பௌசின் என்ற ஓவியர் புராணச்சம்பவங்களை ஓவியங்களின் மூலமாக மனதில் பதியம் படி சொல்லும் முறையையும் பரோக் முறை ஓவியக்கலையையும் அதில்புகுத்தி அறிவையும் உணர்ச்சியையும் இணைத்துக்காட்டியவராவர்.

பிரான்சிஸ்கோ-டி.கோயா என்ற ஓவியர் புதிய பாணியில் சிந்தனையும் செயலும் என்ற பிரஷனிஸ்ட்(கிராபிக் ஓவியம்) அரண்மனை ஓவியங்களை வரைந்து புகழ் பெற்றவர். (பால் கொனான்) சிந்தெடிஸ் பாணியில் ஓவியங்களை வரைந்து புதிய கோணத்தில் வரையும் முறைகளை உருவாக்கிய பெருமை இவரையே சாரும்.

பப்லோ பிக்காஸோ ஓவியத்தின் உட்பொருளைத் தனித்துச் சொல்லும் விதமாக அழுத்தமாக கூறவும் அதிலும் பால்சிழேனின் பாணியைதான் கையாண்டார். இவர் தனது வரைதல் காலத்தை நீல வண்ணக்காலம் ரோஸ் நிறக்காலமாக பிரித்து வரைதல் செயற்பாட்டை விரிவுபடுத்தினார்.

எனவேதான் ஓவியம் சமன் வர்ணம் என்பது மனிதனும் அவனது மனத்தில் புதையுண்டுள்ள அனைத்து இன்ப துன்பங்களையும் சாந்தமும் தூய்மையும் ஆக்குகின்றதில் எதுவித ஐயமுமில்லை. மருத்துவ உலகில் நுழைந்த இச்செயற்பாடானது பல மருத்துவ செயற்பாடுகளில் வர்ணம் முதல் ஓவியம் வரை நீண்டு செல்வதை எல்லோரும் அவதானிக்கும் ஒன்றுதான். அதற்கு எடுத்துக்காட்டாக மருத்துவத்தில் காணப்படும் ஒவ்வொரு மருந்துவில்லைகளும் பல வர்ணங்களிலே அடைக்கப்படுவதை அவதானிக்க முடிகிறது. அத்துடன் மருத்துவத்துறையில் மனநிலை பாதிப்படையும் நோயாளர்களுக்கான அதிக பயிற்சி நேரமாக ஓவியம் வரைதல் வர்ணம் பூசுதல் வர்ணங்களை இனங்காணல் போன்ற செயற்பாடுகளை திட்டமிட்டுள்ளனர். ஒரு நிறைமாத கர்ப்பிணியாக உள்ள தாய் ஒருவர் வைத்தியரை அணுகி குழந்தை நலன்களை விசாரிக்கும் போது வைத்தியரானவர் கூறுவது பல வர்ணங்களை நன்றாக அவதானியுங்கள், இரசியுங்கள் எனவும் அத்தோடு நின்றுவிடாது மனதில் எழும் கற்பனைக் காட்சிகளை இயன்றளவு வரைதலில் செலவளியுங்கள் என அறிவுறுத்துகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிசுவா[* File contains invalid data | In-line.JPG *]னது கருவறையிலுள்ள போது சூழலின் தாக்கம் செல்வாக்கு செலுத்துகின்றது. அது ஓர் நேர்பாங்குடனும் புத்திசாதுாரியமான குழந்தையாக பிரசவிப்பதற்குசிறந்து விளங்குகிற ஒரு செயற்பாடாகும்.

தாய் கருவுற்ற காலத்திலிருந்து நிறைமாதம் வரை சூழற்செயற்பாடுகளையும், புறச் சூழற்தாக்கங்களையும் உணரும் தாயானவள் கருவுற்ற குழந்தையை சுமக்கும் போது தனது கஷ்டங்களையும்,சோகங்களையும் தன்னகத்தே தேக்கிக் கொள்கின்றாள். ஆனால் அது தனது பிள்ளையை சென்றடையும் என எண்ணுவதில்லை. சிசுவானது அனைத்தையும் பெற்றுக்கொண்டு நிறைவருடம் எய்திய பின்னர் சூழலில் ஆக்ரோசம் கொண்டவனாகவும் ஏதோ ஒரு ஏக்கம் கொண்டு வளர்ந்து வரும் தன்மை காணப்படும் அதனால் அவனை நாம் நெறிபிரள்வான பிள்ளை என பட்டம் சூட்டுகின்றோம்.

பாடசாலையில் தரம் 01-05 வரையான மாணவர்களுக்கு தமக்கு விரும்பிய வர்ணப்படங்களை வரையுங்கள் என்பது அறிவுறுத்தல் செய்யும் போது அவர்களது உளம் பற்றிய சிந்தனையாற்றலை வெளிப்படுத்தும் நிலைகளை காணக்கூடியதாக உள்ளது. அவன் தெரிவு செய்யும் வர்ணத்தில் இருந்தும் அவனின் வரைதல் போக்குகளையும் வைத்து உளவியலாளர்கள் துல்லியமாக இனங்கண்டு விடுகின்றனர். பிள்ளையானவன் அறிவியலை மட்டும் புரிந்து கொள்ள வேண்டும். என எமது சமூக எண்ணப்பாடாகும். அவ்வாறு எண்ணுவதால் தான் தற்போதுள்ள சமூகம் அபாயகரமாக மாற்றம் பெற்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது பிள்ளை தகுதியான பாடங்களை தெரிவு செய்ய வேண்டும், மேன்மையான தொழிலைப் புரிய வேண்டும் என்ற எண்ணம் அனைத்து பெற்றோரும் விரும்புவது. ஆனால் சிசு கருவுற்ற நேரங்களில் தாம் கடைப்பிடிக்கும் நல்லெண்ணங்களை கைக்கொள்வதில்லை. இதனால்தான் மருத்துவத்துறையின் ஆராய்ச்சி முடிவுகள் கலை இரசனைகளை நன்கு தேடவும் அதனுடன் ஒன்றிச் செயற்படவும் கூறுகின்றனர்.

இன்றைய அறிவியல் உலகில் அழகியல் கலையானது கடல் போல் வியாபித்து வளர்ச்சி கொண்டுள்ளதை காணமுடிகிறது. அதிலும் சித்திரம் எனும் வார்த்தைகளால் பேசமுடியாத கலையானது மனிதனின் மனவெழுச்சிகளையும், அதன் பாதிப்புக்களையும் பெரிதும் குறைக்க உதவும் என நம்புகின்றேன்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கிய வாழ்வும் விளையாட்டும்

-திருமதி. த. விஜிதரன்-
ஆசிரியர்
கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை

**"சமனிலை ஆளுமையும் அமைதியும் அறிவும் நிரம்பிய இளம் தலைமுறையினரை உடற்கல்வி ஊடாக உருவாக்க முடியும்". (சாள்ஸ் பியூகர் நாஸ்)**

இன்றைய அவசர கதி உலகிலே வாழ்ந்துவரும் எமது இளம் சமுகத்தினர் வெறும் ஏட்டுக்கல்வியாக மட்டுமன்றி உடலங்கங்களை அசைத்து செய்யும் செயற்பாடுகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்பது எனது கருத்து. எமது முன்னோர்கள் தங்களது உணவு பழக்கவழக்கத்தினாலும் அயராத உடல் உழைப்பினாலும் தங்களது ஆயுட்காலத்தினை உயர்த்தி வைத்திருந்தார்கள். ஆனால் இன்றைய எமது மாணவச்சமுதாயம் வெறும் புத்தகங்களை மனப்பாடம் செய்யும் வேலையாகவே இருக்கின்றார்கள்.

இன்றைய உலகிலே சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை உடற்பயிற்சி செய்தல் முக்கிய விடயமாகும். வைத்திய சாலைகளில் அநேகமாக எமது மாணவர்களையே காணமுடிவது வேதனைக்குரியது. ஓடியாடி விளையாடி மகிழவேண்டிய வயதிலே தொற்றாத நோய்களின் தாக்கத்திற்கு உள்ளாகி வருகின்றமை வேதனைக்குரியதே. எம்மை பத்து மாதம் சுமந்து பெற்றவர்கள் பிள்ளைகளுக்கு தாங்கள் திட்டமிட்ட அட்டவணைப்படியே செயற்பட வைக்கின்றார்கள். இதில் விளையாட்டிற்கென நேரத்தை ஒதுக்குவதில்லை. அவர்களை பொறுத்தவரையில் விளையாட்டில் நேரத்தைச்செலவிடும் பிள்ளைகளால் படிப்பில் கவனம் செலுத்தமுடியவில்லை. என்ற மாறுபட்ட கருத்தே நிலவுகின்றது. ஆனால் இது முற்றிலும் மறுக்கப்பட வேண்டிய கருத்து. விளையாட்டுத்துறையில் கால்த்தடம் பதிக்கும் வீர வீராங்கனைகளுக்கு துறைசார்ந்த வேலைவாய்புகள் பட்டப்படிப்புகள் என ஏராளமான வாய்ப்புகள் கிடைக்கின்றன.

**"உடற்கல்வி மூலம் நாட்டிற்கு நற்பிரஜைகளை உருவாக்கலாம். இது பாடசாலைகளில் அத்திவாரமிடபட வேண்டும்"(சுனில் ஜெயவீர)** நிச்சயமாக இக்கூற்று முக்கியமான ஒன்றாகும். ஆரம்பப் பிரிவுகளில் செயற்பட்டு மகிழ்வோம் போட்டிகளை நடாத்தி அதில் மாணவர்களை ஈடுபடச்செய்து அதில் வெற்றி தோல்விகளை ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தினைப்பெறுகின்றனர். காலை ஆராதனையின் பின்னர் இசையுடன் கூடிய அசைவோடு மெல்லிய உடலசைவுகளோடு மாணவர்கள் அப்பியாசங்களை செய்யும் போது பாடங்களுக்கு தங்களை தயார்ப்படுத்திக் கொள்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று இலங்கை நாட்டிலே பாடசாலை மாணவர்களுக்கிடையிலான போட்டிகள் 12,14,16,18,20 வயது பிரிவுகளாகப்பிரித்து கோட்டம் வலயம் மாகாணம் தேசியமட்டங்களாக நடாத்தப்பட்டு மாணவர்களது இலைமறையாக புதைந்து கிடக்கும் ஆற்றல்கள் வெளிவர காரணமாக அமைகின்றன. பிறக்கும் போதே அனைத்துக்குழந்தைகளும் ஏதாவதொரு ஆற்றலோடுதான் பிறக்கின்றது. இந்த மண்ணிலே அந்த ஆற்றல்கள் ஏதாவதொரு சந்தர்ப்பத்திலே வெளிவருகின்றது. அது விளையாட்டாகவோ அல்லது இணைப்பாடவிதமான செயற்பாடாகவோ இருக்கலாம்.

**"இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்"** இன்று பாடசாலை வொலிபோல் அணிக்கு தலைமைப்பொறுப்பினை ஏற்றுக்கொள்ளும் மாணவனோ அல்லது மாணவியோ நாளைய நல்ல தலைமைத்துவ பண்போடு மிளிரக்கூடிய வாய்ப்பு அதிகமாக இருக்கின்றது. விளையாட்டுக்களிலே பங்குபற்றும் மாணவர்கள் சிறந்த ஆளுமைப்பண்பு சிறந்த குழு ஒற்றுமையுணர்வு வெற்றிதோல்விகளை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு புரிந்துணர்வு விட்டுக்கொடுக்கும் ஆற்றல் தீர்ப்புகளை ஏற்றுக்கொள்ளல் தலைமைத்துவப்பண்பு ஆகியன மாணவர்களிடையே வளரும் என்பதில் ஐயமில்லை.

**"விசையுறு பந்தினைப் போல் மனம் வேண்டியபடி செல்லும் உடல் கேட்டேன்"**

என்ற பாரதி பாடலும் **"உடலினை உறுதி செய்"** என்ற ஔவையார் கூற்றும் நோக்கத்தக்கது. கருவிலே குழந்தை இருக்கும் போதே கை கால்களை அசைத்த தன்னுடைய இருப்பினை எமக்கு காட்டுகின்றது. பின்பு பிறந்து தனது குட்டிக்கால்களால் தவழ்ந்தும் ஓடியும். தனது அசைவுகளை ஆரம்பிக்கின்றது. ஆனால் அவர்கள் வளர வளர அவர்களது உடற்செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்பட்டு முழுமையாக கல்விக்கே தங்களை புகுத்திக்கொள்கின்றார்கள். இன்றைய எமது பிள்ளைகள் மைதானங்களில் விளையாடுவதை விட்டுவிட்டு தொடுதிரை கொண்ட கையடக்கத்தொலைபேசியில் விளையாடுவதைத்தான் நாம் காண்கிண்றோம்.

இன்று சர்வதேச மட்டங்களிலே எம்மவர்களில் கால்த்தடங்களும் பதிந்து வருகின்றமையை எமது விளையாட்டுக்களைப்பெற்ற பெரு வெற்றியே எனக் கொள்ளவேண்டும். தற்போது நடந்து முடிந்த ஆசிய வலைப்பந்தாட்ட போட்டியில் (2018 சிங்கப்பூர்) யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த செல்வி தர்ஜினி சிவலிங்கம் அவர்களின் அளப்பெரிய பங்களிப்போடு சம்பியன் பட்டத்தைப்பெற்றிருப்பது எங்களுக்கு பெருமையே. இலங்கை வலைப்பந்தாட்ட தேசிய அணியில் இரண்டு தமிழ் வீராங்கனைகள் விளையாடுவது எமக்கு உத்வேகத்தையே தருகின்றது. மேலும் காற்பந்தாட்டத்திலும் எம்மவர்களின் ஆதிக்கம் தற்போது தொடர்கின்றது. இளைஞர் கிரிக்கெட் அணியில் யாழ்மாணவன் இடம்பிடித்தமை சிறப்புக்குரியதே.

**"முயற்சி உடையோர் இகழ்ச்சி அடையார்"** என்ற கூற்றுக்கு இணங்க முயற்சிகள் எமது பக்கத்திலேயே இருந்து தொடர்வதால் நிச்சயம் ஓர் நாளில் வெற்றி கிட்டும். விளையாட்டிலே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதிக்கும் எமது சாதனைகள் நிச்சயம் எம்மை ஓர்நாள் உயரக்கொண்டு செல்லும் க.பொ.த சாதாரணதரம் க.பொ.த உயர்தரம் ஆகியவற்றை விளையாட்டுடன் சேர்த்து கற்று முடித்தோமே ஆனால் தேசிய கல்வியற்கல்லூரியில் சேர்ந்து உடற்கல்வி ஆசிரியராக வெளிவரலாம். அதனைவிட இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்திலும் உடற்கல்வி பட்டப்படிப்பினைத் தொடரலாம். இன்று பயிற்சியாளர் வேலைவாய்ப்பினை இலங்கை அரசாங்கம் வழங்குகின்றது அதில் இடம் கிடைக்கலாம். இதனை விட மேற்படிப்புக்காக இந்தியா சென்று கற்கக் கூடிய வாய்ப்பும் இத்துறையிலே எமக்கு கிடைக்கின்றது.

**"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"** என்ற கூற்றுக்கு இணங்க எல்லோரும் வாழவேண்டிய தேவை இருக்கின்றது. பொன் பொருள் சொத்துக்கள் அனைத்தையும் விட நோய்நொடி இல்லாது வாழ்தலே குறைவில்லாத செல்வமாக எமக்கெல்லாம் தேவைப்படுகின்றது.

ஆகையால் எமது எதிர்காலத்தலைவர்களே உங்களது வாழ்க்கையில் ஓடும் புளியம்பழமும் போல விளையாட்டினை எடுத்துக்கொள்ளாமல் நகமும் சதையும்போல விளையாட்டினை சேர்த்துக்கொண்டால் எதிர்கால வாழ்க்கை தெளிவான நீரோட்டமாக செல்லும் என்பதில் எதுவிதமான ஐயப்பாடுமில்லை.

**"சிறந்த நிர்வாகிகளையும் சிறந்த ஒழுங்கமைப்பாளர்களையும் உடற்கல்வியினூடாக உருவாக்கலாம். இதனால் பாடசாலைகளில் உடற்கல்வி கட்டாயப்பாடமாக்கப்பட வேண்டும்"–**
**பிளேட்டோ**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொல்காப்பியத்தின் பிளிசாரமே நன்னூல்

-செல்வி.அபிநயா குலேந்திரன்-
ஆசிரியர்
கிளி/இராமநாதபரம் மேற்கு அ.த.க பாடசாலை

தமிழ் இலக்கிய வரலாற்றில் கி.பி 9ம் நூற்றாண்டின் பிற்பகுதிக்கும் கி.பி 14ம் நூற்றாண்டின் முற்பகுதிக்கும் இடைப்பட்ட ஏறத்தாழ 450 ஆணடுகள் சோழர்காலம் ஆகும். இக்காலம் தன்னில் நிலவிய அரசியல் பொருளாதாரம் சமயம் சமுதாய நிலை காரணமாக தமிழ் இலக்கியம், காவியம், பேரிலக்கியம், சித்தாந்த நூல்கள், இலக்கணம், திகண்டு, தொகுப்பு நூல்கள், உரைநூல்கள்,மெய்க்கீர்த்திகள் எனப் பன்முகப்பட்டு வளர்ச்சியடைந்தது. இவ்வளர்ச்சிப்படிகளுள் இலக்கண நூல்களும் ஒன்றாகும். இக்காலம் தன்னில் தோன்றிய நேமிநாதம், வீரசோழியம், நன்னூல், தண்டியலங்காரம், யாப்பெருங்கலம்,யாப்பெருங்கலக்காரிகை ஆகிய ஆறு இலக்கண நூல்கள் தோன்றின. அவற்றுள் ஒன்று நன்னூல் ஆகும்.

சோழர் ஆட்சி எழுச்சி பெற்றிருந்த 11ம் 12ம் நூற்றாண்டில் தோன்றிய வீரசோழியம் நேமிநாதத்தை தொடர்ந்து கி.பி 13ம் நூற்றாண்டில் நன்னூல் தோன்றியது. இதனை யாத்தவர் பவநந்தி முனிவர் என்ற சமணத்துறவி ஆவார். சமணத்துறவி ஒருவர் நன்னூல் என்ற ஓர் இலக்கண நூலைப் படைத்திருக்கலாமா? என்ற ஐயப்பாடு எழலாம். சோழர் காலத்தில் சோழப்பெரு மன்னர்கள் சைவ சமயத்தவர்களாக திகழ்ந்த போதும் சகல மதங்களையும் சமமாக மதிக்கும் சமயப்பொறையைக் கடைப்பிடித்தனர்.

நன்னூல் எழுத்திற்கும் சொல்லிற்கும் இலக்கணம் கூறும் நூலாகவுள்ளது. இதனால் எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் எனும் இருபெரும் கூறுகளையும் 462 நூற்பாக்களையும் கொண்டது. எழுத்ததிகாரமானது எழுத்தியல் பதவியல் உயிரீற்றுப் புணரியல் மெய்யீற்றுப்புணரியல் உருபு புணரியல் ஆகிய 05 இயல்புகளையும் சொல்லதிகாரம் பெயரியல், வினையியல், பொதுவியல், இடையியல், உரியியல் என்னும் 05 இயல்புகளையும் கொண்டது. எழுத்தும் சொல்லும் ஐந்து ஐந்து இயல்களாக பிரிக்க பெற்று சிறப்பினையும் காணமுடிகின்றது.

நன்னூலை தொல்காப்பியத்தின் பிளிசாரம் என்றும் கூறுவர். அவ்வாறாயின் தொல்காப்பியம் போன்று எழுத்து சொல் பொருள் இடம் பெற்றிருக்க வேண்டும் ஆனால் எழுத்தும் சொல்லுமே இடம் பெற்றுள்ளது. ஒரு வேளை பொருளதிகாரம் இடம் பெற்றிருந்து இன்று எமக்கு கிடைக்காமல் போயிருக்கலாம்.

நல்லூலார் தொல்காப்பிய கருத்தை முழுமையாக உள்வாங்கி கூறமுற்பட்ட போதிலும் தன்காலக்கருத்துகளையும் அத்தோடு இணைத்துக் கூறியதைக்காணலாம். உரிச்சொல் பற்றிக் குறிப்பிடுகையில் **"உறு தவநனி வரு உம் மூன்றும்"** என்று குறிப்பிட இதனை நன்னூலார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"சால உறு தவ நனி கூர் கழி மிகல்"**என்று சால உறு தவ நனி கூர் கழி என மேலும் 03 உரிச்சொற்களை இணைத்துக் கூறப்பெற்றுள்ளதைக் காணலாம். இது போலவே திசைச்சொல் பற்றி தொல்காப்பியர் குறிப்பிடுகையில்

**"செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தினும்**
**தங்குறிப்பினவே திசைச்சொற் கிளவி"**

என்று செந்தமிழ் நாடாகிய பாண்டி நாட்டை சூழ உள்ள பன்னிரு பிரதேசங்களிலிருந்தும் தமிழுக்கு வந்த சொற்களை திசைச்சொல் என்றார். ஆனால் நன்னூலார்.

**"செந்தமிழ் நிலச்சேர் பன்னிரு நிலத்தினும்**
**ஒன்பிற் றிரண்டினில் தமிழ் ஒழி நிலத்திலும்**
**தம் குறிப்பினவே திசைச்சொல் என்பர்."**

என்று கூறி தொல்காப்பியர் குறிப்பிட்ட செந்தமிழ் நாட்டைச் சூழவுள்ள பன்னிரு பிரதேச மொழிகளை திசைச்சொல் என்று குறிப்பிட்டதோடு ஒன்பதிற்றிரண்டினில் தமிழ் ஒழி நிலத்தினுள் என்ற தொடரால் சிங்களம், கன்னடம், மலையாளம், முதலான பதினென் மொழிகளுள் தமிழ் தவிர்ந்த ஏனைய 17 மொழிகளுள் இருந்து தமிழுக்கு வந்த சொற்களையும் திசைச்சொல் என்றார். இது மொழிவளர்ச்சியை காட்டுவதோடு தொல்காப்பியத்திற்கும் நன்னூலிற்கும் இடைப்பட்ட காலத்தில் தமிழ் மொழியடைந்த வளர்ச்சியை எடுத்தியம்பியதாக அமைந்திருப்பதைக் காணலாம்.

ஒரு நூலானது தன் காலத்திற்கு முற்பட்ட செய்திகளையும் புதிய நூல்களையும் உள்வாங்க வேண்டும். இதில் காலத்திற்கு ஒவ்வாதவை நீக்கப்பட வேண்டும். அதே வேளை காலத்திற்கு பொருத்தமானவை சேர்க்கப்படவும் வேண்டும் இதற்கும் இடமளித்தாலே அந் நூல் நிலைக்கும் இதனைக் கருத்திற் கொண்டது. இதனை நன்னூலார்

**"பழையன கழிதலும் புதியன புகுதலும்**
**வழுவல கால வகையினானே."**

என்று அமைத்தார் இத்தன்மை போலும் நன்னூல் தோன்றிய காலப்பெருமையோடு இற்றைவரை நிலைத்திருக்கும் பேறு பெற்றது. தொல்காப்பியத்தின் பிளிசாரமாக நன்னூல் திகழ்கின்றது. இந்நூல் பிளிசாரமாக ஆறுமுகநாவலரின் இலக்கணச்சுருக்கம் திகழ்வதைக்காணலாம். பிற்கால இலக்கண நூல்கள் யாவும் நன்னூலை மூலமாகக் கொண்டு அடியொற்றி எழுந்தவையாகும்.

◈

◈ ◈ ◈

◈



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறவஞ்சி நாட்டிய நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

-திரு சிவபாலன் லினோசன்-
ஆசிரியர்
கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை

## குறவஞ்சியின் அறிமுகம்

ஆயகலைகள் அறுபத்து நான்கினுள்ளும் ஒன்றான இந்த பரதக்கலை ஆண்டவன் திருவடிகளில் மலர்ந்த அற்புதமான அழகியற் கலைகளில் ஒன்றாகும். உடலையும் உள்ளத்தையும் தூய்மையாக வைத்திருக்கும் இக்கலை ஆடல், கூத்து என அழைக்கப்பட்டு பின்னர் சதிர்,சின்னமேளம் தாசி ஆட்டம் என நகைப்புக்கிடமாகி, மறுமலர்ச்சி அடைந்து பரதம் என்ற பெயருடன் இன்றுவரை உலகெங்கும் தெய்வீக மணம் கமழும் இறைவனுக்கு அர்ச்சிக்கப்படும் தெய்வீக மலராக புதுப் பொலிவுடன் விளங்குகின்றது.

தமிழர் கலைப் பண்பாட்டில் வளம் எய்திய ஒரு மரபுக் கலை வடிவம் குறவஞ்சி ஆகும். குறம் என்பது பாட்டும் நாட்டியமும் மட்டும் கொண்டிருந்த ஓர் சிறு பிரபந்தம் பின்னர் நாடக அமைப்பையும் சேர்த்துக் கொண்டு இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழ் அம்சங்களையும் உள்ளடக்கிய அழகிய ஆடல்கலையே குறவஞ்சி நாடகம் ஆகும். குறத்தி ஒருத்தியின் கூற்றோடு வேறுபல கூற்றுக்களும் உள்ள நூல் குறவஞ்சி ஆகும். குறிஞ்சி நிலத்திலே களவொழுக்கம் மிகுந்து காணப்படும். மற்றும் குறவனின் பறவை வேட்டையும் குறத்தியின் குறி கூறுதலும் இணைந்து உருவானது தான் குறவஞ்சி இலக்கியம் ஆகும்.

**குறம் + வஞ்சி = குறவஞ்சி** எனப்படும். அதாவது வஞ்சி எனும் பெண்ணை அடியொற்றியதால் குறவஞ்சி எனப்படும்.

இக் கூத்துக்கள் பற்பல நூற்றாண்டுகளாக நிகழ்ந்து வந்தன.எனினும் இலக்கியத்தில் சிறிதளவு உருவம் பெறத் தொடங்கியது. சிலப்பதிகார காலத்தில்தான் கானல்வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை, வேட்டுவரி என்னும் பகுதிகளில் இக் கூத்துக்களுக்கும் உருவம் தந்து மெருகிட்டுக் காட்டுகின்றார் இளங்கோவடிகள். எனினும் இவை மேலும் வளர்ந்து முழுமையான இலக்கிய உருவாக்கத்தைப் பதினாறாம் நூற்றாண்டில் தான் பெற்றன எனில் மிகையாகாது.

குன்றக்குரவை வளர்ந்து குறவஞ்சியாக மலர்ந்தது. இவ்வாறு ஒவ்வொரு பகுதியும் வளர்ச்சியுற்று தனித்தனிச் சிற்றிலக்கியங்களாக உருப்பெற்றன. இவ் வகையில் இலக்கிய நாடகமாக மலர்ச்சி பெற்றது குறவஞ்சி நாடகம். குறவர்கள் மலைவாணர்கள் கவலையற்ற வாழ்க்கையை உடையவர்கள். தேனும் திணைமாவும் உண்டு ஆடியும் பாடியும் அகமகிழ்ந்து வானம்பாடி எனக் கானப் பகுதிகளில் அலைந்து திரிபவர்கள் குறப்பெண்ணை குறவஞ்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பர். இவர்கள் ஊர் ஊராகச் சென்று குறி சொல்லும் வழக்கம் உடையவர்கள். சங்க இலக்கியங்களில் "வெறியறிதல்" என்ற பகுதியில் இதனைக் காணலாம். இவர்கள் இவ்வாறு குறிசொல்லும் செய்தியை மையக் கருவாகக் கொண்டு தோன்றியதே குறவஞ்சி நாடகம் ஆகும். இதனை குறத்திப் பாட்டு எனவும், குறம் எனவும் பாட்டியல் நூல்கள் குறிப்பிடுகின்றன. இரண்டாயிரம் மூவாயிரம் ஆண்டுகளாக நிகழ்ந்து வந்த இக் குறவரின் தனியாடல்கள் கதை தழுவிய போக்கில் ஒழுங்கு பெற்று நாடகம் என்ற வடிவில் உருவாகியது. பக்தி இயக்கத்தில் ஒரு புதிய மலர்ச்சி தோன்றியதன் விளைவாக இலக்கிய உலகிலும் ஒரு திருப்பம் ஏற்பட்டது. அத் திருப்பத்தில் குறவஞ்சி, பள்ளு நொண்டி, நாடகங்கள் என்ற நாடக இலக்கியங்கள் தோன்றின. குறத்தி குறி கூறுவதாக அமைந்த இந்நூலின் இலக்கணத்தை

***"இறப்பு நிகழ்வெதிர்வு என்னுமுக் காலமும் திறப்பட உரைப்பது குறத்திப் பாட்டே"***
***(பன்னிரு இனவியல் . 131)***

எனப் பன்னிரு பாட்டியல் நூற் பாவொன்று வரைந்து காட்டுகின்றது. குறத்தி குறி கூறுவதாக அமைந்த குறத்திப்பாட்டு என்ற ஒரு வகை நூல் அக்காலத்தில் இருந்ததென இதனால் அறிகிறோம். தொல்காப்பியத்தில் குறி கூறும் "கட்டுவிச்சி"பற்றிக் கூறப்படுகிறது. பிற்காலத்தில் தோன்றிய மீனாட்சியம்மை குறம் போன்ற நூல்களில் குறத்தி குறி கூறுவதற்காக முன்னும் பின்னும் அமைந்த சில செய்திகள் கூறப்படுகின்றன. சிற்றிலக்கியமான கலம்பக நூல்களிலும் குறம் என்ற உறுப்புக் காணப்படுகின்றது.

இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழ் அம்சங்களும் பொருந்திய அழகிய ஆடற்கலையே குறவஞ்சி நாட்டிய நாடகம் ஆகும். குறவஞ்சி என்பது குறமகளைக் குறிப்பதாக அமையும். குறி சொல்லும் நிகழ்த்துகைத் தன்மையே இதில் முக்கியத்துவம் பெறுவதால் இவ்வாடற்கலை இப் பெயரினைப் பெறுவதாயிற்று. நாடகம் என்னும் மரபுத் தன்மைக்குள் இது தோன்றுவதாயிற்று. அத்தோடு அதற்குள் உள்வாங்கப்பட்ட தன்மையினால் குறவஞ்சி நாடகம் என இது அழைக்கப்படுகின்றது. இறைவனை நாடி அவனைச் சரணடையும் தன்மையை அகப்பொருளாகக் கொண்ட புராதன தமிழரின் பண்பாட்டு நாடகவடிவமே குறவஞ்சி நாடகம் என விளக்கம் அளிக்கப்படுகின்றது. இயற்றமிழ் பாடல்களை இசையுடன் பாடி அபிநயத்தலே இதன் தன்மையென கூறலாம். தொண்ணூற்றாறு வகையான தமிழிசை மரபுக்குள் உள்ளடக்கப்படும் தனித்துவம் மிக்க இப்பாடல்கள் தமிழிலக்கியத்தில் சிற்றிலக்கியமென வகைப்படுத்தப்படுகின்றது.

***'கட்டினும் கழங்கினும் வெறியென இருவருக்கு ஒட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும்'***

என வரும் தொல்காப்பியப் பாடல் அதன் இயல்பு பற்றிக் கூறுகின்றது.

குறி சொல்லும் பெண்களை அகநானூறு நுன்கோல் அகவுணர்வு என்றும் குறுந்தொகை சிறுகோல் அகவன் மகளிர் என்றும் குறிப்பிடுவதைப் பார்க்கின்றோம். இம் மகளிர் குறி சொல்வதற்காக சிறு கோலையே பயன்படுத்தினர் என்பது இதன் மூலம் அறியப்படுகின்றது. சிற்றிலக்கியத்தன் ஒரு பகுதியாகக் கலம்பகம் குறிப்பிடப்படுகின்றது. கலம்பகத்தின் ஓர் உறுப்பாக அமைவது குறம் ஆகும். குறம் எனப்படும் குறத்திப் பாடல்களே குறவஞ்சி நாடகத்திற்கு முன்னோடியாக அமைந்ததெனலாம். குறத்திப் பாடல்கள் தமிழகத்திலும், இலங்கையிலும் பரவலாகவே தென்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொங்குமலை யாளமெல்லாம் திரிந்து குறி சொல்லி
கொடியிடையாள் குறமாறு கொலுவினிலே வந்தாள்
குண்டிடுக்கி குடுகிடுக்கி கூடை கையிலேந்தி
குனிந்து நின்று பழம் பொருக்கும் குறத்தியடி யம்மே
இடுக்குப்பெட்டி தனையிடுக்கி சங்கு வடம் பூண்டு
இருகாதும் தோடணிந்து வாற குற மகளே
காட்டெருமைக் கொம்பெடுத்து மோட்டு வளையேற்றி
கவரிமான் மயிர் பிடுங்கி கற்றை கட்டி வேய்ந்து
தாளை மடல் ஓலை கொண்டு தனியக் குடில் வளைந்து
பாளை மணம் வீசுகின்ற பரிபளப் பூஞ் சோலை
பச்சை மலை பவள மலை எங்களது நாடு
பரமசிவன் தேடிவந்து குடியிருந்த நாடு
பரமசிவன் தேடிவந்து குடியிருந்த நாடு

மேற்படி பாடல் சுமார் எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் பாடசாலை ஆரம்ப வகுப்புகளின் பாடத்திட்டங்களிலும் இடம் பெற்றுள்ளமை தெரிகின்றது.

வித்துவான் குறம், மீனாட்சியம்மை குறம், மின்னொளியாள் குறம் போன்றவை இதன் பாற்பட்டவையாகும். இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் ஆகிய மூன்றும் இணைவுற்ற நிலையில் நிருத்திகத்தின் தன்மையும் நாடக வடிவமும் பொருந்திய ஆடற்கலையாக இதனை அடையாளப்படுத்துகின்றது. குறவஞ்சி நாடகங்கள் முகம், பிரதிமுகம், கருபம், விளைவு, துய்த்தல் ஆகிய ஐவகைச் சந்ததிகளையும் வெளிப்படுத்தும் தன்மை மிக்கவையாகும்.

குறவஞ்சியில் நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, நேரிசை ஆசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா, கொச்சகக்கலிப்பா ஆகிய பாக்களுடன் யாப்பு வகையில் அமைந்த விருத்தம் கொச்சகம், அகவல்,கண்ணி, சிந்து, கீர்த்தனை ஆகிய இசைப்பாடல்களும் சேர்ந்த கூறுகளே பயின்று வருவனவாகும். சாஸ்திரிய இசையுடன் மெல்லிசையும் இயைந்து வரும் தன்மை இதன் தனிச் சிறப்பே என்று கூறலாம். அடித்தட்டு மக்களிடையே நீண்டகாலமாக நிலவிவந்த நாடக வடிவமே குறவஞ்சி என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்.

தோழியானவள் அவளை எதிர்கொண்டழைத்து தலைவிக்கு குறிசொல்லுமாறு அவளைக் கேட்டாள். தலைவியின் மனோ நிலையை நன்கு விபரித்துக் கூறும் குறத்தி அவள் விரும்பிய தலைவன் விரைவில் வந்து அவளுக்கு மாலை சூடுவான் என்று குறி சொல்வாள். இதனால் மனம் மகிழும் தலைவி பொன்னும், பொருளும் குறத்திக்கு பரிசளித்து அவளை மகிழ்ச்சியோடு வழி அனுப்பி வைப்பாள் இதனிடையே குறத்தியைக் காணாமல் அங்குமிங்குமாகத் தேடியலையும் குறவன், குறத்தி அழகிய ஆடை ஆபரணங்களோடு பரிசுப்பொருட்களுடன் வருவதைக் கண்டதும் அவள் மீது ஐயம் கொண்டு வாய்க்கு வந்தவாறெல்லாம் இழித்துக் கூறுவான். குறத்தியோ நடந்தது அனைத்தையும் அவனிடம் விபரமாகக் கூற மகிழ்ச்சி கொண்டு குறவன் அவளோடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடிப்பாடி மகிழ்வான். இதுவே குறவஞ்சி நாடகத்தின் கதையம்சமாக அமையும்.காலத்தால் முற்பட்டதான குறவஞ்சியில் இதுவரை நூற்று இருபது வரையான நாடகங்கள் பாடப்பட்டிருப்பதாக சொல்லப்பட்டிருப்பினும் குற்றாலக் குறவஞ்சியே முதலில் எழுத்தாவணமாகக் கருதப்படுகின்றது. ஏனைய குறவஞ்சி நூல்கள் தோன்றவும் இதுவே காரணமாக அமைந்துள்ளது.

குறவஞ்சி நாடகங்களை அதன் அமைப்பியலில் இரண்டாகப் பிரித்துப் பார்க்கலாம். இதன் முதல் பகுதி தெய்வத் தன்மை பொருந்திய ஆடவனிடம் ஒரு சிறப்பு நிலைப்பட்ட மானிடப் பெண் உள்ளத்தைப் பறிகொடுத்து நிற்கும் தன்மையை வெளிப்படுத்துவதாக அமையும். அதன் இரண்டாம் பகுதி குறவன் குறத்தியினது காதல் மற்றும் ஊடல் போன்றவை இதில் தென்படும், இன்னொரு அம்சம் கட்டியக் காரன் எனும் பாத்திரப் படைப்பு ஆகும். இதன் மரபே பின்னாளில் கூத்துக் கலையிலும் இடம் பிடித்துக் கொண்டதாக அறிய முடிகின்றது.

தொடக்கத்திலே சபை வணக்கம் மற்றும் வாழ்த்துப் பாடலுடன் நாடகம் ஆரம்பமாகும். அதன் பின்னர் தலைவன் உலா வருவான் இவன் கடவுளாகவோ, மன்னனாகவோ அன்றேல் சிறப்புத் தன்மை பொருந்திய மனிதனாகவோ அமையலாம். அதன் போது பருவ மங்கையர்கள் அவனைக் கண்டு அதிசயிப்பர். தலைவியோ அவனின் கட்டழகில் தன்னைப் பறிகொடுப்பாள். பின்னர் காதல் நிலைப்பட்டு மயங்கித் தவிக்கும் அவளை தோழி ஆறுதல் கூறித் தேற்றுவாள். இந்த நிலையில் அழகிய குறமகள் ஒருத்தி கூடையொன்றினை ஏந்தியவாறு கையில் சிறு கோலுடன் தன்னையும் தனது பரம்பரையினரையும் பெருமைப் படுத்தி பாடியவாறு தலைவியின் இல்லம் நோக்கி வருவாள்.கோயிலுக்கு வெளியே ஆடப்பட்டு வந்த இவ் வாடற் கலையானது கி.பி 6ஆம் நூற்றாண்டின் பின்னர் கோவிலுக்குள்ளும் நுழைந்து கொண்டது. பொதுவாக சிறப்பு வாய்ந்த எல்லா ஆலயங்களிலும் குறவஞ்சி ஆடற்கலையாக இடம்பிடித்துள்ளது. கும்பேசர் குறவஞ்சி, சிதம்பரக் குறவஞ்சி, சிவன் மலைக் குறவஞ்சி போன்ற குறவஞ்சி நாடகங்கள் கோவில்களில் ஆடப்பட்ட குறவஞ்சி வகைகளில் மிகவும் முக்கியமானவையாகும். சோழ மன்னர்களது காலத்தில் சதிரெனப்பட்ட பரதத்தைப்போல் குறவஞ்சியும் சிறப்பிடத்தை வகிக்கலானது. இராஜராஜ சோழனது ஆட்சிக் காலத்தில் தஞ்சைப் பெரிய கோவிலில் குறவஞ்சி மேடை என இதற்காக ஒரு மேடை அமைக்கப்பட்டு வருடாந்த விழாவின் போது அதில் குறவஞ்சி நாடகங்கள் மேடை ஏற்பட்டுள்ளமை வரலாற்றுப்பதிவாகவே உள்ளது.

தஞ்சையை மராத்திய மன்னர்கள் ஆண்ட காலத்திலும் (1674-1855) அரண்மனையில் குறவஞ்சி நாடகங்கள் இடம்பெற்றிருப்பதை அறிய முடிகின்றது. இதில் சிவக்கொழுந்து தேசிகரால் எழுதப்பட்ட தஞ்சை சரேபந்திரா பூபாலக் குறவஞ்சி மிக முக்கியமானதாகும். தஞ்சை மன்னன் சரேபந்திராவே இதன் பாட்டுடைத்தலைவனாவான் இதற்கான இசையமைப்பினைப் புகழ் பெற்ற தஞ்சை நால்வர்களான சின்னையா, பொன்னையா, சிவானந்தம், வடிவேலு சகோதரர்கள் மேற்கொண்டிருந்தனர் திருக்குற்றாலக் குறவஞ்சி, விராலிமலைக் குறவஞ்சி, திருமலை ஆண்டவர் குறவஞ்சி, கண்ணப்பர் குறவஞ்சி, பெத்லேகம் குறவஞ்சி, செந்தில் குறவஞ்சி போன்ற குறவஞ்சி நாடகங்கள் மிகவும் புகழ்பெற்றவையாகவும் திருக் குற்றாலக் குறவஞ்சிப் பாடல் சிறப்பினையும் விராலிமலைக் குறவஞ்சி, இசைச் சிறப்பினையும் அழகர் குறவஞ்சி மற்றும் திருமலை ஆண்டவர் குறவஞ்சி போன்றவற்றின் இசையே, இலக்கிய நயத்தினையும் வெளிப்படுத்துவதாக ஆய்வாளர் கருதுவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றுப்பத்தொன்பது இனிய இசைப்பாடல்களைக் கொண்டிலங்கும் திருக் குற்றாலக் குறவஞ்சி குறவஞ்சி வகைகளின் முதல் தோன்றுவாய் ஆகும். இதன் பின்னரே ஏனைய குறவஞ்சிகள் தோற்றம் பெற்றன. இயற்கைப் புனைவுகளை மட்டும் பாடி வந்த கவிஞர்கள் அதனோடு இயைத்து இறைவன் இயல்புகளையும் பாடத் தொடங்கினார்கள்.

கடந்த பல ஆண்டுகளாக பண்டைய தமிழிலக்கிய மரபினை உள்வாங்கி சிற்றிலக்கிய பகுப்புகள் செல்வாக்கு மிக்கதாக வளர்ந்து இன்று மக்கள் கலையாக மலர்ந்து விட்ட குறவஞ்சி எனும் முத்தமிழ் ஆடற் கலையானது இன்று பல்வேறு புதுமைக் கருத்துக்களாலும் நவீனப்படுத்தப்பட்டு வருவது காலத்தின் கட்டாயமாகவே அமைகின்றது. சிறந்த பல நாட்டிய நாடகங்களின் உருவாக்கத்திற்கு குறவஞ்சியே கால்கோலாய் அமைந்தது என்பதனை வரலாறு பதிவு செய்தேயுள்ளது.

## குறவஞ்சியன் வகைகள்

குறவஞ்சி நாடகங்களைப் பல்வேறு வகையாகப் பிரித்து நோக்கலாம். அதாவது தலைவனின் பெயரை அடிப்படையாகக் கொண்டு எழுந்த குறவஞ்சி நாடகங்கள், தலைவி பெயரை அடிப்படையாகக் கொண்டு எழுந்த குறவஞ்சி நாடகங்கள், தலத்தின் பெயர் அடிப்படையில் எழுந்த குறவஞ்சி நாடகங்கள், இலக்கியங்களின் அடிப்படையில் எழுந்த குறவஞ்சி நாடகங்கள், தோழியின் பெயர் அடியொற்றிய குறவஞ்சி நாடகங்கள்எனப் பலவாக வகைப்படுத்தலாம்.

எடுத்துக்காட்டாக அர்த்தநாரீஸ்வரர், குறவஞ்சி, அழகர் குறவஞ்சி, கும்பேசர் குறவஞ்சி, செந்திலாண்டவர் குறவஞ்சி, திருமலையாண்டவர் குறவஞ்சி, தியாகேசர் குறவஞ்சி, பொய்யா மொழியீசர் குறவஞ்சி, முதலான குறவஞ்சி கடவுளரின் பெயரால் அமைந்துள்ளன. ஸ்ரீ கிருஷ்ணமாரி குறவஞ்சியும், மாத்தளை முத்துமாரியம்மன் குறவஞ்சியும் இறைவியின் பெயரால் அமைந்துள்ளன.

தலத்தின் பெயரால் பெயர்பெற்றுள்ள சில குறவஞ்சிகளும் உண்டு. கிரிஷ்ணவிந்தக் குறவஞ்சி, குறுக்குத்துறை குறவஞ்சி, சிதம்பரக் குறவஞ்சி, சிவன் மலைக் குறவஞ்சி, சிற்றம்பலக் குறவஞ்சி, சோலை மலைக் குறவஞ்சி, திருக்குற்றாலக் குறவஞ்சி, திருப்பரங்குன்றக் குறவஞ்சி, நகுலமலைக் குறவஞ்சி, பெத்தலேம் குறவஞ்சி, வருணாபுரிக் குறவஞ்சி, விராலிமலைக் குறவஞ்சி முதலியன இவ் வகையைச் சாரும்.

சில குறவஞ்சிகள் தலத்தின் பெயருடனும் இறைவனின் பெயருடனும் விளங்குகின்றன. குன்றக்குடி சிவசுப்ரமணியக் கடவுள் குறவஞ்சி, சிக்கல் நவநீதேசுவர சுவாமி குறவஞ்சி, மண்ணிப்படிக்கரை நீலகண்டர் குறவஞ்சி முதலியன குறவஞ்சிக்கு எடுத்துக்காட்டாகும். சரபேந்திர பூபாலக் குறவஞ்சி, சகசிராசன் குறவஞ்சி ஆகியன அரசன் பெயரால் வழங்குபவையாகும். தமிழரசிக் குறவஞ்சி தலைவி பெயரில் அமைந்துள்ளது. பாம்பன காங்கேயன் குறவஞ்சி, காங்கேயன் குறவஞ்சி, சுப்பிரமணிய முதலியார் பேரில் குறவஞ்சி ஆகியவை வள்ளல்கள் பெயரில் அமைந்துள்ளன.சாதியின் பெயரால் அமைந்துள்ளது. ஓதாளர் குறவஞ்சி எனும் அழகு மலைக் குறவஞ்சி, தத்துவக் குறவஞ்சி, ஞானக் குறவஞ்சி, ஞான ரத்தினக் குறவஞ்சி, மெஞ்ஞானக் குறவஞ்சி, முத்தானந்தர் ஞானக் குறவஞ்சி என ஞானப் பொருளால் பெயர் பெறுகின்ற சில குறவஞ்சிகளும் காணப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் காணப்படும் குறவஞ்சி

இலங்கைப் புலவர்கள் பாடியனவாக பல குறவஞ்சிகள் அறியப்படுகின்றன அவையாவன.

| | | |
|---|---|---|
| அனலைதீவு ஐயனார் குறவஞ்சி | - | முத்துக் குமாரப் புலவர் |
| கச்சால் குறவஞ்சி | - | மாம்பாண முதலியார் |
| கதிரமலைக் குறவஞ்சி | - | சது மலைப் புலவர் விநாயகர் |
| காரைக் குறவஞ்சி | - | சஞ்த கப்பையர் |
| தத்துவக் குறவஞ்சி | - | முருசேகசப் பண்டிதர் |
| வண்ணக் குறவஞ்சி | - | விஸ்வநாத சாஸ்திரியார் |
| நல்லைநகர் குறவஞ்சி | - | கந்தப்பிள்ளை |
| மல்வில் குறவஞ்சி | - | வெற்றிவேலுப் புலவர் |
| வள்ளிக் குறவஞ்சி | - | வெற்றிவேலுப் புலவர் |
| மாத்தளை முத்துமாரியம்மன் குறவஞ்சி | - | சு. சொக்கனாதன் |
| வண்ணை வைத்திய லிங்கம் குறவஞ்சி | - | கணபதி ஐயர் |
| நல்லைக் குறவஞ்சி | - | சேனாதிராய முதலியார் |
| கச்சேரி முதலியார் குறவஞ்சி | - | சேனாதிராய முதலியார் |
| முத்துக் கிருட்டினன் குறவஞ்சி | - | இன்பக்கனி |
| யாழ்ப்பாணத்துச் செல்வர் குறவஞ்சி | - | இன்பக்கனி |
| நல்லைக் குமரன் குறவஞ்சி | - | பிரம்மஸ்ரீ மா.த.ந. வீரமணி ஐயர் |
| திருமலை வில்லூன்றிக் கந்தன் குறவஞ்சி | - | பிரம்மஸ்ரீ மா.த.ந. வீரமணி ஐயர் |
| நகுலமலைக் குறவஞ்சி | - | பிரம்மஸ்ரீ மா.த.ந. வீரமணி ஐயர் |
| வசந்தக் குறவஞ்சி | - | பிரம்மஸ்ரீ மா.த.ந. வீரமணி ஐயர் |
| ஈழக் குறவஞ்சி | - | பிரம்மஸ்ரீ மா.த.ந. வீரமணி ஐயர் |
| திருக்கோணேஸ்வரர் குறவஞ்சி | - | பிரம்மஸ்ரீ மா.த.ந. வீரமணி ஐயர் |
| கதிர்காமக் குறவஞ்சி | - | பிரம்மஸ்ரீ மா.த.ந. வீரமணி ஐயர் |

தமிழகத்தில் தோற்றம் பெற்ற குறவஞ்சி நாட்டிய நாடகங்கள் போல் ஈழத்திலும் பல குறவஞ்சிகள் தோற்றம் பெற்றன. அவற்றுள் வீரமணி ஐயர் எழுதியுள்ள குறவஞ்சி நாட்டிய நாடகங்களுள் பெரும்பாலானவை கடவுளர்களைப் பற்றியனவாக அமைந்துள்ளது. அவற்றுள் சிலவற்றை நோக்குகையில்

## திருமலை வில்லூன்றிக் கந்தன் குறவஞ்சி

இக் குறவஞ்சி நூல் வெளிவராத கையெழுத்துப் பிரதியாகும். இறைபக்தியை உணர்த்தும் இக் குறவஞ்சி நாட்டிய நாடகத்தில் திருகோணமலையில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் வில்லூன்றிக் கந்தனே தலைவன் பேரின்ப நிலை அடைவதற்கான பக்தி எனும் காதல் கொண்டு உருகும் ஜீவாத்மாவாகிய சண்முக வல்லியே தலைவி ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் குறவஞ்சி நாட்டிய நாடகத்தை தொடங்குவதற்கான காப்புச் செய்யுள் ஆலடி விநாயகர் ஸ்துதியாக அமைகின்றது. இதனைத் தொடர்ந்து திருக்கோணேஸ்வரர் ஸ்துதி, மாதுமையம்மாள் ஸ்துதி, வில்லூன்றிக் கந்தன் ஸ்துதி, நால்வர் ஸ்துதி, வாணி ஸ்துதி என்பன அமைகின்றன.

நூற்பயனில் வில்லூன்றிக் கந்தனின் அருட்பெருமைகள் பேசப்படுகின்றன. பரிபக்குவ ஞானம் அருள்பவன் என்றும் கந்தனின் பெருமைகளைக் குறத்தி நாடகத்தில் பாடினால் தமிழ் மலரும் என்று பலவாறாகப் புகழ்ந்து சொல்கின்றார் ஆசிரியர்.

*"அக்கின்பூ அருகமர்ந்தான் பூவாய்*
*அம்புஜம் சேர் சரவணப்பூ மலர்மலர்ந்தான்....."*

என்று இந்நூலின் பயன் குறிப்பிடப்படுகின்றது.

நூலின் கதைத் தொடக்கமாக கட்டியக்காரன் தோன்றி வில்லூன்றிக் கந்தன் பவனி வருவதாக உரைக்கும் பகுதி அமைகின்றது.

*"மங்கள வாத்தியம் எங்கணும் ஒலிக்கவே*
*மயிலவன் வில்லூன்றி மாநகர் வீதியில்......"*

இவ் இடத்தில் நம் பழந்தமிழ் இலக்கியங்களான இராமாயணம், கந்தபுராணம் போன்றன குறிப்பிடும் **"கண்கலந்த காதல்"** கந்தன் மேல் சண்முகவல்லி கொண்ட காதலுடன் இணைத்துக் குறிப்பிடப்பட்டுள்ளமை சிறப்பானது.

*"கந்த மேனி மங்கை சண்முகவல்லிப் பூவை*
*பந்தினை ஆடும்வேளை........."*

வில்லூன்றிக் கந்தனைக் கண்டு மையல் கொண்ட சண்முகவல்லி பவனி வந்த கட்டழகன் யாரவன் எனத் தன் சகியரிடம் வினவும் பகுதியை பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற பகுதிகளில் அமைத்துப் பாடப்பட்டுள்ளது. இதில் சரணம் என்ற பகுதியில் வரும் பாடல் வரிகள் சண்முகவல்லியின் விரகதாப மேலீட்டினை வலியுறுத்துவனவாக அமைந்துள்ளன.

பவனி வந்தவன் வில்லூன்றிக் கந்தனே எனத் தோழியர் சண்முகவல்லியிடம் கூறுகின்றனர். இதைக்கேட்ட சண்முகவல்லி தமிழ்க்கடவுளாகிய கந்தன் தன்னை ஆட்கொண்டு விரும்பும் பேரின்பத்தைத் தருவானோ என்று ஏங்கி இரங்குகின்றாள்.இப்பாடற்பகுதிகள் கீர்த்தனை போன்று பல்லவி, அனுபல்லவி, சரணம் எனும் அமைப்பில் காணப்படுகின்றன.

*"தமிழுக்கு உயிரான கந்தன் ......*
*அணங்கெனை ஆட்கொள்வான் தானே?"*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கந்தன் மேல் கொண்ட காதலினால் மனம் மயங்கி நின்ற சண்முகவல்லியின் நிலை சித்தரிக்கப்படுகின்றது. இவளது நிலையைக்கண்ட சகியர் பலவாறு தேற்றுகின்றனர். காதல் மோகத்தினால் **"பொன்போன்ற மேனி பசலை பூத்திருக்கிறது"** என்று தலைவியின் உடல்நிலை கூறப்படுகின்றது. இதனைப் பின்வரும் பாடலடிகள் விளக்குகின்றன.

***"பொன்மேனி பசலை பூக்குத்தடி - இது***
***பூவைக்கு விரகமாக்குதடி........"***

அடுத்துச் சண்முகவல்லி கந்தன் மேல் வைத்த மோகத்தினால் சந்திரனையும், தென்றலையும், குயிலையும், மயிலையும், மனமதனையும் பழித்துக் கூறுவதாக கட்டியக்காரன் உரைக்கும் பகுதி இடம்பெறுகின்றது. இதுவிருத்தயாப்பில் அமைந்துள்ளது. இப்பாடற்பகுதி சண்முகவல்லியின் விரகதாபத்தினை மேலும் வலியுருத்துவனவாக அமைகின்றது.

அடுத்த கட்டம் சண்முகவல்லி தலைவனிடம் தூது அனுப்பும் பகுதியாகும். இதற்கு அடுத்த கட்டமாக அமைவது தலைவி கூடலிழைக்கும் பகுதியாகும். தலைவி சண்முகவல்லி தனது காதல் நிறைவேறுமா நிறைவேறாதா என்பதை அறியும் பொருட்டு **"கூடலிழைக்கின்றாள்"** இதில் இரண்டு பாடல்கள் வருகின்றன. **"கூடலிலே நீ கூடாய்"** எனத் தலைவி வேண்டுவதாக இப்பாடல் வரிகள் அமைந்துள்ளன.

அடுத்து வில்லூன்றிக் குறத்தி தோன்றுவதாகக் கட்டியக்காரன் கூறும் பகுதி அமைகிறது. இது பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அமைப்பில் அமைகிறது. இதன் கண் குறத்தியின் உடை, நடை, ஆபரணம், குறிகூறும் தன்மை என்பன விரித்துரைக்கப்படுகின்றன.

குறத்தி மலைவளம் கூறும் பகுதியில் திருகோணமலையின் சிறப்பு கூறப்படுகின்றது. வில்லூன்றிக் கந்தனின் புனிதத் தலவளம் கூறும் பாடல் தெம்மாங்குப்பாடல் அமைப்பிற் பாடப்பட்டுள்ளது. இதில் கோணேசர் மாதுமையாள் கோயில் வரலாறு பற்றிய குறிப்பு இடம்பெறுகின்றது. குறத்தி தனது குலவளம் கூறும் பகுதியில் பல வரலாற்றுச் செய்திகள் இடம்பெற்றுள்ளன.

***"கந்தனுக்கு தேந்திணை மாதந்த தெங்கள் குலமே***
***கன்னி வள்ளிக் காதல் கந்தன் கொண்டதெங்கள் குலமே"***

குறவஞ்சி சண்முகவல்லியின் கரம் பார்த்துக் குறி சொல்லும் முன்பு தனது குலதெய்வங்களை வழிபடும் பாடல்கள் தெம்மாங்குப் பாடலாக அமைந்துள்ளன. இதில் குறவர்களின் சிறு தெய்வ வழிபாட்டுக் கடவுளர்களான ஆலடிப்பிள்ளையார், மாரியம்மன், பத்திரகாளியம்மன், செண்பக நாச்சியம்மன் போன்ற தெய்வங்களின் பெயர்கள் இடம்பெறுகின்றன.அடுத்ததாகச் சண்முகவல்லியின் கரம்பார்த்துக் குறிசொல்லும் பகுதி இடம்பெறுகின்றது. வீதி வலம் வந்த வில்லூன்றிக்கந்தன் மீது மையல் கொண்ட செய்தியைக் கூறுகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லூன்றிக் குறவஞ்சி இப்பாடல் **"காவடிச் சிந்தில்"** அமைந்துள்ளது.

**"கோனுறக்கம் மறந்தாய் உத்தமன் கந்தன் அருள்**
**உருவத்தைக் காதல் நெஞ்சம் நினைக்க"**

என்று தலைவனின் திருநாமத்தைக் குறத்தியின் மூலம் கூறக்கேட்ட தலைவி சண்முகவல்லி நாணம் கொப்பளிக்கக் காணப்பட்டாள் என அமையும் பாடல் விருத்த யாப்பில் வந்துள்ளது. அதன் பின் தலைவி கந்தனிடத்தில் பாடலைப் பாடுவதாக தோழியர் கூறும்பாடலுடன் இக்கதை முற்றுப்பெறுகின்றது. நூலின் முடிவாக மங்கள வாழ்த்துப் பாடல் அமைகின்றது. வில்லூன்றிக் கந்தனும் வள்ளி தெய்வானைக்கும் ஜீவாத்மாவாக வந்த சண்முகவல்லிக்கும் பக்தருக்கும் வில்லூண்டிக் குறத்திக்கும் நன்றி கூறுவதாக இப்பாடல் அமைகிறது.

## ஸ்ரீ கதிர்காமக் கந்தன் குறவஞ்சி

தன்னிகர் இல்லாத தலைவனான கதிர்காமக்கந்தன் கதிர்காமத்தலத்திலே சகல உபசாரங்களுடனும் அலங்காரங்களோடும் பவனி வருகின்றான். ஓய்யாரமாக மயில் வாகனத்தில் ஏறி சகல வாத்தியங்களும் முழங்க வேதியர்கள் வேதகோஷமெழுப்ப கதிர்காமத்தலத்திலே வீதிப்பவனி வருகின்றான் கந்தன். கதிர்காமக் கந்தன் மீது எல்லையில்லாத பக்தி எனும் காதல் கொண்ட ஜீவாத்மாவாகிய ஆத்மவல்லி சகல வாத்தியங்களும் முழங்க கதிர்காமக் கந்தனான பரமாத்மாவின் மீது மையல் கொள்ளுகின்றாள். கதிர்காமக் கந்தனின் கட்டழகில் மயங்கிய ஆத்மவல்லி கந்தனின் மேல் மையல் மீறுவதனால் மிகுந்த விரக்தியும் வேதனையும் கொள்ளுகின்றாள்.

தமது தலைவி ஆத்மவல்லி கதிர்காமக் கந்தன் மீது கொண்ட மையலினால் ஏற்பட்ட விரக வேதனையால் தலைவி துன்புறுதலைக் கண்ணுற்ற சகியர் அவளைத் தேற்றுகின்றனர். தலைவனான கதிர்காமக் கந்தனை எண்ணி எண்ணி மையலினால் உருகும் ஆத்மவல்லி சந்திரன், தென்றல், மயில்,குயில், மன்மதன் ஆகியோரைப் பகைக்கின்றாள். மிகுந்த விரகதாபத்தால் வாடிய ஆத்மவல்லி தனது நாயகனான கதிர்காமக் கந்தன் வருவானோ என கூடழிளைத்துப் பார்க்கின்றாள். தோழியர் அவளைக் கேலி செய்கின்றனர்.

கதிர்காமக் கந்தனிடம் ஆத்மவல்லி தனது சகியைத் தூது அனுப்புகின்றாள். தூது சென்ற சகி வழியில் கதிர்காமக் குறவஞ்சியைச் சந்தித்து தலைவியான ஆத்மவல்லியின் கரம் பார்த்து குறிசொல்லும் வண்ணம் வேண்டி கதிர்காமக் குறவஞ்சியைத் தலைவியிடம் அழைத்து வருகின்றாள்.

கதிர்காமக் குறவஞ்சி தனது மலைவளம், தலவளம், குலவளம் யாவும் விரிவாக எடுத்துதலைவியிடம் கூறுகின்றாள். ஆத்மவல்லியும் தனது கையைப் பார்த்து குறிசொல்லும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணம் பணிக்கின்றாள். தமது குலதெய்வங்களை பணிந்த கதிர்காமக் குறவஞ்சி ஆத்மல்லியின் கரங்களைப்பார்த்துப் புகழ்கின்றாள். தலைவன் மீது அவள் கொண்ட மையலையும், விரக வேதனையையும் அம்பலப்படுத்துகின்றாள். கதிர்காமக் குறவஞ்சி தலைவியான ஆத்மவல்லி குறத்தியின் கூற்றை மழுப்புகின்றாள். தலைவனின் திருநாமம், திருவண்ணம், திருவூர் கூறும்படி ஆத்மவல்லி கேட்க குறத்தி அவ்வாறே கூற தலைவியான ஆத்மவல்லி நாணம் கொள்கின்றாள். அவ்வாறே கதிர்காமக் குறவஞ்சிக்கு பரிசில்களை வாரி வழங்குகின்றாள்தலைவி, இறுதியில் யாவரும் கதிர்காமக் கந்தன் புகழ்பாடி ஆடுகின்றனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தித்திக்கும் தமிழ்

-செல்வி. பிரதீபா விநோதன்-
ஆசிரியர்
கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை

தித்திக்கும் பாகான எங்கள் தமிழ் – அது
எத்திக்கும் புகழ் பரப்பி வாழும் தமிழ்
முத்தமிழ் வித்தகராம் விபுலானந்தருடன்
பக்தியாய் பரவி நின்ற சம்பந்தரும் போற்றும் தமிழ்

பனை செழிக்கும் யாழ்ப்பாணத்தில்
நல்லை நகர் கந்தன் காக்க
கோணமலை கோணேசரும்
கும்பிட்டுனை வணங்க
ஒட்டிசுட்டான் ஈஸ்வரரும்
மட்டுநகர் மாமாங்கரும்
வட்டக்கச்சி ரங்கநாதர்
வற்றாப்பளை கண்ணகியாள்.........

நிதம் உனைக் காக்க நீர்வளம் கொழிக்க
மலையகம் எங்கும் தமிழ் மணம் கமள
மலேசியாவிலும் பிஜிங் தீவிலும் லண்டன்
மாநகரிலும் கூடவே தமிழர் பண்பாடு நிலைத்திடவே

சொல்லிட எளிதாமோ .... அதைச்
சொல்லிட எளிதாமோ .... தமிழின் சிறப்பை
சொல்லிட எளிதாமோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதிபாடல்களில் பெண்விடுதலை

-திரு. செபமாலை றெஜி இராசநாயகம்-
ஆசிரியர்
கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியையும், இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியையும் இந்தியாவின் நவீனயுகத்தின் ஆரம்பம் எனக்கொள்ளலாம். இக்காலப்பகுதியில் சமூக, அரசியல் மாற்றங்கள் துரிதகதியில் இடம்பெற்று நவீனத்துவ சிந்தனைகளும் துளிர்விடலாயின. இதனால் சமூகத்தில் ஆண்,பெண் உறவில் பல வேறுபட்ட கருத்தியல் தாக்கங்கள் இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. இத்தகைய ஒரு சூழ்நிலையிலேயே நவீனயுகக் கவிஞனாக சுப்பிரமணிய பாரதியார், தமிழ் இலக்கிய உலகில் காலடி பதித்தார். பாட்டுத்திறத்தாலே இவ்வையகத்தைப் பாலித்திட முயன்ற பாரதியார், அரசியல் விடுதலை, சமுதாயம், பண்பாடு, சமயம் என்றவாறு பல்வேறு துறைகளிலும் விடுதலையை அவாவி நின்றார்.

அதாவது பாரதி காலத்தில் மத்தியதரவர்க்கம் எழுச்சி பெறத்தொடங்கியது. இந்திய சுகந்திர தாகம் மேலெழத்தொடங்கியது அத்தோடு, ஆங்கிலேய ஆட்சியினால் இந்தியர் வாழ்வில் இடம்பெற்ற தாழ்ச்சிகளே அவரது கவிதைக்குப் பொருளாயின. அதேநேரம் தான் வாழ்ந்த காலத்தில் இந்திய சமூகத்தில் காணப்பட்ட குறைகள் பல அவரது கவனத்துக்குள்ளாயின. இதன் காரணமாகவே பாரதி, பெண்விடுதலை, சாதி அடக்குமுறையிலிருந்து விடுதலை, ஆங்கிலமொழி மோகத்திலிருந்து விடுதலை, சமயப் பிரிவினையிலிருந்து விடுதலை, பொருளாதார விடுதலை அரசியல் விடுதலை எனப் பலவாறும் **"விடுதலையை"** வேண்டி நின்றார். இதனைப் பாரதியின் படைப்புக்களான கவிதைகள்,கட்டுரைகள், வசனகவிதைகள், கதைகள், நாடகத்துணுக்குகள் என்பவற்றில் காணலாம்.

இவ்வகையில் பல்துறைகளிலும் தன்சிந்தனைக் கதிர்களை பரப்பி பாரம்பரிய மரபுவழிச் சிந்தனைகளிலிருந்து விடுபட்டு **"புதியதோர் உலகம்"** படைக்க விரும்பியதால் பாரதி, நவீன தமிழ் இலக்கிய உலகில் தனக்கெனத் தனித்துவமான ஓர் இடத்தினைப் பெற்றுக் கொண்டார். அத்தோடு பாரதியார் வழிப்பரம்பரையினர் எனச் சொல்லும் அளவிற்குத் தனக்கென ஒரு பரம்பரையினரையும் தோற்றுவித்துள்ளார். என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதுதான்.

பொதுவாக தமிழ் கூறும் நல்லுலகில் பாரதி உலகமகா கவிஞனாகவே பெருமளவில் போற்றப்பட்டு வருகின்றார். ஆனால் பாரதியோ தனது சிந்தனைக் கதிர்களைப் பல்துறைகளிலும் பாய்ச்சியுள்ளார். அதாவது அவரது கவிதைகளை நோக்குமிடத்து மாபெரும் கவிஞராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்குவது போல் அவரது உரைநடை ஆக்கங்களை நோக்குமிடத்து ஒரு தலைசிறந்த ஆராட்சியாளனாகவும், பேரறிஞனாகவும், சிறந்தவோர் எழுத்தாளனாகவும், பத்திரிகையாளனாகவும் விளங்குகிறார். எனவே தான் நவீன தமிழ் இலக்கிய உலகில் பாரதியார் எல்லாத் துறைகளிலும் வழிகாட்டியாக விளங்குகிறார் என்பர்.

பாரதியின் கவிதைகள் பற்றி நோக்கும் போது அவை பக்திப்பாடல்கள், தனிப்பாடல்கள், ஞானப்பாடல்கள், தேசியப்பாடல்கள், கண்ணன்பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலிசபதம்,வசனகவிதை, பல்வகைப்பாடல்கள் எனப் பலவகையினதாகக் காணப்படுகின்றன. அவற்றுள் பெண்உரிமை மற்றும் பெண்விடுதலை பற்றிய கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் புதுமைப்பெண், பெண்விடுதலை, பெண்மை, பெண்விடுதலைக்கும்மி, பாஞ்சாலிசபதம், என்பன விளங்குகின்றன. அந்த வகையில் விதவை மறுமணம் கூடாது, பெண் சிசுக்கொலை, பெண் கல்வி மறுக்கப்படல், சிறுவயதில் திருமணம் என்பன போன்ற பல விடயங்களில் பெண் இனத்திற்கான ஒரு சார்பான அநீதி ஆணுக்கான சமூக அங்கிகாரம், ஆதிக்கமனோபாவம் முதலியவற்றைப் பாரதி தனது எழுத்துக்களின் மூலமாக எதிர்த்து நிற்பதனை காணலாம்.

அவ்வகையில் பாரதி பெண்களது உரிமையற்ற நிலையைச் சிந்தித்தார். இந்திய பெண்களை தென்னாபிரிக்க கறுப்பின மக்களோடு ஒப்பிட்டார். தனிமைப்படுத்தப்படும், ஒடுக்கப்படும், அடிமைகளாக வாழும் கறுப்பின மக்களைப் போலவே இந்தியப் பெண்கள் உள்ளனர் என்பதைக் கண்டு பெண் உரிமையை வலியுறுத்த முயன்றார். அவரது பரந்துபட்ட எழுத்துக்களிலும் (கவிதைகளிலும் கட்டுரைகளிலும்) பெண் உரிமையை வலியுறுத்தலானார். சமூக பொருளாதார விடயங்களில் சமவுரிமை வழங்கவேண்டும். கணவனை இழந்த பெண் மீண்டும் மணம் செய்வதைத் தடை செய்வது தப்பு அச்சத்தினாலும், பொறாமையினாலும் வேறு ஆண்களுடன் பெண்கள் பேசக்கூடாது என்பது போன்ற கட்டுப்பாடுகள் ஒழிய வேண்டும் எனப் பெண்களுக்காக பெண்விடுதலைக்காகப் பரிந்து பாடுகிறார் பாரதி இதற்கு எடுத்துக்காட்டாக

**“ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்**
**றெண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார்**
**வீட்டுக்குள்ளே பெண்களைப் பூட்டிவைப்போமென்ற**
**விந்தை மனிதர் தலைகுனிந்தார்.”**

எனப் பெண்விடுதலையைப் பாடுவதனைக் குறிப்பிடலாம். இவ்வாறே இந்துமத வரலாற்று ரிஷிகளும், நாயன்மார், ஆழ்வார் போன்றோரும் தெரிவிக்காத, தெரிவிக்கத் துணியாத புதுமையான கருத்துக்கள் பலவற்றைத் துணிச்சலுடன் தெரிவித்த பாரதியார், காலத்துக்கொவ்வாத கருத்துக்களை ஒங்கி நிராகரிக்கவும் தவறவில்லை இதனையே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கற்பு நிலையென்று சொல்லவந்தார் - இரு
கட்சிக்கு அஃது பொதுவில் வைப்போம்
வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்"

எனப்பாடும் பாரதி காலங்காலமாக ஒருதலைப் பட்சமாகப் பெண்ணையே சார்ந்தது என கருதப்பட்டுவந்த கற்பு பற்றிய கருத்தியலை உடைத்து இருபாலருக்கும் பொதுமை நிலையில் வைத்து நோக்குகிறார். இந்த வகையிலே

"தையலை உயர்வுசெய் சரித்திரத் தேர்ச்சி கொள்
தொன்மைக்கு அஞ்சேல் புதியன விரும்பு
பணத்தினைப் பெருக்கு சோதிடம் தனையிகழ்"

என்று புதிய ஆத்திசூடியை துணிந்து பாடியுள்ளார். மேலும் பெண் என்பவள் தொன்றுதொட்டு ஆணுக்கு அடுத்ததாக இரண்டாம் நிலையிலேயே நோக்கப்பட்டு வருகிறாள் பெண் இந்த மண்ணில் வந்து உதிக்கின்ற பொழுதில் இருந்தே மிக அருவருப்பாக தீண்டப்படாதவளாக பார்க்கப்படுகிறார். அதனால் தான் பெண்களுக்கு எல்லா உரிமைகளும் மறுக்கப்பட்டுள்ளன. இதைக்கண்டு சீற்றங்கொண்ட பாரதி பெண் உரிமையை வலியுறுத்தும் நோக்கில் மறுமணம் செய்தல், சமூக, பொருளாதார விடயங்களில் சமவுரிமை, விவாகரத்துச் செய்வதற்குரிய சுதந்திரம், தமது கணவனைத் தெரிந்தெடுப்பதற்கான உரிமை, பெண்கல்வியின் முக்கியத்துவம் சிறுவயதுத் திருமணத்தை எதிர்த்தல் என்பன போன்ற பெண்ணியற் சிந்தனைகளைப் பிரதிபலிக்கும் வகையில் படைப்புக்களை ஆக்கியுள்ளார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசான் ஆசான் பாடல்

-ரிசிஅபிசேக்-
தரம்-01

ஆசான் ஆசான் ஆசான்
அன்னை போன்ற ஆசான்!
அறிவையும் அன்பையும்
அள்ளித்தரும் ஆசான்!

அமைதியான நடையுடனே
அன்பான வார்த்தைகளை
அள்ளி வீசும் ஆசான்!

இன்முகத்தோடு அமர்ந்து
இனிமையான பாடலை
பாலர் எமக்கு பாடி நிற்கும்
பார் போற்றும் ஆசான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுள்ள காக்கை

-த.டனிஸ்-
தரம் -1

மோகனுக்கும் விமலாவிற்கும் வித்தியா என்ற இரண்டு வயது மகள் இருந்தாள். வித்தியாவிற்கு வீட்டின் முற்றத்தில் வைத்து சோறு ஊட்டினார் அவளின் அம்மா. முற்றத்தில் சோறு ஊட்டுவதை மரத்தில் நின்று பார்த்த ஏராளமான காகங்கள் கூடிவிட்டன.

காக்காவைக் காட்டிக் கொண்டே மகளிற்கு சோறு ஊட்டுவாள் விமலா. ஆனால் காக்கைக்கு சோறு போடுவதில்லை. அப்போது அடுப்பில் விசில்...... சத்தம் கேட்கவே வித்தியாவை கீழே இறக்கி விட்டு வீட்டிற்குள் ஓடினாள் விமலா.

வித்தியாவின் தளிர் நடையால் அவள் நடக்கும் அழகோ தனிதான். அம்மா உள்ளே போனதும் கண்ணால் சிரித்தப்படி தளிர் நடை நடந்தபடி சோற்றை அள்ளிக் காக்காவை நோக்கி நீட்டினாள் காகங்கள் அவளை நெருங்கி வர "காக்கா இந்தா... காக்கா இந்தா..." என்று சோறு போட்டாள்.

உள்ளே சென்ற விமலா திரும்பி வந்து வித்தியாவை திட்டி விட்டு **"அரிசி விக்கிற விலைக்கு இதுகளுக்கு வேற சோறு போடணுமாக்கும்.** உன் சாப்பாட்டை காக்கைக்கு தியானம் பண்ணுறியா?" காக்கைகளை விரட்டினாள்.

வித்தியாவுக்கு நாய், பூனை, காக்கா, எறும்பு எல்லோருமே நண்பர்கள். கையில் என்ன பண்டம் வைத்து இருந்தாலும் போட்டு விடுவாள். அவளுக்கு என்ன தெரியும்.....?

அதட்டிக் கொண்டே சோறு ஊட்டிய விமலா விளையாட்டுப் பொருட்களை வித்தியாவிடம் கொடுத்துவிட்டு வீட்டுவேலைகளை கவனிக்க வீட்டிற்குள் சென்றுவிட்டாள். வித்தியா முற்றத்தில் விளையாட்டுப் பொருட்களை பரப்பி விளையாடிக் கொண்டு இருந்தாள்.

திடீரென வித்தியாவின் கூச்சலும் காக்கைகள் கத்தும் சத்தமும் கேட்டு வெளியே ஓடி வந்தாள் விமலா. அங்கே குரங்கு ஒன்றைக் காக்கைக் கூட்டம் விரட்டிக் கொத்திக் கொண்டு இருந்தது. **"அம்மா..... அம்மா..."** என்று அழுத வித்தியா அம்மாவைக் கட்டிக் கொண்டாள். ஒரு நொடியில் நடந்ததை புரிந்து கொண்டாள் விமலா. தன் மகள் விளையாடிய பாத்திரத்தில் சாப்பிட ஏதேனும் இருக்குமோ? என எண்ணி குரங்கு பாத்திரத்தை தூக்கிக் கொண்டு ஓடியிருக்கின்றது. இதைப் பார்த்த காகங்கள் குரங்கினை விரட்டிக் கொத்துகின்றன என்பதைப் புரிந்து கொண்டாள்.

மகள் மற்ற ஜீவன்களுக்கு நட்பாக இருந்தது அவளுக்கு ஒரு இடையூறு நேர்ந்தபோது உதவியாக அமைந்ததை எண்ணி ஆச்சரிப்பட்டாள் விமலா.

அன்று முதல் மகளுக்கு சோறு ஊட்ட வரும் விமலா முதலில் காகங்களை **"கா... கா...."** எனக் கூப்பிட்டு சாதம் வைத்த பின்னரே மகளுக்கு உணவு ஊட்டினாள். நாய் மட்டுமல்ல நாம் பாசம் காட்டும் அனைத்து உயிரினங்களும் நன்றியுள்ளவையே....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஔவைப்பாட்டி

-விக்ரமன் அக்சுஷயா-
தரம் - 02



உண்மை உரைக்கும் பாட்டி
உலகம் போற்றும் பாட்டி

தமிழை வளர்த்த பாட்டி
தர்மம் போற்றும் பாட்டி

கம்பு ஊன்றும் பாட்டி
கதைகள் சொல்லும் பாட்டி

அறமாய் வாழும் பாட்டி
அகிலம் போற்றும் பாட்டி

வயது முதிர்ந்த பாட்டி
வாழ்வைச் சொன்ன பாட்டி

அறிவு மிக்க பாட்டி
அழகு மிக்க பாட்டி

நீதிக்கதைகள் சொல்லி - எம்
நினைவில் நீங்காப் பாட்டி

பாட்டி சொன்ன கதைகளை
அறிவுரையாய் கேட்டு நாம்

சின்னஞ் சிறார் வாழ்விலே
என்றும் உயர்வோம் பாரிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம் பாடசாலையின் புகழ் மாலை

-கு.ராகவன்-

தரம் - 2

வட்டக்கச்சி நன்னகரில் தன்னிகரில்லா கல்விச்சாலை வாழ்த்துகின்ற மாணவர்கள் மனம் விரும்பும் நறுஞ்சோலை இராமநாதபுரம் மேற்கில் வழிவந்த கலைக்கூடம் சந்தனமாய் மணம்வீசியே வழிகாட்டும் பள்ளிக்கூடம், தும்பிக்கையாய் மாணவர்க்கு நம்பிக்கையூட்டும் அறிவாலயம், ஆணிவேராய் அசையாத அற்புதங்கள் செய்த அன்பாலயம், ரத்தினமாய் முகமலர்ந்த முத்துக்களின் வண்ணமிகு வாசஸ்தலம், பண்பட்ட தமிழறிஞர்கள் பாரினிலே தளிர்த்திட வைத்த பாசத்தாயவள் இராமநாதபுரம் மேற்கு புகழ் வாழியவே! மடமை நீக்கி புலமைத்தேன் சொரிந்திட புகழோடு வாழ்க சாதனைகளின் விருட்சமாய் சரித்திரத்தில் நிலைபெற்று விட்டாள்.

---

# நான் விரும்பும் பூனைக்குட்டி

- ம.கலக்சிகா-

தரம் - 02

*சின்னச் சின்ன பூனையாம்*
*சிறிய நல்ல பூனையாம்*
*வெள்ளை நிறப் பூனையாம்*
*வீட்டில் வளர்க்கும் பூனையாம்*
*பந்தை நன்றாய் உருட்டுமாம்*
*குறும்பு நிறையப் பண்ணுமாம்*
*பாலை நன்றாய்க் குடிக்குமாம்*
*பகலில் நன்றாய்த் தூங்குமாம்*
*இரவில் எலியைப் பிடிக்குமாம்*
*ஜிம்மி என்பதே அதன் பெயராம்*
*இதுவே நான் விரும்பும் பூனைக்குட்டியாம்.*

---

# சின்னத்தங்கை

-அ.அருணவி-

தரம் - 02

*சின்னத் தங்கை அன்பினியா*
*வண்ணம் கொண்ட அழகுடையாள்*
*குறும்புத் தனங்கள் செய்திடுவாள்*
*கூடி விளையாடிடுவாள்*
*கள்ளமில்லாச் சிரிப்பாலே*
*உள்ளம் கொள்ளை கொண்டிடுவாள்*
*தடக்கிக் கீழே விழுந்திடுவாள்*
*சிணுங்கி சிணுங்கி அழுதிடுவாள்*
*சிரிப்புக் காட்டிட மகிழ்ந்திடுவாள்*
*அன்புத்தங்கை என் துணையாய்*
*அணைத்தே நாளும் மகிழ்ந்திடுவேன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது நாடு

- க.வேணுகன் -
தரம்-03

- எமது நாட்டின் பெயர் - இலங்கை
- அமைவிடம் - இந்தியப் பெருங்கடல்
- பரப்பளவு – 65610 ச.கிமீ$^2$
- தலைநகரம் - ஶ்ரீஜெயவர்த்தனபுர
- வணிகத் தலைநகரம் - கொழும்பு
- சிறப்புப் பெயர் - இந்து சமுத்திரத்தின் முத்து
- வேறு பெயர்கள் - ஈழம், தப்ரபேன், சிலோன்
- சனத்தொகை –அண்ணளவாக 20.3 மில்லியன்
- சுதந்திர தினம் - 1948.02.04
- தற்போதைய ஜனாதிபதி – மைத்திரி பால சிறிசேன
- தற்போதைய பிரதமர் - ரணில் விக்கிரமசிங்க
- சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமர் -D.S சேனநாயக்க
- தேசிய கொடி - வாளேந்திய சிங்கம்
- தேசிய கீதம் - "நமோ நமோ தாயே"
- தேசிய மரம் - நாகமரம்
- தேசிய மலர் - நீலஅல்லி
- தேசிய பறவை - காட்டுக்கோழி
- தேசிய மிருகம் - யானை/மரஅணில்
- தேசிய உணவு - பால்ச்சோறு
- தேசிய புனித மரம் - வெள்ளரசு
- தேசிய விளையாட்டு – கரப்பந்தாட்டம்/எல்லே
- மாகாணங்கள் - 09
- மாவட்டங்கள் - 25
- தேர்தல் மாவட்டங்கள் - 22
- நாணயம் - ரூபாய்
- இலவசக்கல்வி ஆரம்பிக்கப்பட்டது - 1945
- உயர்ந்த நீர்வீழ்ச்சி – பம்பரகந்த
- உயரமான மலை – பீதுறுதாலகால மலை
- நீளமான ஆறு – மகாவலி கங்கை
- தேயிலை ஆராய்ச்சி நிலையம் - தலவாக்கலை
- இறப்பர் ஆராச்சி நிலையம் - அகலவத்தை
- மிருகக்காட்சிச்சாலை – தெஹிவளை
- பறவைகள் சரணாலயம் - முத்துராஜவல, குமண, புந்தல
- ஓட்டுத்தொழிற்சாலை –அம்பாறை
- ரயர் தொழிற்சாலை – களனி
- சீமெந்து தொழிற்சாலை – புத்தளம், காலி
- எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிலையம் - சப்புகஸ்கந்த
- ஏற்றுமதிப் பொருட்கள் - தேயிலை, றபர், கறுவா
- கலாசார முக்கோண வலையம் - கண்டி, அனுராதபுரம், பொலனறுவை
- துறைமுகங்கள் - கொழும்பு, திருகோணமலை, காலி, அம்பாந்தோட்டை, காங்கேசன்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகள்

-பா.தசாங்கிதா-
தரம் - 03

ஊர் கூடி தேர் இழுத்தும்
ஒன்று கூடி கூழ் குடித்தும்
தேடி வைத்த உறவுகள்

*அன்று!*

பட்டினியாய் கிடந்த போதும்,
படுத்துறங்க திண்ணை மட்டுமே,
இருந்த போதும்,
இன்புற்றிருந்தோம் உறவுகள் இல்லம் மகிழ

*இன்று!*

வயிறு பிடைக்க உணவு
படுத்துறங்க பஞ்சு மெத்தை – ஆனால்
ஏனோ உறவுகள்
தூரமாகி போயின.
மனித நேயம் மாற்றமாகிப் போக
மனிதம் மரணித்து போனது.
வலிகள் மட்டுமே மீதமுள்ளது – இருப்பினும்

*என்றுமே*

மழலைகள் மட்டுமே
மலர்களாகவே உள்ளன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழியாத்தமிழே வாழியவே

-பு.அபிஸ்னா-
தரம் - 4

என் அன்னைத் தமிழே உன்னைப்
பாட என் அறிவு போதாது
இருந்தும் நான் பாடுகின்றேன்
ஏற்றுக்கொள்வாய் என்னை

ஆதி சிவனிடம் உரித்து அகத்தியனால்
உருப்பெற்று தொல்காப்பியனால் - நல்
உலகில் நீ தழைத்தாயே "வடவேங்கடம்
தென்குமரியிடை தமிழ் கூறும் நல் உலகம்"
தொல்காப்பியரால் நாம் அறிந்தோம்

முச்சங்கம் தனை அமைத்து
அதில் இளவரசியாய் உனை
அமர்த்தி தமிழாலே இவ்வுலகை
ஆண்டனராம் எம் முன்னோர் ஆழிச்
சாகரமதில் அவைகள் அழிந்து
போக எஞ்சிய மதுரை தனில்
இன்றுவரை நீ உள்ளாய்

பழங்குடியாம் நாம் உன்னாலே
பெயர் பெற்றோம் தமிழன் என்று
இன்று வரை நாம் சொல்வோம்
நெஞ்சத் திமிரோடு நாம் தமிழர்
என்று பறை கொண்டு முரசறைவோம்
என் அன்னைத்தமிழே என்றும் நீ வாழியவே....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிவிற்கோ அறிவியல்

–பா.யுகான்–
தரம் – 5

20, 21ஆம் நூற்றாண்டின் இணையற்ற விந்தை தான் விஞ்ஞானம். ஆதிகாலத்தின் குகைகளில் வாழ்ந்த மனிதன் கற்களை ஆயுதமாகவும், இலை,குழைகளை ஆடைகளாகவும், காய்,கனி, கிழங்குகளை உணவாகவும் உண்டு வாழ்ந்தான்.

மனிதன் காலம் செல்லச் செல்ல நிலவிலே கால் பதித்தான். **“பறவையைக் கண்டான் விமானம் படைத்தான். எதிரொலி கேட்டான் வானொலி படைத்தான். எதனைக் கண்டான் அதனையும் படைத்தான்.”** என்ற பாடலிற்கேற்ப மனிதன் அறிவியலால் மருத்துவம், தகவல் தொழிநுட்பம், விவசாயம், கைத்தொழில் மற்றும் போக்குவரத்து என அவன் தடம்பதிக்காத துறைகளே இல்லை எனலாம்.

வீட்டு வேலைகளை ஏவிய போது செய்யும் இயந்திர மனிதன், தூரத்திலுள்ள உறவுகளை அருகில் வைத்து பார்க்கும் தொழில்நுட்பம், ஆணை பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் மாற்றும் மருத்துவம், வேற்றுக் கிரகத்தில் உயிர் வாழும் சாத்தியம் என இப்படியே விஞ்ஞானத்தின் வளர்ச்சியை அடுக்கிக் கொண்டே போகலாம்.

ஆனால் ஆக்கத்திற்கு பயன்படுத்தப்பட வேண்டிய அறிவியல் எமது அறிவீனத்தால் அழிவிற்கு பயன்படுகின்றது. கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள், மனித இனத்தையே பூண்டோடு அழிக்கும் நச்சு வாயுக்கள், எந்தவிதமான அறிமுகமற்ற **“முகநூல்”** திருமணங்களால் தற்கொலைகள், விவசாயத்தில் இரசாயனப் பொருட்களின் தாக்கம், உணவுகளில் கலப்படம் என இன்னொருபக்கம் மனித இனத்திற்கே அச்சுறுத்தலாக உள்ளது. இந்த அறிவியல்.

**“எந்தக் குழந்தையும் மண்ணிற் பிறக்கையில் நல்ல குழந்தைகளே. அவை நல்லவராவதும், தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே”** என ஒரு பாடல் உள்ளது. இதே போல விஞ்ஞானம் ஆரோக்கியமான விடயம். ஆனால் அவற்றை நாம் ஆரோக்கியமான விடயத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். அப்போது தான் விஞ்ஞானத்தின் விந்தைகளால் மனித இனம் பெருமை பெறும், பயனடையும் எனலாம்.

அந்த வகையில் மாணவர்களாகிய நாம் அன்னப்பறவை நீரையும் தண்ணீரையும் பிரித்தறிவது போல் நாமும் அறிவியலில் இருக்கும் ஆக்க பூர்வமான விடயங்களை பெற்று வாழ்வில் முன்னேற்றமடைந்து அழிவிற்கு அறிவியல் என்னும் எண்ணக்கருவை மாற்றியமைப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் விரும்பும் பெரியார்.
# மகாகவி பாரதியார்.

-சு.மலரவன்-
தரம் - 05

பாரதியார் தமிழ் நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் எட்டயபுரத்தில் 1882ம் ஆண்டு பிறந்தார். பெற்றோர் சின்னச்சாமி - இலட்சுமி அம்மையார் ஆவார். பாரதியின் இயற்பெயர் சுப்பிரமணியம் என்பதாகும். இவர் மகாகவி, முறுக்கு மீசைக்காரன், முண்டாசுக்கவி, பாட்டுக்கொரு புலவன், சிந்துக்குத் தந்தை எனப் பல பெயர்களைப் பெற்றிருந்தார்.

பாரதி தனது ஐந்தாவது வயதில் தாயினையும் 16வது வயதில் தந்தையையும் இழந்து வறுமையில் வாடினார். இருந்த போதும் கல்வி மீதும், தமிழ் மீதும் அதீத காதல் கொண்டிருந்தார். 11வது வயதிலேயே இவரின் தமிழின் புலமை கண்டு எட்டயபுர மன்னனால் இவருக்கு பாரதி எனப் பெயர் சூட்டப்பட்டது. பாரதி என்பதன் பொருள் சரஸ்வதி என்பதாகும்.

பாரதி ஷெல்லி தாதன், விமலதாஸன், காளிதாசன், சகுததாசன் ஆகிய பெயர்களில் ஏராளமான கட்டுரைகளை எழுதியுள்ளார். அத்துடன் சுதேச மித்திரன், சக்கரவர்த்தியின் இந்தியா, விறுயி சூரியோதயம், கர்மயோகி, தர்மம் ஆகிய தமிழ் பத்திரிகைகளிலும் பாலா பாரதி என்ற ஆங்கில பத்திரிகையிலும் தொடர்ந்து பணியாற்றினார்.

பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, புதிய ஆத்திசூடி, ஞானரதம், தேசிய கீதங்கள் என பல கவிதைகளையும் எழுதினார். இவர் தனது பாடல்களினூடாக மக்களிடையே விடுதலை உணர்வை துாண்டினார். இவர் எழுச்சி மிகுந்த பாடல்கள் மற்றும் போராட்டங்களில் பங்கெடுத்தமையால் சிறைக்கு சென்று வந்தார். பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்தி வந்தோம். என பெண் உலகில் முதன் முதலில் குரல் கொடுத்தவர் பாரதி இவர் தனது மனைவி செல்லம்மாவைப் பார்த்து அன்றும் “நிமிர்ந்த நன்னடை நேர் கொண்ட பார்வை” என்னும் பாடலை பாடினாராம்.

தனது எழுத்துக்களை 40 தொகுதிகளாகப் பிரித்து புத்தகங்களை வெளியிடத் திட்டமிட்டு இருந்தார். எனினும் அது இவரது வறுமை காரணமாக முடியாமற் போய் விட்டது. தேசத்தந்தை காந்தியும் மகாகவியும் தமது வாழ்நாளில் ஒரே ஒரு முறை சந்தித்துக் கொண்டனர்.

கவிஞர், எழுத்தாளர், பத்திரிகையாளர், சமூக சீர் திருத்தவாத விடுதலைப் போராட்ட வீரர் எனப் பல முகங்களைக் கொண்டிருந்த மகாகவி தனது 39வது வயதில் இன்னுயிரை ஈர்த்தார். சொற்ப காலமே வாழ்ந்த போதும் பல நூறாண்டு காலம் மக்கள் மனங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஏமாந்த மனிதன்

–பி.மைவிழி–
தரம் – 6

ஒரு காட்டில் ஒரு குகை இருந்தது. அந்தக்குகை மிகவும் பழமை வாய்ந்தது. பௌர்ணமி இரவில் அந்தக்குகை திறக்கப்படும். அதற்குள் முத்துக்களும், வைரங்களும், தங்கக்காசுகளும் இருந்தன. அதை யாராவது ஏழை தான் எடுக்கலாம். ஏனென்றால் அது ஏழைகளுக்கு தான் சொந்தம் அது எப்படி ஏழைகளுக்குச் சொந்தமாகியது என்று பார்ப்போம். ஒரு ஊரில் மிகப்பெரிய பணக்காரர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் தன்னிடமிருந்த செல்வங்களை ஒரு குகைக்குள் மறைத்து வைத்தார். அதற்கு அவர் காவலிருந்தார். அவர் தூங்கும் போது அந்த ஊரிலிருந்த இன்னொரு பணக்காரர் அங்கு வந்து அதை திருட நினைக்கும் போது அவர் விழித்துக் கொண்டார். அப்பொழுது திருட வந்த பணக்காரர் ஓட முயற்சிக்கும் போது அவரை பிடித்து விட்டார். திருட வந்த பணக்காரர் சொன்னார் தன்னை ஒரு பணக்காரன் தான் அனுப்பியது என்று கூற அவர் விட்டுவிட்டார். அவர் சாகும் தருவாயில் இருந்தபோது ஒரு ஏழையும் திருடிய பணக்காரனும் வந்தனர். அவருக்கு தாகம் எடுத்தது. அவர் இருவரிடமும் தண்ணீர் கேட்டார். பணக்காரனோ கேட்காதமாதிரிச் சென்றான். ஏழையோ சற்றுத் தொலைவிலுள்ள குளத்திற்குச் சென்று நீர் எடுத்து வந்து கொடுத்தார். அவர் ஏழையிடம் உன்னைப் போன்ற ஏழைகள் தான் இந்தச் செல்வத்தை எடுக்க வேண்டும். பௌர்ணமி இரவில் இந்தக்குகை திறக்கப்படும். பணக்காரர்கள் எடுத்தால் அவர்களுக்குத் தண்டனை கிடைக்கும் என்று கூறி இறந்து விட்டார். பணக்காரர்கள் அங்கு செல்வதில்லை ஏழைகள் தங்களுக்கு தேவையானவற்றை எடுத்துக் கொண்டு செல்வார்கள். இதைக் கேள்விப்பட்ட பணக்காரன் ஒருவன் தான் ஏழைவேடம் போட்டுக்கொண்டு அதன் அருகில் செல்ல வேண்டும். கதவு திறக்கும் நான் போய் எடுப்பேன் என்று நினைத்த பணக்காரன் பௌர்ணமி வரை காத்திருந்தான். பௌர்ணமியும் வந்தது. அவன் ஏழைவேடம் போட்டு குகை அருகில் சென்றான். அங்கே பல ஏழைகள் வந்திருந்தனர். அவர்களில் தானும் போய் நின்று கொண்டான். எல்லா ஏழைகளும் உள்ளே போய் நிறைய செல்வங்களுடன் வருவதைப் பார்த்த அவனுக்கு பேராசை வந்தது. அடுத்து அவன் உள்ளே சென்றான். அங்கே நிறையக் கதவுகள் இருந்தன. அதில் ஒரு சிலையும் இருந்தது. அதற்கு பல கைகள் இருந்தன. அவை ஒவ்வொன்றும் கதவைக்காட்டி நின்றது. ஒரு கை மட்டும் மடித்திருந்தது. அவன் முதலாவது கதவைத்திறந்தான். அதற்குள் மணல் இருந்தது. இரண்டாவது கதவைத்திறந்தான். அப்போது சிலையில் மடிந்திருந்த கை அந்த ஏழைவேடம் போட்ட பணக்கார மனிதனின் கைகளை வெட்டியது. கைகளை இழந்த அந்த மனிதன் தனது தவறை உணர்ந்து பேராசையைக் கைவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் இனிய கல்வித்தாய்

–கி.மயூரிகா–
தரம் – 6

கிளிநொச்சி எனும் மாவட்டத்திலே கிழக்குபகுதியிலே சில்வா வீதியிலே அமைந்து பட்டொலி வீசி நிற்கும் கலைக்கோவில் கிளி/இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையாகும். காலத்திற்கு காலம் கடமையின் நிமித்தம் மாற்றமாகி வருகின்ற அதிபர்கள், ஆசிரியர்களது கடின உழைப்பாலும் அயராத முயற்சியினாலும் எல்லோராலும் பேசப்படும் அளவிற்கு புகழ் பூத்த பாடசாலையாகத் திகழ்கின்றது.

பாடசாலையின் முன்னமைந்த வீதியால் செல்வோரின் மனங்களை கொள்ளை கொள்ளும் அளவிற்கு நுழைவாயிலின் வனப்பும் பூத்துக் குலுங்கும் பல வண்ண மலர் வனத்தின் மத்தியிலே வீற்றிருந்து அருளாட்சி புரியும் அன்னையவளின் புன்முறுவல் பூத்த வதனமும் கனிவான பார்வையாலே பள்ளிச் சிறார்களைப் பார்க்கும் பார்வையும் மென்மேலும் அழகூட்டுவனவாக அமைந்துள்ளன.

பச்சிளம் பாலர்கள் தம் அன்னையரின் மடிவிட்டு பிஞ்சுப்பாதங்களால் நடை பயின்று பள்ளி வருகின்ற போது அவர்களை அன்போடு வரவேற்று கல்வி எனும் அறிவுப் பசியினைப் போக்கும் நல்லதோர் கலாசாலையாக விளங்குகிறது. எண்ணற்ற சிறார்கள் வெண்ணிற ஆடை அணிந்து பட்டாம் பூச்சிகள் போல சிறகடித்து அறிவு எனும் பயிரை வளர்த்துச் சென்று இன்று பல்வேறுபட்ட துறைகளில் பணியாற்றுவதனைக் காணக்கூடியதாக உள்ளது. நாம் ஏணி போல் ஏற்றம் பெறவும் பலதுறைகளில் வாகை சூடவும் இக்கல்லூரி எமக்களித்த அத்திவாரக்கல்வியே உறுதுணையாக உள்ளது. அந்த வகையில் எம் கலைத்தேவியின் பாரம்பரிய சேவைகள் என்றென்றும் மகத்தானவை. அவை எண்ணில் அடங்காதவை. கால ஓட்டத்திற்கேற்ப வளைந்து நெளிந்து கொடுத்து உறுதியுடன் தலைநிமிர்ந்து நாம் கற்பதற்கான சூழலாக எம் அன்னையவள் மிளிர்கின்றாள்.

எம் கல்லூரித்தாயின் சாதனைகளை நாம் நோக்கினால் கோட்டமட்டப்போட்டிகள், வலயமட்டப்போட்டிகள், மாகாணமட்டப்போட்டிகள், தேசியமட்டப்போட்டிகள் என எல்லாப்போட்டிகளிலும் பங்குபற்றி வாகை சூடிய வரலாறுகளும் எம் மனங்களில் பதிவாகியமை குறிப்பிடத்தக்கவை.

கடந்த காலங்களில் உடற்பயிற்சிப் போட்டியில் பங்குபற்றி தேசிய மட்டத்தில் முதலாம் இடம் பெற்றதோடு சென்ற ஆண்டு ஒயிலாட்டம் எனும் நாட்டியத்தில் பங்கு கொண்டு வாகைசூடி தனக்கென தனியான ஒரு தடம் பதித்து மிளிர்வதைக் காணலாம். இவ்வாறாக அளப்பெரிய சேவைகளை ஆற்றிய, ஆற்றிக்கொண்டு இருக்கும் எம் அன்னைக்கோ அகவை அறுபது வைரவிழாவை இனிதேகாணும் எம் இனிய கல்வித்தாயே நீ நானிலம் போற்ற எட்டுத்திசையும் புகழ் பரவ நீடுழி வாழி.... வாழி.... என வாழ்த்துவதில் உவகை அடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரணியமும் எமது பாடசாலையும்

-த.கேனுசன்-
தரம் - 07

றொபோட் ஸ்ரீவின்சன் சிமித் பேடன் பவல் பிரபு அவர்களால் 1907ஆம் ஆண்டு இங்கிலாந்தின் பிரவுன்சித் தீவில் 20 சிறுவர்களுடன் சாரணியம் ஆரம்பிக்கப்பட்டது. பேடன் பவல் பிரபு அவர்கள் 1857 மாசி 22 இல் இங்கிலாந்தில் உள்ள லண்டன் மாநாகரில் பிறந்தார். தனது 19வது வயதில் பட்டப்படிப்பை முடித்து விட்டு இராணுவத்தில் சேர்ந்த இவர் 26வது வயதில் தளபதியானார். பெரும் யுத்தத்தில் வெற்றியீட்டிய இவருக்கு இம்பீசா துயில் கொள்ளாத ஓநாய் என்ற பட்டம் சூட்டப்பட்டது. 1903இல் சாரணியத்துணை எனும் நூலை பகுதி பகுதியாக வெளியிட்டதுடன் 1908இல் இளைஞர் சாரணியம் என்ற நூலையும் வெளியிட்டார். 1910இல் பெண்கள் சாரணியத்தை ஆரம்பித்து வைத்த இவர் 1941 தை 8ம் திகதி இயற்கை எய்தினார்.

இலங்கையில் 1912ஆம் ஆண்டு F.G ஸ்ரீபன் என்பவரால் மாத்தளைக் கிறிஸ்தவக் கல்லூரியில் சாரணர் இயக்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. 1918இல் கடேற் சாரணியம் இலங்கையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. 1921இல் திரு.திருமதி பேடன் பவல் பிரபு தம்பதியினர் இலங்கைக்கு விஜயம் செய்தனர். இவ்வாறாக இலங்கையில் வளர்ச்சியடைந்த சாரணியம் பல பரிமாணங்களில் வளர்ச்சியடைந்து நிற்கின்றது.

சாரணர் இயக்கமானது மாணவரிடத்தே கல்வியறிவை மட்டுமன்றி ஒழுக்கம், நேர்மை, தன்னம்பிக்கை, ஆர்வம், சேவைமனப்பாங்கு, பெரியோரை மதித்து நடத்தல், ஆபத்தில் உதவியளித்தல், முதலுதவி செய்தல், இன,மத,மொழி வேறுபாடுகள் இன்றிச் செயற்படல் என பல நற்பண்புகளை எம்மிடம் வளர்க்கின்றது.

சாரணன் ஆனவன் விதி, வாக்குறுதி என்பவற்றுக்கு அமைவாகவே செயற்படுகின்றான். வீடுகளிலோ அல்லது வேறு இடங்களிலோ ஏற்படும் விபத்துக்குச் சிறந்த முறையில் முதலுதவி அளிக்கக் கூடிய திறன் பொருந்தியவனாக சாரணன் இருப்பான். அந்தந்த தருணத்திற்கேற்ப கிடைக்கின்ற பொருட்களைப் பயன்படுத்தி முதலுதவி அளிக்கக் கூடியவனாக இருப்பான். அன்றாட வாழ்வில் மனிதன் ஒருவனுக்குத் தேவையான விடயங்களை அறிந்து இருப்பவனாக, செய்து காட்டுபவனாக சாரணியம் கற்ற சாரணன் ஒருவன் காணப்படுவான்.

சாரணர் வாக்குறுதியானது, என்னால் கூடுமான வரையில் எனது சமயத்திற்கும், எனது தேசத்திற்கும் என் கடமைகளைச் செய்வேன் என்றும் எக்காலத்திலும் பிறருக்கு உதவி புரிவேன் என்றும் சாரணர் விதிகளுக்கு அமைந்து பணிந்து நடப்பேன் என்றும் என் கௌரவத்தின் மீது வாக்குறுதி அளிக்கின்றேன்.

அதாவது சாரணன் ஒருவன் தன்னால் இயன்ற வரையில் தனது சமயத்திற்கும் நாட்டிற்கும் தேவையான கடமைகளைச் செய்வதாகவும் தேவை ஏற்படும் போதெல்லாம் பிறருக்கு உதவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதாகவும் சாரணர்களது விதிகளுக்குப் பணிந்து நடப்பதாகவும் தனது கௌரவத்தின் மீது வாக்குறுதி அளிக்கின்றேன்.

Scout promise On my honour I promise
That I will do my best
To my religion and country
To help other peoples at all times
To obey the scout Law.

இவ்வாறு சாரணர் வாக்குறுதி ஆங்கிலத்தில் கூறப்படுகின்றது.
சாரணர் விதிகளாவன:-

1. சாரணன் நம்பத்தகுந்தவன்.
2. சாரணன் பற்றுறுதி உடையவன்.
3. சாரணன் நேசமும் மரியாதையும் உடையவன்.
4. சாரணன் மற்றெந்தச் சாரணனுக்கும் சகோதரன்.
5. சாரணன் தைரியமுள்ளவன்.
6. சாரணன் பிராணிகளின் தோழன்.
7. சாரணன் ஒத்துழைப்பவன்.
8. சாரணன் மகிழ்ச்சியுடையவன்.
9. சாரணன் சிக்கனமானவன்.
10. சாரணன்,சிந்தனை,சொல்,செயலில் தூய்மையானவன்.

அதாவது சாரணன் ஒருவன் நம்பகத்தன்மை உடையவன் ஆகவும், கொண்ட கொள்கையில் செயலில் பற்றுறுதி உடையவன் ஆகவும், பிறர் மேல் பாசமும் மரியாதையும் உடையவன் ஆகவும், மற்றைய சாரணர்களுக்குச் சகோதரனாகவும் தைரியம் உள்ளவனாகவும், பிராணிகளுடன் அன்பாகப் பழகுபவனாகவும், எல்லா விடயங்களுக்கும் ஒத்துழைப்பு நல்குபவனாகவும், சந்தோசமாகவும் சிக்கனமாக இருப்பவனாகவும், தூய்மையான சிந்தனை, சொல், செயல் என்பவற்றை உடையவனாகவும் இருப்பான் என்பது இவ்விதிகள் மூலம் தெளிவாகிறது.

பாடசாலையில் இருந்து வெளியேறுகின்ற மாணவர்கள், சமூகத்திற்குப் பொருத்தப்பாடு உடையவர்களாக, சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றுபவர்களாக, நாட்டினது எதிர்கால சிற்பிகளாகத் திகழ்பவர்களாக, நவீன விஞ்ஞான யுகத்திற்கும், கோளமயமாதலுக்கும் ஏற்ப செயற்பாடுடையவர்களாக, நற்பிரஜைகளாக உருவாக்குவதற்கு பல்வேறு வழிகளிலே சாரணியம் உதவியாகவும். வழிகாட்டியாகவும் நிற்கின்றது. பாடசாலை இணைபாட விதான செயற்பாடுகளிலே முக்கியமான ஒன்றாகக் காணப்படும் இச்சாரணியத்தில் இணைந்து உயரிய விருதான ஜனாதிபதி விருதைப் பெறுவதன் மூலம் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படுவதைக் கூட இலகுபடுத்தக் கூடியதாக உள்ளது. எனவே மாணவர்கள் அனைவரும் சாரணியத்தில் இணைந்து நற்பண்புகளைப் பெற்று நற்குடிமகனாக வாழுங்கள்.

***"குழந்தையின் பேச்சில் அறிவுரை இருந்தால் அதையும் ஏற்பது அரசன் கடமை"***

***-சாணக்கியன்-***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னைக் கவர்ந்த சிறுவர் பாடல்கள்

-ச.பாமகள்-
தரம் - 07

**"ஏடு தூக்கிப் பள்ளியில் இன்று பயிலும் சிறுவரே நாடு காக்கும் தலைவராய் நாளை விளங்கப் போகிறார்."**

எப்படி அதிகாலைப் பொழுது வரப்போகும் முழுநாளையும் முன்கூட்டியே அறிவிக்கின்றதோ அது போல குழந்தைப் பருவம் வளரவிருக்கும் மனிதனைக் காட்டுகிறது.

குழந்தை என்றால் அது தான் தாயாரின் உடைமை பேசும் மழலையிலிருந்து கற்பனைக்கு எட்டாத வேத கீதங்களை எல்லாம் கேட்பாள். குறுகுறு நடந்து சிறுகை நீட்டி இட்டும் தொட்டும் கௌவியும் துழந்தும் உண்ணும் உணவு கூழாயினும் அமுதாக்கி விடுகிறது. அன்னைக்கு அந்த அன்னை பாடும் தாலாட்டு அதுவே முதல் சிறுவர் பாடலாகும்.

பச்சிளங்குழந்தைகள் மொழி பேசப் பயிலும் போது மொழி ஆர்வத்தையும் பேசும் ஆற்றலையும் தூண்டுவது சந்தப் பாடல்களே ஆகும். பள்ளிச் சிறுவர் சிறுமியர்கள் பாடிப் பாடி மகிழ் வெய்த தெள்ளத் தெளிந்த செந்தமிழில் தேனார் கவிகள். செய்து தரும் தமிழகத்துக் குழந்தைக் கவிஞர்களுக்கு புகழாரம் சூட்டினார் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. ஈழத்து சிறுவர் பாடலாசிரியர்களும் சளைத்தவர்களல்ல.

தங்கத் தாத்தா தந்த **"ஆடிப்பிறப்பிற்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே"** என்ற பாடல் என்னைக் கவர்ந்த முதல் சிறுவர் பாடலாகும்.

ஈழத்துக் கவிஞர் திமிலைத்துமிலன் அவர்களது

***"பட்டுச் சட்டை போட்டு விடு***
***பையைத் தோளில் மாட்டி விடு***
***பொட்டும் அழகாய் வைத்து விடு***
***போகும் முன்போர் முத்தமிடு"***

என்ற பாடல் பள்ளி செல்லும் பிள்ளை தாயாரைக் கேட்பதாக அமைந்துள்ளது. அந்தப் பிள்ளை நானாகத் தானே இருக்க முடியும் என்பதால் இப்பாடலை ஓராயிரம் முறை பாடி மகிழ்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிநயப் பாடலாக அன்னையின் அன்பை வெளிப்படுத்தும் பாடலாக பிள்ளையே பாடும் பிள்ளைப் பாட்டாக அமைந்ததொரு பாடல் **"காலைத் தூக்கிக் கண்ணில் ஒற்றிக் கட்டிக் கொஞ்சும் அம்மா….."** தித்திக்கும் இப்பாடல் நேற்றல்ல இன்றல்ல நாளைய சிறுவர்களுக்கும் தித்திக்கும் என்பது திண்ணம்.

*"அம்மா வெளியே வா அம்மா*
*அழகாய் மேலே பாரம்மா"*

என்று அற்புதமாக அழைக்கும் குழந்தை அம்மாவிடம் வினாத் தொடுக்கும் ரம்மியமான பாங்கு அல்வாயூர் செல்லையாவிற்கு கைவந்த கலை என்று கூறுவேன்.

***"பாரதி என்றொரு தாமரை பூத்தது***
***பாரத நாடெனும் வாவியிலே – அதன்***
***சீரிதழ் ஆயிரம் செங்கதிர் போல் ஒளி***
***செய்து விளங்குது பூமியிலே"***

அந்தப் பாரதி சிறுவர்களுக்கோர் நல்லாசிரியன். தேச பக்தக் கவி. அத்துடன் இலங்கையில் வெளியிடப்பட்ட பிள்ளைப் பாட்டு நூலிலே மா.பீதாம்பரம் அவர்கள் எழுதிய

***"எங்கள் இலங்கையடி பாப்பா***
***எல்லாளன் ஆண்டதடி பாப்பா"***

பாரதி வழியில் இலங்கைக் கவிஞனின் இனிய படைப்பு நாட்டைப் போற்றும் நல்ல படைப்பு. பாரதி தாசனின் **"தலைவாரிப் பூச்சூடி உன்னை பாடசாலைக்குப் போவொன்று சொன்னார் உன் அன்னை"** என்ற பாடலின் இனிமையே இனிமை.

செந்தமிழ்ச் சிறுவர்கள் மொழி வளம் நலம் பெறுவதற்காகவேனும் ஆயிரம் ஆயிரம் சிறுவர் பாடல்கள் தோன்றட்டும். எதிர்கால சிற்பிகள் வளரட்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூகோளம் வெப்பமடைதல்

-சு. உபநிஷை-
தரம் - 7

புவிக் கோளத்தின் சராசரி வெப்பநிலையானது உயர்வடைந்து செல்வதனையே விஞ்ஞானிகள் பூகோள வெப்பமடைதல் என்கிறார்கள்.

இத்தகைய பூகோள வெப்பமடைவதற்கு பச்சை வீட்டு வாயுக்களே முக்கிய காரணமாக அமைகின்றன. பச்சை வீட்டு வாயுக்களாக காபனீரொட்சைட் ($CO_2$), நைத்திரிக் ஒட்சைட் ($NO_2$), மீதேன்($CH_4$), குளோரோ புளோரோ காபன்(CFC) ஹெலோன்(Ha) ஆகியவற்றைக் கூறிக் கொள்ளலாம்.

இவ் வாயுக்கள் நிலக்கரி தகனமடைதல், காட்டுத்தீ, எரிபொருளையும் பல்வேறு தேவைகளுக்காகவுள்ள இயற்கை வாயு வகைகளையும் பயன்படுத்தி புதிய வாயுக்களை தயாரித்தல் தொழிற்சாலைகளில் எரிபொருள் தகனமடைதல், மீதேன், நைத்திரிக் ஒட்சைட், முதலிய வாயுக்களை பயன்படுத்தி செய்யப்படும் உற்பத்திகள் சதுப்பு நிலங்கள் கழிவுகளால் நிரப்பப்படும் காணிகள் விலங்கின வளர்ப்பு, வயல் நிலங்கள் போன்றவற்றில் இருந்து உருவாகின்றன.

பூகோளத்தின் வெப்பநிலையானது 1995 – 2006 இடைப்பட்ட 12 வருடங்களுக்குப் பாரிய அதிகரிப்பினை காட்டிய காலம் எனலாம். பச்சை வீட்டு வாயுக்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்காத விடத்து 2100 ஆண்டளவில் புவியின் சராசரி வெப்பநிலையானது $1.5^0C\ (35^0F)$ முதல் $4^0C(40^0F)$ வரை அதிகரிக்கலாம் என கணிப்பிடப்பட்டுள்ளது.

*பூகோள வெப்பம் அடைதல் காரணமாக ஏற்படும் பாதிப்புக்களாக....*

- அதிகரித்துச் செல்லும் வெப்பநிலை காரணமாக அதிக ஆவியாதல் செயற்பாட்டின் மூலம் அடை மழை ஏற்படுதல். மழைவீழ்ச்சி கோலத்தின் இம் மாற்றத்தினால் வெள்ளப்பெருக்கு, மண்சரிவு ஏற்படும்.
- வெப்பமான காலநிலை காரணமாக நீர்க்கோளம் ஆவியடைவதன் மூலம் படுமோசமான வரட்சியும் பாலைவனமாதலும் ஏற்படும்.
- இதன் காரணமாக பல் வகைக்கு ஊறு விளைவிப்பதன் காரணமாக சூழல் சமநிலை சீர்குலையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➤ துருவங்களில் காணப்படும் பனிப்பாறை உருகுவதன் காரணமாக கடல் நீரமட்டம் அதிகரித்து கரையோர தாழ்நிலங்கள் மூழ்கும் அபாயம் காணப்படும்.

➤ முருகைக் கற்கள் போன்ற கூர்வுணர்வுள்ள சூழல் தொகுதிகள் அழிவை சந்திப்பதன் மூலம் மண் வளத்திற்கு சேதம் விளைதல், நீர் வளம் மாசடைதல்.

➤ மலேரியா போன்ற நோய்கிருமிகள் மூலம் நோய்கள் பரவுதல் காபன் பரவுவதன் மூலம் சுவாசநோய்கள் ஏற்படும். தோற்புற்று நோய்கள் ஏற்படும். கடுமையான ஒற்றைத் தலைவலி காணப்படும்.

எனவே நாம் காடுகளை வளர்த்தல் நிலக்கரி மற்றும் சுவட்டு எரிபொருள்களுக்கு பதிலாக மாற்றுச் சக்தி முறைகளை அறிமுகம் செய்தல். உதாரணமாக சூரியசக்தி, காற்றுச்சக்தி போன்றவை புகை வெளிவிடும் வாகனங்களுக்கு தடைவிதித்தல், தொழிற்சாலைகளை நிறுவும் போது வெளிவரும் வாயுக்களை சுத்திகரிப்பதற்கான வழிமுறைகளை கையாளுதல் மூலம் புவி வெப்பமடைவதை குறைத்து இதன் பாதிப்புக்களையும் குறைத்து விடலாம்.

இவ்வாறாக பூகோளமானது பல வழிகளில் வெப்பமடைந்து வருகின்றது. இதனை தடுப்பதற்கு பல நிறுவனங்கள் செயற்பட்ட போதும் மாணவர் மனங்களில் ஏற்படும் மாற்றங்களின் மூலமே பூகோளம் வெப்பமடைதலை தடுக்க முடியும் என்பதை அறிந்து நாம் செயற்படுவோம்.

◈

◈ ◈ ◈

◈





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தையே......

-சு.புகழின்பன்-
தரம் - 08

என்
விழியோரங்கள் நனைகின்றன...
நான்
நினைத்துப் பார்க்கின்றேன்.
உன்
கைப்பிடித்து
நான் நடந்த அந்த நிமிடங்கள்
என்
சந்தோசத்தின் உச்சங்கள்
வாழ்க்கைப் பாதையில்
நான்
கடந்தவை அனைத்துமே
உன் வழித்தடங்களில் தான்....
நான்
கடந்து வந்த
சோகங்கள் சுகங்கள் யாவும்
உன்
வழிகாட்டலில் தான்
சோர்ந்த நிமிடங்களில்
உன்
தலைகோதல் என்னை
நிமிர வைக்கிறது.....
உன்
இதமான சிரிப்பு
என்னை சந்தோசப்படுத்தியிருக்கிறது.
இன்று நீ
கொடுத்த பிரிவு
என்னை
ஒவ்வொரு விநாடியும்
கொல்லாமல் கொல்கிறதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்பாடலும் நாமும்

-சி.பானுஜா-
தரம்-08

"சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" என்று குரல் கொடுத்தான் பாரதி அவனது குரலிற்கு இலக்கணம் கொடுத்தாற் போல் தொடர்பாடலினால் எட்டுத்திசைகளிலும் உள்ள கலைச் செல்வங்கள் அனைத்தையும் ஓரிடத்திலே சேகரிப்பது போல் தொடர்பாடல் அமைகின்றது. தொடர்பாடல் பரிமாற்றம் என்பது ஒரு கலை. வளர்ந்து வரும் கலையான தொடர்பாடல் பரிமாற்றம் நாளுக்கு நாள் புது மெருகு பெற்று வருகின்றது.

அன்றாடம் நாம் பயன்படுத்தும் தொலைபேசி, தொலைக்காட்சி, வானொலி, மின்னஞ்சல், தொலைநகல், தந்தி, கணினி, இணையம், பத்திரிகை, புத்தகம் போன்றவற்றின் மூலம் பல செய்திகளையும் அறிந்து கொள்கின்றோம். "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவன கால வகையினவே" என்னும் தொல்காப்பியரின் கூற்றுக்கு அமைய தொடர்பாடலும் எம்முடன் இன்று பின்னிப் பிணைந்து வளர்ந்து காலத்திற்கேற்றாற் போல் மாற்றமடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

குழந்தை பிறந்தது முதல் இறக்கும் வரை தொடர்பாடல் முக்கிய ஒரு தேவையாக மிளிர்கின்றது. தகவல் பரிமாற்றம் வளர்ச்சி பற்றி நோக்குவோமாயின் முதன் முதலில் தகவல் பரிமாற்றம் எப்படியிருக்கும் என்பதை எவராலும் வரையறுத்து விளக்க முடியாது. பறைசாற்றுதல், கோவில்மணி ஒலித்தல், சங்கு ஊதுதல், புகை எழுப்புதல் தீப்பந்தம் ஏற்றுதல் போன்ற சைகைக் குறியீடுகள் மூலம் ஆரம்பித்து காலத்திற்கேற்றாற் போல் மாற்றம் அடைந்து விட்டது.

மனிதன் வளர்ந்து வரும் ஒரு சமூகப்பிராணி ஆவான். ஒருவன் ஒரு நாளின் நேரத்தில் 75% வீதமான நேரத்தை தொடர்பாடலில் செலவிடுகின்றான். நாம் கல்வி வட்டத்தில் முன்னேற்றமடையவும் தொழில் முயற்சிகளில் வெற்றி பெறவும் சமூக கலாசார பொறுப்புள்ள பிரஜையாவதற்கும் இத் தொடர்பாடலுடன் பின்னிப் பிணைய வேண்டிய தேவை உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# EARTH IS OUR HOME

By
- Miss. E. Piruththika -
Grade – 09

A place where we live or feel that we belong is home. A home provides care for us. It has the essential things to live. There will be protection, love, caring and sharing in a home.

Like this earth also is our home. Because all the essential ingrediants for life are available in the earth. For example oxygen,water,food etc. Providing above facilities the earth takes care each and everyone of us. There are many planets in the space. But we can live in the earth only.

We see the nature as our mother,and we call it as mother nature. Mother nature gives us love, protection, food, air, water, habbitants etc.

We all love our home and protect our home, like that we should love the earth and protect it. We must avoid the harm ful things to the earth.

With out a home we can't live happily. With out the earth we can't survive.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அம்மா உனக்காக......

-க.திகஷானி-

தரம் - 09

அன்பிற்கு அடித்தளமாய்
அமைதிக்கு இலக்கணமாய்
உரிமைக்கு சொந்தமாய்
பண்பாளராய்

அன்பாய் பண்பாய்
பாசமான தாயாய்
உரிமையாய் எம்மை
வளர்த்தெடுத்தாய் அன்னையே

ஐந்து விரலுக்குக் காரணமாய்
குடும்பத்தில் ஐவராய் விளங்கும்
வீடும் இன்று கோயில் குல விளக்கே
சுயநலம் அற்ற தாயே

சேயைக் கண்ணிமை போல் காப்பவளே
கடவுளை உம்மில் கண்டு விட்டோம்
அன்பை அள்ளி இறைக்கின்றாய்
அதுவே அம்மா என உணர்த்துகின்றாய்

கடவுள் தானே நீ அம்மா
இன்னொரு ஜென்மம் பிறந்து விட்டால்
உன்னில் பட்ட கடனை அடைக்க
மீண்டும் பிறப்பேன் உன் தாயாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைத் துளிகள்

-இ.பிருத்திகா-
தரம் - 9

1. தனது நிறை குறைகளை தானே வடிவமைத்து கொள்பவன் தான் வாழ்க்கையில் வெற்றி பெறுகின்றான்.

2. நமக்கு மிகவும் பிடித்த மனிதர்களை நாம் எப்போதும் மறக்கவும் கூடாது. நம்மை யாருக்கு மிகவும் பிடித்துள்ளதோ அவர்களை எப்போதும் விட்டுக் கொடுக்கக்கூடாது.

3. வேண்டியவர்களுக்கு கூட வேண்டாதவர்களாய் மாறி விடுகின்றோம். அவர்களுக்கு வேண்டியதை செய்ய இயலாத சூழ்நிலையில்

4. உனது எதிரி உன்னை விட பலவீனமானவன் என்றால் அவனைத் திருத்த நினைப்பதே வீரத்தனம்

5. நமக்கு அளவுக்கு அதிகமாக பணிந்து நடப்பவனிடம் நம்பிக்கை வைக்கக்கூடாது.

6. உன்னை நீ திருத்தி கொள் சமூகம் தானாக திருந்தும்.

7. உன் நண்பனைப் பற்றி சொல் நீ யார் என்று சொல்வேன்.

8. நாக்கில் தேனை பூசி கதைப்பவர்களுக்கு நாம் மயங்கினால் அவர்கள் நமது தலையில் மிளகாயை அரைப்பார்கள்.

9. உன் எதிரியைப் பற்றி அறிய அவனை முதலில் உங்கள் நண்பனாக்குங்கள்.

10. உன் உண்மையான நண்பனை அறிய ஒரு நாள் நீ ஏழையாக வாழ்ந்து பார்.

11. ஒருவருக்கு கீழ்ப்படிவதற்கு நீ கற்றுக் கொள் கட்டளையிடும் தகுதி உன்னைத்தேடி தானாகவே வந்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றெழுத்தில் வாழ்க்கை

-சி.சுபாங்கி-
தரம் - 09

| | |
|---|---|
| ➢ உலகில் உள்ள உயிர். | மூன்றெழுத்து |
| ➢ உயிரை இயக்கும் சக்தி. | மூன்றெழுத்து |
| ➢ சக்தியின் வடிவம் அன்னை. | மூன்றெழுத்து |
| ➢ அன்னை காட்டும் அன்பு. | மூன்றெழுத்து |
| ➢ அன்பு உயர்த்தும் அறிவு. | மூன்றெழுத்து |
| ➢ அறிவு வளர்க்கும் பள்ளி. | மூன்றெழுத்து |
| ➢ பள்ளியில் கற்கும் கல்வி. | மூன்றெழுத்து |
| ➢ கல்வியால் கிடைக்கும் பதவி. | மூன்றெழுத்து |
| ➢ பதவியை சிறப்பிக்கும் இளமை. | மூன்றெழுத்து |
| ➢ இளமை தரும் மணம். | மூன்றெழுத்து |
| ➢ மணத்தால் இணையும் மனைவி | மூன்றெழுத்து |
| ➢ மனைவியால் உருவாகும் மழலை | மூன்றெழுத்து |
| ➢ மழலைக்கு செலவாகும் பணம். | மூன்றெழுத்து |
| ➢ பணத்தினை தேடும் உடல். | மூன்றெழுத்து |
| ➢ உடல் சோரும் முதுமை. | மூன்றெழுத்து |
| ➢ முதுமையின் பின் முடிவு | மூன்றெழுத்து |
| ➢ முடிவின் பின் தேடும் பெட்டி | மூன்றெழுத்து |
| ➢ பெட்டியில் அடங்கும் பிணம் | மூன்றெழுத்து |
| ➢ பிணம் எடுத்துச் செல்லும் ஊர்தி. | மூன்றெழுத்து |
| ➢ ஊர்தி செல்லும் இடம் சுடலை | மூன்றெழுத்து |
| ➢ சுடலையில் வைக்கும் கொள்ளி | மூன்றெழுத்து |
| ➢ கொள்ளியில் எரிந்த அஸ்தி. | மூன்றெழுத்து |
| ➢ அஸ்தி கரையும் கடல். | மூன்றெழுத்து |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேனா தோன்றிய வரலாறு

-வ.விதுர்சன்-
தரம் - 09

நாம் அன்றாடம் உபயோகிக்கும் பொருட்களில் பேனா முக்கியமானதோர் இடத்தை வகிக்கின்றது. மொழிகள் பிறப்பதற்கு முன்னரே கற்பாறைகளில் குச்சிகளால் தயாரித்த எழுதுகோல் கொண்டு எழுதும் வழக்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. காலம் செல்லச் செல்ல மனிதன் காய்ந்த இலைகளாலும் துணிகளாலும் பறவைகளின் இறகுகளிலும் சாயத்தை தோய்த்து எழுதப் பழகிக் கொண்டான். பின்னர் 18ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பேனா முனை கண்டுபிடிக்கப்பட்டது. பேனா மையாக சாயங்கள் பயன்பட்டது. 1884ஆம் ஆண்டு வரை பேனா முனையை மையில் தோய்த்து எழுதினர். பின்னர் **"லூயி ஈ வோட்டர்"** என்பவர் மையை நிரப்பி வைக்கும் வசதியுள்ள எழுதுகோலை தயாரித்தார். இவரது கண்டுபிடிப்பால் வெளிவந்த பேனாக்களே, தற்காலத்தில் பல்வேறு நிறங்களிலும் வகைகளிலும் பாவனையில் உள்ளன.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையென்னும் தெய்வம்

-சே.மகிஜா-
தரம் - 09

தித்திக்கும் மாங்கனியும் - சுவைமிகு
தேன் கதலிப்பழமும்
நித்தம் இனித்திடுமோ – அன்னை மொழி
நின்று சுவைப்பது போல்

இன்னிசை மெல்லிசைகள் - தென்றலின்
இராக ஆலாபனைகள்
அன்னை தாலாட்டொதுக்கி – உயர்ந்திடும்
ஆற்றல் சிறந்தனவோ.

முத்த மழை பொழியும் - ஆயிரம்
மோகன மான்விழி கொள்
பத்தினிகள் இணையோ அன்னையென்
பாச அணைப்பது போல்

மஞ்சள் நிலாவழகும் - செந்தாமரை
மலரும் பொழுதழகும்
விஞ்சிடுமோ திருத்தாய் - சிந்து நல்
வெற்றித் திரு நகையை

அமுதச் சுவை பெருக்கும் - இந்தநூல்
அகில நிலையுணர்வும்
குமுத வதனமொளிர் - தாய் தரு
கூழ்ச்சுவை மேலிடுமோ

தாயில் உயர்ந்ததெது? மாபெரும்
தரணி தாய்க்கடிமை
கோயிலின் தெய்வமவள் - என் மனக்
கோட்டை ஆட்சியவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள் கூறும் ஒழுக்கம்

-தீ.சதுர்ஜா-
தரம்-10

நாம் ஒவ்வொருவரும் சிறுவயதிலிருந்தே நற்பழக்கவழக்கங்களை கைக்கொள்ள வேண்டும். நாம் மாணவர்கள் என்பதால் எமது பெற்றோர், ஆசிரியர்கள் மட்டுமல்லாது முதியோர்களையும் மதித்து நடக்க வேண்டும். நம் நல்வாழ்விற்குப் பயன்தராதவற்றை பார்க்கவோ, பேசவோ, செய்யவோ கூடாது. நாம் மாணவப்பருவத்தில் நல்லொழுக்கங்களை வீடுகளிலும் பாடசாலைகளிலும் கடைப்பிடித்தால் எமது எதிர்காலம் ஒளிமயமாகும்.

தன் வாழ்விற்கு தேவையானது எது. தேவையற்றது எது வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டியது என சிந்தனையோடு வாழவேண்டியவன் மனிதன். பகுத்தறியும் இயல்பினால்த்தான் அவன் மற்ற உயிர்களிலும் விட உயர்ந்து விளங்குகின்றான். ஒருவன் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கான ஒழுக்கத்தை எமது முன்னோர்கள் சிறப்பாக கூறியுள்ளனர். உலகம் இயங்குவதற்கு எது முக்கியமாகின்றதோ அப்படியே ஒரு மனிதன் சீராக வாழ்வதற்கு ஒழுங்கு முறைகள் அவசியம். ஒழுக்கத்தை எமது உயிரினும் மேலாக பேணவேண்டும். இல்லையேல் எமது வாழ்வு அழிந்து போய்விடும். ஒழுக்கத்தை கடைப்பிடித்தவர்கள் உயர்நிலையில் உள்ளார்கள். மாறாக ஒழுக்கத்தை கடைப்பிடிக்காதவர்கள் வாழ்விலே முன்னேற மாட்டார்கள். இதனை முன்னோர் தந்த பாடங்களினூடாக அறிகின்றோம். எனவே ஒருவருக்கு ஒழுக்கம் அவசியம்.

ஒழுக்கம் என்பது ஒரு செயலால் குறிக்கப்படும் மனித நடத்தை ஆகும். இது நற்பண்புகளின் ஒரு தொகுப்பாகும். இதனைத்தான் விழுமியம் என்பார்கள். சமுகத்தில் ஒழுக்கமுடையவர்களை இனம் காண்பதற்கு உடல்சார்ந்த ஒவ்வொரு செயல்களும் கணிக்கப்படுகின்றன. கட்டுப்பாடு கடமையுணர்ச்சி பொறுமை நேர்மை என்பன ஒழுக்கத்தை சீராக்குவதில் பெரும் பங்கு வகிக்கின்றன. எனவே தான் ஒழுக்கமில்லாதவனை உயிரிழந்தவனாக நூல்கள் சித்தரிக்கின்றன. அதனால்த்தான் வள்ளவர் பெருமான் ஒழுக்கம் உயிரினும் மேலானது என அரிய நூலான திருக்குறள் மூலம் எடுத்தியம்மியுள்ளார்.

**"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப்படும்"**

ஒருவர் கல்வியினாலோ, பதவியினாலோ, அதிகாரத்தினாலோ ஈட்ட முடியாத பெருஞ்செல்வம் ஒழுக்கமாகும். அவ்வாறான ஒழுக்கத்தை மாணவர்களாகிய நாம் உயிரினும் மேலாக போற்றி வாழப் பழகவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளுவர் பெருமான் ஒழுக்கமுடைமை என்ற அதிகாரத்தின் இரண்டாவது குறளினூடாக

**"பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் - தெரிந்து ஓம்பித்**
**தேறினும் அஃதே துணை"**

என்றார். வருந்தியும் ஒருவன் காக்க வேண்டியது ஒழுக்கமே என்று விளக்குகின்றார். ஒருவன் எவ்வளவு உயர்ந்த குடியில் பிறந்தாலும் அவன் ஒழுக்கம் தவறி நடந்தால் அவன் இழிந்த பிறப்பினனாகி விடுவான் என்பதை "இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும்" என்று அழகாகக் கூறுகின்றார். "மறப்பினும் ஒத்துக் கொளமாகும் பார்ப்பான் பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்" என்ற குறள் வெண்பா மூலம் நாள்தோறும் ஓதி வரும் மறைநூலினை மறக்க நேரினும் மீண்டும் நினைவுபடுத்திக் கொள்ளலாம். ஆனால் ஒழுக்கம் ஒரு தடவை தவறினாலும் முற்றிலும் கெட்டதாகவே மாறிவிடும் என்பதால் மாணவர்கள் ஒவ்வொருவரும் ஒழுக்கத்தின் பெருமையை உணர்ந்து போற்றி நடக்க வேண்டும்.

பொறாமையுடையவனுக்கு எவ்விதம் முன்னேற்றம் இல்லையோ அது போல ஒழுக்கம் இல்லாதவனுக்கு உயர்வும் இல்லை என்பதை

**"அழுக்காறு உடையான் கண் ஆக்கம் போன்று இல்லை**
**ஒழுக்கம் இலான் கண் உயர்வு"**

என்று அழகான குறள் வெண்பா மூலம் வெளிப்படுத்துகின்றது. நல்லறிவு பெற்ற சான்றோர் ஒழுக்கம் தவறுவதால் வரும் குற்றத்தினை உணர்ந்து ஒரு போதும் குன்றிய செயல்களில் ஈடுபட மாட்டார்கள் என்பதை **"ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர்"** என்றார் வள்ளுவனார்.

அடுத்த இரண்டு குறள் வெண்பாக்களில் ஒழுக்கம் தவறுவதால் ஏற்படும் கேடுகளை **"இழுக்கத்தின் எய்துவர் எய்தாப்பழி"** என்றும் தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும். என்றும் சுட்டினார். நல்லொழுக்கம் நிறைந்த சான்றோர் தீய சொற்களை தவறியும் தமது வாயினால் உரைக்க மாட்டார்கள்.

ஒருவன் நூல்கள் பலவற்றைக் கற்றுச் சிறப்பதனால் ஒழுக்கமுடையவனாக வாழ்ந்து விட முடியாது. அவன் நல்லோர் வழி நின்று தன்னைப் பண்படுத்திக் கொண்டால் மட்டுமே நல்லொழுக்கம் உள்ளவனாக விளங்குவான். இதையே உலகத்தோடு ஒட்ட ஒழுகல் என்று கூறிப் போற்றினார்.

ஆதலால் மாணவர்கள் ஒவ்வொருவருமே ஒழுக்கம் என்னும் உயர்ந்த குன்றின் தீபமாக மாறிக் கற்கும் கல்வியே பயனுடைய கல்வி என்பதை நன்குணர வேண்டும். ஒழுக்கமில்லாத கல்வியும் வாழ்வும் பயனற்றது என்பதால் ஒழுக்கத்தை உயிரினும் மேலாக மதிப்போம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரி நாட்கள்

-நி.யதுஷா-
தரம் - 11

அன்னையின் அரவணைப்பைத் தாண்டி
ஆசானின் அரவணைப்பைத் தேடிய நாட்களில்
அகவை ஆறு அன்று ஆனால் .......
ஆயிரம் பட்டாம் பூச்சிகளின் இணைப்பில்
அகவை பதினாறாயிற்று இன்று.

நண்பர்களின் இணைப்பில் நாட்கள் பல
நாளிகைகள் ஆகின
தேர்வு என்று சொன்னதும்
தேடித்தேடிப் படிப்பதில் இன்பம்.

தோழமையுடன் தோள் சாய்ந்த அந்த நாட்கள்
பழமையாகிடுமோ எனும் ஏக்கம்
பசுமரத்தாணியாய் - இன்று என் மனதில்
பாழாய்ப்போன அகவையில் எரிச்சல்

கல்லூரி வளாகம் முழுவதும்
கால்பதித்து வலம்வந்த – நாட்களை எண்ணி
கல்லாய் கனக்கின்றது இதயம்
புல்லரிக்கின்றது தேகம்

சின்னச் சின்னப் பட்டாம் பூச்சியாய்
சிறகடித்த அந்த நாட்கள் - நீளுமா
அல்லது தாங்குமா? என்னும் ஏக்கத்துடன்
நீர் சிந்த விழி நேசிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள் கூறும் செய்ந்நன்றி மறவாமை

-சி.சிந்துஜன்-
தரம் - 11

மனிதன் மனிதனாக வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வேண்டிய நெறிமுறைகளை சுட்டிக்காட்டுவது தான் தெய்வப்புலவர் தந்த திருக்குறளாகும். "கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகுத்து குறிகத் தறித்த குறள்" எனப் போற்றப்படும் திருக்குறளின் பலனை மாணவர்களாகிய நாமும் கற்றுணர்ந்து அதன்படி ஒழுக வேண்டும். "வள்ளுவன் தன்னை உலகினிற்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு" எனப் பாரதியார் திருக்குறளின் பெருமையை உலகினிற்கே பறை சாற்றுகின்றார். இவ்வாறு பெருமைக்குரியவர் நமக்கு அரும் பெரும் சொத்தாகிய திருக்குறளை வையத்தினுள்ளே வாழ்கின்ற வானுற ஓங்கிய பெருமக்களிற்கு எடுத்தியம்பி உள்ளார்.

இத் திருக்குறள் நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களையும் ஆயிரத்து முந்நூற்று முப்பது மணிக்குறள்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. இத்திருக்குறளில் செய்ந்நன்றி மறவாமை என்னும் அதிகாரம் மாணவர் வாழ்வில் மிக ஒளிர வேண்டிய ஒன்றாகும். தனக்கு பிறர் செய்த நன்மையை மறவாமை செய்ந்நன்றி என்ற அதிகாரம் மூலம் விளங்குகின்றார்.

**"செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றல் அரிது"**

என்னும் குறளின் மூலம் முன் ஓர் உதவியும் செய்யாதிருக்க தனக்கு பிறர் செய்யும் உதவிக்கு ஈடாக மண்ணுலகையும் விண்ணுலகையும் கொடுத்தாலும் ஈடாகாது. இதனால் தான் வள்ளுவர் இனியவை கூறி இல்லறம் காப்பவர்க்கு செய்ந்நன்றி அவசியம் என விளக்குகின்றார்.

ஒருவர் காலத்தால் செய்த உதவி சிறிதாயினும் அது உலகை விட பெரிது இதனையே பொய்யாமொழிப்புலவர்

**"காலத்தால் செய்தநன்றி சிறிது எனினும் ஞானத்தின் மாணப்பெரிது"** என்கின்றார்.

ஒருவர் தமக்கு செய்த உதவி சிறியதாக இருந்தாலும் அதனை (பனையளவு) பெரியதாக கொள்வர் பெரியோர். என்று திருக்குறளின் நன்றி மறவாமையை எவ்வளவு அழகாக எடுத்தியம்புகின்றார்.

**"தினைத்துணை நன்றி செய்யினும் அதனை**
**பனைத்துணையாக கொள்வர் பயன்றெரிவர்"**
**"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது**
**தன்றே மறப்ப துநன்று"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் இரு அதிகாரங்கள் மூலம் தெய்வப்புலவர் எவ்வளவு அழகாக செய்ந்நன்றி மறவாமையை எடுத்து நோக்குகின்றார். ஒருவர் செய்த உதவியை மறப்பது அறம் அன்று அவர் செய்த தீமையை அன்றே மறப்பது தருமம் ஆகும் என்றும் எவ்வகைத் தருமங்களை அழித்தவர்களுக்கும் தப்புவதற்கு வழியுண்டாம் ஆனால் செய்ந்நன்றி மறப்பவர்க்கு கடைத்தேற வழியே இல்லை. இதன் மூலம் திருக்குறளினை தந்த மன்னன் செய்ந்நன்றி மறவாமை என்னும் அதிகாரத்தின் மூலம் நன்றி மறப்பவர்கள் மனிதனே இல்லை என எவ்வளவு இனிமையாகவும் அழகாகவும் வலியுறுத்தியுள்ளார். வள்ளுவர் பெருந்தகை அதனைக் குறிப்பிடும் குறட்பாவாக

**“எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு”**

மேலும் ஒருவர் பிரதி உபகாரம் எதிர் பாராமற் செய்த உதவியின் நன்மையானது கடலினும் பெரிதாகவே போற்றப்படுகின்றது. இதனையே வள்ளுவப் பெருந்தகை குறட்பாவினூடாக

**“பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்**
**நன்மை கடலின் பெரிது”**

என எடுத்துரைத்துள்ளார். ஒருவர் செய்யும் உதவிக்கு அளவில்லை. ஆனால் அது பெற்றுக் கொண்டவரின் தகுதியின் அளவை உடையதாகும். இக் கருத்தானது

**“உதவி வரைத்தன்று உதவி உதவி செய்யப்பட்டார் சால்பின் வரைத்து”**

எனும் குறட்பாவினூடாக வள்ளுவப் பெருந்தகையினால் எடுத்துரைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இவ்விரு குறள்களினூடாக செய்நன்றி மறவாமையை பொய்யாமொழிப்புலவர் அழகாகவும் கருத்துள்ளதாகவும் எடுத்துரைத்துள்ளார்.
மனிதர்களாகிய நாம் குற்றமற்றவர்களின் நட்பை எப்போதும் மறக்கக் கூடாது. துன்பக் காலத்தில் உதவியவரின் நட்பை எந்நாளும் விடலாகாது. என்னும் கருத்துக்கமைய உலகப் பொதுமறையினூடாக பொய்யாமொழிப்புலவா

**“மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க துன்பத்துள் துப்பு ஆயார் நட்பு”**

என்னும் உலகப் பொதுமறையினூடாக செய்ந்நன்றி அறிதலை எடுத்தியம்புகிறார்.வள்ளுவப் பெருந்தகை. நாம் ஏழு பிறவிகள் எடுத்தாலும் துன்பத்தைப் போக்கினவரின் நட்பை ஏழு பிறப்பிலும் நினைப்பர் பெரியோர் என்பதினூடாக

**“எழுமை எழு பிறப்பும் உள்ளுவர் தம்கண்விழுமம் துடைத்தவர் நட்பு”**

என்பதை இக் குறட்பா உணர்த்துகின்றது. செய்ந்நன்றியை மறந்தவர் இப் பிறவு நீங்கி இறைவனை அடைவதற்கு வேறு வழியேயில்லை.

இவ்வாறாக நோக்கும் போது பிறர் செய்த நன்மையை மறவாமை பற்றி வள்ளுவர் செய்ந்நன்றி அறிதல் அதிகாரத்தினூடாக மிக அழகாகவும் பாமர மக்களுக்கும் எளிதாக விளங்கும் வகையில் எடுத்தியம்பியுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதிகளை அறிவோம்

-சு. அஜந்தினி-
தரம் - 11

தொட்டாலே சிணுங்கும்
தொட்டா சிணுங்கி நான்
பட்டாலும் பரிதவித்தாலும்
பாட்டாலே உரைக்கும் பாட்டி போல
பள்ளி மாணவி நான்
இதோ
பள்ளி குழந்தையின் பரிதவிப்பு

விதியில்லா வாழ்வு
நிலவில்லா வானம்
நியதிகளில்லா வாழ்வை
நினைக்கவே அச்சம் அலைமோதுகிறது.

பார்த்துப் பார்த்து
அகராதி கூட அந்த
வார்த்தையை அனுமதிக்க மறுக்கும்.

உதயமில்லா அஸ்த மனத்தை
எவரும்
அறிந்ததுண்டா
இதைக் கேளுங்கள்.

அறிவுரை ஒன்று இல்லையெனில்
அரையான் ஆடைக்கு மட்டும்
அனுமதி கொடுத்த மனிதன் - இனி
அதற்கும் விடுமுறை விட்டிருப்பான்.

ஆத்தி சூடியையும்
மாற்றி சூடியிருப்பான்
அன்பை சொல்லி விட
ஆன்மீகம் மட்டும் இல்லையென்றால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பை அடகுவைத்து விட்டு
ஆண்டவா....
உன்னை வேண்டவா என்றும்
தண்டவாளம் ஏறி – விண்ணை
தாண்டவா?
என்பான்.

ஆலயம் ஒன்றே
ஆதிமுதல் இல்லையென்றால்
காந்தியின் நிலையும்
கதியற்று போயிருக்கும்
மனிதப் பேய்கள் சிலதும்
இன்னும் புனிதப் பட்டம் வாங்கியிருக்கும்

ஒருத்தனுக்கு ஒருத்தியென
அழுத்தமாய் சொல்லிவிட்டால்
வருத்தமென்ன வந்திருக்கும்
வரலாறு முடிந்திருக்கும்.

பலதார திருமணமும்
பலவாறு சொல்லப்படும்
பாலியல் வன்கொடுமை
பகல் நிலவு என்றிருக்கும்
தெரிவித்த நீதிகளுக்கே
தேர்வெழுதி பார்க்கும் மனிதன்
அறிவிக்காது விட்டிருந்தால்
அறிவையே விற்று அடகு வைத்திருப்பான்.

காலம் காலமாய்
வாழ்வது தானே மனித தீர்மானம்
கட்டவிழ்ந்து விட்டால் போவது
யார் மானம்?

ஆடை விதிகளை மட்டும்
அகற்றினால் போதும்
நீலவானம் கூட நிர்வாணம் ஆகியிருக்கும்
இவை தேவைதானா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூழானாலும் குளித்துக் குடி
கந்தையானாலும்
கசக்கிக் கட்டு - இன்று இதை
கேட்பாரே சிலர் கெட்டாரே பலர்

சுத்தமே இன்மையால்
சுழன்றுவரும் டெங்கு
முதலில் சத்தமிடும்
நுளம்பாய் முத்தமிடும்
அடுத்து
இரத்தம் வரும்

இத்தனையும் நிறுத்திடவே
சட்டங்கள் தேவை என்பேன்
அனுதினமும் இங்கு
அன்பே இல்லையென்றால்
சுனாமிக்கும் அழைப்பு விடுப்பான்
ஓசோனுக்குள் ஓட்டை போடுவான்
மணிக்கு ஒருமுறை பனிப்போர் செய்வான்

தணிக்கையின்றி
அணுகுண்டு எறிவான்
எனவே
மனிதன் நிலைத்திருக்க
நியதி வேண்டும்
விதிகளை அறிவோம்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கண்ட இலட்சியக் கனவு

– க.அனுஜா –
தரம் – 11

அன்று ஒரு நாள் நான் எனது கா.பொ.த சாதாரண தரத்தை முடித்துவிட்டு பெறுபேற்றிற்காக காத்திருந்த வேளையில் எனது நண்பர்களுடன் சேர்ந்து எமது பாடசாலைக்குச் சென்றிருந்தோம். அன்று நண்பகல் 12 மணியளவில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகின. நாம் அனைவருமே சிறப்பான பெறுபேற்றைப் பெற்றிருந்தோம். அதில் நான் கிளிநொச்சி மாவட்டத்திலே சிறந்த பெறுபேற்றைப் பெற்று முதல் இடத்திலும், எமது பாடசாலையான கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலையானது அதிக சித்தி வீதத்தைப் பெற்று கிளிநொச்சி மாவட்டத்திலே முதலிடத்திலும் இருந்தது. எனக்கோ சொல்ல முடியாதளவு சந்தோசம். அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், உறவினர்கள், அயலவர்கள் எனப் பலரிடமிருந்தும் அதிகளவான பாராட்டுக்களையும், பரிசில்களையும் பெற்றுக் கொண்டேன்.

அடுத்ததாக நான் எனது கா.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தயாராக வேண்டியிருந்தது. எனவே நான் கா.பொ.த உயர்தரத்திற்காக விஞ்ஞான பாடத்தை தெரிவு செய்து சிறப்பாக கற்றுக்கொண்டிருந்தேன். பரீட்சையும் நெருங்கியது பின் பரீட்சையை சிறப்பாக முடித்து விட்டு பெறுபேற்றிற்காக காத்திருந்தேன். ஒரு நாள் பரீட்சைப் பெறுபேறும் வெளியாகியது. அப்பொழுது நான் சிறந்த பெறுபேற்றைப் பெற்று எமது பாடசாலையிலும், எமது மாவட்டத்திலும் முதலிடத்தைப் பெற்று மருத்துவப் பீடத்திற்கு தெரிவாகினேன்.

அடுத்த 5 வருடம் பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தை சிறப்பாக கற்று ஓர் சிறந்த மருத்தவராக வெளியேறினேன். எனது பெற்றோருக்கோ அளவு கடந்த சந்தோசம். நான் எமது கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சிறந்த மருத்துவராக சேவையாற்றினேன். ஈராண்டுகள் இனிதே முடிந்தன.

எனக்கோர் ஆசை எமது வட்டக்கச்சி கிராமத்திற்கு ஓர் மருத்துவமனை அமைத்துஇலவச சேவையை எமது கிராம மக்களிற்கு ஆற்ற வேண்டும் என்று அவ் ஆசையும் எல்லோரது உதவியுடனும் சிறப்பாக வைத்தியசாலை அமைத்து முடிவுபெற்றது. நான் எமது கிராம மக்களிற்கு இலவச மருத்துவ சேவையே வழங்கி மக்களிடத்தில் சிறந்த வரவேற்பைப் பெற்றேன். எனது பேராசை சிறப்பாக நடந்து முடிந்ததை நினைத்து பெருமையடைந்தேன். எமது கிராமத்தில் நடைபெறும் நிகழ்வுகள், பாடசாடலை நிகழ்வுகள், கட்டிட திறப்பு விழாக்களிற்கு என்னை அழைத்து சிறப்பாக நடத்துவார்கள். என் மருத்துவத் தொழிலில் பல பல சாதைனைகளைப் புரிந்த வண்ணமே இருந்தேன். எனது நாட்டிற்கு ஓர் நல்ல மருத்துவராக கடமை புரிந்து கொண்டிருந்தேன்.

அப்பொழுது ஒரு குரல் கேட்டது. மகளே எழுந்திரு மணி 6 ஆகிவிட்டது. திடுக்கிட்டு விழித்துப் பார்த்தேன். எனது வீட்டின் படுக்கையறையில் தூங்கிக் கொண்டிருந்தேன். அப்பொழுது தான் நான் கண்டது கனவு என்று புரிந்தது. சந்தோசத்துடன் எழுந்தேன். இதுவே என் கனவு. இதுவே என் இலட்சியம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்மையே வெல்லும்

-சி.தேனுஜா-
தரம் - 11

வாய்மை அழிவற்றது, என்றும் நிலைப்பது, எல்லோராலும் விரும்பப்படுவது, போற்றப்படுவது. வாழ்க்கை என்பது பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடைப்பட்டது மட்டுமல்ல, இறப்பிற்கும் பின்பும் உள்ளது. காலம் கடந்தும் ஒருவனால் வாழ முடியும். அவ்வாறு வாழ்வதற்கான வழிகளில் மிகவும் முக்கியமானது வாய்மையாகும். வாய்மையினால் நேர்மை வளரும். பூவுடன் கூடிய நாரும் மணம் பெறுவதைப் போன்று வாய்மையைச் சுமந்தோரும் வாழ்வில் நலம் பெறுவர் சிறப்புறுவர்.

வாய்மை என்றால் என்ன? உண்மை பேசுதலே வாய்மையாகும். பொய் இன்றி வாழ்தல் வாய்மைக்கு ஊன்று கோலாகும். வாய்மைக்கு இலக்கணம் வகுத்தவர் வள்ளுவர்,

**வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்**
**தீமை இலாத சொலல்.**

என்கிறார். மற்றவர்க்கு ஒரு சிறிதும் தீமையுண்டாக்காத குற்றமற்ற வார்த்தைகளைக் கூறுதலே வாய்மையாகும் என்றும்

**புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை**
**வாய்மையான் காணப்படும்.**

என்றும் வள்ளுவர் வாய்மையின் சிறப்பினை உணர்த்துகிறார். உடலைத் தூய்மைப்படுத்தத் தினந்தோறும் குளிக்கின்றோம். உள்ளக்குளியல் தான் வாய்மை இதனையே வள்ளுவர் மேலும் சிறப்புற

**உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்**
**உள்ளத்து சொல்லாம் உளன்.**

என்கிறார். உள்ளத்தைத் தூய்மைப்படுத்துவது உண்மையேயாகும். உண்மை வழிச்செல்வோன் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் இடம்பெறுவான். ஒருவன் மனம் ஒன்றி உண்மை சொல்வான் என்றால் அவன் தவம் செய்வோரின் நிலையை எய்துகிறான் எனவும் வள்ளுவர் சுட்டிக் காட்டுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு**
**தானஞ்செய் வாரின் தலை.**

என வாய்மையின் சிறப்பினை வள்ளுவர் புலப்படுத்துகின்றார். வாய்மை பேசுவோர் இயல்பாகவே தூய்மையடைகின்றார்கள். இதனால் அவர்கள் எந்தப் பிற தர்மங்களும் செய்ய வேண்டியதில்லை என வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

**பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற**
**செய்யாமை செய்யாமை நன்று.**

என்பது அவர் கருத்து. வாய்மை குறித்து அவர் எழுதிய பத்துக் குறட்பாக்களும் வாய்மையின் சிறப்பை நன்கு புலப்படுத்துகின்றன. வாய்மையால் மேன்மையுற்றோர் பலர். அவர்களுள் அரிச்சந்திர மகாராசாவும் அவர் வழி நடந்த காந்தியடிகளும் குறிப்பிடத்தக்கோர் ஆவர். வாய்மை தவறாது நடக்கும் போது சில துன்பங்கள், வேதனைகள் ஏற்படலாம். ஆனால் ஈற்றில் வாய்மையே வெல்லும் என்பதற்கு மேற்குறிப்பிடப்பட்டுள்ளோரின் வாழ்வே தக்க சான்றாகும்.

வாய்மை ஒருவனை நல்லவன் ஆக்குகின்றது. பெருமை பெறச் செய்கிறது. அந்தப் பெருமை அவனுக்கு மட்டுமன்றி அவனைச் சார்ந்தோரையும் பெருமையடையச் செய்கிறது. வாய்மை வாழ்வு தரும் என்பதை நாம் நன்கு உணர்தல் வேண்டும். வாய்மையும் வாழும் வாய்மை உடையோரும் என்றும் நிலைத்து வாழ்வர்.

வாழ்வின் வெற்றியே புகழ் ஆகும். அந்தப் புகழும் வாய்மை வழியே வரும்போது நிலைத்த புகழாக மாறும். இந்த உண்மையை நன்கு உணர்வோர் வாய்மையே என்றும் வெல்லும் என்பதை ஏற்றுக் கொள்வர். வாய்மை பேசுபவர்களாக நாம் வாழுதல் வேண்டும்.

**"உண்மைபேசி உத்தமனாக வாழ்"** என்ற பொன்மொழிக்கேற்ப மாணவர்களாகிய நாம் என்றும் உண்மை பேசுபவர்களாக வாழ வேண்டும். **"வாய்மையே வாழ்வு தரும்"** என்ற இலட்சியத்துடன் செயற்பட வேண்டும்.

***உண்மை பேசி உத்தமர்களாக வாழ்வோம்!***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THOUGHTS FOR A SUCCESSFUL LIFE

**-K. Saramuthan-**
**Grade – 11**

- Well done is better than well said.
  - *Benjamin Franklin*
- Man is made by his belief. As he believes, so he is.
  - *Bhagowad Gita*
- Be happy in the moment, that's enough Each moment is all we need, not more.
  - *Mother Teresa*
- Take care of your body. It's the only place you have to live.
  - *Jim Rohn*
- Try to learn something about everything and everything about something.
  - *Thomas Henry Huxley*
- Have a heart that never harden, a temper that never tires, a touch that never hurts.
  - *Charles Dickens*
- You can't base your life on other people's expectation.
  - *Stevie Wonder*
- Whatever is begun in anger ends in shame.
  - *Benjamin Franklin*
- It's not where you start, it's where you finish that counts.
  - *Zig Ziglar*
- Honesty is the first chapter of the book of wisdom.
  - *Thomas Jefferson*
- Success comes in cans, not can'ts
  - *Dirk Vander Lende*
- Tears will get you sympathy. Sweat will get you results.
- Our greatest glory is not in never falling, but in rising every time we fall.
  - *Confucius*
- A successful man is one who can lay a firm foundation with the bricks others have thrown at him.
  - *David Brinkley*
- Minds are like parachutes, they only function when open.
  - *Thomas Dewar*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலம்பம்

–சி.விதுர்சனா–
தரம் – 11

சிலம்பம் என்பது தமிழர் தற்காப்புக் கலை மற்றும் தமிழர்களின் வீர விளையாட்டு ஆகும். வழக்கில் இவ்விளையாட்டைக் கம்பு சுற்றுதல் என்றும் கூறுவர். சிலம்பாட்டத்தில் தடியைக் கையாளும் முறை, கால் அசைவுகள், உடல் அசைவுகள் மூலம் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளுதல் என பல கூறுகளைக் கொண்ட விரிவான தற்காப்புக் கலையாகும்.

சிலம்பாட்டத்தில் எதிராளி வீசும் கம்பினைத் தடுத்தல், எதிராளியின் உடலில் சிலம்புக்கம்பினால் தொடுதல் போன்றன அடிப்படையாகக் கொள்ளப்படுகின்றது. சிலம்பாட்டத்தை கற்றுக்கொள்ள குறைந்தது ஆறு மாத காலம் தேவை. சிலம்பாட்டம் ஆட குறைந்தது இருவர் வேண்டும். நன்கு பயிற்சி பெற்ற ஆட்டக்காரர்களே சிலம்பாட்டப் போட்டிகளில் விளையாடுவர். தற்காலத்தில் ஆண்கள், பெண்கள் என்று இருபாலரும் சிலம்பாட்டத்தை கற்று விளையாடி வருகின்றனர். திருவிழா, கோயில், விழாக்கள் மற்றும் ஊர்வலங்களில் சிலம்பாட்டம் தவறாது இடம்பெறும்.

மக்கள் தம்மை சிங்கம், புலி போன்ற விலங்குகளிடம் இருந்து காத்துக் கொள்ளக் கையாண்ட முறையே சிலம்பம் எனப்படும் கலையாக வளர்ந்துள்ளது என்று சொல்வதுண்டு. தமது கைகளில் எப்போதும் இருக்கக்கூடிய சிறிய ஆயுதங்களான கம்பு(தடி), சிறுகத்தி, கோடரி போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்தி விலங்குகளிடமிருந்து தற்காத்துக்கொள்ள இந்தக் கலையை பயன்படுத்தினார் எனக்கூறப்படுகின்றது. தமிழர்கள் ஆயுதம் ஏந்திப் போராட ஆரம்பித்த காலத்தில் முதலில் எடுத்தது கம்பு எனப்படும் ஆயுதமே ஆகும். இதுவே பின்னர் சிலம்புக் கலையாக வளர்ச்சி பெற்றது. ஆதிகாலத்தில் மனிதர்கள் சண்டை செய்ய ஈட்டி, கத்தி, வேல், வாள், கம்பு போன்ற பலவிதமான ஆயுதங்களைப் பயன்படுத்தினர். அவற்றுள் மிகவும் பழைமை வாய்ந்த ஆயுதம் கம்பு எனப்படும் “சிலம்பு” ஆகும்.

சிலம்பக்கலை பற்றிய அகழ்வாய்வுச் சான்றுகள் மிகத்தொன்மையானவை. கி.மு 2000க்கும் முற்பட்ட ஆதிச்ச நல்லூர் அகழ்வாய்வில் 32 வகையான சிலம்ப ஆயுதம் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பிரிட்டனில் உள்ள அருங்காட்சியகம் ஒன்றில் எகிப்திய போர்வீரர் பயன்படுத்திய நான்கு அடி நீளமுள்ள கம்பு வைக்கப்பட்டுள்ளது. அவர்கள் அந்தக் கம்பினைப் பயன்படுத்திய முறை சிலம்பத்தை ஒத்திருப்பதால் தமிழக எகிப்திய கலாச்சாரப் பரிமாற்றத்தில் ஒரு பகுதியாக சிலம்பக்கலையும் பரவியதாக கருதப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓசோன் படை

-மோ.சுவேஸ்கா-
தரம் - 11

ஓசோன் படை என்பது வளிமண்டலத்தில் காணப்படும் ஒரு படையாகும். இது படை மண்டலத்தின் கீழ்ப்படையில் அமைந்துள்ளது. ஓசோன் படையானது சூரியனில் இருந்து வரும் புற ஊதாக்கதிர்களை தடுத்து பூமியை பாதுகாக்கின்றது. வளிமண்டலத்தில் காணப்படும் ஒட்சிசன் அணுக்கள் சூரியனில் இருந்து வரும் புற ஊதாக்கதிர்களால் தனித்தனி ஒட்சிசன் அணுக்களாக பிரிக்கப்படும். தனி ஒட்சிசன் கூறுகள் ஒட்சிசன் வாயுவுடன் சேரும் போது $O_3$ ஆக மாறுகின்றது. இவ்வாறாக ஓசோன் படை உருவாகின்றது. இவ் ஓசோன்படை சூரியனில் இருந்து வருகின்ற வெப்பக்கதிர்களாகிய புற ஊதாக்கதிர்களை ஓசோன் வாயு அகத்துறிஞ்சிக் கொள்வதால் புவியை மிகையான வெப்பநிலையில் இருந்தும் ஆகாயக்கல், எரிக்கல் என்பவற்றின் தாக்கத்தில் இருந்தும் புவியை இப்படை பாதுகாக்கின்றது.

வளிமண்டலத்தில் 30Km - 35Km வரை பரம்பிக் காணப்படுகிறது. ஓசோன் படையுடன் CFC தாக்கம் புரிகின்ற போது ஓசோன் படையில் ஏற்படுகின்ற சிதைவு, துவாரம் ஏற்படுதல் ஓசோன் படை தேய்வு எனப்படும். ஓசோன்படை தேய்வை ஏற்படுத்தும் வாயுக்களாக CFC, $CO_2$, $CH_4$ நீராவி, குளோரின் வாயு போன்றன ஓசோன்படை தேய்வை ஏற்படுத்தும் வாயுக்களாகும். 1982ம் ஆண்டு அந்தாட்டிக்காவில் உள்ள கலிபே என்ற பிரதேசத்தில் பிரித்தானிய விஞ்ஞானிகள் ஓசோன் படை துவாரம் இருப்பதை கண்டறிந்தனர். இதன் பின்னரே ஓசோன்படை தொடர்பான ஆய்வுகள் துரிதம் அடைந்தன. மீண்டும் 1984ம் ஆண்டு ஆய்வினை மேற்கொண்ட போது குறித்த துவாரம் 30% மாக பெரிதாகி இருந்தது. ஓசோன் படை சிதைவுக்குரிய காரணங்களாக

- ☞ CFC இன் பயன்பாடும் வெளியேற்றமும் அதாவது குளிர்சாதனப் பெட்டிகள், இலத்திரனியல் துப்பரவாக்கிகள் ஆகியவற்றில் இருந்து CFC வாயு வெளியேற்றப்படுகின்றது.
- ☞ அணுகுண்டு பரிசோதனை - வல்லரசு நாடுகள் காலத்திற்கு காலம் மேற்கொண்டு வரும் அணுகுண்டு பரிசோதனைகளால் நச்சு வாயுக்கள் ஓசோன் படையை பாதிக்கின்றன.
- ☞ மிகைஒலி விமானப்பயன்பாடு – யுத்தம் மற்றும் பயணிகள் விமானங்களில் இருந்து வெளியேற்றப்படுகின்ற சில வாயுக்கள் ஓசோன்படையை பாதிக்கின்றன.
- ☞ எரிமலை வெடிப்பும் சில பொருட்களின் தகனமும் எரிமலை வெளியேற்றப்படுகின்ற சில வாயுக்கள் காட்டுத்தீ, இறப்பர், பிளாஸ்ரிக் போன்றவற்றை எரிதலின் போது வெளியேற்றப்படுகின்ற வாயுக்கள் ஓசோன்படையை பாதிக்கின்றன.
- ☞ இவ் ஓசோன் படை விளைவால் ஏற்படும் பக்கவிளைவுகளாக மனித சௌபாக்கியங்கள் பாதிக்கப்படல். அதாவது ஓசோன்படை சிதைவடையும் போது வெப்பமான புற ஊதா கதிர்கள் புவியை வந்தடைகின்றன. இதனால் தோல் புற்றுநோய், கண்களின் விழிவெண்படலம் பாதிக்கப்பட்டு கண்பார்வை அற்றுப்போதல், சருமஎரிவு போன்றன ஏற்பட்டு மனித சௌபாக்கியம் பாதிக்கப்படுகின்றது. புவி வெப்பம் அதிகரித்தல், அதாவது ஓசோன் படை சிதைவடைகின்ற போது வெப்பமான புற ஊதாகதிர்கள் புவியை வந்தடைகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஔவையார்

– ர.ஸர்மிகா–
தரம் – 11

உலக மொழிகளுக்குள்ளே தமிழ் மொழிக்கும் இலக்கியத்திற்கும் தனிச்சிறப்புண்டு. அத்தகைய சிறப்பினை நம் அருந்தமிழ்மொழி பெறுவதற்குரிய காரணங்கள் பல. அவற்றுள் எல்லாம் தலை சிறந்தது. ஆடவரோடு மகளிரும் சரிநிகர் சமனாய் விளங்கி இலக்கியத்தையும் மொழியையும் பேணி வளர்த்தமையாகும். இது வேறு எம் மொழியிலும் இல்லாத நம் செந்தமிழ் மொழிக்கு உரிய தனிச் சிறப்பேயாகும். தமிழினத்தின் பொற்காலமாக திகழ்ந்த சங்க காலத்தில் மட்டும் நாற்பத்தொரு பெண்பாற் புலவர்கள் தோன்றி தமிழை வளர்த்தார்கள். அனைத்துலகும் கண்டு வியந்து போற்றும் பெருமிதம் மிக்க சங்க காலத்தில் தமிழினம் ஈன்றெடுத்த நல்லிசைப் புலமை மெல்லிய பாவலர்க்கெல்லாம் தலைமணியாய் விளங்கிய பெருமை ஔவையார் எனும் தமிழ் அன்னையையே சாரும்.

**"ஔவை"** என்ற சொற்பொருளாக தாய், மூதாட்டி, பெண், துறவி, துறவறப் பெண் என்றெல்லாம் அகர முதலிகள் பொருள் கூறும் அம்மை, ஔவை ஒரு பொருள் சொற்களே. தமிழ் இலக்கிய வரலாற்றை ஆராய்ச்சிக் கண்ணோடு நுணுகிப் பார்க்கும் போது ஔவையார் பலராய் விளங்க காண்கின்றோம். கடைச் சங்க நாளில் அதியமான், நெடுமான் அஞ்சி காலத்தில் வாழ்ந்த ஔவையார் ஒருவர், சமய காலத்தில் விளங்கிய ஔவையார் ஒருவர், காவிய காலத்தில் கம்பர் நாளில் வாழ்ந்த ஔவையார் ஒருவர், இம் மூவரும் ஒருவராயிருக்க முடியாது. கி.பி முதல் நூற்றாண்டிலும், கி.பி 12ம் நூற்றாண்டிலும் வாழ்ந்த ஒருவர் - ஒருவராதல் எங்கணம். எனவே ஔவையார் ஒருவர் அல்லர் என்பது வெள்ளிடை மலை.

இந்த நூற்றாண்டு வரிசையில் தமிழ் இலக்கிய வரலாறு படைத்த முனைவர் மு.அருணாச்சலம் தமது இலக்கிய வரலாற்று நூல்களில் ஆறு ஔவையார்கள் பற்றி விளக்குகின்றார். சங்ககால ஔவையார், இடைக்கால நீதி ஔவையார் என ஔவையார் இருவரே என்பது பலரது கருத்தாகும். சங்ககால ஔவை, நீதிநூல் ஔவை யாவரும் சிவநெறிச் சார்புடன் காணப்படுகின்றனர். இங்கனம் பெண்ணினத்திற்கே சிறப்புத்தேடும் வகையில் ஔவை வரலாறு அமைகிறது.

உலகப் பெண்பாற் புலவர்களிடையே தமிழ் ஔவைக்கு சிறப்பிடம் உண்டு என அறிஞர்கள் போற்றுகின்றனர். கிரேக்கப் புலவராகிய சாபோ எனப்படும் பெண்பாற்புலவருடன் தமிழ் ஔவையை ஒப்பிட்டு திறனாய்வு கூறுகின்றார். ஆயிரம் பெண்பாற் புலவர்கள் இருப்பினும் அவர்களுக்கெல்லாம் ஈடுகொடுக்கும் வகையில் ஔவைப் பெருமாட்டி புலமையிலும், பண்பிலும் சிறந்து விளங்கியமை போற்றுதற்குரிய சிறப்பாகும். ஔவையார் **"இளமையில் கல்"** என்றதொரு இளையவர் கற்க நூல் செய்தவரும் ஆவார். எளிமையாக கற்கவும் கற்கத்தக்க அறநெறிகளைக் கற்கச் செய்யவும் வழிகாட்டிய முதற்பெருமை தமிழ் மண்ணில் ஔவைப் பெருமாட்டிக்கே உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறளின் தெரியாத தகவல்கள்

-வசந்தகுமார்-பிரிதா-
தரம்-11

- திருக்குறளில் **"தமிழ்"** என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை.
- 247 தமிழ் எழுத்துக்களில் 37 எழுத்துக்கள் மட்டுமே இடம்பெறவில்லை.
- திருக்குறளில் இடம்பெறும் இரு மலர்கள் அனிச்சம், குவளை.
- திருக்குறளில் இடம்பெற்ற இரு மரங்கள் பனை, மூங்கில்.
- திருக்குறளில் அதிக தடவை **"னி"** எழுத்து பயன்படுத்தப்பட்டுள்ளது. (1705) தடவை
- திருக்குறள் இதுவரை 26 மொழிகளில் வெளிவந்துள்ளது.
- திருக்குறளை ஆங்கிலத்தில் 50 பேர் மொழிபெயர்த்துள்ளனர்.

## பொது அறிவு

| நூல்கள் | | ஆசிரியர்கள் |
|---|---|---|
| 1. சிலப்பதிகாரம் | - | இளங்கோ அடிகள் |
| 2. இராமாயணம் (மூலம்) | - | வான்மீகி |
| 3. இராமாயணம் (தமிழில்) | | கம்பர் |
| 4. சீறாப்புராணம் | - | உமறுப்புலவர் |
| 5. பெரிய புராணம் | - | சேக்கிழார் |
| 6. மகாபாரதம் | - | வியாசர் |
| 7. மகாபாரதம்(தமிழில்) | - | வில்லிபுத்தூர் |
| 8. திருவாசகம் | - | மாணிக்கவாசகர் |
| 9. தேம்பாவணி, ஒப்பியலிலக்கணம் | - | வீரமாமுனிவர் |
| 10. மகாவம்சம் | - | மகாநாம |
| 11. பாஞ்சாலி சபதம் | - | சுப்பிரமணியபாரதியார் |
| 12. காஞ்சிப்புராணம் | | சிவஞானமுனிவர் |
| 13. நற்சிந்தனை | - | யோகர் சுவாமிகள் |
| 14. நன்னூல் | - | பவணந்த முனிவர் |
| 15. வெற்றிவேக்கை | - | அதிவீரராம பாண்டியன் |
| 16. நல்வழி, நீதிநூல்கள்,ஆத்திசூடி, கொன்றைவேந்தன் | - | ஒளவையார் |
| 17. மனோன்மணீயம் | - | சுந்தரம்பிள்ளை |
| 18. கீதாஞ்சலி | - | ரவிந்திரநாத் தாகூர் |
| 19. மணிமேகலை | - | சீத்தலைச் சாத்தனார் |
| 20. தொல்காப்பியம் | - | தொல்காப்பியர் |
| 21. சூளாமணி | - | தோலாமொழித்தேவர் |
| 22. திருப்புகழ் | - | அருணகிரிநாதர் |
| 23. போரும் சமாதானமும் | - | லியோரோல்ஸ்ரோய் |
| 24. இலியட், ஒடிசி | - | ஹோமர் |
| 25. நளவெண்பா | - | புகழேந்தி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்க முடியாத என் பள்ளி

**கணேஸ் விக்ரமன்**
**கரைச்சி பிரதேசசபை கிளிநொச்சி**
**பழைய மாணவர் சங்க செயலாளர்**

கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சைப் பசேல் என வயல்வெளிகளைத் தன்னகத்தே கொண்ட வட்டக்கச்சி பிரதேசத்தில் மாவடி என்னும் அழகிய கிராமத்தில் வரலாறு காணாத பல சாதனைகளை படைத்து தலை நிமிர்ந்து இன்று அறுபதாவது ஆண்டினைக் கடந்து ஆர்ப்பரிப்புடன் மிளிர்கிறது என்பள்ளி.

புத்திஜீவிகள் கூடிவாழும் சமூகத்தை தனது அயலாகக் கொண்டு பல்வேறு துறைகளில் செயலாற்றும் பக்குவம் உடையவர்களாய் எமது சமூகத்தில் பலரை உருவாக்கிய வண்ணம் உள்ளது.

எனது பாடசாலைக் காலத்தில் 09 வருடங்கள் திருவாளர் கனக மகேந்திரா அவர்களே அதிபராக இருந்திருக்கின்றார். அவரின் நேரான பார்வையும், நிமிர்ந்த நடையும், கணீர் எனும் குரலும் என்றுமே என் மனதை விட்டகலாது.

எம்மை ஒழுக்க சீலராக சமூகத்தில் மற்றவர்களால் மதிக்கத்தக்கவர்களாக எந்த செயலையும் முன்னின்று செய்யும் வல்லவர்களாக, தலைமைத்துவப் பண்பாளர்களாக ஆளுமையை வளர்க்க அயராது உழைத்தவர் எமது அதிபர் திருவாளர் கனக மகேந்திரா அவர்களே.

எமது பள்ளியின் காலவோட்டத்தில் ஆசிரியர்களாக திருமதி. செல்வரத்தினம், திருமதி. முத்துலிங்கம், திருமதி. நளாயினி, திருமதி. கோகிலராணி, திருமதி.சிவயோகம், திருமதி. இராஜபூபதி,திருமதி. பாமினி, திருவாளர்.திருக்குமார், திருவாளர். கிருஸ்ணமூர்த்தி, திருவாளர். திருக்கேதீஸ்வரன் போன்றோரும் எமது பாடசாலையும், சமூகமும் மேம்பட அயராது உழைத்து பெருமையைத் தேடி தந்தவர்களுள் அடங்குவர்.

எனது மாணவப்பருவத்தில் பல துறைகளிலும் என்னை வளர்த்து சிரேஸ்ட மாணவ தலைவனாகவும், சிறந்த விளையாட்டு வீரனாகவும் உருவாக்கிய பெருமை எனது பள்ளியையே சாரும்.

60 ஆண்டுகளாக எண்ணிலடங்காத சாதனைகளையும் நிலைநாட்டிய பல சிறந்த கல்விமான்களை உருவாக்கிய எமது பள்ளி என்னும் பலகோடி ஆண்டுகள் நிமிர்ந்து நின்று பல சாதனைகள் படைக்க வேண்டும் என இறைவனை வேண்டுகிறேன்.

*நன்றி*


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கதிர்காம முருகன் ஆலய வரலாறு

-திருமதி . சந்திரகுமாரி சிவபாலன்-
பழையமாணவி

## முகவுரை

இலங்கை திருநாட்டை பொறுத்தவரை ஒப்பீட்டளவிலே ஆலய வழிபாடுகள் இந்தியாவை போன்று முன்னைய காலங்களில் காணப்பட்டாலும் பிற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளாலும் இனவாத காரணங்களாலும் ஆலய வழிபாடுகள் பிற்பட்டகாலங்களில் மந்தகதியை அடைந்து செல்கின்றது என்றே கூறலாம். பலமுருகன் ஆலயங்கள் புகழ்பெற்று விளங்கியிருப்பினும் அவற்றின் பெருமைகளை செவி வழியாககேட்டு உணரமுடிந்ததே தவிர அவற்றின் பெருமைகளை ஒரு சேர அனேகமாக காணமுடிவதில்லை.

எமது கலாசாரத்தின் பெருமைகளை பறைசாற்றி நிற்கும் ஆலயங்களின் பெருமையினையும் சிறப்பினையும் பல நூல்களின் வாயிலாகவும், அறிஞர்கள் வாயிலாகவும், பக்தர்கள் வாயிலாகவும் அறிந்து வரலாற்று தொகுப்பாக மேன்மை அடைந்துள்ளது. இதில் குறிப்பாககதிர் காமகந்தனுடைய சிறப்பையும், வரலாற்றையும் முக்கியமாக கொண்டு வேலனுடைய பெருமையை ஒருசேர பறைசாற்றும் முகமாக கட்டுரை தொடர்ந்து செல்கிறது.

## தல அமைவிடம்

ஈழத்தே புகழ்பெற்ற புனித பாதயாத்திரைத்தலமாக விளங்குவதுடன் தமிழர்கள், பௌத்தர்கள், முஸ்லீம்கள், பறங்கியர்கள், வேடுவர்கள் போன்ற இன, மத வேறுபாடற்ற சமுதாயத்தை சார்ந்த மக்களால் போற்றி துதிக்கப்படும் தலமாகவும் மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் மும்மையான சிறப்புக்களுடன் ஒருசேர அமையப் பெற்றதுமாகிய கதிர்காமத் தலம் இலங்கை திருநாட்டின் ஊவாமாகாணத்தில் கதிர்காமம் எனும் இடத்தில் அமையப் பெற்றுள்ளது.

## பெயர்வரகாரணம்

கதிர்காமம், கதிருகம, கதிரகம என பலபெயர்கள் கொண்டு காணப்படும் இத்தலத்தின் காரணவாராச்சி பெயர் இன்னும் முடிவுபெறவில்லை. காரத்திகேயகிராமம் என்பது மருவியதும் யானைகள் வாழ்கின்ற கிராமமாகையால் கஜரகம என்பது சிதைவுற்றமையாலும் கதிருமரம் (நச்சுமரம்) நிறைந்த கிராமமாகையாலும், கடவுளுடைய ஒளியும், அன்பும் (கதிர்(ஒளி)+காமம்(அன்பு)) கலந்து விளங்குமிடம் என்பதாலும், ஆறு கதிர் பொறிகளில் பிறந்த முருகன் வள்ளியைமணந்த இடம் என்பதாலும், கதிரமரம் (கருங்காலி) நிறைந்தகிராமம் என்பதாலும், கதிரகாமம் எனும் சிங்களசொல் மருவி தமிழ் சொல்லாகியதாலும் "கதிர்காமம்" என்னும் பெயர் தோன்றியிருக்கலாம் என்று கூறப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோயில் அமைவு

கந்தபெருமான் சூரபத்மனைச்சங்காரம் செய்யும் நோக்குடன் மாணிக்ககங்கை அருகே பாசறை அமைத்திருந்தமையாலும், ஏழுமலைகளில் ஒன்றின் மீது கதிர்காமகந்தன் காட்சிகொடுத்ததன் ஞாபகார்த்தமாகவும், மாணிக்ககங்கையின் இடதுகரையோரத்தில் வள்ளியைமணம் புரிந்ததைக் குறிக்கும் முகமாகவும் கதிர்காமகோயில் கட்டப்பட்டதாக ஐதீகம் காணப்படுகின்றது.

## தலசரித்திரம்

தலத்தின் தொன்மையினையும், புகழினையும் பல புராண இதிகாச வரலாறுகள் சிறப்பாக சுட்டிநிற்கின்றன. சீதாபிராட்டியைதேடி இலங்கை வந்த அனுமான் கதிர்காம பெருமானை வணங்கிச் சென்றாரென்பது சில சரித்திராசிரியர்கள் கருதுகோள் ஆகும். கி.மு 500 ம் ஆண்டளவில் விஜயன் இலங்கைத்தீவில் கதிரமலை கந்தனுக்கு கோயிலமைத்தானென யாழ்பாணவைபவமாலை கூறுகிறது. பௌத்தர்களின் வரலாற்று நூலாகிய **"மகாவம்சம்"** அசோக மன்னன் புதல்வியான சங்கமித்தை வெள்ளரசுடன் தேவநம்பியதிஸ்ஸ அரசாண்டகாலத்தில் அநுராதபுரியை அடைந்தபின்னர் கஜரகாமத்து பிரபுவையே அடுத்தபடியாக சந்தித்தார் என்றும் இவ்வரசின் கிளையொன்றை இப்பிரபுவே கதிர்காமத்து ஆலயத்தில் கொண்டுசென்று நாட்டப்பட்டதாக கூறப்படுகின்றது.

இலங்கை சோழர் ஆளுகைக்குட்பட்டபொழுது சிங்கள அரசனாகிய ஐந்தாம் மகிந்தனும் அவன் மனைவிமாரும் சிறைப்படுத்தப்பட்டனர். இவ்வாறு சிறைப்பட்ட அரசனின் வழித்தோன்றலான மானவர்மன் எனும் சிறந்த கல்வியாளன் முருகப்பெருமானை நோக்கி பல்லாண்டு தவமிருந்து கண்மலரையும் அரச்சித்து அவனருள் பெற்று தனது சாதியினரை வருத்திய சோழரை அவ்வூரில் இருந்து மானவர்மனின் சந்ததியினர் துரத்த முடிந்ததென மகாவம்சம் கூறுகின்றது.

துட்டகைமுனு எனும் சிங்கள அரசன் எல்லாளன் எனும் புகழ்பெற்ற தமிழரசை வெல்வதற்கான ஆற்றலை தமக்கு வழங்கினால் ஆலயத்தை கட்டுவேன் எனவே வேலனிடம் வேண்டி தன் பகை வென்றதும்தான் கூறியபடியே கி.மு 101 ம் ஆண்டளவில் ஆலயத்தைக் கட்டியதாக **"கந்த உபாத"** எனும் சிங்களநூல் கூறுகின்றதென சேர் பொன். அருணாசலம் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

## பொதுமைத்துவம்

பன்நாட்டவர்களும், பல்லினத்தவர்களும், பல்லின சமூகத்தவர்களும், பல்லின சமயத்தவர்களும் வழிபட்டு அருள்பெற்று செல்லும் தலமாக கதிர்காம ஆலயம் காணப்படுகின்றது. மக்கள் யாவரும் பொதுவான இறைவழிபாட்டை மேற்கொள்ள கூடிய தலமாக கதிர்காமம் காணப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தபகவான் யோகத்தமர்ந்த திருத்ததலங்கள் பதினாறினுட் கதிர்காமமும் ஒன்றாக கி.மு-309 க்கு முன்பே கருதப்பட்டு வந்தது. சிங்கள மக்களுள் பெரும்பாலானோர் கதிர்காம தெய்யோவையும் (கதிர்காமக் கடவுள்) பத்தினி தெய்யோவையும் (கண்ணகியையும்) வணங்கி வந்தனர் என்பதனை வரலாறுகளும், சரித்திர நூல்களும் புகட்டிநிற்கின்றன. பெரும்பான்மையான பௌத்த ஆலயங்களில் முருகக் கடவுளை வணங்குவதை நாம் காண்பது நிதர்சனமே. கண்டியில் ஆண்டுதோறும் நடத்தப்படும் **"பெரஹரா"** எனும் நிகழ்வில் கதிர்காம தெய்யோவுக்கு முதன்மைகொடுத்து வருவதை காணமுடிகின்றது.

அல்கேதர் என்னும் முகம்மதிய அடியார் கதிர்காம தலத்தையடைந்து சிலகாலம் தொண்டாற்றும் நோக்குடன் தங்கி பின்னர் ஞானம் பெற்றுயந்தார் என்பது ஐதீகம். இவ்வடியார் சமந்த கூடத்தில் சிறிதுகாலம் வசித்தார் என்பர். கதிர்காமத்தில் இன்றும் பெரியாரொருவர் அடங்கிய இடமுண்டு. பண்டைக்காலத்தே கதிர்காமத்தில் நடைபெறும் விழாக்களில் முகமதியர் விளக்குபந்தம் பிடிக்கும் வழக்கம் காணப்பட்டதென சைமன் காசிச்செட்டியவர்கள் குறிப்பிடுகின்றார். எனினும் இவ்வழக்கானது தற்சமயம் காணப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கதிர்காம திருவிழாக்களின் போது இஸ்லாமியமக்கள் கலந்து கொள்வதனை நாம் காணமுடிகின்றது.

## வழிபாட்டுமுறை

ஒரு பற்றுமற்ற அருவாய் தானேநிற்கும் தத்துவங் கடந்தபொருளை வழிபடும் முறையே இங்குகாணப்படுகின்றது. திருப்புகழ் போக்கினை கவனிக்குமிடத்து மாணிக்கத்தாற் செய்த விலைமதிப்பிற்கரிய திருவுருவம் ஒன்றிருத்தல் கூடுமெனக் கருதற்கு இடமுண்டு. அன்றியும் டாக்டர் டேவி அவர்கள் கதிர்காமத்துக்கு சென்றபோது கதிர்காமத்திலுள்ள திருவுருவம் பெரும் கலகம் நிகழ்ந்த காலத்து மறைக்கப்பட்டு இன்னும் காட்டில் கிடக்கின்றதென குறிப்பிடுகின்றார்.

இப்பொழுது முருகப்பெருமானின் திருவுருவம் வரைந்த திரைச்சீலையே மூலஸ்தானத்தை மறைத்து நிற்கின்றது. இத்திரைச்சீலை எப்போதும் எடுக்கப்படுவதில்லை. பூசை செய்பவரை கப்புறாளைமார் என அழைப்பர். இவர்கள் தம் வாயை மஞ்சட்சீலைதுண்டினால் கட்டி அமுதினை உள்ளே காவிச்சென்று வைத்த பின்னர் வெளியேவந்து திரைச்சீலைக்கு முன்பாகநின்று ஓங்காரவடிவில் கைகளிரண்டையும் கூப்பிவழிபடுவர்.

## விழாக்கள்

இங்கு வருடாந்தவிழாவானது விமர்சையாக இடம்பெறுகின்றது. ஆடி அல்லது ஆவணியில் 15-16 நாட்கள் திருவிழா இடம்பெறும். தாமிரத்திலோ, தங்கத்தட்டிலோ எழுதப்பட்ட பரமரகசியமான மந்திர சக்திவாய்ந்த யந்திரத்தை கொண்ட வெண்துகிலால் மூடிய பேழையை யானை சுமந்து ஊர்வலம் வர பக்தர்கள் இறைவனை வணங்கி பயன் பெறுவர் பக்தி மேலீட்டால் சிலர் விழிநீர் மல்கப் பாடிஆடுகிறார்கள். இன்னும் சிலர் உருண்டும், புரண்டும் உடலை வாட்டிவதைத்தும் தம் பாவங்களுக்கெல்லாம் கழுவாய் தேடுகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிழாவானது தீர்த்ததிருவிழாவுடன் முடிவுறும். நுண்ணியமானமுறையில் கணிக்கப்பட்ட பூரணையன்று கந்தன் தீர்த்தமாடுவான். மாணிக்ககங்கையில் பூசையில் வைக்கப்பட்ட வாளினாலோ அல்லது களியினாலோ வட்டமிட்டு தண்ணீரை வெட்டுவர்.

வேல்விழாவும் சிறப்பானதாகும். முருகக்கடவுள் சூரபத்மனை கொல்வதற்குமுன் தனது வேலாயுதத்திற்கு பூசை நிகழ்தினார் எனும் காரணத்தினால் வேல் விழாசிறப்பாக இடம்பெறுகின்றது.

இதைவிட கார்த்திகை மாதத்தில் இடம்பெறும் தீபத்திருவிழா, சித்திரைமாதத்தில் புத்தரிசிப் பொங்கல் திருவிழா, (மாணிக்க கங்கையிலிருந்து நீரைக் கொண்டுவந்து புதுப்பானையில் பொங்குவார்கள். வள்ளியம்மை தேவாலயத்திலும் இது நடைபெறும். ஆண்களே பொங்கல் பொங்குகிறார்கள்), தமிழ் புத்தாண்டுப் பிறப்பு, தைமாதப்பிறப்பு, மாசிமகம், வைகாசி விசாகம் போன்ற நாட்களில் சிறப்பாக விழாக்கள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## யாத்திரை

கதிர்காமயாத்திரை மிகவும் சிறப்பான ஒன்றாகும். அடியவர்கள் தமது துயரங்கள் நீங்க முருகப்பெருமானுக்கு நேர்த்திக்கடன் செலுத்தும் முகமாக பாதயாத்திரை செல்வர். சிலர் பக்திப்பரவசத்திலும் செல்வதுண்டு. நாட்டின் அனைத்துப்பகுதிகளில் இருந்து மட்டுமல்லாது வெளிநாடுகளிலிருந்தும் பக்தஅடியவர்கள் வருவதுண்டு. அனேகமாக காட்டு வழிப்பாதையானதாகவும் பலசிரமம் மிக்கதாகவும் காணப்பட்டாலும் பக்தர்கள் எவ்வித சலனமும் இன்றி குறித்தநாளில் கந்தப்பெருமானை சென்று தரிசித்து அவனருள் பெற்று திரும்புவது வழக்கமாகிறது.

## முடிவுரை

கதிர்காம கந்தனுடைய பெருமைகளை தொன்று தொட்டு தமிழர்கள் மட்டுமல்லாது, பௌத்தர்கள், இஸ்லாமியர்கள், வேடர்கள், வெளிநாட்டவர்கள் என பல்லின சமூகத்தவரும் போற்றி வளர்த்துவருகின்றனர். துன்பங்கள் வரும்போது கந்தனே தயவென்று சரணாகதி அடைகின்றனர்.

வெற்றியையும், வீரத்தையும் கொடுக்கவல்ல கடவுளாகவும் துயரங்களை தீர்க்கவல்ல கடவுளாகவும் கதிர்காம கந்தனை பல்லினமக்கள் பார்ப்பது புலனாகிறது. அது தவிர வரலாறானது பல்வேறுகால ஓட்டத்திற்கும் வாழ்வியலுக்கும் ஏற்பமாறுதல் அடைந்து செல்வதைக்காண முடிகின்றது. பக்தகோடிகளின் நம்பிக்கைக்கடவுளாகவும் கதிர்காமக்கந்தன் காணப்படுவது புலனாகிறது. இங்குவிழாக்கள் சிறப்பானதாகவும் விமர்சையானதாகவும் இடம்பெறுகின்றன. யாத்திரைகள் சிறப்பானதாகவும் புகழ்மிக்கதாகவும் காணப்படுகின்றது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உஷாத்துணை

01. என்.எஸ்.திருச்செல்வம், (2014) கதிர்காமத்தை தரிசித்த சித்தர்களும் முனிவர்களும், கொழும்பு

02. இலங்கை திருநாட்டின் இந்து கோயில்கள் (1984) இந்து சமய திணைக்களம் பக்-390

03. கருணாலயபாண்டிய புலவர், (1983) கதிர்காமக் கந்தன் பிள்ளைத்தமிழ் பக்-19

04. குல. சபாநாதன், (2007) கதிர்காமம், பக்-05

05. சிவங்.கருணாலயபாண்னயப் புலவர், (1983), பிள்ளைத்தமிழ்

06. ந.வீரமணிஜயர், (2003) ஸ்ரீ கதிர்காமகந்தன் குறவஞ்சி நாட்டியநாடகம், பக்-23,24








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**INTERACT CLUB**

**அணி இசைக்குழுவினர்**





**2017 இல் கா.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்தோர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னைத் தேடு......

-சு.லாவண்யா-
பழையமாணவி

பூமிப் பந்தில்
முளைத்து தெளிந்து
வளைந்தே செல்லும்
நெருப்புக் கொழுந்தே!
இலட்சிய ரணங்களை
நெஞ்சினிலே தாங்கி
புரட்டித் தள்ளும் நெம்புகோலே!

வாழ்க்கை என்பது
நிகழ்ச்சி நிரலின்
ஊர்வலம் அல்ல
வஞ்சகப் பேய்கள்
வான்முகட்டில் துஞ்சுது பார்
ஆபாச பட தரவிறக்கம்
நீலப்படங்கள்
எக்காளச் சிரிப்புக்கள்...

குச்சொழுங்கை குதூகலங்கள்
கண்டதும் காதல்
உடன் வன்புணர்வுகள்
நிரைப்படுத்தி நீட்டியே
போடலாம்....
அத்தனை தொல்லையில்
சிந்தனையைத் தொலைத்து
போகும் முகவரி
ஏன் மறந்தாய்?

தொலைந்து விட்ட
விழுமியக் கோலத்தை
மானிட நேயத்தை
மன அமைதியை
சுற்றாடல் சீரழிவை
முகாமை செய்
உன்னால் முடியும்
என்னால் மட்டுமே முடியும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானிகளும் கண்டுபிடிப்புக்களும்

– லகீதன் பவித்திரா –
பழைய மாணவி

- தோமஸ் அல்வா எடிசன் - மின்விளக்கு
- ரைட் சகோதரர்கள் - பறக்கும் விமானம்
- கலிலியோ கலிலி – தொலைநோக்கி
- பெஞ்சமின் பிராங்க்ளின் - இடிதாங்கி
- நிகோலா டெஸ்லா – மின்சாரம்
- சார்லஸ் பபேஜ் - கணனி
- அலெக்சாண்டர் கிரகம்பெல் - தொலைபேசி
- மார்க்கோணி – வானொலி
- ஐசக் நியூட்டன் - ஈர்ப்புவிதி
- மேரி கியூரி – ரேடியோ கதிர் வீச்சு
- ஹென்றி பெக்குரல் - கதிரியக்கம்
- T.H மைமா – லேசர்கதிர்
- வில்லியம் சொக்லி - திரான்சிஸ்ரர்
- திமீத்ரி இவனோவிச் மெண்டலீவ் - ஆவர்த்தன அட்டவணை
- J.J தொம்சன் - இலத்திரன்
- ஏர்னஸ்ட் இரதபோட் - புரோத்திரன்
- ஜேம்ஸ் சட்விக் - நியுத்திரன்
- மாக்ஸ்வெல் - மின்காந்தக் கொள்கை
- வில்ஹம் வான்பன்சன் - பன்சன் சுடரடுப்பு
- ஜோஹன் குட்டன் பேர்க் - அச்சியந்திரம்
- வில்லியம் பர்ட் - தட்டச்சுப்பொறி
- ஜோர்ச் ஈஸ்ற்மன் - ஒளிப்படச்சுருள்
- ஈவான்ஜிலிஸ்டா டாரிசெல்லி டி - இரசப்பாரமானி
- ஹான்ஸ் லிப்பெர்ஷே - டெலஸ்கோப்
- ஜார்ச் அயடில – தீயணைப்பு சாதனம்
- கார்ல் பென்ஸ் - மூன்று சக்கர ஊர்தி
- அலெக்சாண்டர் வோல்ற்றா – மின் அழுத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சையை எதிர்நோக்கும் மாணவர்களுக்கு...

-சு.அஜந்தா-
(பழைய மாணவி)

2018 ஆம் ஆண்டுக்கான இரண்டு பரீட்சைகள் நிறைவடைந்த விட்டது. பாரங்களை இறக்கிவைத்த மன சந்தோசத்தில் மாணவர்கள் பட்டாம்பூச்சியாய் பறந்து திரிந்து சந்தோசிக்கும் அத்தருணம் கா.பொ.த சாதாரணப் பரீட்சைக்கு தோற்ற இருக்கும் மாணவர்கள் தமது கடின முயற்சியில் இறங்கியுள்ளனர்.

பரீட்சையை எதிர்நோக்கி காத்திருக்கம் அந்த மாணவர்களுக்காக இதனை சமர்ப்பிக்கின்றேன்.

மாணவர்கள் பரீட்சை நெருங்கிவிட்டதும் அதற்கு முதல் நாள் தான் மிகத்தீவிரமாக படிப்பார்கள். இக் கல்வியை கற்றுக் கொண்டிருக்கும் உங்களுக்கு நான் கூற விளைவது யாதெனில் அவ்வாறு முதல் நாள் முயற்சிப்பதை தவிர்த்தல் நன்று.

எத்தனையோ பரீட்சையை எதிர்கொள்ளவிருக்கும் உங்களுக்கும் இந்த 2018 சாதாரணதர பரீட்சையை எதிர்கொள்ள இருக்கும் எனது அன்புக்குரிய நண்பர்களுக்கும் நான் கூறும் ஆலோசனைகள் இதோ

பரீட்சை நெருங்கி விட்டதுமே பல மாணவர்களை பதட்டமும் பயமும் தொற்றிவிடும். என்ன பயம்? ஏன் பதட்டம் நாம் படித்தது தானே கேள்விகளாக வரப்போகின்றது. பயமும் பதட்டமும் எமது நம்பிக்கைகளை சிதறடித்து விடும் எனவே பதற்றப்படாமல் பயம் கொள்ளாமல் படிப்பதில் முழுக்கவனம் செலுத்துங்கள் உங்களால் முடியும் நம்பிக்கைதான் வாழ்க்கை நம்பிக்கை இருந்தால் சாதனை நிச்சயம் அடையலாம்.

சில மாணவர்கள் பரீட்சைக்காலம் நெருங்கிவிட்டதும் அதிக நேரம் படிப்பிலேயே மூழ்கிவிடுவர். இந்த நேரம் படிக்காமல் வேற எப்ப படிப்பது என்ற சிந்தனை தோன்றியிருக்கும். எந்நேரமும் படிப்பது எல்லாவற்றையும் படிப்பது என சதா படித்துக்கொண்டே இருப்பர் தனக்கு கிடைக்கும் நேரமெல்லாம் இவ்வாறு கற்கின்ற போது மூளை எப்போதும் இயங்குநிலையிலேயே இருக்கும். பாவம் அதனையும் கொஞ்சம் ஓய்வெடுக்க விட வேண்டும். அப்போதுதான் அது அடுத்த பாடத்திற்கு வேகமாக இயங்கும் எமக்கும் ஒரு புத்துணர்ச்சி ஏற்படும்.

உங்கள் விருப்பத்திற்கு அமைவாக அட்டவணை ஒன்றை தயார் செய்யுங்கள் அதிகாலை தொடக்கம் இரவு படுக்கை செல்லும்வரை (4 மணி தொடக்கம் 10 மணிவரை ) நேரத்தை கூட்டி அல்லது குறைத்து தயார் செய்யுங்கள். இவ்வாறு அட்டவணை தயாரித்து அனைத்துப்பாடங்களுக்கும் நேரத்தைப்பிரித்துவைத்தால் நேரம் கிடைக்கும் கற்பதும் இலகுவாகும். நன்றாக படித்தது போல தோன்றும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு அட்டவணையுடன் கற்றலில் ஈடுபடும் போது குடும்பத்தினர் உங்களுக்கு சில வேலைகளைத்தந்து தொந்தரவு செய்யமாட்டார்கள் அவ்வாறு சில சிறு வேலைகளைத்தந்தாலும் முகம் சுளிக்காமல் எரிச்சல் படாமல் அதனைச்செய்து கொடுத்து விட்டு மீண்டும் கற்றலில் ஈடுபடலாம்.

படிப்பு மட்டும்தான் வேலையென்று நாள் முழுவதும் அறைக்குள்ளேயே குந்தியிருந்து சங்கடப்படாமல் சில நிமிடங்களாவது குடும்ப உறுப்பினர்களுடன் இயல்பாக கதைத்து பகிடி விட்டு நன்றாக சிரித்து விளையாடிமகிழுங்கள். இது உங்கள் மனதை சாந்தப்படுத்தி உற்சாகமூட்டி தொடர்ந்து கற்பதற்கு வழிசமைக்கும்.

உறவுகளின் நல்கருத்துகள் நம்பிக்கை வார்த்தைகள் உங்கள் உள்ளத்திற்கு உற்சாகத்தை ஊட்டி விடும் இதுதவிர கற்றலுக்கு உள்ளம் எப்படி தயாராக இருக்கின்றதோ அவ்வாறே உடலும் தயார் நிலையில் இருக்கவேண்டும். உடலும் உளமும் தயாராக இருந்தால் மாத்திரமே எம்மால் சாதனைகளை தொடமுடியும்.

படிப்பு படிப்பு என்று சதா படிப்பில் இருந்து எமது உடல் நலத்தை கவனிக்காது விடாதீர்கள். இதுவே பின்னர் பரீட்சை நாட்களில் பாரதூரமான விளைவுகளைத் தரலாம் எனவே உடலைப்பட்டினி போடாமல் நல்ல காய்கறி பழங்கள் மீன் இறைச்சி முட்டை என உணவு வகைகளையும் தோடம்பழம் தேசிக்காய் பானங்களையும் பருகுவதோடு உடற்பயிற்சிகளிலும் ஈடுபடல் வேண்டும்.

இவை இல்லையெனில் உடல் நலத்தை கெடுத்து சோர்வினை உருவாக்கி படிப்பினை மந்தமடையச்செய்துவிடும். எனவே உங்களின் கற்றல் உங்கள் இலக்கினை அடைய வழிசமைக்கும் எனவே மாணவர்களே! எனது இந்த சிறிய அறிவுரையை கேட்பதன் மூலம் உங்கள் இலக்கை இலகுவாக அடைய எனது வாழ்த்துக்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிக்கூடம்

-கயூரன் திஸோபா-
பழைய மாணவி

சிறகுகள் அனைத்தும்
சிறகடித்துச் சென்று
ஒட்டி உறவாடி
உயரப் பறக்கும்
பெரும் பறவை
பள்ளிக்கூடம்!

மனிதனாய்ப் பிறந்த
குழந்தைகளின் தெவிட்டாத
தேனின்பம்.......!

கல்வியைக் காதலித்து
மணம்முடித்து வரும் மணமக்களின்
தகப்பன் வீடென்றும்
கூறலாம்......!

பெற்றோரின் கனவுகளை
கையில் ஏந்தி
இனிப்புப் பனுவல்களை
முதுகில் சுமந்து
சரமாகச் சீருடையுடன் செல்லும்
எறும்புக் கூட்டங்களின் எழிலகம்!

இந்தக் கோயிலினுள்
பக்தப் பிரஜைகளுக்காகத்
தம் உயிரையே
அர்ப்பணிக்கும்
ஆயிரம் தெய்வங்கள்
ஆசிரியர்கள்......!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவமிருந்தாலும்
திரும்பிப் பார்க்க முடியாத நம்
பிள்ளைப் பருவத்தை
நரை, திரை, மூப்பு இவை
வந்த போதும்
நாம் திரும்பிப் பார்க்கலாம்
நம் பள்ளி மூலம்....!

படிப்பதற்கு இலவசமாக
புத்தகங்கள் மட்டுமல்ல
பழகுவதற்கு இலவசமாக நல்ல
உள்ளங்களும் குவிந்து
கிடக்கிறது இந்தக் கூடத்தில்

மனிதக் குழந்தைகளே.....
படிப்பு முடிந்தாலும் கூட
அடிக்கடி பறந்து செல்லுங்கள்
நீங்கள் படித்து, அடித்து, பறந்து திரிந்து
சிரித்து, அழுது, மகிழ்ந்த உங்கள்
பள்ளிகளுக்கு....!

பள்ளிக் கூடம்
நம் வரலாற்றின்
சகாப்தம்.....
வாழ்வின் அளப்பரியதோர்
அத்தியாயம்......!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை தெரேசா

-சு.சுதர்சினி-
பழைய மாணவி

இன்று உலகில் ஒவ்வொரு விநாடியும் யாரோ ஒருவர் ஏதோ ஒரு மூலையில் பூமிக்கு அவதரிக்கின்றனர். ஆனால் அவர்களில் சிலரே தம்முடைய வாழ்வை பிறருக்காக அர்ப்பணிக்கின்றனர். அவ்வாறு தம் வாழ்க்கையையே ஆதரவற்றோருக்காகத் தியாகம் செய்தவர்களுள் தன்னலம் பாராது பிறருக்காக வாழ்ந்து அன்னை எனும் ஸ்தானத்தைப் பெற்றவர் அன்னை தெரேசா ஆவார்.

அக்னஸ் கொன்ஸ்கா பெஜாஸ்கினி என்ற பெருடைய அன்னை தெரேசா Albania எனும் இடத்தில் 1910.08.27 அன்று இப்புவியில் அவதரித்தார். இவர் நல்லெண்ணத்துடன் வாழ்ந்து தனித்தன்மை வாய்ந்தவர் என்றால் மிகையாகாது. இவர் தனது 18வது வயதிலே தன்னுடைய வீட்டிலிருந்து வெளியேறி ஆசீர்வதிக்கப்பட்ட கன்னியர் மடத்திலே இணைந்து துயருற்றவர் துயர் துடைக்க தன்னை அர்ப்பணித்தார். அத்துடன் 1946ஆம் ஆண்டு கல்வி சேவையில் இணைந்து புவியியல் பாட ஆசிரியராக பணியாற்றினார்.

அன்னையின் அர்ப்பணிப்பு நிறைந்த வாழ்விலே 1946.09.10 மிகவும் வெகுமதியான நாள். அன்றைய தினம் புகை வண்டியிலே அன்னை பயணித்துக் கொண்டிருந்த போது உதவியற்ற அநாதரவான நோயுற்றவர்களின் வேதனையையும், அழுகுரலையும் காண நேர்ந்தது. அந்த நிகழ்வே அநாதரவற்றவர்களை அரவணைக்கத் தூண்டியது. எங்கெங்கு உதவி வேண்டி தவிக்கிறார்களோ நோயின் கொடூரத்தால் பாதிக்கப்பட்டிருந்தார்களோ அன்னையின் இதயம் அவர்களுக்காகத் துடித்தது. கரங்கள் சேவையைத் தொடர்ந்தது. பிறர் வாழ தன்னையே அர்ப்பணித்த உயரிய தியாகி.

பெண்மைக்கே இலக்கணமான அன்னை வெண்மை உடையணிந்து வெள்ளை மனதோடு மனிதாபிமான பணி புரிந்து உன்னதமானவர். வேதனையான வாழ்வை அனுபவித்தவர்களிற்கு துணையாக நின்று தோள் கொடுத்தவர். மேலும் 1948ஆம் ஆண்டு இந்திய பிரஜாவுரிமை பெற்று இந்திய அரசிடமிருந்து பல விருதுகளையும், பாராட்டுக்களையும் உயரிய சேவைக்காகப் பெற்றார். 1979ம் ஆண்டு அமைதிக்கான நோபல்பரிசு பெற்றமை குறிப்பிடத்தக்கது. பிறரது நல்வாழ்விற்காக தன்னலம் பாராது பணி புரிந்த அன்பின் திருவுருவம் 1997ஆம் ஆண்டு தனது 87வது வயதிலேயே தன் வாழ்வை முடித்துக் கொண்டு நிரந்தரமாகத் துயில் கொண்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் மறைந்தாலும் இவரது பெயர் தாங்கிய தொண்டு நிறுவனங்களும், கல்வி நிலையங்களுமே மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

தன்னலம் பாராது பிறர் வாழ ஒளி கொடுத்து தனித்துவம் கொண்ட மெழுகுவர்த்தியே அன்னைக்கு எடுத்துக்காட்டானது பிறரது நல்வாழ்விற்காக சமூக சேவகியாக, ஆசிரியராக, தொண்டாளினியாக பல அவதாரமெடுத்து அனைவரது மனங்களிலும் அன்பாலே நிலையாக வாழும் அன்னை சிறந்த உதாரண மங்கை அன்பின் ஊற்று அவர். பிறர் வாழ்வின் மகிழ்விற்காய் தன்னையே அர்ப்பணித்து பெண்களிற்கு பெருமை சேர்த்த பெரிய ஒளி. அணைந்தாலும் நல்ல உள்ளம் கொண்ட ஒவ்வொருவரது இதயமாகவும் துடித்துக் கொண்டிருப்பார் என்றும் அழியாப் புகழ் கொண்ட தனித்துவமான அன்னை தெரேசா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை உயர்ச்சியில் பங்காற்றிய அதிபர்கள்



திரு. பா. கனகசபை
13.05.1955 - 30.06.1955



திரு. ச. செல்லத்துரை
01.07.1955 - 30.08.1955



திரு. இ. இராசையா
01.09.1955 - 30.06.1956



திரு. வி. பொன்னையா
01.07.1956 - 08.10.1957



திரு. வே. சிவஞானசுந்தரம்
09.10.1957 - 31.01.1958



திரு. பெ. ஏ. த. ஐயாத்துரை
01.02.1958 - 28.03.1964



திரு. சி. கந்தப்பு
01.04.1964 - 31.12.1970



திருமதி. செ. செல்லையா
01.01.1971 - 28.07.1971



திரு. ந. மகாலிங்கம்
03.08.1971 - 19.06.1972



திருமதி. செ. செல்லையா
20.02.1981 - 18.06.1981

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. பொ. சுப்பிரமணியம்
01.09.1972 - 21.01.1974



திரு. சி. பே. சூசைப்பிள்ளை
22.01.1974 - 31.12.1976



திரு. பொ. சுப்பிரமணியம்
01.01.1977 - 29.03.1979



திரு. என். கே. தருமலிங்கம்
30.03.1979 - 19.02.1981



திருமதி. செ. செல்லையா
20.02.1981 - 18.06.1981



திரு. இ. இராசரத்தினம்
19.06.1981 - 17.01.1982



செல்வி. தி. வேலுப்பிள்ளை
18.01.1982 - 22.06.1989



திரு. கனக மகேந்திரா
23.06.1989 - 30.05.1999



திரு. ஆ. கருணாநிதி
01.06.1999 - 05.01.2003



திரு. சி. பாலகிருஷ்ணன்
06.01.2003 - 09.01.2007



திரு. சி. திரவியம்
10.01.2007 - 17.11.2014



திருமதி. சி. சுதாகரன்
18.11.2014 - 31.12.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி. அனுஷா முருகவேல்



எமது பாடசாலையில் பணியாற்றி
ஓய்வு பெற்றுச்சென்ற ஆசிரியர்கள்
இவர்கள் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறோம்

-பாடசாலைச் சமூகம்-





திருமதி விஜயராணி அன்ரனிராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்திப்பதற்கான சிந்தனைகள்

-நி. தனுசா-
பழைய மாணவி

யாருமே சராசரியாக 75 ஆண்டுகளுக்கு மேல் உயிருடன் இருக்கப் போவதில்லை. போகும் போது எதையும் எடுத்துக் கொண்டு போவதுமில்லை. ஆகவே சிக்கனமாக இருக்காதீர்கள் செலவு செய்ய வேண்டியதற்கு செலவு செய்யுங்கள். மகிழ்ச்சியாக இருக்க வேண்டிய நேரத்தில் மகிழ்ச்சியாக இருங்கள். உங்களால் முடிந்த தான தர்மங்களை யோசிக்காமல் செய்யுங்கள். எதற்கும் கவலைப்படாதீர்கள். நீங்கள் கவலைப்படுவதால் எதையும் நிறுத்தமுடியுமா? வருவது வந்தே தீரும். நாம் இறந்த பிறகு நம் உடமைகளுக்கு என்னாகுமோ என்று கவலைப்படாதீர்கள். அந்த நேரத்தில் மற்றவர்களின் பாராட்டுக்களோ உடல்களுக்குத் தெரியாது. நீங்கள் கஸ்ரப்பட்டு சேர்த்தவை அனைத்தும் உங்கள் வாழ்க்கையோடு சேர்ந்து முடிந்துவிடும். உங்களை கேட்காமலே அவைகள் முடிக்கப்படும்.

உங்களின் குழந்தைகளை பற்றி கவலைப்படாதீர்கள். அவர்களின் வாழ்க்கை அவர்களின் விதிப்படியே அமையும். அதில் நீங்கள் எந்த மாற்றத்தையும் செய்து விட முடியாது. சம்பாதிக்கின்றேன் என பணத்தை தேடி ஓடாதீர்கள். பணத்தை விட உங்கள் ஆரோக்கியம் முக்கியம். பணம் உங்கள் ஆரோக்கியத்தை மீட்டுத்தராது. ஒவ்வொரு குடும்பத்திலும் ஒவ்வொரு மனிதனுக்கும் பிரச்சினைகள் இருக்கும். பிரச்சினை இல்லாத மனிதனே இல்லை. ஆகவே உங்களை யாரிடமும் ஒப்பிட்டு பார்க்காதீர்கள். பணம், புகழ், சமூக அந்தஸ்து என்று மனதைப் போட்டு குழப்பிக்கொள்ளாதீர்கள். ஏனெனில் அதனால் உங்களின் நேரமும் ஆரோக்கியமுமே கெடும். மனமகிழ்வே ஆரோக்கியத்துக்கு மிக அடிப்படையானது. உற்சாகத்தோடு இருப்பவர்களை நோய் நொடிகள் அண்டாது. நல்ல மனநிலை, உடற்பயிற்சி, சூரியஒளி, நல்ல உணவு தேவையான விற்றமின்கள் ஆகியன இன்னும் சில ஆண்டுகளுக்கு உங்களை வாழவைக்கும். அதற்கு மேல் என்ன வேண்டும் அன்பானவர்களே சற்று சிந்தியுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வாய்க்கோளுக்கு அனுப்பிடுவோம் விண்ணப்பம்

-திருமதி. ச. பாலசிவராம்-
பெற்றோர்

இயற்கை எனும் பசுஞ்சோலையிலே
இறைவனின் படைப்பிலே உருவான
இயற்கை எனும் நிலா முற்றம்
அந் நிலா முற்றத்தின் அழகோ.. அழகு...

பார்க்கும் இடமெல்லாம்
பசுமை கொஞ்சும் விருட்சங்களும்
பரந்து விரிந்த நீலக்கடலும்
பசிய நல்ல நீர்ச்சுனைகளும்

கதிரவனின் வரவைக் கண்டு
முகம் மலரும் தாமரைத் தடாகங்களும்
இனிமையாக எமைத்தாலாட்டும்
இளந்தென்றலும்

உலகில் வாழும் ஜீவன்களும்
இன்பம் எனும் அமுதை இனிதே
நுகர்ந்து களிக்கவென
படைத்தான் எம் இறைவன்
ஓ......மானிடா!
சிந்திக்க தவறிவிட்டாய்
சின்னாபின்னப் பட்டது – உன்
சிங்காரமான வாழ்வு

காடு கரம்பை யாவற்றையும்
கணக்கு வழக்கின்றி நீ அழித்தாய்
கரிய மேகம் சூழவில்லை
கனத்த மழையும் பெய்யவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரண்டு போனது எம்நிலங்கள்
வரட்சியானது எம் பூமி
பயன்தரு மரங்களும் அழிந்தனவே
பதை பதைத்து நீ துடிக்கின்றாய்

மாரி மும்மாரி பெய்யவில்லை
மக்கள் மனமும் குளிரவில்லை
வாழ்வும் வசந்தமும்
வாடி வதங்கிப்போயினவே

ஆறறிவு படைத்தோனே!!!
எள்ளளவும் கவலையின்றி
எளிதாய் அழித்தாய்
இறை படைப்பை

இன்று.....
சுடுகாடு போல் ஆனதுவே – எம்
எழிலான வையகம்
எதனாலன்றோ இவ்விளைவு?

இயற்கை தந்த அருங்கொடையை
இரக்கமின்றி அழித்ததனால்
இனியும் வாழ முடியாத
அவல வாழ்வும் வந்ததுவே !

கண்ட கண்ட கழிவுகளை
புவியில் நீயும் நிறைக்கின்றாய்
கண்ணைக்கவரும் பிளாஸ்ரிக்கால்
கணத்தில் கெடுதி வந்திடுமே.

குப்பை கூழங்களை எரிக்கின்றாய்
அசுத்த வளியை நிறைக்கின்றாய்
சுகம் இன்றி வாழ்கின்றாய் - நீ
சடுதியாக மடிகின்றாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மானிலத்தில் இவைபோன்ற
துன்பம் வந்து நேர்கையிலே
சிந்தை நீயும் தடுமாறி
துவண்டே போகின்றாய்

நாளொரு வண்ணம்
பொழுதொரு மேனிபோல்
விந்தை மிக்க உலகமதில்
விதம் விதமாய் கண்டு பிடிப்புக்கள்

செவ்வாய்க் கோளில் உயிரினமும்
செம்மையாக வாழ்ந்திடலாம்
செழுமையான உண்மைதனைச்
செப்புகின்றனர் விஞ்ஞானிகளும்

உண்மை.... உண்மை..
எதிர்காலத்தில் நடக்குமென
தாம் கண்ட கனவுதனை
எடுத்தியம்புகின்றனர் ஞானிகளும்

போட்டி போடும் உலகமதில்
சொல்லிக் கொள்ளாமல்
முண்டியடித்து முன்னுக்கு
சென்றும் குடியேறிடுவர்

அதனாலன்றோ!
செவ்வாய்க்கோளுக்கு ஒரு விண்ணப்பம்
செவ்வாய் நீயும் சடுதியாய்
சேர்ந்தே வாழலாம் குடும்பத்துடன்
செப்புகின்றேன் உண்மைதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொ.த(சா/த) பரீட்சைப் பெறுபேற்று ஆய்வு

| பாடங்கள் | சித்தியடைந்த வீதம் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
| தமிழ் | 93 | 72 | 83 | 78 | 61 | 56 | 50 | 86 |
| கணிதம் | 68 | 30 | 37 | 70 | 52 | 48 | 27 | 43 |
| விஞ்ஞானம் | 62 | 45 | 50 | 78 | 48 | 41 | 27 | 68 |
| ஆங்கிலம் | 31 | 9 | 25 | 35 | 9 | 15 | 7 | 43 |
| வரலாறு | 68 | 57 | 58 | 78 | 61 | 48 | 53 | 71 |
| சைவம் | 100 | 89 | 95 | 90 | 78 | 67 | 82 | 82 |
| றோ.க | 100 | 50 | 100 | 100 | 100 | 100 | 50 | 100 |
| இஸ்லாம் | - | - | - | - | - | - | - | 100 |
| சித்திரம் | - | - | - | 43 | 29 | 29 | 71 | 92 |
| சங்கீதம் | 33 | 75 | 78 | 100 | 80 | 35 | 86 | 86 |
| நடனம் | 75 | 100 | 100 | 100 | 57 | 100 | 100 | 100 |
| இலக்கியநயம் | 60 | 82 | 100 | 75 | 67 | 100 | 100 | 100 |
| விவசாயம் | 100 | 91 | 100 | 67 | 82 | - | 33 | 75 |
| மனைப்பொருளியல் | - | 66 | 70 | 60 | 100 | 20 | 50 | 63 |
| வர்த்தகம் | 100 | 67 | 100 | 67 | 80 | 100 | 75 | 100 |
| சுகாதாரம் | 100 | 100 | 100 | 93 | 86 | 94 | 73 | 78 |
| கணினி | 100 | - | 100 | - | - | - | 100 | 100 |
| புவியியல் | 87 | 61 | 89 | 100 | 100 | 88 | 58 | 100 |
| குடியியல் | 100 | 65 | 92 | 67 | 67 | 75 | 57 | 54 |

### தமிழ் சங்கம்
### பேச்சுப் போட்டியில் பரிசில் பெறும் மாணவர்கள்

ச-பாமகள் **பேச்சு** - 1ம் இடம்

**எழுத்துத்தேர்வு** - 1ம் இடம்

### 2017ம் ஆண்டு கிளிநொச்சித் திருநெறிக்கழகம் நடாத்திய சைவ நெறித் தேர்வில் சிறப்புத்தேர்ச்சி பெற்றவர்கள்.

**தரம் - 11**

பாலரத்தினம் தர்மிகன்

ஜெயக்காந்தன் தனனிஶ்ரீ

கிருஷ்ணமூர்த்தி கிருசாந்தினி

**தரம் - 09**

தீபகுமார் சதுர்ஜா

**தரம் - 06**

பிரதீபன் பிருந்தன்

சண்முகராசா பாமகள்

நகுலகுமாரன் கோபிகா

**தரம் - 05**

கிருபாகரன் மயூரிகா

லோகேஸ்வரன் டன்சிகா

ஸோதீசதரன் கலைவிழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2017ம் ஆண்டு கொழும்பு விவேகானந்த சபை நடாத்திய சைவநெறித்தேர்வில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்கள்.**

பாலரத்தினம் தர்மிகன்
நேசராசா தேனுஜன்
ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி கிருஷாந்தினி
அமரசிங்கம் கோபிகா
ஜெயக்காந்தன் தனனி

## தமிழ்மொழிக் கலைத்திறன் போட்டியில் பங்கு பற்றி வெற்றியீட்டிய மாணவர் விபரம்

| நிகழ்வு | பெயர் | நிலை | இடம் |
|---|---|---|---|
| 2018 பாவோதல் | ச. பாமகள் | 1ம் இடம் | தேசியம் |
| 2015 பேச்சு | ச. பாமகள் | 3ம் இடம் | மாகாணம் |
| 2017 பேச்சு | ச. பாமகள் | 3ம் இடம் | தேசியம் |
| 2017 இசையும் அசைவும் | சி. கரிஸ்னா | 2ம் இடம் | மாவட்டம் |
| 2018 குழுநடனம் (பொம்மலாட்டம்) | டி. அருள்மொழி<br>சே. மகியா<br>அ. சனோஜியா<br>சு. பிரியங்கா<br>ந. நிதுஷா<br>நா. பமிலா<br>தீ. சரணியா<br>சி. பானுஜா<br>ம. ராகவி | 1ம் இடம் | மாவட்டம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| **2016**<br>**குழு இசை** | 3ம் இடம்<br>உ. குலமதி<br>அ. தமிழரசி<br>ஜெ. டினோஜினி<br>ர. மதுசா<br>சி. தர்சனா<br>ஜெ. தனனி<br>ஜெ. கிருஷாந்தினி<br>கௌ. தாட்சாயினி<br>த. கயல்விழி<br>அ. கோபிகா | மாவட்டம் |
| **2016**<br>**வில்லுப்பாட்டு** | 1ம் இடம்<br>பா. தர்மிகன்<br>ர. திருவரங்கன்<br>மோ. சுவேஸ்கா<br>இ. இசையரசி<br>ர.கே கதிகா<br>நி. யதுஷா<br>ஸ்ரீ. கயந்தினி | மாவட்டம் |
| **2018**<br>**மேடைநாடகம்**<br>**- திறந்த போட்டி** | 1ம் இடம்<br>கி. சாரமுதன்<br>வி. விதுசன்<br>ச. ஜிசாந்<br>ஜெ. கோபிதருண்<br>ஜெ. கஜந்தன்<br>சு. அஜந்தினி<br>க. அனுஜா<br>சி. விதுர்சனா<br>ர. ஸர்மிகா<br>மோ. சுவேஸ்கா<br>வ. பிரிதா<br>இ. இசையரசி | மாவட்டம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துரித கணித திறன் போட்டி - 2016

பி. மைவிழி - 3ம் இடம்

## சித்திரப்போட்டி

| | | |
|---|---|---|
| **2015**<br>ச. பாமகள்<br>சி. பானுஜா | 3ம் இடம்<br>3ம் இடம் | வலயம்<br>வலயம் |
| **2016**<br>சி. கரிஸ்னா<br>பி. மைவிழி | 3ம் இடம்<br>3ம் இடம் | மாகாணம்<br>வலயம் |
| **2017**<br>அ. அருணவி<br>பா. யுகான்<br>பி. மைவிழி | 3ம் இடம்<br>3ம் இடம்<br>3ம் இடம் | மாகாணம்<br>வலயம்<br>வலயம் |
| **2018**<br>அ. அருணவி<br>சி. கரிஸ்னா<br>க. ரிசிஅபிசேக் | 2ம் இடம்<br>2ம் இடம்<br>2ம் இடம் | மாகாணம்<br>வலயம்<br>வலயம் |

## சமூக விஞ்ஞானப் போட்டியில் தேசிய ரீதியில் வெற்றி பெற்ற மாணவர்கள்

| | |
|---|---|
| ச. பாமகள் | 3ம் இடம் |
| தீ. சதுர்ஜா | 4ம் இடம் |
| சே. மகிஜா | 5ம் இடம் |
| சு. அஜந்தினி | 9ம் இடம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆங்கில தின போட்டியில் பங்கு பற்றி வெற்றியீட்டிய மாணவர்கள் | | | |
|---|---|---|---|
| 2015<br>உறுப்பெழுத்து<br>உறுப்பெழுத்து<br>Poem | தீ. சதுர்ஜா<br>ச. பாமகள்<br>ச. பாமகள் | 3ம் இடம்<br>1ம் இடம்<br>3ம்இடம் | மாகாணம்<br>மாவட்டம்<br>மாவட்டம் |
| 2016<br>உறுப்பெழுத்து<br>தனிநடிப்பு<br>நாடகம் | ச. பாமகள<br>மோ. கயலினி<br>மோ. கயலினி<br>நி. தனுஷா<br>சி. சுபேஷா<br>இ. திசாந்தினி<br>ஜெ. டிலோஜினி<br>உ. புவனிகா<br>ஜெ. தனனி<br>பா. தர்மிகன்<br>சி. டன்சிகா<br>சி. கிருஷாந்தினி<br>அ. அஸ்ஸாபானு<br>நே. தேனுஜன்<br>மோ. கயலினி | 1ம் இடம்<br>3ம் இடம்<br>1ம் இடம் | மாவட்டம்<br>கோட்டம்<br>மாவட்டம் |
| 2017<br>உறுப்பெழுத்து<br>உறுப்பெழுத்து<br>**Poem**<br>குழுப்பாடல் | பு. அபிஸ்னா<br>ச. பாமகள<br>ஜெ. தனனி<br>ஜோ. நிக்சன் அன்ரன்<br>ந. அரவிந்<br>தி. விதுசன்<br>தே. தேனுஜன்<br>ஜெ. தனனி<br>உ. புவனிகா<br>சி. டன்சிகா<br>அ. அஸ்ஸாபானு<br>அ. கோபிகா<br>கௌ. தாட்சாயினி<br>சி. கிருஷாந்தினி<br>பா. தர்மிகன் | 3ம் இடம்<br>2ம் இடம்<br>3ம் இடம்<br><br><br><br><br><br>3ம் இடம் | கோட்டம்<br>கோட்டம்<br>கோட்டம்<br><br><br><br><br><br>கோட்டம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 2018 | | | |
| **உறுப்பெழுத்து** | பா. தசாங்கிதா | 2ம் இடம் | வலயம் |
| **உறுப்பெழுத்து** | ந. கோபிகா | 2ம் இடம் | வலயம் |
| **உறுப்பெழுத்து** | ச. பாமகள் | 3ம் இடம் | வலயம் |
| **Poem** | ச. பாமகள் | 3ம் இடம் | வலயம் |
| **உறுப்பெழுத்து** | இ. பிருத்திகா | 1ம் இடம் | வலயம் |
| **Poem** | த. அபிஷா | 3ம் இடம் | கோட்டம் |
| **குழுப்பாடல்** | | 2ம் இடம் | கோட்டம் |
| | சு. காந்தரூபன் | | |
| | டி. அருளின்பன் | | |
| | கு. தமிழவன் | | |
| | த. கேனுஷன் | | |
| | ந. ததுஜன் | | |
| | பெ. கிறிஸ்ரின் | | |
| | ந. கோபிகா | | |
| | சு. உபநிஷை | | |
| | ச. பாமகள் | | |
| | வி. நிவேதிகா | | |
| | பா. கயல்விழி | | |
| | இ. பிருத்திகா | | |
| | ம. ராகவி | | |
| | சி. பிரணவி | | |
| | டி. அருள்மொழி | | |

| **விளையாட்டு செயற்பாடுகளில் வெற்றியீட்டிய மாணவர்கள் (பெருவிளையாட்டுக்கள், தடகளம்)** | | | |
|---|---|---|---|
| **2015** | | | |
| **கரப்பந்து** | 2ம் இடம் | 15 வயது பிரிவு பெண்கள் | மாவட்டம் |
| **கரப்பந்து** | 2ம் இடம் | 19 வயதுப்பிரிவு ஆண்கள | மாவட்டம் |
| **கரப்பந்து** | 2ம் இடம் | 15 வயதுப்பிரிவு ஆண்கள் | கோட்டம் |
| **வலைப்பந்து** | 2ம் இடம | 15 வயதுப்பிரிவு பெண்கள் | கோட்டம் |
| **உயரம் பாய்தல்** | செ.சயந்தன் | 3ம் இடம் | கோட்டம் |
| **100m,200m** | ஜோ.ஜினோசன் | 3ம் இடம் | கோட்டம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| 2016 | | | |
|---|---|---|---|
| **கரப்பந்து** | 15 வயதுப்பிரிவு பெண்கள | 3ம் இடம் | கோட்டம் |
| **கரப்பந்து** | 17 வயதுப்பரிவு ஆண்கள் | 2ம் இடம் | மாவட்டம் |
| **கரப்பந்து** | 17 வயதுப்பிரிவு பெண்கள் | 3ம் இடம் | கோட்டம் |
| **கரப்பந்து** | 15 வயதுப்பிரிவு ஆண்கள | 3ம் இடம் | கோட்டம் |
| **வலைப்பந்து** | 15 வயதுப்பிரிவு பெண்கள் | 3ம் இடம் | கோட்டம் |
| ஜெ. கயந்தன் | (15வயது) ஈட்டி எறிதல் | 3ம் இடம் | கோட்டம் |
| வி. விந்தன் | (15வயது) 100m | 3ம் இடம் | கோட்டம் |
| க. கயூல்ராஜ் | (17வயது) குண்டு போடுதல் | 2ம் இடம் | கோட்டம் |
| செ. பிரதீபன் | (17வயது) 400m | 2ம் இடம் | கோட்டம் |
| செ. வஜீகரன் | (17வயது) தடைதாண்டல | 3ம் இடம் | கோட்டம் |
| ர. திருவரங்கன் | (19வயது) முப்பாய்ச்சல | 3ம் இடம் | கோட்டம் |
| பு. புவனிகா | (17வயது) உயரம் பாய்தல் | 1ம் இடம் | கோட்டம் |

**2016 ஆம் ஆண்டு 19 வயதுப் பிரிவுப் பெண்கள் உடற்பயிற்சி அணி மாகாண மட்டத்தில் பங்குபற்றியமை.**

**2017**

- வயதுப்பிரிவு 16,18 ஆண்,பெண் வொலிபோல் அணியினர் வலய மட்டத்தில் பங்குபற்றியமை.
- வயதுப்பிரிவு 16,18 பெண்கள் வலைப்பந்து அணியினர் வலய மட்டத்தில் பங்குபற்றியமை.
- வயதுப்பிரிவு 20 ஆண்கள் துடுப்பாட்ட அணியினர் வலய மட்டத்தில் பங்குபற்றியமை.
- வயதுப்பிரிவு 12,14,16,18 தடகளப் போட்டிகளில் வலய மட்டத்தில் பங்குபற்றியமை.

| 2018 | | | |
|---|---|---|---|
| **கரப்பந்து** | 16 வயதுப்பிரிவு ஆண்கள் | 3ம் இடம் | மாவட்டம் |
| **கரப்பந்து** | 18 வயதுப்பிரிவு ஆண்கள | 2ம் இடம் | கோட்டம் |
| **கரப்பந்து** | 16 வயதுப்பிரிவு பெண்கள் | 3ம் இடம் | கோட்டம் |
| **கரப்பந்து** | 18 வயதுப்பிரிவு பெண்கள் | 2ம் இடம் | மாவட்டம் |
| ந. கோபிகா | (14வயது) நீளம் பாய்தல் | 3ம் இடம் | கோட்டம் |
| வி. விந்தன் | (14வயது) நீளம் பாய்தல் | 2ம் இடம் | மாவட்டம் |
| சு. அஜந்தினி | (18வயது) நீளம் பாய்தல் | 2ம் இடம் | மாவட்டம் |
| கௌ. தாட்சாயினி | (18வயது) நீளம் பாய்தல | 3ம் இடம | கோட்டம் |
| உ. புவனிகா | (18வயது)உயரம் பாய்தல் | 2ம் இடம் | கோட்டம் |


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 2018ம் ஆண்டு மாணவர்கள் பெற்ற பரீட்சைப்புள்ளிகளின் அடிப்படையிலேயே முதன்மை நிலையிலுள்ள மாணவர்கள்.

### தரம் - 03

| பாடம் | முதன்மை நிலை பெற்ற மாணவர் பெயர் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| தமிழ் | ஸ்ரீ. கலையரசன் | 95 |
| கணிதம் | ந. தருணிகா | 94 |
| சுற்றாடல் | ந. தருணிகா | 81 |
| சமயம் | ஸ்ரீ. கலையரசன் | 80 |
| ஆங்கிலம் | பா. தசாங்கிதா | 69 |

**நிலை**

1. ந. தருணிகா
2. ஸ்ரீ. கலையரசன்
3. பா. லதீசன்

### தரம் - 04

| பாடம் | முதன்மை நிலை பெற்ற மாணவர் பெயர் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| தமிழ் | பா. பரிதா | 89 |
| கணிதம் | பா. பரிதா | 93 |
| சுற்றாடல் | ஜெ. கிருசாந்தன் | 87 |
| சமயம் | ஜெ. கிருசாந்தன் | 86 |
| ஆங்கிலம் | பா. பரிதா | 71 |

**நிலை**

1. பா. பரிதா
2. உ. ஜெருஷாஜெனிபர்
3. சி. இறையன்பன்

### தரம் -05

| பாடம் | முதன்மை நிலை பெற்ற மாணவர் பெயர் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| தமிழ் | த. அபிசா | 90 |
| கணிதம் | ச. கோபிகன் | 89 |
| சுற்றாடல் | ச. கோபிகன் | 89 |
| சமயம் | த. அபிசா | 73 |
| ஆங்கிலம் | பா. யுகான் | 97 |

**நிலை**

1. ச. கோபிகன்
2. பா. யுகான்
3. த. அபிசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் - 06

| பாடம் | முதன்மை நிலை பெற்ற மாணவர் பெயர் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| தமிழ் | சோ. கலைவிழி | 88 |
| சமயம் | சோ. கலைவிழி | 94 |
| கணிதம் | பி. மைவிழி | 84 |
| ஆங்கிலம் | சு. காந்தரூபன் | 70 |
| விஞ்ஞானம் | சோ. கலைவிழி | 87 |
| | ஜெ. ஹர்சிதன் | 87 |
| | க. அருட்சிகன் | 87 |
| வரலாறு | ஜெ. ஹர்சிதன் | 96 |
| புவியியல் | ஜெ. ஹர்சிதன் | 96 |
| குடியுரிமை | ஜெ. ஹர்சிதன் | 93 |
| சுகாதாரம் | பி. மைவிழி | 97 |
| செயன்முறை | பி. மைவிழி | 87 |
| அழகியல் | ஜெ. ஹர்சிதன் | 98 |

**நிலை**

1. ஜெ. ஹர்சிதன்
2. பி. மைவிழி
3. சோ. கலைவிழி

## தரம் - 07

| பாடம் | முதன்மை நிலை பெற்ற மாணவர் பெயர் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| தமிழ் | ச. பாமகள் | 96 |
| சமயம் | ச. பாமகள் | 99 |
| கணிதம் | ச. பாமகள் | 93 |
| ஆங்கிலம் | ந. கோபிகா | 88 |
| விஞ்ஞானம் | ச. பாமகள் | 99 |
| வரலாறு | ந. கோபிகா | 98 |
| புவியியல் | ச. பாமகள் | 100 |
| குடியுரிமை | உ. லதுசிகா | 98 |
| | ஜெ. கீர்த்தனன் | 98 |
| சுகாதாரம் | ச. பாமகள் | 100 |
| செயன்முறை | ச. பாமகள் | 98 |
| அழகியல் | ச. பாமகள் | 98 |

**நிலை**

1. ச. பாமகள்
2. ந. கோபிகா
3. த. கேனுசன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் - 08

| பாடம் | முதன்மை நிலை பெற்ற மாணவர் பெயர் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| தமிழ் | ப. கிஷாலி | 94 |
| சமயம் | ப. கிஷாலி | 96 |
| கணிதம் | சி. பானுஜா | 85 |
| ஆங்கிலம் | ந. கோபிகா | 94 |
| விஞ்ஞானம் | ப. கிஷாலி | 95 |
| வரலாறு | சி. பானுஜா | 96 |
| புவியியல் | ப. கிஷாலி | 100 |
| குடியுரிமை | சி. பானுஜா | 93 |
| சுகாதாரம் | ப. கிஷாலி | 95 |
| | ப. டினோசிகா | 95 |
| செயன்முறை | ப. டினோசிகா | 98 |
| அழகியல் | க. கோகிலன் | 93 |

### நிலை

1. ப. கிஷாலி
2. சி. பானுஜா
3. தீ. சரணியா

## தரம் - 09

| பாடம் | முதன்மை நிலை பெற்ற மாணவர் பெயர் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| தமிழ் | சே. மகிஜா | 94 |
| | இ. பிருத்திகா | 94 |
| சமயம் | இ. பிருத்திகா | 96 |
| கணிதம் | ம. ராகவி | 71 |
| ஆங்கிலம் | ம. ராகவி | 63 |
| விஞ்ஞானம் | சே. மகிஜா | 82 |
| வரலாறு | இ. பிருத்திகா | 80 |
| புவியியல் | சே. மகிஜா | 93 |
| குடியுரிமை | இ. பிருத்திகா | 74 |
| சுகாதாரம் | சே. மகிஜா | 71 |
| செயன்முறை | சே. மகிஜா | 92 |
| அழகியல் | இ. பிருத்திகா | 90 |

### நிலை

1. இ. பிருத்திகா
2. சே. மகிஜா
3. ம. ராகவி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் - 10

| பாடம் | முதன்மை நிலை பெற்ற மாணவர் பெயர் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| தமிழ் | தீ. சதுர்ஜா | 92 |
| சமயம் | கி. திருமகள் | 95 |
| கணிதம் | கி. திருமகள் | 85 |
| ஆங்கிலம் | தீ. சதுர்ஜா | 62 |
| விஞ்ஞானம் | தீ. சதுர்ஜா | 93 |
| வரலாறு | தீ. சதுர்ஜா | 89 |
| தொகுதி 1 | தீ. சதுர்ஜா | 91 |
| தொகுதி 2 | தீ. சதுர்ஜா | 92 |
| தொகுதி 3 | தீ. சதுர்ஜா | 93 |

**நிலை**

1. தீ. சதுர்ஜா
2. கி. திருமகள்
3. ஜெ. கஜந்தன்

## தரம் - 11

| பாடம் | முதன்மை நிலை பெற்ற மாணவர் பெயர் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| தமிழ் | ர. ஸர்மிகா | 93 |
| சமயம் | க. கலைவிழி | 95 |
| கணிதம் | கி. சாரமுதன் | 70 |
| ஆங்கிலம் | ர. ஸர்மிகா | 96 |
| விஞ்ஞானம் | கி. சாரமுதன் | 84 |
| வரலாறு | சு. அஜந்தினி | 94 |
| தொகுதி 1 | சு. அஜந்தினி | 93 |
| தொகுதி 2 | க. கலைவிழி | 91 |
| தொகுதி 3 | க. கலைவிழி | 91 |

**நிலை**

1. சு. அஜந்தினி
2. கி. சாரமுதன்
3. ர. ஸர்மிகா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2010 தொடக்கம் இன்று வரை
## மாணவர் தொகையும் ஆசிரியர் தொகையும்

| ஆண்டு | மாணவர் தொகை | ஆசிரியர் தொகை |
|---|---|---|
| 2010 | 364 | 35 |
| 2011 | 306 | 31 |
| 2012 | 308 | 32 |
| 2013 | 315 | 28 |
| 2014 | 325 | 29 |
| 2015 | 326 | 24 |
| 2016 | 320 | 25 |
| 2017 | 345 | 23 |
| 2018 | 348 | 24 |

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில்
## சித்தி பெற்ற மாணவர்கள்

| ஆண்டு | சித்தி பெற்ற மாணவர்கள் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| 2011 | பா. தர்மிகன் | 155 |
| 2012 | கி. சாரமுதன் | 146 |
| 2012 | அ. கோகின் | 168 |
| 2013 | ப. வதுர்சன் | 153 |
| 2013 | ஜெ. டன்ஷிகா | 155 |
| 2013 | கி. திருமகள் | 157 |
| 2013 | ஜே. கோபிதருண் | 161 |
| 2013 | சி. மயூரன் | 169 |
| 2014 | ம. ராகவி | 160 |
| 2014 | ட. அன்பு | 166 |
| 2015 | தீ. சரணியா | 152 |
| 2015 | ப. கிஷாலி | 153 |
| 2015 | ஸ்ரீ. பானுஜா | 158 |
| 2016 | சு. உபநிஷை | 152 |
| 2016 | த. கேனுசன் | 159 |
| 2016 | ச. பாமகள் | 171 |
| 2018 | பா. யுகான் | 191 |
| 2018 | ச. கோபிகன் | 183 |
| 2018 | சி. கரிஸ்னா | 167 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த (சா/த) பரீட்சையில்
# சிறப்புத்தேர்ச்சி பெற்ற மாணவர்கள்

| ஆண்டு | மாணவர் பெயர் | A | B | C | S |
|---|---|---|---|---|---|
| 2006 | ஜீ. நிறோஜினி | 3 | 3 | 2 | 2 |
| 2006 | யோ. ஜெயதாரணி | 2 | 4 | 2 | 2 |
| 2006 | வே. நியந்தன் | 3 | 1 | 4 | 2 |
| 2006 | சி. லோஜிதன் | 2 | - | 3 | 4 |
| 2006 | தி. லிபேசா | 2 | 3 | 1 | 2 |
| 2006 | க. ஹிருசிகா | 5 | 3 | 1 | 1 |
| 2006 | ம. சோபிகா | 5 | 2 | 2 | 1 |
| 2006 | ச. சுஜித்தா | 3 | 2 | 3 | 1 |
| 2006 | வ. ஜிலோஜினி | 5 | 1 | 3 | 1 |
| 2008 | சி. கல்யாணி | 4 | 1 | 1 | 2 |
| 2008 | பா. லாவண்யா | 3 | 2 | 1 | 2 |
| 2008 | ம. மோகனா | 2 | 3 | 1 | 2 |
| 2009 | த. திலக்ஷி | 2 | 3 | 3 | 1 |
| 2010 | யோ. பிரசாந்தி | 5 | 1 | 2 | 1 |
| 2010 | ய. ஹரிராம் | 7 | 2 | - | - |
| 2010 | இ. டினோஷா | 5 | 3 | 1 | - |
| 2010 | வி. மதுசாளினி | 6 | 1 | 2 | - |
| 2010 | சு. யாழினி | 1 | 1 | 3 | 4 |
| 2011 | இ. யசிந்தா | 2 | 2 | 4 | 1 |
| 2011 | த. தர்சிகா | 3 | 2 | 4 | - |
| 2011 | செ. பானுமதி | 3 | 1 | 3 | 2 |
| 2012 | சி. கிருத்திகன் | 1 | - | 5 | 3 |
| 2012 | மு. மதுரா | 2 | 2 | 5 | - |
| 2012 | ர. அபிஷா | 1 | - | 3 | 5 |
| 2012 | சி. வாகினி | 3 | 3 | 3 | - |
| 2012 | சூ. லாவண்யா | 2 | 2 | 3 | 2 |
| 2012 | வி. விபூசனா | 1 | 3 | 3 | 2 |
| 2013 | ந. காயத்திரி | 1 | 1 | 3 | 4 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2013 | ஜோ. கலைக்ஷிகா | 4 | 4 | 1 | - |
| 2013 | ம. அபிலாயினி | 3 | 1 | 2 | 3 |
| 2013 | யோ. நளாயினி | 2 | 3 | - | 4 |
| 2013 | வி. விதுசனா | 4 | 4 | 1 | - |
| 2013 | செ. ஜெயசியாணி | 4 | 2 | 1 | 2 |
| 2013 | பா. கௌசிகா | 1 | 3 | 2 | 3 |
| 2013 | சி. விதுசா | 1 | 4 | 3 | 1 |
| 2014 | வி. கௌதமராசா | 1 | 2 | 4 | 2 |
| 2014 | பி. லோசிகா | 2 | 1 | 5 | 1 |
| 2015 | செ. தயந்தன் | 2 | 4 | 1 | 2 |
| 2015 | பி. சீர்நிலா | 4 | 2 | 1 | 2 |
| 2015 | அ. சங்கீர்த்தனா | 3 | 3 | 2 | 1 |
| 2016 | சி. சுபேசா | - | 5 | 2 | 2 |
| 2016 | நி. தனுஷா | 6 | 2 | 1 | - |
| 2017 | ந. அரவிந் | 7 | 1 | 1 | - |
| 2017 | ஜெ. நிக்ஷன் அன்ரன் | 3 | 4 | 1 | 1 |
| 2017 | த. விதுஜன் | 4 | 1 | 3 | 1 |
| 2017 | பா. தர்மிகன் | 5 | 2 | 2 | - |
| 2017 | உ. புவனிகா | 3 | 1 | 2 | 3 |
| 2017 | சி. கிருஷாந்தினி | 5 | 3 | 1 | - |
| 2017 | கௌ. தாட்ஷாயினி | 3 | 2 | 4 | - |
| 2017 | அ. கோபிகா | 1 | 1 | 4 | 3 |
| 2017 | ஜே. தனனி | 6 | 2 | 1 | - |
| 2017 | அ. அஸ்ஸாபானு | 5 | 2 | 2 | - |
| 2017 | க. கயல்விழி | 1 | 1 | 1 | 6 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










**Raj Arts Print**
Vaddakkachchi - Colombo
0779113956

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org